**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**110, Anna Salai,**
**Chennai-600 002.**

©

**Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.**

வெளியீடு : 5-10-09 Issued : 5-10-09

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**செவ்வாய்க்கிழமை, செப்டம்பர் 6, 2011—தொகுதி 13—எண் 2**

**Tuesday, the 6th September 2011—Volume 13—No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009*

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009**

விலை ரூ. 3.00] **[Price Rs. 3.00**

## 6-9-2011

## உள்ளடக்கம்

*பக்கங்கள்*

**1. தகவல் கோரல்—**

*(அ)* திருப்பூர் மாவட்டம், விசைத்தறித் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் — 207-209, 211-212

**திரு. அ. சவுந்தரராசன்* — 207

*செல்வி கே. பாலபாரதி* — 208

*டாக்டர் க. கிருஷ்ணசாமி* — 209

**மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன்* — 211, 212

*(ஆ)* உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் — 208-210

*திரு. எம். ஆறுமுகம்* — 208

*திரு. எஸ்.பி. முத்துக்குமரன்* — 209

*திரு. ம. கலை அரசு* — 209, 210

*திரு. கு. லிங்கமுத்து* — 210

*(இ)* அரசிதழில் பெயர் மாற்ற அறிவிப்பு வெளியிட்டபின், மாற்றம் செய்யப்பட்ட பெயரில் +1, +2 மாணவர்களுக்கு புதிய சான்றிதழ் வழங்குதல் — 210-211

*திரு. சு. குணசேகரன்* — 210

*மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்* — 211

*(ஈ)* நெல் கொள்முதல் நிலையங்களை அமைத்தல் — 211-213

**திரு. க. பாலகிருஷ்ணன்* — 211

*மாண்புமிகு திரு. புத்திசந்திரன்* — 213

| | பக்கங்கள் |
|---|---|
| **2. மானியக் கோரிக்கைகள், 2011-2012, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி | |
| (அ) கோரிக்கை எண் 4- ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை—தொடர்ச்சி | 213-239 |
| *மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன் | 213-238 |
| மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கொட்டையன் | 231-233 |
| மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி | 231-232 |
| மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் | 233 |
| (ஆ) கோரிக்கை எண் 45 – சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை<br>(இ) கோரிக்கை எண் 52 – மாற்றுத் திறனாளிகள் நலத் துறை | 252-355 |
| *மாண்புமிகு திருமதி செல்வி ராமஜெயம் | 253, 258, 263, 269,291,292, 293,295, 296, 302,307,314, 318, 325-354 |
| திரு. ப. சிவக்கொழுந்து | 263-271 |
| திரு. ம. கலை அரசு | 272 |
| *திருமதி எஸ். கணிதா சம்பத் | 272-280 |
| *மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி | 279-280, 290-291 |
| திரு. கோவி. சம்பத்குமார் | 281-288 |
| திரு. எஸ். ஜாண் ஜேக்கப் | 289-290, 292-297 |
| மாண்புமிகு திரு. பி. தங்கமணி | 296-297, 300-301, 315 |
| டாக்டர் க. கிருஷ்ணசாமி | 297-305 |
| மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் | 299-300 |
| மாண்புமிகு திரு. பி. பழனியப்பன் | 303-304 |





| | பக்கங்கள் |
|---|---|
| மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் | 305 |
| திரு. அ. அஸ்லம் பாஷா | 305-310 |
| திரு. சு. குணசேகரன் | 256,261,308 |
| செல்வி கே. பாலபாரதி | 310-317 |
| திரு. கு. லிங்கமுத்து | 318-321 |
| திரு. எல். வெங்கடேசன் | 322-325 |
| **3. விதி 110–ன்கீழ் அறிக்கை—** | |
| முதன்மை நிலை விளையாட்டு மையம் அமைத்தல், பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் பெறும் வீரர், வீராங்கனைகளுக்கு வழங்கப்படும் ஊக்கத் தொகையை அதிகரித்தல் குறித்து மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை | 240-244 |
| **4. விதி 110–ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அளித்த அறிக்கைக்கு நன்றி தெரிவித்தல்—** | 244-252 |
| | 244 |
| முனைவர் செ.கு. தமிழரசன் | 244-245 |
| டாக்டர் க. கிருஷ்ணசாமி | 245 |
| *முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா | 245 |
| திரு. ம. கலை அரசு | 246 |
| திரு. ஜே.ஜி. பிரின்ஸ் | 246-247 |
| திரு. சு. குணசேகரன் | 247-249 |
| *திரு. அ. சவுந்தரராசன் | 249-251 |
| *திரு. ச. இராமச்சந்திரன் | 251-252 |
| மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம் | |
| **5. அறிவிப்பு—** | 355 |
| பேரவை அலுவலில் மாற்றம் | 356 |
| **6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## திருவள்ளுவர் ஆண்டு 2042, ஆவணி 20

## 2011 செப்டம்பர் 6, செவ்வாய்க்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. டி. ஜெயக்குமார்** அவர்கள் தலைமையில் முற்பகல் 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து."

ஆரோக்கியம், செல்வம், நல்ல விளைச்சல், இன்ப வாழ்வு, நல்ல காவல் ஆகிய இந்த ஐந்தும் நாட்டிற்கு அழகு என்று கூறுவர்.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 1. தகவல் கோரல்

### (அ) திருப்பூர் மாவட்டம், விசைத்தறித் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2011-2012 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) சரி, மைக்கை ஆன் பண்ணுங்கள்.

***திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விசைத்தறித் தொழிலாளர்கள் கோவை, திருப்பூர் மாவட்டங்களில் தொடர்ந்து போராடிக்கொண்டிருக்கிறார்கள். அது குறித்து வேகமாக, விரைவாக நடவடிக்கை எடுத்து, அந்தத் தொழிலாளர்கள் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

[2011 செப்டம்பர் 6

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சவுந்தரராசன் அவர்கள், இன்றைக்குதான் அதுகுறித்து கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள். அது என்னுடைய ஆய்வில் இருக்கின்றது. துறையினுடைய பதில் வந்த பிறகு எடுத்துக்கொள்ளப்படுவதற்குப் பரிசீலனை செய்யப்படும். மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விசைத்தறித் தொழிலாளர்கள் கடந்த 8 நாட்களாக போராட்டம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதே issue தானே?

**செல்வி கே. பாலபாரதி:** வேலைநிறுத்தம் செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய பிரச்சினை சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு வந்ததா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்றைக்குதான் notice கொடுத்திருக்கிறீர்கள். அது என்னுடைய ஆய்வில் உள்ளது.

**செல்வி கே. பாலபாரதி:** 8 நாட்களாக strike நடக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிலே துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் notice கொடுத்திருக்கிறீர்கள். அது என்னுடைய ஆய்வில் உள்ளது.

### (ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய அரசாங்கம், இந்தியாவில் இருக்கக்கூடிய பஞ்சாலைகள் சம்பந்தமாக பங்களாதேஷ் நாட்டுடன் 22 பொருட்களை இறக்குமதி செய்வதற்கான ஒரு ஒப்பந்தம் இன்றையதினம் ஏற்பட இருக்கின்றது. இதனால் தமிழகத்தில் இருக்கக்கூடிய பஞ்சாலைகள் கடுமையான நெருக்கடிக்கும், சிக்கலுக்கும் உள்ளாக்கப்படும். கிட்டத்தட்ட 4 இலட்சம் தொழிலாளர்களுக்கு வேலை இழப்பு ஏற்படும். இது சம்பந்தமாக விவாதிக்க . . .



2011 செப்டம்பர் 6]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள், இன்றைக்குதான் என்னுடைய அறைக்கு வந்து அறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள். அது என்னுடைய ஆய்வில் உள்ளது. தயவுசெய்து அமருங்கள்.

### (அ) திருப்பூர் மாவட்டம், விசைத்தறித் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விசைத்தறித் தொழிலாளர்களினுடைய போராட்டம் குறித்து, ஏற்கெனவே நான் நேற்றே அறிவிப்பு கொடுத்துவிட்டேன். நேற்றே உங்களிடம் அறிவிப்பு கொடுத்துவிட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. சவுந்தரராசன் அவர்களுக்கு சொன்ன பதில் உங்களுக்கும் பொருந்தும். தயவுசெய்து அமருங்கள்.

### (ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துக்குமரன் அவர்கள்.

**திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் மதியம் சுமார் 1–30 மணியளவில் மணப்பாறை அருகே ஏற்பட்ட விபத்து குறித்து கவன ஈர்ப்பு கொடுத்திருக்கிறோம். அதனை எடுத்துக்கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இன்றைக்குதான் என்னுடைய அறைக்கு வந்து அறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள். துறையினுடைய பதில் வந்தவுடன் அவையில் எடுத்துக்கொள்ளப்படுவதற்குப் பரிசீலனை செய்யப்படும். (குறுக்கீடு) Reply வரட்டும்.

**திரு. ம. கலை அரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிகொண்டான் Toll gate இல், ஏற்கெனவே நான் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்திருக்கின்றேன்.

[2011 செப்டம்பர் 6

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன கோரிக்கை அது?

**திரு. ம. கலை அரசு:** சாலை வழியாக செல்கின்ற வாகனங்களுக்கு வசூலிக்கப்படுகின்ற கட்டணம் குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது என்னுடைய ஆய்வில் உள்ளது. அமருங்கள்.

**திரு. கு. லிங்கமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கூட Toll gate சம்பந்தமாக கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்துள்ளேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுவும் என்னுடைய ஆய்வில் உள்ளது.

### (இ) அரசிதழில் பெயர் மாற்ற அறிவிப்பு வெளியிட்டபின், மாற்றம் செய்யப்பட்ட பெயரில் +1, +2 மாணவர்களுக்கு புதிய சான்றிதழ் வழங்குதல்

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய யாராவது ஒரு மனிதர் தன்னுடைய பெயரை மாற்றம் செய்து Gazette–ல் அறிவிக்கப்பட்டதற்கு பின்னால், பல்கலைக்கழகங்களில் அவருடைய பெயர் மாற்றம் செய்யப்பட்டு புதிய சான்றிதழ் வழங்கப்படுகிறது. ஆனால், பள்ளிக் கல்வித் துறையின்மூலமாக ப்ளஸ் 1, ப்ளஸ் 2, 10th படிக்கக்கூடிய மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்குவதற்கான நடைமுறை இல்லை என்று சொல்கிறார்கள். எனவே, பெயர் மாற்றம் செய்யப்பட்டவர்கள் வேறு எந்தவிதமான வேலைக்கோ அல்லது படிப்புக்கோ செல்ல முடியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுருக்கமாக கவனத்திற்குக் கொண்டுவாருங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** எனவே, பெயர் மாற்றம் செய்யப்பட்ட புதிய சான்றிதழை உடனடியாக வழங்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.



2011 செப்டம்பர் 6]

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய அந்தக் கருத்தை கல்வித் துறையில் ஆலோசனை செய்து, அதன்மீது கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### (ஈ) நெல் கொள்முதல் நிலையங்களை அமைத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

முற்பகல் 10-05

***திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறுவை அறுவடை தொடங்கியிருக்கிறது. ஆனால், அரசு கொள்முதல் நிலையங்களைப் போதுமான அளவிற்கு திறந்து, நெல்லை கொள்முதல் செய்யாத காரணத்தினாலே மிகக் குறைவான விலைக்கு விவசாயிகளிடமிருந்து வியாபாரிகள் நெல்லை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். இதனால் விவசாயிகள் பெரிதும் பரிதவித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, கொள்முதல் நிலையங்களை உடனடியாகத் திறப்பது சம்பந்தமாக கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்திருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், நீங்கள் அறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள். அது என்னுடைய ஆய்வில் உள்ளது. தயவுசெய்து அமருங்கள்.

### (உ) திருப்பூர் மாவட்டம், விசைத்தறித் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் விசைத்தறி தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் பற்றிச் சொன்னார்கள். அதற்கு பதில் தர இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் பதில் இருந்தால் அளிக்கலாம். (குறுக்கீடுகள்) நீங்கள் பிரச்சினையை சொல்லியிருக்கிறீர்கள். நீங்கள் எழுப்பும் பிரச்சினை அரசுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தெரியும்.

மாண்புமிகு அமைச்சர் பதில் அளிக்கலாம். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நீங்கள் உங்கள் கருத்துகளைக் கூறுங்கள். (குறுக்கீடுகள்) ஏற்கெனவே இதுபற்றிச் சொல்லிவிட்டீர்கள். மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை, திருப்பூர் மாவட்டங்களில் கூலிக்கு நெசவு செய்யும் விசைத்தறி உரிமையாளர்கள் சுமார் 20,000 பேர்கள் உள்ளனர். இவர்கள் ஜவுளி உற்பத்தியாளர்களிடமிருந்து நூல் பெற்று, அதனை தங்கள் விசைத்தறிகளில் காடாத் துணி நெசவு செய்து, ஜவுளி உற்பத்தியாளர்களுக்கு வழங்கி வருகின்றனர்.

தற்போது விசைத்தறி உரிமையாளர்கள் 100 சதவீதம் கூலி உயர்வு, இரண்டு shift–க்கு பதிலாக ஒரு shift, ஒரு தொழிலாளி ஆறு தறிக்கு மேல் ஓட்டக்கூடாது என ஜவுளி உற்பத்தியாளர்களிடம் கோரிக்கைகள் வைத்து போராடி வருகின்றனர். இது குறித்து பல்வேறு பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு, தொழில் அமைதி பாதிக்காதவண்ணம் செயல்பட இரு தரப்பினருக்கும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், கூலி உயர்வு குறித்து கோவை துணை ஆணையர் (தொழிலாளர் நலன்) அவர்கள் முன்னிலையில் ஜவுளி உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும் விசைத்தறி உற்பத்தியாளர்கள் சங்கம் ஆகியோரிடம் 5-9-2011 அன்று பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. இதில் போராட்டத்தைக் கைவிட அறிவுறுத்தப்பட்டுள்ளது. இன்று கோவை மற்றும் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் ஆகியோர் முன்னிலையில் பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது. அது இன்று கண்டிப்பாக சுமுகமாக முடிந்து விடும். மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில் தொழிலாளர் நலமும், தொழில் வளர்ச்சியும் கண்டிப்பாக பாதுகாக்கப்படும் என்பதை இந்த அவையின்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

### (ஈ) நெல் கொள்முதல் நிலையங்களை அமைத்தல்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள் நெல் கொள்முதல் குறித்து எழுப்பிய பிரச்சினைக்கு மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் பதில் அளிப்பார்கள்.



**மாண்புமிகு திரு. புத்திசந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், விவசாயிகள் அறுவடை செய்கின்ற நெல்லை கொள்முதல் செய்ய, கொள்முதல் நிலையங்கள் பரவலாக எல்லா இடங்களிலும் அமைக்க வேண்டுமென்று கோரியிருந்தார்கள். புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அனைத்து விவசாயிகளிடமிருந்தும் நெல்லை கொள்முதல் செய்ய, அனைத்து இடங்களிலும் கொள்முதல் நிலையங்களை அமைத்திருக்கிறது. தேவைப்பட்டால் விவசாயிகளிடமிருந்து நெல்லை கொள்முதல் செய்ய தேவையான இடங்களில் நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 2. மானியக் கோரிக்கைகள், 2011-2012, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 4-ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2011-2012 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைளின்மீது விவாதமும், வாக்கெடுப்பும். 5–9–2011 ஆம் நாளன்று முன்மொழியப்பெற்ற மானியக் கோரிக்கைகள் மற்றும் அவற்றின்மீது முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் ஆகியவற்றின் மீதான விவாதத்திற்குப் பதிலுரை மற்றும் வாக்கெடுப்பு. மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

***மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவி, தியாகத் திருவிளக்கு, மகத்தில் பிறந்து ஜெகத்தை ஆளவந்த எங்கள் மாதரசி, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது கோடானுகோடி வணக்கங்களை தங்களின் பொற்பாதங்களில் பணிந்து சமர்ப்பிக்கின்றேன்.

புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை ஒன்றியம், நம்பம்பட்டி என்னும் குக்கிராமத்தில் ஒரு சாதாரண ஏழை விவசாயக் குடும்பத்தில் பிறந்த எனக்கு, 1972 ஆம் ஆண்டு முதல், தொடர்ந்து கிளைக் கழகச் செயலாளராகவும், 2009 முதல் ஊராட்சி கழகச் செயலாளராகவும் பணியாற்றிட வாய்ப்பு வழங்கி உள்ளீர்கள் அம்மா!

கழகத்தின் 1½ கோடி தொண்டர்களில், கடைக்கோடித் தொண்டனாக இருந்த என்னை, ஒரு சாதாரண தொண்டனும் மக்களுக்காக மகத்தான பணி செய்திடும் வகையில், 2006–ல் குளத்தூர் (தனி) தொகுதி சட்டமன்ற உறுப்பினராகவும், மீண்டும் அதனைத் தொடர்ந்து புதிதாக உருவாக்கப்பட்ட கந்தர்வக்கோட்டை (தனி) தொகுதியில் வேட்பாளராக்கி, வெயில் என்றும் பாராமல், எனது வெற்றிக்காக கந்தர்வக்கோட்டை வந்து, தேர்தல் பிரச்சாரம் செய்து, என்னை வெற்றி பெறச் செய்த எங்கள் தாயே! நான் அனுதினமும் வணங்கிடும் எங்களின் குலதெய்வமே! நான் கனவில்கூட நினைத்துப் பார்த்திடாத இந்த எளியவனை, அமைச்சர்கள் பெயர்ப் பட்டியலில் எனது பெயர் இடம் பெற்றிருந்ததை தொலைக்காட்சிப் பெட்டியில் பார்த்து அப்படியே திகைத்து நின்றேன், தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கு நானும் எனது குடும்பமும் ஏன் எனது சந்ததியினரும், இப்பிறவியல்ல, ஈரேழு பிறவிகளிலும், இந்த உலகம் உள்ளளவும், உயிர் உள்ளளவும், கடல், மலை, காற்று, வானம் உள்ளளவும் நன்றிக்கடன்பட்டவர்களாக இருப்போம் அம்மா. அம்மா அவர்களின் பொற்பாதங்களில் கோடானுகோடி நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி வணங்குகின்றேன் தாயே!

முற்பகல் 10-10

எனது வெற்றிக்காக உழைத்த கழகத்தின் முன்னோடிகளுக்கும், தோழமைக் கட்சியினருக்கும், எனக்கு வாக்களித்த கந்தர்வக்கோட்டை தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்து எனது பதிலுரையைச் சமர்ப்பிக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001 ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகை 624 இலட்சம். இதில் ஆதி திராவிட மக்கள் 119 இலட்சம், அதாவது 19 விழுக்காடு. பழங்குடியின மக்கள் 6.51 இலட்சம், அதாவது 1.04 விழுக்காடு ஆகும். இவர்களில் 63.1 விழுக்காடு ஆதி திராவிடர்களும், 41.53 விழுக்காடு பழங்குடியினரும் கல்வியறிவு பெற்றவர்களாக உள்ளனர். இதில் ஆதி திராவிட மக்களில் 36.81 விழுக்காடும், பழங்குடியின மக்களில் 53.47 விழுக்காடும் எழுதப் படிக்கத் தெரியாதவர்களாகவே இன்றும் உள்ளனர் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



“கேடில் விழுச்செல்வம் கல்வி” என்றார் வள்ளுவர். உற்றுழி உதவியும், உறுபொருள் கொடுத்தும், பிற்றை நிலை முனியாது, கற்றல் நன்றே–கீழ்ப்பால் ஒருவன் கற்பின், மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே என்றார் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன். அதுபோல், அடித்தள மக்களின் வளர்ச்சிக்கு கல்விதான் அவசியம் என்பதைக் கருத்தில்கொண்டு, இத்துறைக்காக இந்த நிதியாண்டில் ரூ.1084.30 கோடி நிதி ஒதுக்கீடு செய்து, (மேசையைத் தட்டும் ஒலி) அதில் கல்வி மற்றும் கல்வி சார்ந்த திட்டங்களுக்காக ரூ.873.53 கோடி, அதாவது 81 விழுக்காடு நிதியினை மாண்புமிகு அம்மா அவர்கள் ஒதுக்கீடு செய்துள்ளார்கள். ஆனால், கடந்த 2010–2011–ல், தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியோ ரூ.889 கோடி மட்டுமே. அதில் கல்வி வளர்ச்சிக்காக 721 கோடி ரூபாயினை மட்டுமே ஒதுக்கியிருந்தார்கள். இதன்மூலம், கூடுதலாக 150 கோடி ரூபாய்க்கும் அதிகமான தொகையினை அம்மா அவர்கள் ஒதுக்கித் தந்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இது இவ்வின மக்களின்பால் மாண்புமிகு அம்மா அவர்கள் அதிக அக்கறை கொண்டுள்ள முதல்வராகத் திகழ்கிறார் என்பதையே காட்டுகிறது.

மாண்புமிகு பாரத ரத்னா, இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக் காலத்தில், 1980–1981 ஆம் ஆண்டு முதல் ஆதி திராவிடர்களுக்கான துணைத் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதன்படி ஆதி திராவிடர் மக்கள் தொகை விகிதாச்சாரமான 19 விழுக்காட்டிற்குக் குறைந்திடாத அளவில், மொத்த மாநில ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டிலிருந்து ஆதி திராவிடர் துணைத் திட்டத்திற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். அதன்படி, சரித்திரச் சாதனை படைத்த புரட்சித் தலைவர் அவர்களின் வழிவந்த மாண்புமிகு அம்மா அவர்கள், தமிழக வரலாற்றிலேயே முதன்முறையாக இதுவரை இல்லாத வகையில் மாநிலத் திட்ட ஒதுக்கீடான ரூ.23,535 கோடியில், ஆதி திராவிடர் துணைத் திட்டத்திற்காகப் பகுக்கப்படும் தலைப்பின்கீழ், ரூ.5,007 கோடி அதாவது 21.27 விழுக்காடு (மேசையைத் தட்டும் ஒலி) ஒதுக்கீடு பெற்று ஆதி திராவிட மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகை செய்துள்ளார்கள். இது மாண்புமிகு அம்மா அவர்கள் ஆதி திராவிட மக்கள்மீது கொண்டுள்ள மாறாத அன்பையே காட்டுகிறது. இந்த நிதி ஒதுக்கீடு, சென்ற ஆண்டு ஒதுக்கீட்டைவிட ரூ.1,179 கோடி அதிகமாகும் என்பதை இம்மாமன்றத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இத்துறைமூலம் செயல்படுத்தப்படும் 1,081 ஆதி திராவிட நலப் பள்ளிகளில் 1,75,456 மாணவ, மாணவிகளும், 296 பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளிகளில் 37,640 மாணவ, மாணவிகளும், ஆக மொத்தம் 1,377 பள்ளிகளில் 2,13,096 மாணவ, மாணவிகள் பயின்று வருகின்றார்கள்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைமூலம் செயல்படுத்தப்படும் 1,254 ஆதி திராவிடர் நல விடுதிகளில் 87,136 மாணவ, மாணவிகளும், 40 பழங்குடியினர் நல விடுதிகளில் 2,072 மாணவ, மாணவிகளும், 296 அரசு உண்டு உறைவிடப் பள்ளிகளில் 30,807 மாணவ, மாணவிகளும், ஆக மொத்தம் 1,590 விடுதிகளில், 1,20,015 மாணவ, மாணவிகள் தங்கிப் பயின்று வருகிறார்கள்.

இத்துறையில் மொத்தம் 8,587 ஆசிரியர் பணியிடங்கள் உள்ளன. அவற்றில் தற்போது 7,542 ஆசிரியர்கள் மட்டுமே பணிபுரிந்து வருகிறார்கள். எஞ்சிய 1,045 ஆசிரியர் பணியிடங்கள், மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் நிரப்பப்படாமல் காலியாகவே இருந்ததை அறிந்த மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) ஆதி திராவிட மாணவச் செல்வங்களின் நலனில் அக்கறை கொண்டு தொலைநோக்குப் பார்வையுடன் ஆசிரியர் தேர்வு வாரியம்மூலம் இந்த ஆண்டே காலிப் பணியிடங்களை நிரப்பிட ஆணையிட்டுள்ளார்கள்.

முற்பகல் 10-15

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல மாணவ, மாணவியர்களின் சுகாதார நலனைப் பேணிக் காக்கும் பொருட்டு, இதுவரை நிரப்பப்படாமல் இருந்துவந்த, துப்புரவுப் பணியாளர்களின் காலிப் பணியிடங்களை உடனடியாக நிரப்பிட மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இது மட்டுமா, விடுதியில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியர்களின் நலனில் தாயுள்ளத்தோடு அக்கறை கொண்டு, காலியாக உள்ள 480 சமையலர் பணியிடங்கள், 276 காவலர் பணியிடங்கள், 1,543 துப்புரவுப் பணியாளர் பணியிடங்கள் ஆகியவற்றை உடனடியாக நிரப்பிட மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்கள், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளில், பயிலும் மாணவ, மாணவியர்களின் நலனைக் கருதி, இந்த ஆண்டு 7 ஆதி திராவிடர் நல நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், 8 ஆதி திராவிடர் உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும், (மேசையைத் தட்டும் ஒலி) 3 பழங்குடியினர் நல நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், 2 பழங்குடியினர் உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும், ஆக மொத்தம் 20 பள்ளிகளைத் தரம் உயர்த்திடவும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)



ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ மாணவிகள் நல்ல சுகாதாரமான சூழ்நிலையில் கல்வி பயில வாய்ப்பு கிடைக்குமா என்று ஏங்கியிருந்த நிலையினை உணர்ந்த கருணை உள்ளம் கொண்ட புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள், மூன்றாம் முறையாக ஆட்சிக்கு வந்தவுடனேயே, (மேசையைத் தட்டும் ஒலி) யாரும் செய்திராத, செய்ய இயலாத சாதனையினை கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் பராமரிப்பின்றி விட்டுச் சென்ற 1,080 பள்ளி மற்றும் கல்லூரி மாணவ–மாணவியர் விடுதிகளுக்கு கட்டமைப்பு மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொண்டிட ரூ.83.40 கோடி நிதியினை அனுமதித்து ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், பணிகள் அனைத்தும் விரைவாக முடிக்கப்பட வேண்டும் என்றும் ஆணையிட்டுள்ளார்கள். ஆனால், முந்தைய ஆண்டுகளில் பராமரிப்புப் பணிகளுக்காக ஆண்டுக்கு ரூ.4 கோடி மட்டுமே ஒதுக்கீடு வழங்கினார்கள். ஆதி திராவிடர் நல மாணவ, மாணவியர்களின் வாழ்வில் விடியல் தர புறப்பட்ட வீரத்தின் விளைநிலமே! தாகத்தினைத் தணித்த தாய்க்கெல்லாம் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) தங்கத் தாரகை என்று தரணி போற்றும் சிங்க நிகர் தலைவியே! இதற்கெல்லாம் ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மக்கள் எப்பொழுதும் நன்றிக்கடன்பட்டவர்களாக இருப்பார்கள் அம்மா. இதுமட்டுமா, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகள், அனைத்தும் சொந்தக் கட்டடத்தில் இயங்கிட வேண்டுமென்ற மாண்புமிகு அம்மாவின் உறுதியான எண்ணத்தில், தாயன்பின் வெளிப்பாடாக வாடகைக் கட்டடத்தில் இயங்கி வந்த 93 விடுதிகளையும், இந்த ஆண்டிலேயே கட்டி முடித்திட ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக, ரூ.47.83 கோடி நிதியினை கருணை உள்ளத்தோடு மாண்புமிகு அம்மா அவர்கள் ஒதுக்கித் தந்துள்ளார்கள். கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகளுக்குப் புதிய கட்டடம் கட்டிட,

ஆணைகள் வெளியிட்டதோடு சரி. கடந்த ஐந்தாண்டுக்கால இருண்ட ஆட்சியில், எந்த விடுதியினையும் கட்டாமல் விட்டுச் சென்றதை அறிந்த மாண்புமிகு அம்மா அவர்கள் மாணவச் செல்வங்கள் மீது அதிக அக்கறை கொண்டு கடந்த ஆட்சியில் நிறைவேற்றாமல் விட்டுச் சென்ற விடுதிகளையும் இந்த ஆண்டே கட்டி முடித்திட ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம் தி.மு.க.வினரால், திட்டமிட்டு பரப்பி வரும் 'தி.மு.க. ஆட்சியில் தொடங்கப்பட்ட திட்டத்தை அப்படியே விட்டுவிட்டார்கள்' என்ற பொய்ப் பிரச்சாரத்திற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் முற்றுப்புள்ளி வைத்துள்ளார்கள்.

"வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்" என்றார் வள்ளலார். மாண்புமிகு அம்மா அவர்கள் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின நல மாணவ, மாணவியரின் அவல நிலையைக் கண்டு, விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவச் செல்வங்களுக்கு நல்ல சூழ்நிலையை உருவாக்கிக் கொடுப்பது மட்டுமல்லாமல், அவர்களுக்கு நல்ல தரமான உணவினையும் கொடுக்க வேண்டுமென்று தாயுள்ளம் கொண்ட அம்மா அவர்கள், மாணவ, மாணவியர்களின் உணவுக் கட்டணத்தினையும் பள்ளி விடுதியில் உள்ளவர்களுக்கு, மாதம் ஒன்றுக்கு ரூ.450/- என்று இருந்ததை, ரூ.650/- ஆகவும், (மேசையைத் தட்டும் ஒலி) கல்லூரி விடுதிகளில் உள்ளவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 550/- என்று இருந்ததை ரூ.750/– ஆகவும் உயர்த்தி வழங்கிட ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காக, நடப்பாண்டில் ரூ.25.20 கோடி கூடுதலாக, மாண்புமிகு அம்மா அவர்கள் நிதி ஒதுக்கீடும் செய்துள்ளார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்கள், ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் அல்லும் பகலும் அயராது பாடுபட்டு ஒரு நாளைக்கு 22 மணி நேரம் எந்தவித பிரதிபலனையும் எதிர்பார்க்காமல் (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் பணியே மகேசன் பணியென எண்ணி, தமிழக மக்கள்மீது மட்டுமே அக்கறை கொண்டு தமிழகத்தை முதன்மை மாநிலமாக ஆக்க, தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

முற்பகல் 10-20

மாநிலத்தில் உள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளி மாணவ, மாணவியர்களுக்குத் தேவையான அடிப்படை வசதியான, கழிப்பறை வசதி இல்லாத பள்ளிகளின் நிலையினை



அறிந்த மாத்திரத்திலேயே, தாயுள்ளம் கொண்ட, எங்கள் அம்மா அவர்கள், கழிப்பறை வசதியே இல்லாத 779 பள்ளிகளில் அனைத்து வசதியுடன்கூடிய கழிப்பறை வளாகங்களை, உடனடியாக ஏற்படுத்திட வேண்டும் என்று தாயுள்ளத்தோடு ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக நடப்பாண்டில் ரூ.50.64 கோடி நிதி ஒதுக்கியும் தந்துள்ளார்கள் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மத்திய அரசு பங்களிப்புடன், 10 ஆம் வகுப்புக்கு மேற்பட்ட உயர் கல்வி படிப்பு உதவித் தொகை திட்டத்திற்கு, கடந்த ஆட்சிக் காலத்தில் ரூ.171 கோடி ஒதுக்கி இருந்தார்கள். ஆனால், இந்த ஆண்டு 8 இலட்சத்திற்கும் அதிகமான மாணவ, மாணவியர்கள் பயன் அடையும்விதமாக, இவ்வின மாணவர்கள்மீது அதிக அக்கறை கொண்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கருணை உள்ளத்தோடு ரூ.186 கோடி நிதி ஒதுக்கித் தந்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தூய்மைப் பணிபுரிவோரின் குழந்தைகளுக்கு அவர்கள் கல்வி அறிவை உயர்த்திடும் வகையில், 10 ஆம் வகுப்பு வரை வழங்கப்படும் கல்வி உதவித் தொகை திட்டத்தின்கீழ் கடந்த ஆண்டு 70,740 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.9 கோடி ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால், அது இவ்வாண்டு ஒரு இலட்சம் மாணவ, மாணவியர்கள் பயன்பெறும் வகையில் ரூ.18 கோடியாக மாண்புமிகு அம்மா அவர்கள் உயர்த்தி வழங்கியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). இது கடந்த ஆண்டைவிட ரூ.9 கோடி அதிகமாகும் என்பதையும் இம்மாமன்றத்தில் பதிவு செய்ய விரும்புகின்றேன்.

ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மாணவர்கள் வெளிநாடு சென்று உயர் கல்வி படிப்பது என்பது எட்டாக்கனியாக இருந்த காலம் மாறி, அவர்கள் ஏக்கத்தைப் போக்கும் வகையில், அவர்கள் வெளிநாடுகளில் சென்று உயர் கல்வியைக் கற்பதற்கும், ஆராய்ச்சிப் படிப்பு தொடர்வதற்கும் ரூ.21.55 இலட்சம் நிதி ஒதுக்கியுள்ளார்கள். இந்த ஆண்டு நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் வட்டம், திரு. பி. மணிகண்டன் என்ற அருந்ததியர் இனத்தைச் சேர்ந்த இளைஞருக்கு ஜெர்மனியில் கோலோன் பல்கலைக்கழகத்தில், உயிரியல் சம்பந்தப்பட்ட ஆராய்ச்சிப் படிப்பிற்கு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) ஓர் ஆண்டிற்கு ரூ.21.55 இலட்சம் என மூன்று ஆண்டுகளுக்கு நிதியுதவி அளித்து ஆணையிட்டுள்ளார்கள். ஆனால், கடந்த ஆட்சிக் காலத்தில்,

இந்தத் திட்டத்தின்கீழ், மாணவர்கள் வெளிநாடு சென்று படிப்பதற்கு உதவாமல் இந்தத் திட்டத்தைக் கண்டுகொள்ளாமல் விட்டு விட்டார்கள் என்பதையும் இம்மாமன்றத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

காஞ்சிபுரம் மாவட்டம், கோழியாளம் கிராமத்தில் பிறந்து, ஆதி திராவிட மக்களால் 'தாத்தா' என அன்போடு அழைக்கப்படும் பெருமகனார் ராவ்பகதூர் இரட்டைமலை சீனிவாசன் அவர்களின், பிறந்த தினத்தை அரசு விழாவாகக் கொண்டாட, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் ஆணையிட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆண்டு ஜூலை 7 இல் விழா எடுக்கப்பட்டு, இச்சமுதாயத்திற்குப் பெருமை சேர்த்துள்ளார்கள். இதன்மூலம், சமூக நீதியை நிலைநாட்டிய சமூக நீதி காத்த வீராங்கனையாக மாண்புமிகு அம்மா அவர்கள் திகழ்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த ஆட்சிக் காலத்தில் பராமரிப்பின்றி, கேட்பாரற்றுக் கிடந்த, அரசியல் சட்டம் உருவாக்கிய மாமேதை, அண்ணல் அம்பேத்கர் நினைவு மணிமண்டபத்தை மாண்புமிகு அம்மா அவர்களின் ஆலோசனையுடன் பராமரித்திட நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் திருக்கரங்களால், மாற்றுத்திறனாளிகளுக்குச் சிறப்பான சேவை செய்த, அருந்ததியர் இனத்தைச் சேர்ந்த மூத்த மருத்துவர் திரு. இரா. துரைசாமி அவர்களை இனம் கண்டு அவரது சேவையைப் பாராட்டி, சுதந்திர தின விழாவின்போது, தமிழக அரசின் விருது வழங்கி கௌரவித்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக, இந்தச் சமுதாயமே, மாண்புமிகு அம்மா அவர்களைப் போற்றி, பாராட்டி வணங்குகிறது.

சமுதாயத்தை முன்னேற்றம் அடையச் செய்வது கல்வியே ஆகும். 'கல்வி இல்லாத பெண்கள் களர் நிலம், அங்கே புல் விளைந்திடலாம், நல்ல புதல்வர்கள் விளைவதில்லை' என்பது பாவேந்தர் பாரதிதாசனின் கூற்று. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின், அரிய சிந்தனையின் வெளிப்பாடான, ஓர் ஆண் கற்றறிந்தவனாக இருந்தால், அந்தக் கல்வி அவனுக்கு மட்டுமேதான் பயன்படும். ஆனால், ஒரு பெண் கல்வி பெற்றிருந்தால், அந்தக் குடும்பமே, கல்வி அறிவு பெற்றுவிடும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதற்கிணங்க, இச்சமுதாயப் பெண் குழந்தைகள், படிப்பில் இடைநிற்றலைத் தவிர்த்து, அவர்கள் கல்வியைத் தொடர்ந்து



படிப்பதற்கு, 16 மாவட்டங்களில் மட்டுமே செயல்படுத்தி வந்த பெண் கல்வி ஊக்குவிப்புத் திட்டத்தினை, மூன்றாம் முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றதும், மாண்புமிகு அம்மா அவர்கள் அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தி, (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்திற்கென ரூ.40.08 கோடி நிதி ஒதுக்கி, பெண்கல்வி ஊக்குவிப்புத் திட்டத்தினைச் சிறப்பு செய்துள்ளார்கள். இதற்காக கடந்த ஆட்சிக் காலத்தில், ரூ.8 கோடி மட்டுமே நிதி ஒதுக்கப்பட்டு வந்தது. 'மங்கையராய் பிறப்பதற்கு நல்ல மாதவம் செய்திட வேண்டும் அம்மா' என்ற கவிமணியின் வரிகளுக்கு ஏற்ப மாண்புமிகு அம்மா அவர்கள், மங்கையர் குல தெய்வமாக, மகத்தில் பிறந்து, ஜெகத்தை ஆளவந்த மாதரசி, (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் மாண்புமிகு அம்மா அவர்கள், பெண்களின் மனதில் நிறைந்து ஆட்சி செய்கிறார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாம் முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டிருந்தவாறு 2 ஜோடி சீருடைக்குப் பதிலாக 4 ஜோடி சீருடைகள் வழங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 'சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்' என்று கடந்த 5 ஆண்டுக் காலமாக, மக்களை ஏமாற்றி வந்த கடந்த தி.மு.க. மைனாரிட்டி ஆட்சியில் அவர்கள் குடும்ப வளத்தை மட்டுமே பெருக்கிவந்த ஆட்சியின் காட்சி போய், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொன்னான ஆட்சியில், இத்திட்டத்திற்கு 4 ஜோடி இலவச சீருடைகள் வழங்குவதற்கும் ஆணையிட்டுள்ளார்கள் என்பதையும் பதிவு செய்ய விரும்புகிறேன்.

மாணவர்கள் அணிந்திருந்த அரைக்கால் சட்டை முழுக்கால் சட்டை ஆகவும், மாணவிகள் அணிந்திருந்த பாவாடை, தாவணி என்பதை மாற்றி இக்காலத்திற்கு ஏற்றாற்போல சுடிதார் வழங்கிடவும் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கருணை உள்ளத்தோடு பெண்களைப் புதுமைப் பெண்களாக மாற்றியுள்ளார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தொலைநோக்குப் பார்வையில் ஆதி திராவிட மாணவ, மாணவிகளுக்கு சைக்கிள் வழங்கும் திட்டம் 2002–2003–ல்

முதன்முதலில் தொடங்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவில் பல மாநிலங்கள் இத்திட்டத்தைப் பின்பற்றி செயல்படுத்தி வருகின்றன. மைய அரசு, மாண்புமிகு அம்மா அவர்களின் இத்திட்டத்தினைப் பாராட்டி, இதர மாநில அரசுகள் பின்பற்றிட அறிவுறுத்தியுள்ளது.

10, 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் முதல் மதிப்பெண்கள் பெறும் இவ்வினத்தைச் சார்ந்த மாணவ, மாணவிகளுக்கு அவர்களை ஊக்கப்படுத்தும் விதமாக பரிசுத் தொகையினை உயர்த்தி வழங்கிட மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் விலையில்லாமல் வழங்க தனியாருடன் பேச்சுவார்த்தை மூலமும், தமிழ்நாடு நில எடுப்புச் சட்டத்தின்படியும் இந்த நிதியாண்டில் 513 இலட்சம் ரூபாயும் நிதியொதுக்கீடு செய்துள்ளார்கள். ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு மயான வசதி மற்றும் மயானப் பாதைகள் அமைத்துக்கொடுக்க உள்ளாட்சி அமைப்புகளுக்கு உரிய பங்குத் தொகை வழங்குவதற்காக இந்த நிதியாண்டில் ரூபாய் 75.84 இலட்சம் ஒதுக்கித் தந்துள்ளார்கள். மேலும், ஆதி திராவிட இன மக்கள் இறந்துவிட்டால் ஈமச்சடங்கிற்காக, நிதி உதவி வழங்குவதற்கு ரூபாய் 500 இலட்சம் மாண்புமிகு அம்மா அவர்கள் நிதியொதுக்கித் தந்துள்ளார்கள்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களைப் பாதுகாக்கும் வண்ணம் இந்தியக் குடியுரிமைச் சட்டம் மற்றும் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தைச் செம்மையாக செயல்படுத்தவும், தீண்டாமை இல்லா மாநிலமாக தமிழகம் மாறிட மாண்புமிகு அம்மா அவர்கள் சீரிய முயற்சிகள் எடுத்து வருகிறார்கள். இதற்காக ரூபாய் 225 இலட்சம் நிதியொதுக்கீடு வழங்கியுள்ளார்கள்.

பொருளாதாரத்தில் பின்தங்கிய, தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட சமுதாய மக்கள், சங்கரலிங்கபுரத்திலே பாதிக்கப்பட்ட விவரத்தினைக் கேள்விப்பட்டவுடன், மாண்புமிகு அம்மா அவர்கள், பாதிக்கப்பட்ட மக்களை நேரடியாகச் சந்தித்து ஆறுதல் கூறி, அவர்கள்மேல் போடப்பட்டிருந்த வழக்குகளை எல்லாம் திரும்பப் பெறச்செய்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அடித்தளத்து மக்களுக்காக எந்தவொரு தலைவரும் செய்யாததைச் செய்தவர்தான் எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள்.



மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் எந்தத் திட்டமாக இருந்தாலும், ஆதி திராவிட மக்களின் மீது அக்கறைகொண்டு அவர்களின் நலன்களுக்கு முன்னுரிமை அளித்தே திட்டத்தைத் தொடங்கி வைப்பார்கள். உதாரணமாக, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தை முதன்முதலில் ஆதி திராவிட மாணவிகளுக்குத்தான் வழங்கி கௌரவித்தார்கள். அதுபோல் மாண்புமிகு அம்மா அவர்கள் எந்தவொரு திட்டமாக இருந்தாலும் அதை ஆதி திராவிட மக்கள் பயன்பெறும் வகையில் தொடங்கி வைக்கிறார்கள். அடித்தட்டு மக்களின் முன்னேற்றம் குறித்து தொலைநோக்குப் பார்வையோடு சிந்திப்பவர் மாண்புமிகு அம்மா அவர்கள் மட்டுமே என்பதனைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ள மகளிர் சுகாதார வளாகத் திட்டம், அனைவருக்கும் பயன்தரும் வகையில் தோன்றினாலும், கிராமப் பகுதிகளில், பொருளாதார ரீதியில், முன்னேற்றம் அடைந்தவர்கள் தங்கள் வீட்டிலேயே சொந்தமாக கழிவறை வசதி செய்து கொள்கிறார்கள். ஆனால், அடித்தட்டு மக்களாகிய ஆதி திராவிடர் காலனியில் வாழும் குப்பம்மாளும், சுப்பம்மாளும் இயற்கை உபாதைகளுக்காக எப்பொழுது சூரியன் அஸ்தமிக்கும் என்று காத்திருப்பார்கள். தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு அம்மா அவர்கள் இந்த நிலையினை மாற்றியமைக்க வேண்டும் என்ற பரந்த, உயரிய நோக்கத்தோடு மகளிர் சுகாதார வளாகங்கள் அமைத்துக்கொடுத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆனால், முந்தைய தி.மு.க. ஆட்சியினர் இதனைக் கண்டுகொள்ளாமல் தன் குடும்பத்தை எப்படி வளப்படுத்திக்கொள்ளலாம் என்பதிலேயே அவர்கள் கண்ணுங்கருத்துமாக இருந்தனர். இதைக் கருத்திற்கொண்டு மூன்றாம் முறையாக மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்தவுடன், மகளிர் சுகாதார வளாகங்களை புதுப்பொலிவுடன் புதுப்பித்திட ஆணையிட்டுள்ளார்கள்.

தமிழ்நாடு எத்தனையோ முதல்வர்களைப் பார்த்திருக்கிறது. எத்தனையோ கட்சித் தலைவர்களையும் பார்த்திருக்கிறது. ஆனால், முன்னாள் முதல்வர், தி.மு.க. தலைவர் கருணாநிதியைப்போல் யாரையும் இதுவரை பார்த்திருக்காது தாயே!

[திரு. ந. சுப்ரமணியன்] [2011 செப்டம்பர் 6

பொருளாதாரத்தில் பின்தங்கிய, தாழ்த்தப்பட்ட ஒரு சமூகத்தை ஊழல் குற்றச்சாட்டிற்குக் கேடயமாகப் பயன்படுத்தியதை நாம் கண்கூடாகக் கண்டோம். திகார் சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் அவரது கட்சியைச் சார்ந்த ஒரு முன்னாள் மத்திய அமைச்சர்மீது சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கப்பட்ட நிலையில், அவர் ஒரு தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்தவர் ஆகையால் அவர்மீது நடவடிக்கை பாய்கிறது என்று கூறி அடித்தட்டு தாழ்த்தப்பட்ட மக்களின் தன்மானத்தை, நடந்த முறைகேடுகளுக்குக் கேடயமாகப் பயன்படுத்தியதைப் பார்த்தால், தி.மு.க. தலைவர் கருணாநிதி, ஆதி திராவிட மக்களின் தன்மானத்திற்கு எந்த அளவுக்கு இழுக்கு ஏற்படுத்தியுள்ளார் என்பது இதன்மூலம் தெள்ளத்தெளிவாகத் தெரியவருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

சமூக நீதியை நிலைநாட்ட, சமுதாயத்தில் இதர முற்பட்ட வகுப்பினருக்கு இணையாக பழங்குடியின மக்களை மேம்பாடு அடையச் செய்வது அவசியம் என்பதை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கருத்தில்கொண்டு, தமிழகத்தில் வாழும் 36 உட்பிரிவுகள் அடங்கிய 6.51 இலட்சம் பழங்குடியின மக்களின் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்காக அவர்களின் மக்கள் தொகை விகிதாச்சாரத்திற்குக் குறைவில்லாமல் பகுக்கப்படும் இனத்தின்கீழ் ரூபாய் 246 கோடி, அதாவது 1.05 விழுக்காடு ஒதுக்கீடு செய்து, ஒரு வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் ரூபாய் 38.51 கோடி அதாவது 0.19 விழுக்காடு மட்டுமே நிதி ஒதுக்கி இருந்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் கடந்த ஆண்டைவிட ரூபாய் 207 கோடி நிதியினை கூடுதலாக ஒதுக்கீடு செய்து ஒரேயொரு விழுக்காடு மக்கள்தொகை உள்ள பழங்குடியினரின் வாழ்விலும் ஒளியேற்றி வைத்துள்ளார்கள் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பழங்குடியினர்களின் குறைந்த கல்வி அறிவு சதவிகிதம், பள்ளிப்படிப்பின்போது இடைநிற்றல், ஊட்டச்சத்துக் குறைபாடு, வனவள வீழ்ச்சி ஆகியவற்றின் தாக்கத்தில் இருந்து அவர்களை மீட்க, ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்களின் காலத்தில்தான் இதுவரை இல்லாத அளவிற்கு அதிகமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



2011 செப்டம்பர் 6] [திரு. ந. சுப்ரமணியன்]

முற்பகல் 10-30

மைய அரசின் சிறப்பு நிதியுதவித் திட்டம், இந்திய அரசமைப்புச் சட்டப் பிரிவு 275 (1)–ன்கீழ் நிதியுதவி மற்றும் அழிந்துவரும் நிலையிலுள்ள தோடா, கோட்டா, குரும்பாஸ், இருளர், பனியன் மற்றும் காட்டுநாயக்கன் ஆகிய பழங்குடியினருக்கான திட்டம் ஆகிய மேற்கண்ட மூன்று திட்டங்களுக்கும் சேர்த்து ரூ.24.81 கோடி நிதியொதுக்கி தமிழக வரலாற்றில் முதன் முறையாக அதிகமாக ஒதுக்கீடு செய்து, அம்மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திடும் வகையில் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பழங்குடியினர் மற்றும் இதர மரபு வழியாக வனங்களில் குடியிருக்கும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திட, பழங்குடியினர் வன உரிமைச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை, 21,781 கோரிக்கைகள் வரப்பெற்றதில், 3,624 வன உரிமைப் பட்டாக்கள் வழங்க தயார் நிலையில் உள்ளன. பழங்குடியினருக்காக வன உரிமைப் பட்டா, வழங்குவதற்கு எதிரான தடையாணையை விலக்கிட முந்தைய தி.மு.க. அரசு எந்த ஒரு முயற்சியும் எடுக்கவில்லை. தடையாணை விலக்கப்பட தற்போது தீவிர முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தடை நீக்கப்பட்ட பிறகு வன உரிமைப் பட்டா வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த 5 ஆண்டு ஆட்சிக் காலத்தில் பழங்குடியினர் நலன்மீது எந்தவித அக்கறையும் காட்டாமல், 1095 பழங்குடியினருக்கான வீடுகள் கட்டப்படாமல் கிடப்பில் போடப்பட்டன. இதனை அறிந்த மாண்புமிகு அம்மா அவர்கள், பதவியேற்றவுடன் இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டத்திற்கு ஒதுக்கப்படும் நிதியளவு ரூ.55,000 முதல் ரூ.58,500 வரை இருந்ததை உயர்த்தி, ரூபாய் ஒரு இலட்சம் செலவில் (மேசையைத் தட்டும் ஒலி) 1095 பழங்குடியினர் வீடுகளையும் கட்டி முடிக்க ஆணையிட்டுள்ளார்கள் என்பதையும் இம்மாமன்றத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

ஆதி திராவிட மக்களின் வாழ்வை ஒளிமயமாக்கும் விடிவெள்ளியாக விளங்குபவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். நிலமற்ற கூலிவேலை செய்து வந்த ஏழையெளிய ஆதி திராவிட மகளிரை அந்த நிலத்திற்கே சொந்தக்காரர்களாக்க தாட்கோமூலம் நிலம் வாங்கும் திட்டத்தினை 2004–2005 ஆம்

ஆண்டிலே முதன் முதலில் அறிமுகப்படுத்தியதும் மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையிலான அரசுதான். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்களால் கொண்டுவரப்பட்ட இந்தத் திட்டத்தின் விளைவாக இன்று 5,930 ஆதி திராவிட மகளிர், விவசாய நிலத்திற்குச் சொந்தக்காரர்களாக உள்ளனர். இந்த சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு வித்திட்டவர் மாண்புமிகு அம்மா அவர்கள்தான் ஆவார்கள். இளைஞர் சுயதொழில் புரிந்து தங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திட அவர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டத்தினை 2004–2005 ஆம் ஆண்டு உருவாக்கிக் கொடுத்ததும் மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய தலைமையிலான அரசுதான். இதன் பயனாக 5,399 இளைஞர்கள் வாழ்வில் வளம் பெற்றுள்ளனர்.

இதைப்போல, மகளிர் சுயஉதவிக் குழுவிற்கு சுழல்நிதி மற்றும் பொருளாதார நிதியுதவித் திட்டங்களை 2002–2003 ஆம் ஆண்டு தாட்கோமூலம் அறிமுகப்படுத்தியதும் மாண்புமிகு அம்மா அவர்கள் தலைமையிலான அரசுதான். (மேசையைத் தட்டும் ஒலி) இதன் பயனாக இதுவரை 3 இலட்சத்து 692 மகளிர் பயன் பெற்றுள்ளனர். இதைப்போல, தாட்கோமூலம் மாவட்ட ஆட்சியர் விருப்புரிமைத் திட்டம் 2003–2004 ஆம் ஆண்டும் அம்மா தலைமையிலான இந்த அரசால்தான் கொண்டுவரப்பட்டது. இதன்பலனாக 15,508 நபர்கள் பயன்பெற்றுள்ளனர். மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையிலான இவ்வரசு ஆதி திராவிடர் நலனில் அதிக அக்கறை கொண்டுள்ளது.

1995 ஆம் ஆண்டு தனிநபர் கடன் திட்டத்திற்கு அனுமதிக்கப்பட்ட ரூ.25,000 என்ற மானியத்தை உயர்த்த கடந்த 5 வருடங்களாக ஆண்ட மைனாரிட்டி தி.மு.க. அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆனால், அம்மா தலைமையிலான இந்த அரசு பொறுப்பேற்றவுடன் தாட்கோமூலம் செயல்படுத்தப்படும் தனிநபர் கடன் திட்டங்களுக்கான மானியம் ரூ.25,000 ரூபாயாக இருந்ததை இத்திட்டத் தொகையில் 30 சதவிதம் அல்லது 2 இலட்சத்து 25,000 ரூபாய் வரை கிடைக்கத்தக்க வகையில் உயர்த்தியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் ஆதிதிராவிட



மக்கள் கூடுதல் மானியம் பெற்று அதிகக் கடன் பெற மாண்புமிகு அம்மா அவர்கள் வழிவகை செய்துள்ளார்கள் என்பதையும் மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையிலான இந்த அரசு பதவியேற்ற 100 நாட்களில் இந்த நடவடிக்கை எடுத்துள்ளது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஆதி திராவிட, பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய ஆதி திராவிட கிருஸ்தவர்கள் பயனடையும் வகையில் திறன் மேம்பாட்டு பயிற்சியளிக்க 25 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், வளர்ந்து வரும் துறைகளான தகவல் தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகளில் பயிற்சி அளிக்க அவர்களுக்கு வேலைவாய்ப்பினை உறுதிசெய்யும் வகையில் சிறப்பான பயிற்சியளிக்கவும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

விவசாயம் இல்லாத தொழில்களுக்காக தாட்கோமூலம் வழங்கப்பட்ட விளிம்புத் தொகை ரூ.82.62 கோடி முழுவதும் தள்ளுபடி செய்வதாக கடந்த மைனாரிட்டி தி.மு.க. அரசு அறிவித்தது. ஆனால், தாட்கோ செலுத்திய விளிம்புக்கடன் தாட்கோவிற்கு திரும்ப வழங்கப்படவே இல்லை. அதனால் தாட்கோவின் பங்கு மூலதனத் தொகை கையிருப்பு இல்லா நிலைக்குத் தள்ளப்பட்டது. இந்த நிலையினை அறிந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் தாட்கோவிற்கு புத்துயிர் ஊட்டுகின்ற வகையில் நிலுவையிலிருந்த ரூ.26 கோடியினை பங்கு மூலதனமாக வழங்கி உத்தரவிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இதன்மூலம் அத்தொகைக்கு ஈடுசெய்யப்படும் வகையில் அதற்கு இணையாக மத்திய அரசிடமிருந்து தாட்கோ நிதியுதவி கிடைக்கும் வகையில் வழிவகை செய்து தாட்கோ நிறுவனத்திற்கு புத்துயிர் ஊட்டியுள்ளார்கள். மேலும், தாட்கோவிற்கு வழங்கப்பட்ட விளிம்புத் தொகை ரூ.82.62 கோடியை கடந்த மைனாரிட்டி தி.மு.க. அரசு தள்ளுபடி செய்வதாகக் கூறினார்கள். ஆனால், தாட்கோவிற்கு அவர்கள் கூறியபடி உரிய தொகை கடைசிவரை வழங்கப்படவில்லை. இதனால் தாழ்த்தப்பட்ட மக்கள் தாட்கோமூலம் கடன் பெற வழியில்லாமல் அல்லல்பட்டு வந்தனர். இதன்மூலம் அடித்தட்டு

மக்களுக்கு மைனாரிட்டி தி.மு.க. அரசு எந்த அளவுக்கு துரோகம் செய்துள்ளது என்பதை நன்கு உணர முடிகிறது.

முற்பகல் 10-35

கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியாளர்கள் தாட்கோவிற்கு மட்டுமா துரோகம் செய்தார்கள். தமிழர்களுக்கும், இலங்கைத் தமிழர்களுக்கும் துரோகம் செய்து, விஞ்ஞான முறையில் ஊழல் செய்த ஒப்பற்ற பேர்வழி, தமிழர்களை ஏமாற்றித் துரோகம் செய்து (மேசையைத் தட்டும் ஒலி) வந்த கருணாநிதியோ இன்று சிறைச்சாலை, சிறைச்சாலையாக ஓடிக் கொண்டிருக்கிறார். இதுதான் மக்கள் அவருக்கு கொடுத்த வெகுமதி என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள் ஏழை விவசாய பெருமக்களுக்கு ஆடு, மாடுகள் வழங்கிடும் திட்டத்தினை அறிமுகப்படுத்திய நிலையிலேயே ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு 30 விழுக்காடு ஆடு, மாடுகளை வழங்கிட ஆணையிட்டதன்மூலம் (மேசையைத் தட்டும் ஒலி) அடித்தட்டு மக்கள்மீது மிகுந்த அக்கறை கொண்டுள்ளார்கள் என்பதை அறிய முடிகிறது. ஒட்டுமொத்த மக்கள் தொகையில் 20 விழுக்காடு உள்ள ஆதி திராவிட மக்களுக்கு 30 விழுக்காடு ஆடு, மாடுகள் வழங்குவதன்மூலம் (மேசையைத் தட்டும் ஒலி) தகுதியுள்ள அனைத்து ஆதி திராவிட மக்களும் இத்திட்டத்தில் பயனடைவார்கள் என்பதை இதன்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்கள் அம்மா ஒரு கருணைக் களஞ்சியம், (மேசையைத் தட்டும் ஒலி) விதியையே மாற்றும் வீரம் கொண்டவர் எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) அற்புத அறிவாற்றலின் சேமிப்பு. அமெரிக்கர்களையே அண்ணாந்து பார்க்க வைத்தவர். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்களே ஒரு நிஜமான அற்புதம், கண்ணுக்குத் தெரியும் சத்தியம் எங்கள் அம்மா. அடுத்தவர் நிலத்திற்கு ஆசைப்பட்டவர்கள் அடுத்தடுத்து அவர்களாகவே ஜெயிலுக்கு சென்று கொண்டிருக்கிறார்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் அம்மா அவர்களின் காலடியே எங்களுக்கு ஞானத் திருவடி எனக்கூறி, என் உரையை முடிக்குமுன் ஒரு சிறு கதையைக் கூற விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு ஏழை விவசாயி 2 ஏக்கர் நிலத்தை வைத்திருந்தான். அவன் கடவுளிடம் சென்று, நான் நன்றாக வசதி வாய்ப்புடன் வாழ வேண்டுமென்று வேண்டிக்கொண்டான். ஆண்டவன் அவனுக்கு நேராகத் தோன்றி ஒரு இரும்பு மண்வெட்டியைக் கொடுத்து இந்த மண்வெட்டியில் ஒரு விசேஷமிருக்கிறது என்று கூறி மறைந்துவிட்டார். உடனே இந்த விவசாயி அந்த இரும்பு மண்வெட்டியை எடுத்துக் கொண்டு தன் வயலுக்குச் சென்றான். மண்ணை வெட்டினான். வெட்டிய மண்ணெல்லாம் இரும்பாக மாறியது. உடனே அந்த இரும்பை அள்ளி விற்று, அவன் சுகமாக வாழ ஆரம்பித்தான். உடனே அவனுக்கு ஆசை ஏற்பட்டது. ஆகா, நமக்கு இந்த இரும்பினாலே இவ்வளவு கிடைத்தது. அடுத்தாற்போல் ஆண்டவனிடம் போய் கேட்டால் இதைவிடக் கூட கிடைக்குமே என்று ஆண்டவனிடம் திரும்பவும் செல்கிறான். அங்கே போனவுடனே ஆண்டவனை நினைத்து வேண்டியவுடன் ஆண்டவன் கண் முன்னாடி தோன்றி உடனே ஒரு வெள்ளி மண்வெட்டியைக் கொடுத்து விட்டார். அந்த வெள்ளி மண்வெட்டியைக் கொடுத்தவுடனே அவனுக்குப் புரிந்துவிட்டது, நாம் போய் மண்ணைத் தோண்டினால் வெள்ளி வெள்ளியாக வரப்போகிறது என்று. அதேமாதிரி அந்த வெள்ளி மண்வெட்டியை எடுத்துக் கொண்டு போய் மண்ணை வெட்ட ஆரம்பித்தான். விவசாயம் செய்ய ஆரம்பித்தான். வெட்டிய மண்ணெல்லாம் வெள்ளியாக மாறிவிட்டது. உடனே அதையும் வைத்து நல்ல சுகபோகமாக வாழ ஆரம்பித்தான். மிகவும் ஆசை வந்துவிட்டது. உடனே அடுத்தாற்போல் கடவுள்கிட்டே போய் வேண்டுகிறான். கடவுளே, எனக்கு இன்னும் கொஞ்சம் சுகமாக வாழ்வதற்கு வசதி செய்து கொடுங்கள் என்று வேண்டியவுடனே, கடவுள் பார்த்தார், உடனே தங்க மண்வெட்டியைக் கொடுத்தார். தங்க மண்வெட்டியைக் கொடுத்தவுடனே அதை எடுத்துக் கொண்டு போய் அந்த நிலத்தை வெட்ட ஆரம்பித்தான். வெட்டிக் கொண்டே போய்க் கொண்டிருக்கிறான். படுபாதாளமாக ஆகிற அளவுக்கு வெட்டிக் கொண்டே போய்விட்டான். ஆழத்திலே போய் நின்றுவிட்டான். மேலே பார்த்தால் உயரமாக தங்கமாகக் குவிந்து போயிருக்கிறது. அந்தத் தங்கக் குவியல் எல்லாம் போட்டு மூடி அவனே அமிழ்ந்துவிட்டான். (மேசையைத் தட்டும் ஒலி) இதை எதற்காகச் சொல்ல வந்தேன் என்றால், முன்னால் ஆண்டு கொண்டிருந்த, அதிகமாக மக்களை சுரண்டிக் கொண்டிருந்த

Minority Government, முன்னாள் துணை முதல்வராக இருந்த ஸ்டாலினைத்தான் அம்மா சொல்கிறேன், அந்த இரும்பு மண்வெட்டியாக, (மேசையைத் தட்டும் ஒலி) அதேமாதிரி மத்திய சர்க்காருக்குச் சென்று அங்கே இருப்பதை எல்லாம் தெரிந்துகொள்ள வேண்டும் என்று விரும்பிய அந்த மு.க. அழகிரியைத்தான் அம்மா நான் சொல்கிறேன் வெள்ளி மண்வெட்டியாக, கடைசியாக திகார் ஜெயிலில் இருக்கிறார்களே கனிமொழி அவர்களைத்தான் அம்மா சொல்கிறேன் இந்த தங்க மண்வெட்டியாக, என்று கூறிக் கொண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) புதிய அறிவிப்புகள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கதையைச் சொல்கின்றார்.

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** அதற்கு அடுத்தபடியாக புதிய அறிவிப்புகள். அவர்களுடைய பேராசையினால் வந்த விளைவே இது என்பதை மக்கள் நன்கு அறிவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) அடுத்தபடியாக அறிவிப்புகள். (குறுக்கீடுகள்) ஆதி திராவிட மற்றும் பழங்குடியினர் நலத் துறை. . .

முற்பகல் 10–40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேராசையால் என்ன விளைவுகள் ஏற்படும் என்ற அந்த கதையைத்தான் சொன்னார். “எங்கள் அப்பன் குதிருக்குள் இல்லை” என்பதுபோல் உங்களுக்கு ஏன் கோபம் வருகிறது? (கூச்சல்–குழப்பம்)

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** புதிய அறிவிப்புகள். புதிய ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகள் துவங்குதல் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேராசையால் என்ன விளைவுகள் வரும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு கதை மூலம் சொன்னார். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** தற்போது தமிழ்நாட்டில் 1,294 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகள் உள்ளன. (குறுக்கீடுகள்).



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Please sit down. உட்காருங்கள். (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** இவை மாணவ மாணவியர்க்கு போதுமானவையாக இல்லை. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, அம்மாணவ, மாணவியர் நாட்டமுடன் கல்வி கற்க ஊக்கப்படுத்தும் வகையில் தேவைப்படும் இடங்களில் 25 புதிய விடுதிகள் இந்த நிதியாண்டில் துவங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில், ஒவ்வொரு மாவட்டத்திலும் முதலாவது இடம் பெறும் ஆதி திராவிடர்/பழங்குடியினர்/கிருத்துவ ஆதி திராவிட மாணவர்களுக்கு வழங்கப்படும் பரிசுத் தொகையான ரூ.3,000/- என்பதை ரூ.6,000/- என உயர்த்தி வழங்கப்படும். அதேபோல, 10 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில். . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பைப் படித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எழுந்து நின்று இதுபோன்ற நிகழ்ச்சிகள் செய்வது, விதிகளுக்கு உட்பட்டு இருக்கிறதா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** அதேபோல 10 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில். . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று இந்தக் கருத்திற்கு இவர்கள் எழுந்து நிற்கிறார்களே, நேற்று அவர்களுடைய தலைவர் கருணாநிதி செய்த குற்றச்சாட்டை, நில அபகரிப்பினுடைய கருத்தினைச்

சொல்லும்போது, ஏன் இவர்கள் வெளியே சென்றுவிட்டார்கள்? (குறுக்கீடுகள்) நேற்று இருந்து, இப்போது பேசுவதைப்போல பதில் சொல்லியிருந்தார்கள் என்று சொன்னால், நிச்சயமாக அவர்களைப் பாராட்டியிருக்கலாம். ஆனால், இப்போது குரல் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் "அறிவிப்புகள்" செய்ய வேண்டும். தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள், உங்கள் அறிவிப்பினைத் தொடரலாம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** அதேபோல, 10 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில், ஒவ்வொரு மாவட்டத்திலும் முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்கள் பெறும் (கூச்சல்- குழப்பம்) ஆதி திராவிடர்/பழங்குடியினர்/கிருத்துவ ஆதி திராவிட மாணவர்களுக்கு வழங்கப்படும் பரிசுத் தொகையான ரூ.1,000/-, ரூ.500/- மற்றும் ரூ.300/- என்பதனை ரூ.2,000/-, ரூ.1,000/- மற்றும் . . . ரூ.500/- என உயர்த்தி வழங்கிடவும்... (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண் பெறும் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணவர்களில் முதல் 1,000 பேருக்கும், மாணவிகளில் முதல் 1,000 பேருக்கும் அவர்களது மேல் படிப்பை தொடர்ந்து படித்திட முதலமைச்சரின் தகுதிப் பரிசுத் தொகை திட்டத்தின்கீழ் ஆண்டு ஒன்றுக்கு ஒவ்வொருவருக்கும் ரூ.1,500/– வீதம் 5 ஆண்டுகளுக்கு வழங்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, இவ்வாண்டிலிருந்து இத்தொகை, ரூபாய் மூவாயிரமாக உயர்த்தி வழங்கப்படும். (கூச்சல்–குழப்பம்)

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** கைகளை வேறுவிதமாகக் காட்டிக்கொண்டிருக்கிறார்கள். தயவுசெய்து. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்). தயவுசெய்து உட்காருங்கள்.



**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதாவது மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரிடம் சொல்ல வேண்டுமென்றால், அவர்கள் எழுந்து அமைதியான முறையில் உங்களை வலியுறுத்தலாம். ஆனால், கையை நீட்டிக்கொண்டு, ஒரு விரலைக் நீட்டிக்கொண்டு பேசுவது என்பது சபை மரபுக்கு உகந்ததல்ல. (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர்களுக்கு எச்சரிக்கை செய்கிறேன். இதுபோன்று, அடுத்த தடவை, கையை நீட்டி, நீட்டிப் பேசுகின்ற முறையைப் பார்த்தால் அவையைவிட்டு வெளியேற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்படும். (குறுக்கீடுகள்). மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவசங்கரை வெளியேற்றவும். (குறுக்கீடுகள்) காவலர்கள், உறுப்பினரை வெளியேற்றவும். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்) இந்த அவைக்கென்று கண்ணியமும், மரபும் இருக்கிறது. கண்ணியம் காப்பாற்றப்பட வேண்டும். கையை நீட்டிப் பேசுவது எந்த விதத்தில் நியாயம்? உங்கள் உறுப்பினர் இப்படிச் செய்வது நியாயமா?

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குன்னம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அங்கே இருக்கின்ற காவலரிடம் எப்படி நடந்துகொண்டார் என்பதை நாம் இங்கே இருந்து பார்த்தோம். அவர் காவலரையே அடிக்கிறார். எனவே, அவர்மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது குறித்து, காவலரிடமிருந்து புகார் பெற்று அவர்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 'அறிவிப்பு' செய்யலாம்.

*முற்பகல் 10-45*

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருகிறீர்களா அல்லது உங்கள்மீது நடவடிக்கை எடுக்கட்டுமா? (குறுக்கீடுகள்) தயவுசெய்து அமருங்கள். இறுதியாக உங்களுக்கு எச்சரிக்கை செய்யப்படுகிறது. தயவுசெய்து அமருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பு செய்துகொண்டிருக்கின்றார்கள். அந்த அறிவிப்பிற்கு (குறுக்கீடுகள்) அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்கும்படி செய்தால் உங்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படும். (குறுக்கீடுகள்) தயவுசெய்து அமருங்கள். உரிய வாய்ப்பு உங்களுக்குத் தரப்படும். தயவுசெய்து அமருங்கள். நீங்கள் அமரவில்லையென்றால் வெளியேற்றப்படுவீர்கள். (குறுக்கீடுகள்) காவலர்கள், நின்றுகொண்டு கூச்சலிடுகின்ற எல்லோரையும் வெளியேற்றுங்கள். அவைக் காவலர்கள், மார்ஷல், திரு. அன்பழகனை முதலில் வெளியேற்றுங்கள். (குறுக்கீடுகள்) திரு. மைதீன்கான் பக்கத்தில் இருப்பவர்தான் திரு. அன்பழகன். எல்லோரையும் வெளியேற்றுங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருகிறீர்களா, இல்லையா? நீங்கள் முதலிலே உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு (குறுக்கீடுகள்) அவைக் காவலர்கள், பின்வரிசையில் இருக்கின்ற தி.மு.க. உறுப்பினர்களை வெளியேற்றுங்கள். (குறுக்கீடுகள்) திரு. வேலுவை வெளியேற்றுங்கள். அவைக் காவலர்கள், கூச்சலிடுகின்ற உறுப்பினர்களை உடனடியாக வெளியேற்றவும். (குறுக்கீடுகள்) அவைக் காவலர்கள், உடனடியாக அவர்களை வெளியேற்றுங்கள். அவையின் நேரம் waste ஆகிறது. (குறுக்கீடுகள்) காவலர்கள், அங்கே என்ன செய்கின்றீர்கள்?

(திராவிட முன்னேற்ற கழக உறுப்பினர்கள் அனைவரும் அவைக் காவலர்களால் வெளியேற்றப்பட்டனர்.)

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் அறிவிப்புகளைத் தொடரலாம்.

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பன்னிரண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் ஒவ்வொரு மாவட்டத்திலும் முதல் மதிப்பெண் பெறும் ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவி மேற்படிப்பினைத் தொடர, அண்ணல் காந்தி நினைவுப் பரிசுத் தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப்படும் மாணவ, மாணவிகளுக்கு முதல் வருடத்திற்கு ரூ.1,500/–ம், அடுத்துவரும் 5 ஆண்டுகளுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.1,000/–ம் வழங்கப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு



முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, இத்தொகை முதல் வருடத்திற்கு ரூ.2,000/- எனவும், அடுத்துவரும் 5 ஆண்டுகளுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.1,500/- எனவும் உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

உயர் கல்வி சிறப்பு உதவித்தொகைத் திட்டத்தின்கீழ் விடுதிகளில் தங்கி இளங்கலை பட்டப்படிப்பு, தொழிற்பயிற்சி பயிலும் மாணவ, மாணவியருக்கு ரூ.6,500/-ம், முதுகலை மற்றும் தொழில்நுட்பக் கல்வி பயிலும் மாணவ, மாணவியருக்கு ரூ.7,000/-ம் வழங்கப்படுகிறது. இவ்வாண்டு முதல் இந்த உதவித்தொகை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைப்படி, இளங்கலை பட்டப்படிப்பு, தொழிற்பயிற்சி பயிலும் மாணவ, மாணவியருக்கு ரூ.7,500/– எனவும், முதுகலை மற்றும் தொழில்நுட்பக் கல்வி பயிலும் மாணவ, மாணவியருக்கு ரூ.8,000/- எனவும் உயர்த்தி வழங்கப்படும். இதன்மூலம் 26,148 மாணவ, மாணவியர் பயனடைவர். (மேசையைத் தட்டும் ஒலி)

10 மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் 95 விழுக்காட்டிற்குமேல் தேர்ச்சி எய்தும் ஆதி திராவிடர்/பழங்குடியினர் உண்டி, உறைவிட உயர்நிலை/மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களை ஊக்கப்படுத்தும்வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைப்படி, முதன்முறையாக ரூ.10,000/- ஊக்கப் பரிசாக வழங்கப்படும். அதேபோல, 100 விழுக்காடு தேர்ச்சி சதவீதம் எய்தும் முதுகலை பட்டதாரி/பட்டதாரி பாட ஆசிரியர்களுக்கு ஊக்கப் பரிசாக ரூ.5,000/- வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மைய அரசின் கல்வி உதவித்தொகை பெற இயலாத, கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணவ, மாணவியர்க்கு 10 ஆம் வகுப்பிற்கு மேற்பட்ட படிப்பிற்கான சிறப்பு உதவித் தொகை திட்டத்தின்கீழ் (State Post-matric Scholarship), விடுதியில் தங்காது கல்வி பயிலும் மாணவ, மாணவியர்க்கு வழங்கப்படும் பராமரிப்புப் படி மற்றும் கட்டாயக் கட்டணங்கள் மாதம் ஒன்றிற்கு ரூ.65/- முதல் ரூ.125/- வரை வழங்கப்படுகிறது. விடுதியில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியர்க்கு மாதம் ஒன்றிற்கு ரூ.115/- முதல் ரூ.280/- வரை வழங்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-50

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தற்போது இத்தொகை விடுதியில் தங்காது கல்வி பயிலும் மாணவ மாணவியர்க்கு ரூபாய் 100/- முதல் ரூபாய் 175/- வரையிலும், விடுதியில் தங்கிப் பயிலும் மாணவ மாணவியர்க்கு ரூபாய் 175/- முதல் ரூபாய் 350/- வரையிலும் உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் 70,740 மாணவ மாணவியர் பயனடைவார்கள்.

ஆதி திராவிடர் / பழங்குடியினர் பள்ளி விடுதிகளில் உள்ள ஆதி திராவிடர் பழங்குடியினர் மற்றும் கிருத்துவ ஆதி திராவிடர் மாணவ / மாணவியர்க்கு சோப்பு, எண்ணெய் மற்றும் சில்லறைச் செலவினங்களுக்காக மாதம் ஒன்றிற்கு ரூபாய் 25/- வழங்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி இத்தொகை இந்த நிதியாண்டு முதல் ரூபாய் 50/- ஆக உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆதி திராவிடர்/பழங்குடியினர் கல்லூரி விடுதிகளில் உள்ள ஆதி திராவிடர்/பழங்குடியினர் மற்றும் கிருத்துவ ஆதி திராவிடர் மாணவ/மாணவியர்க்கு இத்தொகை ரூபாய் 35/- என வழங்கப்படுகிறது. இத்தொகை இந்த நிதியாண்டு முதல் ரூபாய் 75/- ஆக உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இது அவர்களின் வங்கிக் கணக்கில் நேரடியாகச் செலுத்தப்படும்.

விடுதிகளில் தங்கிப் பயில தகுதிவாய்ந்த ஆதி திராவிடர்/ பழங்குடியினர் மற்றும் கிருத்துவ ஆதி திராவிடர் மாணவ மாணவியர் அதிக அளவில் விண்ணப்பித்துள்ளனர். எனவே, அவர்களது தேவையினைக் கருத்திற்கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைப்படி, 2011-12 ஆம் கல்வி ஆண்டில் ஆதி திராவிட/பழங்குடியின நல விடுதிகளில் மாணவ மாணவியர்க்குக் கூடுதலாக 1,500 இருக்கைகள் ஏற்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த ஆண்டுகளில் நிதி குறைவாக ஒதுக்கப்பட்டதால், கட்டப்படாமல் நிலுவையில் உள்ள பழங்குடியினருக்கான 1,095 வீடுகள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் வழங்கப்படுவதைப்போல், வீடு ஒன்றுக்கு ரூபாய் ஒரு இலட்சம் வீதம் அனுமதித்து, தேவையான கூடுதல் தொகை வழங்கி, கட்டி முடிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)



ஆதி திராவிட மக்கள் அதிகமாக வாழும் குடியிருப்புகளில் 10 சமுதாயக் கூடங்கள் ஒரு கோடி ரூபாய் செலவில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆதி திராவிடர் நல ஆணையர் அலுவலகம் ரூபாய் 55 இலட்சம் செலவில் நவீனப்படுத்தப்படும்.

ஐந்து மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள் மற்றும் 11 தனி வட்டாட்சியர்களுக்கு மொத்தம் 16 பழைய ஈப்புகளைக் கழிவு செய்து புதிய ஈப்புகள் வழங்கப்படும்.

744 ஆதி திராவிடர் நலப் பள்ளிகளுக்கு குடிதண்ணீர் தூய்மைப்படுத்தும் கருவிகள் ரூபாய் 66.96 இலட்சம் செலவில் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

நீலகிரி மாவட்டத்தில் உள்ள பழங்குடியினர் ஆய்வு மையத்தில் ரூபாய் 49.29 இலட்சம் செலவில் கட்டடப் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

தமிழகத்திலுள்ள பழங்குடியினரின் சமூக, பொருளாதார நிலை குறித்த கணக்கெடுப்புப் பணி ரூபாய் 10 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பழங்குடியின உண்டி, உறைவிடப் பள்ளிகள் ரூபாய் 49 இலட்சம் செலவில் பழுது பார்க்கப்படும்.

பழங்குடியின மாணவ மாணவியர் தங்கும் விடுதிகளுக்கு ரூபாய் 74.90 இலட்சம் செலவில் படுக்கைகள் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் பல அரிய கருத்துகளையும், பலவிதமான நியாயமான கோரிக்கைகளையும் தந்துள்ளார்கள். வெட்டுத் தீர்மானங்கள்மூலம் அரசின் கவனத்திற்கும், பரிசீலனைக்கும் பல முக்கியப் பிரச்சினைகளைப் பற்றிக் கூறியுள்ளார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழகத்தினுடைய ஒட்டுமொத்த சமுதாய, பொருளாதார வளர்ச்சிக்கு மிகுந்த அக்கறையோடு செயல் திட்டங்களை மேற்கொண்டு வருகிறார்கள். அந்த அடிப்படையில் மாண்புமிகு

உறுப்பினர்களின் சீரிய கருத்துகளெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆலோசனையின்பேரில் பரிசீலிக்கப்படும் என்கிற உறுதியைப் பேரவைக்கு அளிக்கிறேன். ஆகவே, வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

சற்றுமுன் நான் கூறிய அந்தக் கதைக்காக முன்னால் ஆண்டுகொண்டிருந்த அந்த மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள்-எந்த அளவிற்கு ஆதி திராவிட மக்கள் மீது-அந்தத் துறையின் மீதான மானியக் கோரிக்கை நடந்துகொண்டிருக்கிறது. அவர்கள் உண்மையிலேயே நம்பிக்கை வைத்திருந்தால், நன் மதிப்பு வைத்திருந்தால், இந்தக் கோரிக்கையின் மீதான விவாதத்தில் கலந்துகொண்டிருப்பார்கள். இதையெல்லாம் விட்டுவிட்டு, ஏனென்றால் கடந்த ஆட்சிக் காலத்திலே இந்தத் துறைக்காக எதையுமே செய்யவில்லை. அவர்களின் கனிமொழி மாநாட்டுக்கும், கலர் டி.வி.-க்கும், தலைமைக் கழகம் கட்டுவதற்கும் இந்தத் தொகையைப் பூராவும் கொண்டுபோய்விட்டு, பழங்குடியின, ஆதி திராவிட மக்கள் பயனடையச் செய்யக்கூடிய எந்தவிதமான திட்டங்களையுமே செயல்படுத்தாமல் 5 வருடங்களாக ஆட்சியிலே இருந்தவர்கள்தான் அந்த ஆதி திராவிட மக்களுக்காக எதையோ செய்யப் போகிறோம் என்கிற நினைப்பிலே போய்க்கொண்டிருக்கிறார்கள். எனவே, அவர்களுடைய பேராசையால் விளைந்த விளைவு என்பதைத்தான் நான் சொல்ல வந்தேன். அதற்கு அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் எல்லாம் எழுந்து போய்விட்டார்கள். இதன் மூலமாக இந்த மக்களுக்கு என்ன அவர்கள் செய்யப் போகிறார்கள் என்பது நன்றாகத் தெரிய வருகிறது. இதன்மூலமாக அந்த ஆதி திராவிட மக்களுக்காக அவர்கள் எந்த அளவிற்குப் பாடுபடப் போகிறார்கள் என்பது நன்றாகத் தெரிய வருகிறது. இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற் பாதங்களைப் பணிந்து எனது உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

*முற்பகல் 10-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.



## (அ) கோரிக்கை எண் 4-ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 4-ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை. 5-9-2011 அன்று மாண்புமிகு உறுப்பினர்களால் முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

*(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)*

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,003,39,04,000/-, மூலதனக் கணக்கில் ரூ.76,70,41,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

டாக்டர் க. கிருஷ்ணசாமி, Please sit down. காலையில் என் அறைக்கு வந்தீர்கள். அதுபற்றிச் சொன்னீர்கள். வேறு ஒரு சந்தர்ப்பம் வரும்போது பேசலாம் என்று சொல்லியிருக்கிறேன். Please sit down.

# 3. விதி 110-ன்கீழ் அறிக்கை

## முதன்மை நிலை விளையாட்டு மையம் அமைத்தல், பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் பெறும் வீரர், வீராங்கனைகளுக்கு வழங்கப்படும் ஊக்கத் தொகையை அதிகரித்தல் குறித்து மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகின்றது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இளைஞர்கள் ஒரு நாட்டின் மதிப்புமிக்க செல்வம். கல்வியில் மேன்மை, விளையாட்டு மற்றும் போட்டிகளில் திறமை, சேவை மனப்பான்மைக்கு வித்திடும் வகையில் சமுதாயத் தேவைகள் குறித்த விழிப்புணர்வு ஆகியவை ஒரு மாணவனைச் சிறந்த மனிதனாக உருவாக்க உதவுகின்றன. விளையாட்டுப் போட்டிகள், தேசிய மாணவர் படை, நாட்டுநலப் பணித் திட்டம் மற்றும் சாரண சாரணியர் இயக்கம் ஆகியவை நற்பண்புகளை இளைஞர்களுக்குப் புகட்டி அவர்களை நாளைய பொறுப்புள்ள குடிமக்களாக மலரச் செய்கிறது. குறிப்பாக, விளையாட்டு என்பது ஒருங்கிணைந்து செயல்படுவதன் முக்கியத்துவத்தையும், நேர்மையாக செயல்படும் பக்குவத்தையும் கற்றுத் தருவதுடன், வெற்றியையும் தோல்வியையும் சமமாக ஏற்றுக்கொள்ளக்கூடிய மனத் திண்மையையும் அளிக்கிறது.

இதனைக் கருத்தில்கொண்டு, விளையாட்டை மேம்படுத்தும் நோக்கத்துடனும், இளைஞர்களிடையே விளையாட்டு ஆர்வத்தினை வளர்க்கும் நோக்கத்துடனும், எனது முந்தைய ஆட்சிக் காலத்தில் அதாவது 1992 ஆம் ஆண்டு இளைஞர் மற்றும் விளையாட்டுப் பயிற்சித் துறை மற்றும் தமிழ்நாடு மாநில விளையாட்டு வளர்ச்சி வாரியம் ஆகியவற்றை ஒருங்கிணைத்து இந்திய விளையாட்டு ஆணையத்திற்கு இணையான, “தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்”—Sports Development Authority of Tamil Nadu என்ற ஒரு ஆணையம் உருவாக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

உலகத் தரம் வாய்ந்த ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கம், ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டு அரங்கம், மேயர் ராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டு அரங்கம், நுங்கம்பாக்கம் டென்னிஸ் விளையாட்டு அரங்கம், வேளச்சேரி நீச்சல் வளாகம் ஆகிய விளையாட்டு அரங்குகள் எனது முந்தைய ஆட்சிக்





காலத்தில்தான் உருவாக்கப்பட்டன என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், விளையாட்டு மேம்பாட்டிற்காக எனது ஆட்சிக் காலத்தில்தான் அதிக நிதி ஒதுக்கப்படுகிறது என்பதையும் இந்த மாமன்ற உறுப்பினர்களாகிய நீங்கள் நன்கு அறிவீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அந்தவகையில் தற்போது, விளையாட்டு மேம்பாட்டிற்காக எனது தலைமையிலான அரசு செயல்படுத்த இருக்கும் புதிய திட்டங்கள் குறித்து நான் இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்ள விழைகிறேன்.

10 வயது முதல் 14 வயதிற்குட்பட்ட விளையாட்டில் ஆர்வமும், திறமையும் உள்ள 25 மாணவர்கள் மற்றும் 25 மாணவிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு விளையாட்டில் உயர்தர நுணுக்கங்களுடன்கூடிய விஞ்ஞான ரீதியான பயிற்சி அளிப்பதற்கென சென்னையில் உலகத் தரம் வாய்ந்த முதன்மை நிலை விளையாட்டு மையம், அதாவது Centre of Excellence in Sports ஒன்று அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தேர்ந்தெடுக்கப்படும் மாணவ, மாணவியர்கள் இந்த மையத்தில் தங்கி சிறப்புப் பயிற்சி பெறுவர். இந்த மையத்தில் தங்கும் மாணவ, மாணவியர்களுக்கு விளையாட்டுச் சீருடை, விளையாட்டு உபகரணங்கள், நவீன உடற்பயிற்சிக்கூடம், விஞ்ஞான ரீதியிலான பயிற்சி, வெளிநாடுகளில் நடைபெறும் போட்டிகளில் கலந்துகொள்ள உதவி மற்றும் பயிற்சி ஆகிய வசதிகள் செய்து தரப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) சென்னையில் உள்ள சிறந்த பள்ளிகளில் கல்வி பயிலவும், இந்த மாணவ, மாணவியர்களுக்கு அரசால் உதவி செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மையம் அமைப்பதற்காக அரசுக்கு 1 கோடி ரூபாய் தொடராச் செலவினமும், ஆண்டு ஒன்றுக்கு 70 லட்சத்து 90 ஆயிரம் ரூபாய் தொடர் செலவினமும் ஏற்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-00

ஒலிம்பிக் போட்டிகள் மற்றும் சர்வதேச அளவிலான போட்டிகளில் பதக்கம் பெற வாய்ப்புள்ள, திறன் வாய்ந்த சிறந்த விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளைத் தயார் செய்வதற்கான ஒரு சிறப்புத் திட்டம் எனது அரசால் செயல்படுத்தப்படும். இதன்படி ஐந்து விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, இவர்களை சர்வதேச அளவிலான போட்டிகளில் பதக்கம் பெற தயார் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2011 செப்டம்பர் 6

விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் வெளிநாடுகளில் நடைபெறும் போட்டிகளில் பங்கேற்கவும்; விஞ்ஞான ரீதியில் சிறப்புப் பயிற்சி பெறவும்; உயர்தர விளையாட்டுக் கருவிகள் மற்றும் பயிற்சிக் கருவிகள் வாங்கிடவும்; சத்தான உணவு பெற்றிடவும்; விளையாட்டு வீரர்களின் பயிற்றுநர்களின் திறனை மேம்படுத்தவும் இந்தத் திட்டம் வகை செய்யும். ஆண்டு ஒன்றுக்கு 1 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வெல்லும் வீரர்கள், வீராங்கனைகளை ஊக்கப்படுத்தும்பொருட்டு, அவர்களுக்கு உயரிய ஊக்கத் தொகை வழங்கும் திட்டம் 2002 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. அவ்வாறு வழங்கப்படும் ஊக்கத் தொகையை மேலும் உயர்த்தி வழங்க தற்போது எனது அரசு முடிவு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

இதன்படி ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் தங்கப் பதக்கம் வெல்லும் தமிழக விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுக்கான ஊக்கத் தொகை 1 கோடி ரூபாயில் இருந்து 2 கோடி ரூபாய் ஆகவும்; (மேசையைத் தட்டும் ஒலி) வெள்ளிப் பதக்கம் வெல்பவர்களுக்கு 50 இலட்சம் ரூபாயில் இருந்து 1 கோடி ரூபாய் ஆகவும்; (மேசையைத் தட்டும் ஒலி) வெண்கலப் பதக்கம் வெல்பவர்களுக்கு 25 இலட்சம் ரூபாயில் இருந்து 50 இலட்சம் ரூபாய் ஆகவும் உயர்த்தி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல், ஆசிய விளையாட்டுப் போட்டிகள் மற்றும் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் தங்கப் பதக்கம் வெல்பவர்களுக்கான ஊக்கத் தொகை 20 இலட்சம் ரூபாயில் இருந்து 50 இலட்சம் ரூபாய் ஆகவும்; (மேசையைத் தட்டும் ஒலி) வெள்ளிப் பதக்கம் வெல்பவர்களுக்கு 15 இலட்சம் ரூபாயில் இருந்து 30 இலட்சம் ரூபாய் ஆகவும்; (மேசையைத் தட்டும் ஒலி) வெண்கலப் பதக்கம் வெல்பவர்களுக்கு 10 இலட்சம் ரூபாயில் இருந்து 20 இலட்சம் ரூபாய் ஆகவும் உயர்த்தி வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் மற்றும் தேசிய விளையாட்டுப் போட்டிகளில் தங்கப் பதக்கம் வெல்பவர்களுக்கான ஊக்கத் தொகை 1 இலட்சம் ரூபாயில் இருந்து 5 இலட்சம் ரூபாய்



2011 செப்டம்பர் 6] [செல்வி ஜெ ஜெயலலிதா]

ஆகவும்; (மேசையைத் தட்டும் ஒலி) வெள்ளிப் பதக்கம் வெல்பவர்களுக்கு 50,000 ரூபாயில் இருந்து 3 இலட்சம் ரூபாய் ஆகவும்; (மேசையைத் தட்டும் ஒலி) வெண்கலப் பதக்கம் வெல்பவர்களுக்கு 10,000 ரூபாயில் இருந்து 2 இலட்சம் ரூபாய் ஆகவும் உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாட்டில், 9 விளையாட்டு விடுதிகளும்; விடுதிகளுடன்கூடிய 3 விளையாட்டுப் பள்ளிகளும் செயல்பட்டு வருகின்றன. இவற்றில், 860 விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் தங்கி பயிற்சி பெற்று வருகின்றனர். மேலும், அதிக எண்ணிக்கையிலான விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளை உருவாக்கும் வகையில், இந்த விளையாட்டு விடுதி மற்றும் பள்ளிகளில் சேர்க்கப்படும் வீரர்கள், வீராங்கனைகளின் எண்ணிக்கை 860–லிருந்து 1,100 ஆக உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காக அரசுக்கு 1 கோடி ரூபாய் தொடரா செலவினமும்; 1 கோடியே 16 இலட்சத்து 56 ஆயிரம் ரூபாய் தொடர் செலவினமும் ஏற்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாட்டில் தற்போது 9 மாவட்டங்களில் விளையாட்டு விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. இந்த விளையாட்டு விடுதிகள்மூலம் தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள திறமை மிக்க விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்குத் தீவிர பயிற்சியளிக்க இயலாத சூழ்நிலை உள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு, ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு விளையாட்டு விடுதி வீதம், 23 மாவட்டங்களில் விளையாட்டு விடுதிகளை அமைக்க எனது அரசு முடிவு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) ஒவ்வொரு விளையாட்டு விடுதியிலும் 60 மாணவ, மாணவியருக்கு உயர்தர பயிற்சி அளிக்கப்படும். இவர்களுக்கு உணவு, உறைவிடம் மற்றும் இதர வசதிகள் அனைத்தும் வழங்கப்படும். முதற்கட்டமாக, 5 மாவட்டங்களில் விளையாட்டு விடுதிகள் அமைக்கப்படும். இதற்காக அரசுக்கு 3 கோடி ரூபாய் தொடரா செலவினமும்; 1 கோடியே 15 இலட்சம் ரூபாய் தொடர் செலவினமும் ஏற்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாட்டில் விளையாட்டு மேம்பாட்டிற்காக எனது தலைமையிலான அரசு எடுத்து வரும் சீரிய முயற்சிகளால், சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வெல்லும் வகையில்,

[செல்வி ஜெ. ஜெயலலிதா] [2011 செப்டம்பர் 6

தமிழக விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளின் திறன் மேம்படும் என்ற நம்பிக்கையை தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–05

## 4. விதி 110–ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அளித்த அறிக்கைக்கு நன்றி தெரிவித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக விளையாட்டு வீரர்கள் உலக ஒலிம்பிக் பந்தயத்திலே வெற்றி கண்டு தமிழகத்தை உலகத்திற்கே அறிமுகப்படுத்துகிற வகையிலே (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு விளையாட்டுத் துறையிலேயும் ஒரு மறுமலர்ச்சியை புரட்சித் தலைவி அவர்கள் கண்டிருக்கிறார்கள். 1991–ல் முதலமைச்சராக அவர்கள் விளங்கியபோது தமிழகத்திலேதான் சர்வதேச விளையாட்டுப் பந்தயங்கள் நடக்கும் என்கிற வகையிலே (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கான அரங்கங்களைக் கட்டுவித்த அவர்கள், இன்றைக்கு இளைஞர்களுக்கு உடலிலே உரமும், நெஞ்சிலே திடமும் வருகிற அந்த விளையாட்டுக் கலையை உலக மக்களிடையே—அதாவது ஒலிம்பிக்கினுடைய நோக்கமே உலக சமூக நல்லுறவை ஏற்படுத்துவது—நல்லுறவை ஏற்படுத்துகிற வகையிலே உருவாக்கியிருக்கிற புரட்சித் தலைவி அவர்களுடைய இந்தச் சீரிய திட்டத்தை வரவேற்று அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக அளவில் மிகச் சிறிய நாடுகளாக இருக்கக்கூடிய நாடுகள், வறுமையிலே உழன்று கொண்டிருக்கக்கூடிய நாடுகள்கூட சில சில விளையாட்டுகளில் உலக தடகளப் போட்டிகளில் சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் முத்திரை பதிக்கின்றன. ஆனால், இந்தியாவைப் போன்று மிகப்பெரிய நாடுகளாக இருக்கக்கூடிய நம்முடைய தேசம், பெரிய அளவில் விளையாட்டை அடையாளப்படுத்தக்கூடிய அளவுக்கு இன்னும் வளரவில்லை.



2011 செப்டம்பர் 6] [டாக்டர் க. கிருஷ்ணசாமி]

குறிப்பாக தமிழகத்திலே அந்தக் குறைபாட்டை உணர்ந்து, சர்வதேச அளவில் தமிழகத்தை அடையாளப்படுத்தக்கூடிய அளவில் விளையாட்டுத் துறைக்கு முக்கியத்துவம் கொடுத்து, அதற்காக பெரிய நிதி ஒதுக்கியிருக்கக்கூடிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை புதிய தமிழகம் கட்சியின் சார்பாக வாழ்த்துகிறேன், வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

***முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழர்களுடைய நலனை பல்வேறு துறைகள் மூலம் காப்பதிலே இந்தப் புதிய ஆட்சி முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வரிசையிலே உலக விளையாட்டு அரங்குகளில் நடைபெறும் பல்வேறு விளையாட்டுகளிலே தமிழர்கள் வெற்றிக் கொடி நாட்ட வேண்டுமென்ற தூரப் பார்வையுடன், மேம்போக்காக இல்லாமல் ஒரு comprehensive–ஒரு ஒருங்கிணைந்த, சிறந்த விளையாட்டுத் திட்டத்தை உருவாக்கக்கூடிய வகையிலே நிதித் திட்டத்தை அறிவித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மனிதநேய மக்கள் கட்சியின் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்து அமருகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு அவர்கள்.

**திரு. ம. கலை அரசு**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக நாடுகள் எல்லாம் இன்றைக்கு போட்டி போட்டுக்கொண்டு விளையாட்டுக்கு முக்கியத்துவம் அளித்துக் கொண்டிருக்கக்கூடிய இந்த நேரத்தில், தமிழ்நாட்டில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கக்கூடிய இந்த அறிவிப்பு வரவேற்கக்கூடியது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், இந்தியா 70 விழுக்காடு கிராமப்புறங்களைக் கொண்டது. அந்தவகையில் கிராமப்புறங்களிலே இருக்கக்கூடிய இளைஞர்களை ஊக்குவிக்கின்ற வகையில் அவர்களை ஊக்கப்படுத்த வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக வேண்டுகோள் விடுத்து, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய அறிவிப்பை நாங்கள் வரவேற்கிறோம், வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், விளையாட்டுத் துறையை மேன்மைப்படுத்தும் வகையிலே, விளையாட்டுத் துறையில் உலக அளவிலே இந்திய தேசம் வளர வேண்டுமென்ற வகையிலே தமிழகம்தான் முன்மாதிரியாக இருக்க வேண்டுமென்ற வகையிலே எடுத்திருக்கக்கூடிய இந்த முயற்சியை காங்கிரஸ் கட்சி சார்பிலே வரவேற்கிறேன், வாழ்த்துகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நாட்டினுடைய வளர்ச்சி என்பது விவசாயத் துறையில், தொழில் துறையில் மட்டுமல்ல, மனிதவள மேம்பாட்டிலும் அது முன்னணியில் நிற்க வேண்டும். அந்த அடிப்படையில் தமிழ்நாட்டில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மனிதவள மேம்பாட்டிற்கு மிகப்பெரிய உற்சாகத்தைக் கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையில்,—பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்கள்கூட, "ஒரு மனிதன் என்று சொன்னால், ஆளும் வளரனும், அறிவும் வளரனும்; அதுதாண்டா வளர்ச்சி" என்று சொன்னார்கள். அதைப்போல,—இளைய சமுதாயம் வளருவதற்கு விளையாட்டுத் துறையிலும், அறிவு வளருவதற்கு கல்வித் துறையிலும் மிக முக்கியமான முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டு துறைகளையுமே இரண்டு கண்களாகப் பாவித்து, கடந்த வாரம் கல்வித் துறையிலே ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்துகிற விதமாக ஒரு சிறப்பான அறிவிப்பை வெளியிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-10

இன்றைக்கு அறிவு மட்டும் வளர்ந்தால் போதாது. அறிவு, சிறந்த வழியிலே எதிர்காலச் சமுதாயத்திற்குப் பயன்பட வேண்டுமென்று சொன்னால், ஒரு மனிதனுடைய உடல் வலிமையும், உள்ள வலிமையும் சிறப்பாக அமைய வேண்டும். அந்த வலிமை இடம் பெறுவதற்கு பள்ளிக்கூடங்களில் யோகா பயிற்சி என்ற ஒரு



திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். அதைப்போல, இன்றைக்கு விளையாட்டுத் துறைக்கு மிகப் பெரிய உற்சாகத்தைக் கொடுத்திருக்கிறார்கள். தமிழர் இனம் 5 ஆயிரம் ஆண்டு வரலாற்றைக் கொண்ட ஒரு இனம். குறிப்பாகச் சொல்கிற நேரத்தில், உலகத்தில் ஆப்பிரிக்கா கண்டத்தில் இருக்கக்கூடியவர்களும், இங்கே இருக்கக்கூடிய திராவிட மக்களும் பரிணாம வளர்ச்சியில் ஒத்திருக்கிறார்கள். ஆனால், ஒலிம்பிக் போன்ற விளையாட்டுத் துறையில், வறுமையால் பாதிக்கக்கூடிய ஆப்பிரிக்கா கண்டத்தில் இருக்கக்கூடியவர்களெல்லாம் பதக்கம் பெறுகிற நேரத்தில், உலகத்தில் 10 கோடி தமிழர்களைக் கொண்டிருக்கிற தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய நாமெல்லாம் வேதனையால் வெம்பிக் கொண்டிருந்தோம். எதிர்காலத்தில் நமது வேதனைக்கு வடிகால் அமைகிறவிதமாக விளையாட்டுத் துறைக்கு சிறப்புக் கவனம் செலுத்தி, நிதி ஒதுக்கீடுகளைச் செய்து சிறப்பானத் திட்டங்களை மேம்படுத்தி, எதிர்காலத்தில் ஒலிம்பிக்கில் ஆசியாவில், இன்னும் எத்தனையோ உலக தடகளப் போட்டிகளிலெல்லாம் தமிழர்கள் சிறந்த பதக்கங்களைப் பெற்று, தமிழனுடைய பெருமையை உலகம் அறியச் செய்கிற ஒரு முயற்சியாக, நமது வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த அவையிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிற இந்தத் திட்டங்களை (மேசையைத் தட்டும் ஒலி) இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் மனதார நான் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

***திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளையாட்டாக எடுத்துக்கொள்ளக் கூடாத ஒரு துறை விளையாட்டுத் துறை. சிபாரிசுக்கு இடம் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டிய துறை விளையாட்டுத் துறை. அரசியலுக்கு அப்பாற்பட்டு முழுமையாக நிற்க வேண்டிய ஒரு துறை, விளையாட்டுத் துறை. 100 கோடி மக்களுக்குமேல் இருந்தாலும் பல விளையாட்டுகளில் நம்முடைய உண்மையான திறமைசாலிகள் வெளிப்பட முடியாததால்தான் இந்தியா இப்பொழுதும் விளையாட்டுத் துறையில் பின்தங்கியிருக்கிறது.

கடலில் மீன் பிடிக்கிற கட்டுமரத்தை ஓட்டுகிற மீனவர்களை நாம் தேர்ந்தெடுத்து பயிற்றுவித்தால் குண்டு எரிதல், ஈட்டி எரிதல், பளு தூக்குதல் எல்லாவற்றிலும் அவர்கள் மேலே வருவார்கள். ஆனால், அவர்கள் வாய்ப்புப் பெற முடியாது. இப்படி இருக்கிற

இந்த நிலைமைகளுக்கு முடிவு கட்ட வேண்டுமானால் சிறு வயதிலிருந்தே நாம் அந்த விளையாட்டில் பயிற்சி பெறுவதற்கு தகுதியுள்ளவர்களையும், ஆர்வம் உள்ளவர்களையும் தேர்ந்தெடுக்க வேண்டும். தான் வாழ்வதற்கோ அல்லது தந்தைக்கோ, தாய்க்கோ உதவ வேண்டிய தேவையில்லாத நிலையில் அவர்களை வைத்தால்தான், இந்தியாவிலே அதை நாம் வெற்றிகரமாகக் கொண்டுவர முடியும். அதை நன்றாக உணர்ந்து, இன்றைக்கு நம்முடைய தமிழக அரசு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சிறு வயதிலிருந்து குழந்தைகளைத் தேர்ந்தெடுத்து, ஆண்டுக்கு ஆயிரம் பேரைத் தேர்ந்தெடுத்து, அவர்களை விடுதியில் தங்க வைத்து, அவர்களுக்கு இந்த விளையாட்டுக்குத் தேவையான ஊட்டச் சத்து மிக்க உணவைக் கொடுக்க வேண்டும். என்னதான் பயிற்சி கொடுத்தாலும் உணவும், ஊட்டமும் இல்லாவிட்டால் பயிற்சி பயன்படாது. ஆக, அது முக்கியம். வீட்டிலிருந்தால் அவர்களுக்கு அது கிடைக்காது. இப்பொழுது ஆசிய விளையாட்டிலே அல்லது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளிலே, மல்யுத்தத்திலே போட்டியிட்டு வெற்றி பெற்ற வீரர்கள்கூட இப்போது எங்களுக்கு சோற்றுக்கு வழியில்லை, ஏதாவது உதவ வேண்டும் என்று சொல்கிற மிகமிக பரிதாபமான நிலைமை இருக்கிறது. அவர்கள் மற்றவர்களுக்குப் பயிற்சியளிப்பதற்கு பெருமளவிற்கு முன் வருகிறார்கள். மல்யுத்தம் போன்றவையெல்லாம் சென்னை நகரத்திலே 3 மாதத்திற்கு ஒரு முறை பெரிய Tournament-ஆக நடந்து கொண்டிருந்த நம்முடைய வீர விளையாட்டாகும். அதுவெல்லாம் இன்றைக்கு அற்றுப்போய்விட்டது, அறவே இல்லை. ஏற்கெனவே சென்னை போன்ற அல்லது நம்முடைய பெரு நகரங்களிலே இருந்ததைப்போல விளையாட்டு மைதானங்களை நாம் அதிகப்படுத்துவதையும், இயல்பாக குழந்தைகள் விளையாடுவதற்கான வாய்ப்பை நாம் உண்டாக்குவதும் அவசியம். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதிலே அக்கறை செலுத்துவார்கள். இப்பொழுது அறிவித்திருக்கிற இந்தத் திட்டங்கள், அதிலும் குறிப்பாக 9 மாவட்டங்களில் இன்று இருந்த விடுதிகளை 23 மாவட்டங்களுக்கு என்று அந்த விடுதிகளைஅதிகரித்திருப்பது என்பது மிகச் சிறப்புக்குரிய ஒன்று. இன்னும் 34 மாவட்டங்களுக்கும் கொண்டு வருவார்கள். அந்த மாணவர்களையெல்லாம் நாம் குறிப்பாகத் தேர்ந்தெடுத்து பயிற்றுவிக்க முடியும். அடுத்த சில ஆண்டுகளில் தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள், ஆசிய விளையாட்டுப் போட்டிகள், அதற்கு அடுத்த மேல்மட்ட



விளையாட்டுப் போட்டிகள், உள் அரங்க விளையாட்டுகளான, செஸ், கேரம், டேபிள் டென்னிஸ் மற்றும் நீச்சல் போன்ற விளையாட்டுப் போட்டிகளிலும் தமிழகம் பல இடங்களிலே முத்திரை பதிப்பதற்கான வெளிச்சக் கீற்று மிகப் பிரகாசமாகத் தெரிகிறது என்கிற அளவிலே நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். இந்த அறிக்கையை அளித்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு, தமிழக அரசுக்கு என்னுடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

***திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தந்துள்ள அறிக்கையை தேசிய முற்போக்கு திராவிடக் கழகத்தின் சார்பில் மனதார முழுமையாக வரவேற்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-15

இந்த அறிக்கை பல முனைகளிலும் பயன்படத்தக்கதாகும். திறமை எங்கேயிருக்கிறது என்பது யாருக்கும் தெரியாது. மண்ணில் புதைந்து கிடக்கிற புதையலைப்போல, திறமை எங்கு வேண்டுமானாலும் இருக்கலாம். தமிழ்நாட்டின் மூலைமுடுக்குகளிலேகூட திறமையுள்ள இளைஞர்கள் இருப்பார்கள். அவர்களுக்கு வாய்ப்பைத் தருவதன் மூலம்தான் அந்தத் திறமையை வெளிக்கொணர முடியும். அந்த வாய்ப்பைத் தருகின்ற வகையில் தமிழ்நாட்டின் பல மாவட்டங்களிலேயும் இந்த அறிக்கையின்மூலம் விளையாட்டுப் போட்டிகளிலே ஈடுபடுபவர்களுடைய திறமையைக் கண்டறிகின்ற வாய்ப்பினை இந்த அறிக்கை ஏற்படுத்தித் தருவதனால், புதையலை வெளிக்கொணருகின்ற புத்துணர்ச்சியைத் தருகின்ற காரணத்தினாலே இதை முதலாவதாக வரவேற்கிறேன்.

இரண்டாவதாக, வேறு எந்தத் துறையிலேயும் சிபாரிசுக்கு இடமுண்டு; Reservation–க்கெல்லாம் இடம் உண்டு. ஆனால் விளையாட்டுத் துறையில் மட்டும்தான் தகுதி அடிப்படையிலே அவர்கள் முன்னுக்கு வரமுடியுமே தவிர வேறு வழியில்லை. ஓட்டப் பந்தயமானாலும் மற்றப் பந்தயங்களானாலும், யார் முதலில் வருகிறார்கள் என்பது அவர்களுடைய தகுதியைப் பொறுத்தது.

ஆகவே, தகுதியைக் கண்டுபிடித்து வளர்ப்பதன் மூலம்தான் விளையாட்டுப் போட்டிகளிலே வெற்றிபெற முடியும் என்ற அடிப்படையான தத்துவத்தின் அடிப்படையில் தகுதிகளை வளர்ப்பதற்கான வாய்ப்புகளை அவர்கள் வறுமையிலே வாடுகின்ற குடும்பங்களாக இருந்தாலும், தகுதியும், திறமையும் அங்கே இருக்குமேயானால், அவர்களை மீட்டெடுத்து வளர்க்க வேண்டும், அவர்களிடமுள்ள திறமையை வெளிக் கொணரவேண்டுமென்ற அடிப்படையிலேயும் இந்த அறிக்கை அமைந்திருக்கிறது.

மூன்றாவதாக, நம்முடைய மாண்புமிகு கம்யூனிஸ்டு கட்சியின் தலைவர் அவர்கள்கூட இதில் அரசியலுக்கு இடமில்லையென்று குறிப்பிட்டார்கள். ஆனால் அரசியல்வாதிகள் கற்றுக்கொள்வதற்கு அதிலே பாடம் இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிக்கையிலே எடுத்துச் சொன்னதைப்போல், வெற்றி, தோல்வி இரண்டையும் ஏற்றுக்கொள்கிற மனப்பக்குவத்தைத் தருவது விளையாட்டுப் போட்டிகளிலே ஈடுபடுகின்ற ஒரு மனோபாவத்தினாலேதான் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. போட்டி இருக்கலாமே தவிர, பொறாமை இருக்கக்கூடாது. இளைஞர்களிடையேயும், சாதாரண மக்களிடையேயும் போட்டி மனப்பான்மையை வளர்க்க வேண்டுமே தவிர, பொறாமையை வளர்க்கக்கூடாது. இது அரசியலிலே இன்றைக்கு மிக மிகத் தேவை. ஏனென்றால், பொறாமை எந்தளவுக்கு உருவெடுக்கிறது என்பதை நாம் சற்று முன்பு பார்த்தோம். (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே இந்தச் சட்டமன்றத்திலே நடந்த ஒரு காட்சியை நாம் பார்த்தோம்.

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் அப்படி ஒன்றும் நடக்காத சம்பவத்தைச் சொல்லவில்லை. உண்மைகளைச் சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) திகார் ஜெயிலிலே கனிமொழி இருக்கிறார் என்பது உண்மை. உண்மைகளைச் சொல்வதற்கு இந்த மன்றத்திலே உரிமை உண்டு. குற்றச்சாட்டுகளைச் சொல்கிறபொழுது வேண்டுமானால், இந்த மன்றத்திலே இல்லாதவர்களைப் பற்றி குற்றச்சாட்டுகளைச் சொல்லக்கூடாது என்ற விதி இருக்கிறதே தவிர, facts-உண்மைகளை, சம்பவங்களைச் சொல்வதற்கு உரிமையுண்டு. ஆக அதைக்கூடத் தாங்கிக்கொள்ளமுடியாமல், ஒருவேளை எங்கே தங்களுடைய தலைவர் இதையெல்லாம் கேட்டுக்கொண்டு உள்ளே ஏன் சும்மா இருந்தீர்கள் என்று கோபித்துக் கொள்வார்களோ என்கின்ற காரணத்தாலோ என்னவோ அவர்கள் இன்றையதினம்



வெளியேறியிருக்கிறார்கள். அந்த sportsman mentality இல்லை என்பதைத்தான் அது காட்டுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, போட்டி என்று வருகிறபோது, போட்டி மனோபாவம் இருக்கிறபோது, அது விளையாட்டுத் துறையிலே இயற்கையாகவே வருகிறது. வெற்றி பெற்ற ஒரு விளையாட்டு வீரர் தோல்வியுற்றவரைக் கைகுலுக்குவதை நாம் காண்கிறோம். அதுபோல, பல போட்டிகளிலே வெற்றி பெற்றவர்களும், தோல்வியுற்றவர்களும் ஒருவரையொருவர் அவர்கள் கைகுலுக்கிக்கொண்டு ஒருவர் தோள்மீது ஒருவர் கைபோட்டுக்கொண்டு போவதையெல்லாம் நாம் பார்க்கின்றோம். அந்த மனோபாவம் தமிழ்நாட்டு அரசியலிலும் இனிமேல் எதிர்காலத்திலாவது உருவாவதற்கு வழிவகுக்க வேண்டும். அதற்காகவாவது இந்த அறிக்கை பயன்படட்டும் என்று சொல்லி இந்த அறிக்கையை முழுமனதோடு வரவேற்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11-20

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாகப் பொறுப்பேற்று விளையாட்டு, இளைஞர் நலத் துறையிலே இன்றைக்கு மிகப் பெரிய அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார்கள். விளையாட்டுத் துறைக்கு ஒரு மிகப் பெரிய எழுச்சியையும், புத்துணர்ச்சியையும் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். அம்மா அவர்கள் எப்பொழுதெல்லாம் ஆட்சிப் பொறுப்பிற்கு வருகின்றார்களோ, அப்பொழுதெல்லாம் விளையாட்டுத் துறைக்கு ஒரு மிகப் பெரிய முக்கியத்துவத்தை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்கள் அறிவித்தது போன்று பல்வேறு விளையாட்டுச் சங்கங்களாக இருந்தவற்றையெல்லாம் ஒருங்கிணைத்து தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் என்ற ஒன்றை உருவாக்கிக் கொடுத்து, 2003-ல் நிதிநிலையிலே வெறும் 8 கோடி ரூபாயாக இருந்ததை ரூபாய் 41 கோடியாக உயர்த்திக் கொடுத்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். ஆனால், இன்றைக்கு மாண்புமிகு எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொன்னதுபோல, பொறாமையின் காரணமாக வெளியேறிச் சென்றிருக்கின்ற, திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கின்ற, இப்போது தன் பாடியைக்

காட்டிவிட்டுச் சென்ற மைதீன்கான் அவர்கள்தான் விளையாட்டுத் துறை அமைச்சராக இருந்தவர், மல்யுத்த வீரராகவும் இருந்தவர். அவர் விளையாட்டுத் துறை அமைச்சராக இருந்தபோது விளையாட்டுத் துறைக்கு 31 கோடி ரூபாய் ஒதுக்கியதுதான் சாதனை. ஆனால், மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பு ஏற்றவுடனே, இன்றைக்கு இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு விளையாட்டுத் துறைக்கு 100 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கிக் கொடுத்து விளையாட்டுத் துறைக்குப் புத்துணர்ச்சியை, வேகத்தைக் கொடுத்திருக்கின்றவர் யார் என்றால் தமிழ்நாட்டின் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு இந்தியாவினுடைய விளையாட்டுத் துறையும் திஹார் ஜெயிலில் இருக்கிறது. அதனால், தமிழகத்திலே விளையாட்டுத் துறைக்கு மிகப் பெரிய புத்துணர்ச்சியைக் கொடுத்து, தமிழ்நாட்டின் இளைஞர்களுக்கு நல்ல வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்ற அம்மா அவர்களுக்கு பாதம் பணிந்து நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்கால இளைஞர் சமுதாயம் உலகளவில் விளையாட்டில் முதன்மைபெற அறிவிப்பு செய்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு அவை உறுப்பினர்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 2. மானியக் கோரிக்கைகள், 2011-2012, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (ஆ) கோரிக்கை எண் 45—சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

### (இ) கோரிக்கை எண் 52—மாற்றுத் திறனாளிகள் நலத் துறை

### (ஆ) கோரிக்கை எண் 45—சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2011-2012 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைளின்மீது விவாதமும், வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 45—சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை. மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.



***மாண்புமிகு திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் 45–ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.2,928,97,07,000/–, மூலதனக் கணக்கில் ரூ.3,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.2,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்”

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 30, திரு. வி.சி. சந்திரகுமார்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,928,97,07,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1465, திரு. வி. முத்துக்குமார்.

**திரு. வி. முத்துக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,928,97,07,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1154, திரு. அ. கணேஷ்குமார்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,928,97,07,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/-ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1992, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,928,97,07,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2476, திரு. டி. இராமச்சந்திரன்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,928,97,07,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/-ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2162, திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,928,97,07,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 516, திரு. து. முருகேசன்.

**திரு. து. முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செங்கல்பட்டு சட்டமன்றத் தொகுதி, செங்கல்பட்டு நகராட்சி சார்பில் கட்டி முடிக்கப்பட்ட சமுதாயக் கூடத்தை உடனடியாகத் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,928,97,07,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1572, திரு. அ. சவுந்தரராசன்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் உதவியாளர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,928,97,07,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1823, திரு. எஸ். ஜாண் ஜேக்கப்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அங்கன்வாடி மையங்களில் அதிகமான இடங்களில், ஆசிரியர் மற்றும் ஆயா பணியிடங்கள் காலியாக உள்ளபடியால் மக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். காலிப் பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,928,97,07,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/-ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1887, திரு. எம். ஆறுமுகம்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சத்துணவு ஊழியர்களுக்குப் பதவி உயர்வு மற்றும் சம்பள உயர்வு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,928,97,07,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/-ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1925, திரு. சி. மைக்கேல் ராயப்பன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1972, திரு. சு. குணசேகரன்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகம் முழுவதும் உள்ள அங்கன்வாடி மற்றும் சத்துணவுக் கூடங்களுக்குக் கட்டடம் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,928,97,07,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2071, திருமதி ர. சுபா.

**திருமதி ர. சுபா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கெங்கவல்லி தொகுதியில் உள்ள சத்துணவுக் கூடங்களில் சமைக்கும் பொருட்களின் அளவு மற்றும் தரத்தினை அறிய ஆவன செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,928,97,07,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2090, திரு. அ. பாஸ்கர்.

**திரு. அ. பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், பப்பிரெட்டியூரில் மழலைப் பள்ளி (பேபி ஸ்கூல்) அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,928,97,07,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2244, திரு. ர.ம. பாபு முருகவேல்.

**திரு. ர.ம. பாபு முருகவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநங்கைகளுக்கு உண்டு, உறைவிடத்துடன் சுய தொழில் வேலைவாய்ப்பையும் வழங்க வேண்டியதன் அவசியம்

குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,928,97,07,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2332, திரு. கு. நல்லதம்பி.

**திரு. கு. நல்லதம்பி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எழும்பூர் தொகுதிக்குட்பட்ட பெரும்பாலான பகுதிகளில் அங்கன்வாடி மையங்கள் பராமரிப்பற்றும், மேற்கூரை இடிந்தும் மிகவும் மோசமான நிலையில் உள்ளதை பராமரித்துப் புதுப்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,928,97,07,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2610, திருமதி எஸ். விஜயதரணி, இருக்கையில் இல்லை.

## (இ) கோரிக்கை எண் 52–மாற்றுத் திறனாளிகள் நலத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 52–மாற்றுத் திறனாளிகள் நலத் துறை. மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் 52-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.192,09,93,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 31, திரு. வி.சி. சந்திரகுமார்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.192,09,93,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1391, திரு. வி. முத்துக்குமார்.

**திரு. வி. முத்துக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.192,09,93,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2070, திருமதி ர. சுபா.

**திருமதி ர. சுபா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.192,09,93,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1155, திரு. அ. கணேஷ்குமார்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.192,09,93,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2168, திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.192,09,93,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1581, திரு. அ. சவுந்தரராசன்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாற்றுத் திறனாளிகள் திருமண உதவித் தொகை பெறுவதற்கு வருமானச் சான்று சமர்ப்பிக்க வேண்டும் என்ற நிபந்தனையைத் தளர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.192,09,93,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1729, திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1888, திரு. எம். ஆறுமுகம்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாற்றுத் திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பு மற்றும் கருவிகள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.192,09,93,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1974, திரு. சு. குணசேகரன்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாற்றுத் திறனாளிகள் அனைவருக்கும் வேலைவாய்ப்பை உருவாக்குவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.192,09,93,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2219, திரு. க. பாண்டியராஜன்.

**திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசு வேலைவாய்ப்பில் மாற்றுத் திறனாளிகளுக்கான 3% இட ஒதுக்கீட்டை நிறைவேற்றுவதை உறுதி செய்யும் பொருட்டு, இணையதளத்தில் ஒவ்வொரு appointment முடிவினையும் தெரிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.192,09,93,000/-மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2312, திரு. ர.ம. பாபு முருகவேல்.

**திரு. ர.ம. பாபு முருகவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆரணி தொகுதியில் மாற்றுத் திறனாளிகள் சுயதொழில் துவங்கத் தேவையான பயிற்சிக் கூடம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.192,09,93,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2333, திரு. கு. நல்லதம்பி.

**திரு. கு. நல்லதம்பி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாற்றுத் திறனாளிகள் தனி நபர் ஒருவருக்கு ஒரு முறைதான் வங்கிக் கடன் என்பது நடைமுறையில் இருப்பதாகத் தெரிகிறது. ஆகையால் தவணைத் தொகையை முழுவதும் செலுத்திய மாற்றுத் திறனாளிகளுக்கு மீண்டும் வங்கிக் கடன் கிடைக்க ஆவன செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.192,09,93,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2354, திரு. எஸ்.பி. முத்துக்குமரன்.

**திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாற்றுத் திறனாளிகளுக்கு அரசால் ஒதுக்கப்பட்ட இட ஒதுக்கீடு அனைத்துத் துறைகளிலும் சரியாகப் பின்பற்றப்பட்டு வருகிறதா என்பதைக் கண்காணிக்க மாவட்டந்தோறும் கண்காணிப்புக் குழுக்கள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.192,09,93,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலன் மற்றும் மாற்றுத் திறனாளிகள் நலத் துறைகள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்த மாமன்றத்தில் படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதில் உரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். இன்று இரண்டு மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வைக்கப்பெற்றுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு மானியக் கோரிக்கைகளின்மீதும் சேர்த்தே பேசலாம். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் மாண்புமிகு தேசிய முற்போக்கு திராவிடக் கழக உறுப்பினர் திரு. ப. சிவக்கொழுந்து அவர்கள்.

**திரு. ப. சிவக்கொழுந்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டம், மாற்றுத் திறனாளிகள் நலத் துறைகள் பற்றிய மானியக் கோரிக்கைகளில் பேச அனுமதியளித்த, என்னை பண்ருட்டித் தொகுதியில் போட்டியிட வைத்து சட்டமன்ற உறுப்பினராக்கிய தேசிய முற்போக்கு திராவிடக் கழகத்தின் தலைவர், எங்களது கேப்டன் அவர்களையும், எனது தொகுதி மக்களையும் வணங்கி எனது பேச்சைத் தொடங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–25

மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆட்சியில், சமூக நலத் துறை மற்றும் சத்துணவுத் திட்டம், குழந்தைகள், மகளிர், முதியோர் மற்றும் நலிவுற்றோர் நல்வாழ்விற்கானத் திட்டங்கள் குறித்து கொள்கை விளக்கக் குறிப்பில் அறிவிக்கப்பட்டிருக்கின்ற நலத் திட்டங்களை, தேசிய முற்போக்கு திராவிடக் கழகத்தின் சார்பில் வரவேற்கிறோம். மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், சமுதாயத்தில் பின்தங்கிய, ஒடுக்கப்பட்ட ஏழையெளிய மக்கள் வசிக்கும் பகுதிகளை இனம் கண்டு, கிராமப்புற குழந்தைகள்

---

@ 357 முதல் 500 வரையிலான பக்கங்களில் இணைப்பு I ஆக மற்றும் II ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

மற்றும் மாணவர்கள் கல்வி கற்பதற்கான புற சூழ்நிலை இல்லாத நிலை கண்டு, அவர்கள் கல்வி பயிலவும், சமுதாயத்தில் ஏற்றம் காணவும், மிகப் பெரும் ஆய்வு செய்து, சத்துணவுத் திட்டத்தை சத்தானத் திட்டமாக அறிவித்து நடைமுறைப்படுத்தினார்கள்.

கிராமப்புற ஏழைப் பிள்ளைகள் ஆரோக்கியமான உணவு, சுகாதாரமான குடி தண்ணீர் கிடைக்கப்பெறாமல், இரத்தசோகை நோய் போன்றவற்றால் ஆட்படாமல் இருக்கும் வகையில் அவர்களுக்கு, உணவில் மிகுந்த சத்துக்கள் அடங்கிய முட்டை, கீரை, காய்கறிகள் கலந்த சத்தான உணவு வழங்கப்பட வேண்டுமென்பதை உணர்ந்து, இன்றைய மாண்புமிகு முதல்வர் அவர்களின் கடந்த ஆட்சியிலேயே இத்திட்டம் மேலும் மெருகூட்டப்பட்டு, அமல்படுத்தப்பட்டது.

சமீப காலமாக, நகரங்களில் மட்டுமல்லாமல், கிராமப்புறங்களிலும் மாணவர்கள் இளம் வயதிலேயே கண் கண்ணாடி அணிந்துகொள்கிறார்கள். இக்குறைபாடு ஏற்படுவதற்கு வெகுநேரம் தொலைக்காட்சி பார்ப்பதே காரணம் என்று நம்பப்பட்டு வந்தது. ஆனால், உண்மையிலேயே இத்தகைய கண்பார்வை குறைபாடுகளுக்கு புரோட்டீன் குறைவே காரணம் என்று சமீபத்திய ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

மதிய உணவுடன் வழங்கப்படும் சத்தான முட்டை மட்டுமின்றி, புரோட்டீன் நிறைந்த பயறு வகைகளில் ஏதாவது ஒன்றினை மாலையில் மாணவச் செல்வங்களுக்கு அளிப்பது அவர்களின் உடல்நலனில் நமக்குள்ள அக்கறையைப் பிரதிபலிப்பதாக இருக்கும் என்பதால், மாண்புமிகு புரட்சித் தலைவரால் செழுமைப்படுத்தப்பட்ட இத்திட்டத்தை, மாண்புமிகு முதல்வர் அவர்கள் மேலும் மெருகூட்டவும், சமூக நலன் காத்திடவும் இக்கோரிக்கையை நிறைவேற்றிட வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக வரலாற்றில் எத்தனையோ இடர்பாடுகள், சந்தேகங்கள் மற்றும் எதிர்மறை யூகங்கள் ஆகியவற்றிற்கு மத்தியில் உருவாக்கப்பட்ட இச்சத்துணவுத் திட்டத்தின் சிறப்பான பயன்பாடுகள் அனைத்துத் தரப்பினராலும் உணரப்பட்டுள்ளன. இன்று இந்தியா முழுவதும் இத்திட்டம் பரவலாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுவதோடு, ஒரு முன்னோடித் திட்டமாகப் பாராட்டப்பட்டு, தமிழகத்தில் நிரந்தரமான ஓர் அமைப்பாக மாறிவிட்டது. சத்துணவுத் திட்டம் சமூகக் கண்ணோட்டத்துடன் ஒவ்வோர் ஆண்டும் வளர்ச்சிபெற்று,



இந்தியாவிலேயே தமிழகம்தான் மாணவர்களுக்கு சத்துணவு வழங்குவதில் முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது.

இந்தத் திட்டம் ஆரோக்கியமானது மற்றும் நிரந்தரமானது. இதில் பணி புரியும் பணியாளர்கள் அரசின் நோக்கத்தை நிறைவேற்றும் ஆர்வமிக்க ஊழியர்களாகப் பணியாற்றினால்தான் நமது மாணவர்களின் ஆரோக்கியம் பாதுகாக்கப்படும் என்பதோடு, இத்திட்டத்திற்கு வெற்றி கிடைக்கும் என்பது யாவரும் அறிந்ததே. எனவே, ஊழியர்கள் ஈடுபாட்டுடன், தான் பெற்ற பிள்ளைகளைப் பராமரிப்பது போன்ற உணர்வை அவர்களுக்குள் ஏற்படுத்திட, அவர்களின் பணியை நிரந்தரமாக்கி, ஏனைய அரசு ஊழியர்களுக்கு நிகரான சலுகைகளை வழங்கி, அவர்களை ஊக்கப்படுத்திட வேண்டுகிறேன்.

முற்போக்கான சிந்தனைகள் தழைத்தோங்கும் இன்றைய கால கட்டத்தில், தமிழகத்தில் பெண் சிசுக் கொலைகள் நடப்பதும், பெண் குழந்தைகள் பிறந்த மாத்திரத்திலேயே தொட்டிலிலேயே அனாதைகளாகத் தூக்கி எறியும் அவலங்கள் நமக்கு வேதனையை அளிக்கின்றன என்பதற்கு மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

பெண் சிசுக் கொலையை முற்றிலும் தடுக்கும் பொருட்டு, 'தொட்டில் குழந்தைத் திட்டம்' 1992 ஆம் ஆண்டு சேலத்தில் முதன் முறையாகத் தொடங்கப்பட்டது. பின்னர் மதுரை, தேனி, திண்டுக்கல், தருமபுரியில் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டு, 31–3–2011 வரை 3,131 பெண் குழந்தைகள் இத்திட்டத்தால் உயிர் பிழைத்து மறுவாழ்வு பெற்றுள்ளனர். இந்தத் திட்டத்தின் வாயிலாக பாலின விகிதத்தில் பெண் குழந்தை பிறப்பு விகிதம் அதிகரித்துள்ளது.

எங்கள் கடலூர் மாவட்டம் உட்பட, அரியலூர், பெரம்பலூர், விழுப்புரம், திருவண்ணாமலை மாவட்டங்களில் பெண் குழந்தை பிறப்பு விகிதம் குறைந்துள்ளதை அண்மையில் வெளியிட்டுள்ள மக்கள் தொகைக் கணக்கெடுப்பு காட்டுகிறது. அதனால், 2011–2012 ஆம் ஆண்டில் மேற்குறிப்பிட்ட மாவட்டங்களில் 'தொட்டில் குழந்தைத் திட்டத்தை' அமல்படுத்துவதாக அறிவித்துள்ளீர்கள். இந்தத் திட்டத்தின் செயல் மதிப்பீடாக ரூ.47.45 இலட்சம் செலவிடப்படும் என அறிவித்துள்ளீர்கள். மேலும், இத்திட்டத்தை பல மாவட்டங்களிலும் அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதனால் பெண் சிசுக் கொலை முற்றிலுமாகத்

தடுக்கப்படும் எனக் கருதுகிறேன். மேலும், பெண் குழந்தைகளின் நலனைக் கருத்தில் கொண்டு தமிழக அரசு, ஒரு பெண் குழந்தை பிறந்தால் ரூ.50,000/- வைப்புத் தொகையாகவும், இரண்டு பெண் குழந்தைகள் பிறந்தால் தலா ரூ.25,000/- வைப்புத் தொகையாகவும் அறிவித்துள்ளது. இதனால், பெண் சிசுக் கொலைகள் தடுக்கப்படுவதோடு, பெண்களின் வளர்ச்சிக்கும், பிறப்பு விகிதத்திற்கும் தடையேதும் இல்லாமல் இருக்கும் என்ற நிலைப்பாட்டை தே.மு.தி.க. வரவேற்கிறது.

முற்பகல் 11-30

மேலும், 'இயன்றதைச் செய்வோம் இல்லாதவர்க்கே' என்ற கேப்டன் அவர்களின் பொன்மொழிக்கேற்ப, கேப்டன் அவர்களுடைய பிறந்த நாளை வறுமை ஒழிப்புத் தினமாகக் கொண்டாடுகின்ற வேளையில், 'பெண்கள் நாட்டின் கண்கள்' என்று, கேப்டன் அவர்களுடைய சொந்தச் செலவில் பெண்களுக்கு ரூ.10,000 வைப்பு நிதியாக வைத்த கேப்டன் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், இலவசக் கணினி மையம், தையற்பயிற்சி மையம் ஆகியவற்றை மாவட்டந்தோறும் நிறுவி, ஆதரவற்ற முதியோர்களுக்கு தனது பிறந்த நாளன்று ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு இலட்சம் ரூபாய் வீதம் 32 மாவட்டங்களுக்கு 32 இலட்சம் ரூபாய் என உதவித் தொகை கொடுத்து, முதியோர் நலன் காத்த தமிழகக் கேப்டன் அவர்களுக்கு தமிழக மக்கள் சார்பாக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

முதியோர் உதவித் தொகை ரூ.500 என்பதை ரூ.1,000 ஆக உயர்த்திக் கொடுத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பெண் கல்வியை ஊக்குவிக்கும் நோக்குடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பட்டப் படிப்பு மற்றும் பட்டயப் படிப்பு படித்த பெண்களுக்கான திருமண உதவித் தொகையை 25,000 ரூபாயிலிருந்து 50,000 ரூபாயாக உயர்த்தியதுடன், தாலிக்குத் தங்கம் திட்டம்மூலம் நான்கு கிராம் தங்கக் காசும் வழங்கியுள்ளதை தே.மு.தி.க. சார்பில் நாங்கள் பாராட்டுகிறோம்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் எப்பொழுதெல்லாம் ஆட்சிக்கு வருகிறார்களோ அப்பொழுதெல்லாம் இயல்பாகவே தமிழகத்தில் தாய்மார்களுக்கு, "நாம் பாதுகாப்போடு இருக்கிறோம்" என்ற உணர்வு ஏற்படுகிறது. எங்கள் மரியாதைக்குரிய கேப்டன் அவர்கள் 'பெண்கள்



நாட்டின் கண்கள்' என்ற திட்டத்தை, அவரது பிறந்த நாளில் பிறக்கும் பெண் குழந்தைகளுக்கு, அக்குழந்தைகளின் எதிர்காலத்திற்காக ரூ.10,000 வைப்புத் தொகை அளிக்கும் திட்டத்தை, தனது சொந்தச் செலவில் தொடங்கி வைத்ததே இதற்குச் சாட்சி.

பெண்களுக்கென, அவர்கள் பிறந்தது முதல் இறக்கும் வரை அவர்கள் வாழ்விற்காக பல்வேறு திட்டங்கள் நடைமுறையில் இருந்தாலும், அதன்மூலம் பெருமளவில் யாரும் பயன்பெற முடியவில்லை. அதற்குக் காரணம் பெண்களிடத்தில் இன்னும் சரியான விழிப்புணர்வு ஏற்படவில்லை.

எல்லா நிலைகளிலும், எல்லா துறைகளிலும் பெண்களை, அவர்களின் தகுதியை, திறமையைக் கணித்து முழுமையாகப் பயன்படுத்த வேண்டும்.

காவல் துறையில் பெரும்பாலான பெண் காவலர்கள் சிறப்பாகப் பணியாற்றுகிறார்கள். ஆண் காவலர்கள், அதிகாரிகள், நுணுக்கமான, அறிவுபூர்வமான பணிகளில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். பெண் காவலர்களின் திறமைகளைச் சரியாக மதிப்பிடாமல், அவர்களை கூட்டம் நடக்கின்ற இடங்கள், கோயில்கள், போக்குவரத்துச் சீரமைப்பு, சாலையோரங்களில் பாதுகாப்புப் பணி போன்றவற்றிற்கென்றே நியமித்து நிறைய வேலை வாங்கப்படுவதோடு, குறைத்து மதிப்பிடப்படுகிறார்கள். அவர்கள் காலை முதல் மாலை வரை மற்றும் இரவு எந்த நேரங்களிலும் ஆணுக்கு நிகராகப் பணி செய்து வருவது வேதனையாக உள்ளது. படித்த, திறமைமிக்க பெண் காவலர்களைத் தேர்வு செய்து, தொழில்நுட்பமான, அதாவது அலுவலகப் பணி, துப்பு துலக்குதல், இரகசியப் புலனாய்வு போன்ற எண்ணற்ற பிரிவுகளில் அவர்களை நியமித்துப் பயன்படுத்த வேண்டுமென அரசைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் புற்றீசலைப்போல தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும், மைக்ரோ பைனான்ஸ் என்று சொல்லக்கூடிய நிதி நிறுவனங்களும் ஏராளமாகச் செயல்படுகின்றன. இந்த நிறுவனங்கள் ஆயிரக்கணக்கான பெண்களை ஊக்குவிப்பாளர் என்ற பெயரில் குறைந்த சம்பளத்தில் நியமித்து, அரசுக்கு நிகராக, அதன் நலத் திட்டங்கள் மற்றும் வங்கிக் கடன்களைப் பெற்றுத்தரும் அமைப்பாகச் செயல்படுகிறது. இதில் நிறைய பெண்கள் ஏமாற்றப்படுவதாகவும், மிகப் பெரிய கடன் சுமைக்கு ஆளாக்கப்படுவதாகவும் புகார்கள் எழும்புகின்றன. எனவே, மைக்ரோ பைனான்ஸ் நிறுவனங்களை

வரைமுறைப்படுத்தி, அவற்றின் செயல்பாடுகள் மற்றும் கொள்கைகளை உறுதி செய்திட ஆவன செய்ய வேண்டுகிறேன்.

சமூக நலன் என்பது, பெண்களின் கல்வி, பொருளாதார முன்னேற்றம் ஆகியவற்றையும், சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்ட முதியோர்கள், மாற்றுத் திறனாளிகள், திருநங்கைகள், ஆதரவற்ற குழந்தைகள் முன்னேற்றம் ஆகியவற்றையும் தவிர்த்துவிட்டு அமைந்துவிடாது. கடந்த ஆட்சியில் இவற்றைப் பற்றிய போலிப் பெருமிதமும், வெறும் அறிவிப்புகளுமே இடம்பெற்றிருந்தன.

தமிழக அரசின்கீழ் இயங்குகின்ற ஊட்டச்சத்து, சத்துணவு, மாணவர் விடுதிகள், பயிற்சி நிறுவனங்கள் ஆகியவை, நலிந்த ஆண், பெண் பிரிவினரைப் பாதுகாப்பதற்காக ஏற்படுத்தப்பட்டவை. இவற்றில் போதுமான ஊழியர்கள் இல்லாததால், மேற்படி அமைப்புகள் செம்மையாகச் செயல்பட இயலவில்லை. இத்தகைய ஊழியர்களை வேலைவாய்ப்பகத்தின்மூலம் உடனடியாக நியமிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்திலேயே அதிகமாக ஆதரவற்ற குழந்தைகள் காப்பகம் கடலூர் மாவட்டத் தலைநகர் கடலூரில் செயல்படுகிறது. அரசு பொதுக் குழந்தைக் காப்பகத்தில் நிறைய குழந்தைகள் சேர்க்கை ஒவ்வோர் ஆண்டும் அதிகரித்து வருகிறது.

அதேவேளையில், சுனாமி காப்பகத்தில் சேர்க்கை மிகவும் குறைவாக உள்ளது. பொதுக் குழந்தைகள் காப்பகத்தில் 400 குழந்தைகள் வரை உள்ளனர். இவர்களில் 150 குழந்தைகளை, எண்ணிக்கை குறைவாக உள்ள சுனாமி காப்பகத்தில் சேர்த்து, அதனை சமூக நலத் துறை மூலமாகச் செயல்படுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு செயல்படுத்தினால், இட நெருக்கடி மற்றும் உரிய பராமரிப்பு இல்லாத அவலத்தைப் போக்கி, ஆதரவற்ற குழந்தைகள் காப்பகங்களைச் சிறப்பான முறையில் செயல்படுத்திட வாய்ப்பாக அமையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சுனாமி காப்பகத்தில் பயிலும் ஆதரவற்ற குழந்தைகள், 8 ஆம் வகுப்பு வரை படித்தவுடன் வேறு எந்த அரசு உதவியும் இல்லாமல் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டு விடுகிறார்கள்.

அரசு காப்பகத்தில் ஆதரவற்ற குழந்தைகள் பாதுகாப்புடன் இருப்பதைப்போல், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களிடம் எந்தப் பாதுகாப்பிற்கும் உத்தரவாதம் இல்லை. எங்களது மாவட்டத்திலிருந்தே தேர்ந்தெடுக்கப்பட்டு இச்சபைக்கு அனுப்பி வைக்கப்பட்ட சமூகப் பணியாற்றும் எங்கள் சமூக நலத் துறை அமைச்சரும், சிறப்புத் திட்ட அமலாக்கத் துறை அமைச்சரும் இவ்விஷயத்தைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு முதல்வரிடம் பரிந்து பேச வேண்டுகிறேன்.



1 முதல் 8 ஆம் வகுப்பு வரை சுனாமி ஆதரவற்ற காப்பகத்தில் பயிலும் மாணவர்கள். . .(குறுக்கீடு)

முற்பகல் 11-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு சுனாமி காப்பகத்தில் பயிலும் பிள்ளைகளுக்கு, அரசு குழந்தைகள் காப்பகம்மூலம் 12 ஆம் வகுப்பு வரை பயிற்றுவிக்கப்பட்டு, அவர்களுக்குத் தொழிற்பயிற்சி அளிப்பதற்காக மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்படி இன்று என்னுடைய பதிலுரையில் அறிவிப்புகளாக வெளியிட உள்ளேன். அவர்களுக்கு ஆசிரியர் பயிற்சியும், மருத்துவப் பயிற்சியும், அதற்குண்டான உதவித் தொகைகளையும் வழங்க இருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ப. சிவக்கொழுந்து:** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாற்றுத் திறனாளிகள் குறித்த நீண்டகால ஆய்வு, விவாதம் மற்றும் மாற்றுத் திறனாளிகளின் தொடர் போராட்டங்களுக்குப் பிறகு, கடந்த ஆட்சியில் மாற்றுத் திறனாளிகளுக்கென ஒரு தனி நல வாரியம் உருவாக்கப்பட்டது. அதில் மாற்றுத் திறனாளிகளுக்கென ஏராளமான சலுகைகளும் அறிவிக்கப்பட்டன. ஆனால், அதற்குரியவர்களுக்கு எந்தச் சலுகையும் கிடைத்ததாகத் தெரியவில்லை. நல வாரியம் செயல்பட்டதா என்றே தெரியவில்லை.

கடந்தகால ஆட்சியில் அறிவிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் நல வாரிய செயல்பாடு குறித்தும், நலத் திட்டங்கள் குறித்தும் யாராவது ஒரு மாற்றுத் திறனாளியை அழைத்து விசாரித்துப் பார்த்தால் உண்மை தெரியும். அவர்களின் இன்றைய நிலைமையும் தெரியும்.

கடந்த ஆட்சியில் இரயில் கட்டணச் சலுகையைப்போல, அரசுப் பேருந்துகளிலும் மாற்றுத் திறனாளிகள் நான்கில் ஒரு பங்கு கட்டணம் செலுத்தி பயணம் செய்ய அரசாணை (நிலை) எண் 153, நாள் 29–10–2008 மற்றும் அரசாணை (நிலை) எண் 18, நாள் 31–5–2010 ஆகிய அரசாணைகளில் கடந்த தி.மு.க. ஆட்சி மாற்றுத் திறனாளிகளுக்கும் அவரால் தனியாக இயங்க முடியாத சூழ்நிலையில் அவருக்குத் துணையாளராக ஒருவருக்கும் 75 சதவிகிதம் கட்டணச் சலுகை அறிவித்துள்ளது.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. சு. குணசேகரன் தலைமை)

ஆனால், இந்தச் சலுகை இருப்பது சாதாரண பேருந்துகளில் மட்டுமே!

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சு. குணசேகரன்):** இன்னும் ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. ப. சிவக்கொழுந்து:** அரசு நீண்ட தூரப் பேருந்துகளிலும், சொகுசுப் பேருந்துகளிலும் இல்லையென அறிவித்திருப்பது வேதனைக்குரியதும் மற்றும் ஏமாற்றத்திற்குரியதாகும். எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தாயுள்ளத்தோடு அனைத்து வகையான பேருந்துகளிலும் மாற்றுத் திறனாளிகள் மற்றும் அவரது உதவியாளரை 25 சதவிகித கட்டணமுமின்றி, இலவசமாகப் பயணம் செய்ய அனுமதிக்க உரிய ஆணை பிறப்பித்து, மாற்றுத் திறனாளிகளுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்த வேண்டுமென அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாற்றுத் திறனாளிகள் என்பவர் யார் என்பதற்குக் கடந்த ஆட்சி, 60 சதவிகிதம் உடல் ஊனமுள்ளவர் என்று அரசு மருத்துவரால் சான்றிதழ் வழங்கப்பட்டு, அதனை உரிய முறையில் சமர்ப்பிப்பவரே என்று விளக்கம் தரப்பட்டது. அத்தகையோருக்கே கட்டணச் சலுகை உள்ளிட்ட பிற சலுகைகள் வழங்கப்படும் என்ற நிலை உள்ளது. இந்த வரைமுறை மாற்றுத் திறனாளிகளுக்குப் பயனளிக்கவோ, அவர்களைச் சமுதாயத்தில் நம்பிக்கையுள்ள பிரஜையாக மாற்றவோ உதவாது என்பதனை வேதனையோடு சுட்டிக் காட்டுவதுடன், அந்த ஊனத்தின் இழப்பு 40 சதவிகிதம் இருந்தால் போதும் என்கிற ஐ.நா. சபை உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளும், மனித உரிமை அமைப்புகளும் அளித்துள்ள விளக்கங்கள், ஆலோசனைகளின் அடிப்படையில் அதைத் திருத்தி



அறிவித்து தமிழகத்தில் ஆயிரக்கணக்கான மாற்றுத் திறனாளிகள் வாழ்க்கையில் நம்பிக்கை ஒளி ஏற்றிட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

மாற்றுத் திறனாளிகளின் மாவட்ட மறுவாழ்வு அலுவலகம், ஒருசில மாவட்டங்களில் மாற்றுத் திறனாளிகளே செல்ல முடியாத, ஊருக்கு ஒதுக்குப்புறமான, நீண்ட தூரத்தில், குறைந்தபட்சம் ஆட்டோவில் போனால் 100 ரூபாய் கொடுத்துதான் அந்த அலுவலகத்திற்குச் செல்லக்கூடிய சூழ்நிலை உள்ளது. உதாரணமாக, கடலூரில் எல்லா அரசு அலுவலகங்களும் குறிப்பிட்ட இடத்திற்குள் எளிதில் செல்வதற்கு வசதியாக உள்ளன. ஆனால், மாற்றுத் திறனாளிகள் மறுவாழ்வு இல்லம் ஊருக்கு ஒதுக்குப்புறமாக, பேருந்துகள் செல்லமுடியாத புதுப்பாளையம் என்கிற பகுதியில் உள்ளது. எனவே, அனைத்து மாற்றுத் திறனாளிகளுக்கும் மறுவாழ்வு அலுவலகத்தை மாவட்ட பொது மருத்துவமனைக்கு அருகில் செயல்படுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் மாற்றுத் திறனாளிகள் எண்ணிக்கை 10 இலட்சத்தைத் தாண்டியுள்ளது. இவர்களின் குடும்பம், வாரிசுகள் எனக் கணக்கிட்டால் 15 இலட்சத்திற்கும் அதிகமாகும். இவர்களுடைய கோரிக்கைகளை அக்கறையுடனும், பரிவுடனும், அதேநேரத்தில் நாட்டின் நலனுக்காக, அவர்களுடைய திறமையையும் பயன்படுத்தும் அரசாக, இந்த அரசு செயல்படும் எனத் தமிழக மக்கள் நம்புகிறார்கள்.

மாவட்ட வாரியாக மாவட்ட ஆட்சியரின் தலைமையில், மாற்றுத் திறனாளிகளின் பிரதிநிதிகளைத் தேர்வு செய்து, மாநில அளவிலான ஒரு மாநாட்டினை தமிழக அரசு சமூக நலத் துறை மூலமாக நடத்தி, அவர்களுடைய கோரிக்கையை விவாதித்து, அதன் அடிப்படையில் கொள்கைகளை உருவாக்கவும், மாற்றுத் திறனாளிகளுக்கான நலத் திட்டங்களைச் செயல்படுத்தவும் வேண்டுமென அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சு. குணசேகரன்):** மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**திரு. ப. சிவக்கொழுந்து:** இந்த அவையிலே பேச வாய்ப்பளித்த பேரவைத் தலைவருக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சு. குணசேகரன்):** ஒத்துழைப்பு கொடுத்த மாண்புமிகு உறுப்பினருக்கு நன்றி. அடுத்து, (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு அவர்கள்.

**திரு. ம. கலை அரசு:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நீங்கள் உறுப்பினராக இருக்கும்போது கையைத் தூக்கிப் பேசுவதற்கு வாய்ப்பு கேட்கிறீர்கள். பேரவைத் தலைவர் இருக்கையில் மாற்றுத் தலைவராக அமர்ந்த உடனே, பேசுகின்ற உறுப்பினர்களைப் பார்த்து ஒரு நிமிடத்தில் முடித்துக்கொள்ளுங்கள் என்று சொல்லி மணி அடிக்கிறீர்கள். இது எந்தவகையில் நியாயம் என்பதை மாற்றுத் தலைவர் அவர்கள் தெரிவிக்க வேண்டுகிறேன்.

*முற்பகல் 11-40*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சு. குணசேகரன்):** இடம் மாறும்போது எல்லாமே மாறும் என்பது தங்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். (சிரிப்பு)

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். கணிதா சம்பத் அவர்கள். மாண்புமிகு உறுப்பினர், உங்களுக்கு 10 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

***திருமதி எஸ். கணிதா சம்பத்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசின் 14-வது சட்டப் பேரவைக் கூட்டத் தொடரில், சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை குறித்த மானியக் கோரிக்கையில் கலந்து கொண்டு பேசுவதற்கு வாய்ப்பினை நல்கிய தங்களுக்கு வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மிகவும் சாதாரண ஏழைக் குடும்பத்தில் பிறந்து, கடைக்கோடித் தொண்டராக இருந்த எனக்கு, மாண்புமிகு அம்மா அவர்கள் கழகத்தில் பல பொறுப்புகளைக் கொடுத்து, காஞ்சிபுரம் மாவட்டப் பிரதிநிதியாகவும், காஞ்சிபுரம் கிழக்கு மாவட்ட மகளிர் அணி இணைச் செயலாளராகவும், செங்கல்பட்டு தொகுதி கழகச் செயலாளராகவும், தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும், தற்போது காஞ்சிபுரம் கிழக்கு மாவட்ட மகளிர் அணிச் செயலாளராகவும், என்னைப் பல்வேறு பொறுப்புகளில் நியமனம் செய்து, கழகப் பணியாற்ற வாய்ப்பு வழங்கியும், கடந்த 2001 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில், திருப்போரூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகப் போட்டியிட வாய்ப்புக் கொடுத்து, என்னை வெற்றி பெறச் செய்தும் 2011–ல் இரண்டாவது முறையாக சட்டமன்ற உறுப்பினர் ஆவதற்கு,



மதுராந்தகம் தொகுதியில் போட்டியிட வாய்ப்புக் கொடுத்து, என்னை வெற்றிபெறச் செய்தும், இன்றைக்கு ஆன்றோர்களும், அறிவுசால் சான்றோர்களும் குழுமியுள்ள இந்த மாமன்றத்தில் எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பும் அளித்த அன்புத் தாய், அரியதாய், பெரியதாய், போற்றுதலுக்கு உரியதாய், எளியதாய், இனியதாய், என்றும் நிலைத்த தாய், மலர்வதாய், கனிவதாய், வந்த தாய், எங்கள் தாயாகி, தமிழகத்தின் தன்னிகரில்லாத வரலாற்றுத் தலைவி, கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், தங்கத் தாரகை, பொன்மனத் தலைவி, இதய தெய்வம் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதக் கமலங்களில் ஆயிரம் கோடி நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி, ‘அம்மாவின் பாதச்சுவடுகளே எனது வேதச் சுவடுகள்’ என நினைத்து வணங்குகிறேன் தாயே!

அம்மா! சந்திரனைப் பார்த்து அல்லி மலர்கிறது; தாயைப் பார்த்து குழந்தையின் உள்ளம் மலர்கிறது. ஆனால், உங்களைப் பார்த்துத்தான் தாயே, எங்களின் முகம் மலருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா! வானம் மழையைப் பொழிய மறந்தாலும், காகம் கரைந்து உண்ண மறந்தாலும், கோழி தன் குஞ்சுகளை மறந்தாலும், பெற்ற தாய் தன் பிள்ளைகளை மறந்தாலும், நாங்கள் உங்களை என்றுமே மறக்காத தொண்டர்களாக வாழ்கின்றோம் தாயே!

அம்மா! எங்களுக்காக நீங்கள் எத்தனையோ இன்னல்கள், இடையூறுகள், அல்லல்கள், அவதிகள் அத்தனையும் தாங்கி, எல்லா சுகங்களையும் இழந்து, மக்களின் ஞானியாக வாழ்ந்துவரும் அன்னையே! ‘உங்களுக்காக நாங்கள் வாழ்கிறோம்’ என்று சொல்வதைவிட, ‘எங்களுக்காக நீங்கள் வாழ்கிறீர்கள்’ என்று சொல்வதில் நாங்கள் பெருமையும், பூரிப்பும் அடைகிறோம். அம்மா! ‘நீங்கள் வாழும் காலத்தில் நாங்களும் வாழ்கிறோம்’ என்பதையே நாங்கள் செய்த மிகப் பெரிய தவப் பயனாகக் கருதுகிறோம்.

“புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்காடு
இரந்துகோள் தக்கது உடைத்து”

என்ற வள்ளுவரின் வாய்மொழிக்கேற்ப, எங்களுக்கு இருக்கும் மீதியுள்ள வாழ்நாள் அனைத்தையும், தங்களின் வாழ்நாளோடு இணைத்து நீங்கள் பல்லாண்டு வாழ வேண்டும் தாயே!

அம்மா! மூன்றாவது முறையாகத் தமிழக முதல்வராகப் பொறுப்பேற்று, அனுதினமும் பல நல்ல திட்டங்களை வாரி, வாரி வழங்கிக் கொண்டிருக்கும் நீங்கள் வள்ளல்களுக்கு எல்லாம் வள்ளலாக இன்றையதினம் விளங்கிக் கொண்டிருக்கிறீர்கள். உலகமே போற்றுகின்ற வகையில், இந்தியாவிலேயே தமிழகத்தை முதன்மை மாநிலமாக உருவாக்க, தொலைநோக்குப் பார்வையுடன் தமிழகத்தை வழி நடத்திடும் நாளைய இந்தியாவின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கும் நடமாடும் மனித தெய்வமே! தமிழகத்தின் நிரந்தர முதல்வராகப் பொறுப்பேற்று, ஏழரைக் கோடி தமிழ்ச் சமுதாய மக்களையும், ஒன்றரைக் கோடி கழகத் தொண்டர்களையும் காக்க வேண்டுமென்று இறைவனை வேண்டி, மீண்டும் ஒருமுறை தங்களுக்கு நன்றியையும், வணக்கத்தையும் கூறி, நீங்கள் இருக்கும் திசைநோக்கி வணங்குகிறேன். மேலும், இந்த மாமன்றத்தில் பேசுவதற்கு, எனக்கு வாக்களித்து வெற்றி பெற வைத்த மதுராந்தகம் தொகுதி வாக்காளப் பெருமக்கள் அனைவருக்கும் எனது இதயமார்ந்த நன்றியைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்த திருமண நிதியுதவித் திட்டம் ஓர் அற்புதமான திட்டம். தமிழ்நாட்டில் ஏழை விதவைத் தாய்மார்கள் தனித்து வாழும் காரணத்தால், தம் மக்களின் திருமணத்தை நடத்த சிரமப்பட்ட காரணத்தால், கடந்த 1981–லிருந்து 1982 ஆம் ஆண்டு 1,000 ரூபாய் நிதியுதவியுடன் தொடங்கப்பட்ட இந்தத் திட்டம், படிப்படியாக உயர்த்தப்பட்டு, தங்கமனம் கொண்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஏழைப் பெண்கள் திருமணத்திற்கு ரூபாய் 25,000/–மும், திருமாங்கல்யம் செய்வதற்கு நான்கு கிராம் தங்கமும், பட்டயப் படிப்பு முடித்த மகளிருக்குத் திருமண உதவித் தொகையாக ரூபாய் 50,000/-மும் வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்கள். இது ஆயிரக்கணக்கான ஏழைப் பெற்றோர்களிடையே ஒரு புதிய நம்பிக்கையையும், பாதுகாப்பையும் ஏற்படுத்தியிருக்கிறது.

முற்பகல் 11-45

உலக வரலாற்றுச் சரித்திரத்தில் "பொன் எழுத்துக்களால், வைர வரிகளில் பொறிக்கப்பட வேண்டிய" இந்தத் திட்டத்தை, தமிழகத்தில் உள்ள மக்கள் அனைவரும் வரவேற்கிறார்கள், வாழ்த்துகிறார்கள், வணங்கி மகிழ்கிறார்கள் தாயே.



மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டு, தற்சமயம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள மற்றொரு புரட்சிகரமான திட்டம் மாதாந்திர ஓய்வூதியத் திட்டம். ஆதரவற்றோர், கணவனால் கைவிடப்பட்டோர் மற்றும் முதியோருக்கு அவர்கள் வசிக்கும் பகுதிக்குச் சென்று வங்கிகள்மூலம் 'ஸ்மார்ட் கார்டு' வழங்கும் திட்டத்தை இன்று இந்திய துணைக் கண்டமே போற்றி, பாராட்டி மகிழ்கிறது. முற்போக்குச் சிந்தனையும், ஆளுமைத் திறனும் கொண்ட தங்கத் தலைவி, புரட்சித் தலைவி அம்மா அவர்களை உலகமே வியந்து அண்ணாந்து பார்க்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், எனது தொகுதியின் கோரிக்கைகள் சிலவற்றை சமர்ப்பிக்கின்றேன்.

வரலாற்றுப் புகழ்பெற்ற ஏரிகாத்த ராமர் என்னும் அருள்மிகு கோதண்டராமர் திருக்கோயிலை உள்ளடக்கிய மதுராந்தகம் தொகுதி, மிகவும் பின்தங்கிய ஒரு தனித் தொகுதியாகும். இந்தத் தொகுதியில் ஏழை, எளிய, விவசாயப் பெருங்குடிமக்கள், குறிப்பாக, ஆதி திராவிட பெருமக்கள் பெருமளவில் வாழ்ந்து வருகிறார்கள். இவர்கள் அனைவரும் பெரும் பயனடைகின்ற வகையில், மதுராந்தகத்தில் தற்சமயம் வட்டாட்சியர் அலுவலகம் ஒன்று இயங்கி வருகிறது. இது மிகவும் பழமையானது, தொன்மையானது. இங்கு தினந்தோறும் ஆயிரக்கணக்கான மக்கள் வந்து செல்கிறார்கள். ஆனால், இட நெருக்கடி காரணமாக, மக்கள் பெரிதும் சிரமத்திற்கு உள்ளாகிறார்கள். ஆகவே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதனை கருணை உள்ளத்தோடு பரிசீலனை செய்து, எனது தொகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையான, புதியதாக வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் அமைய உத்தரவு வழங்குமாறு மாண்புமிகு அம்மா அவர்களை, மாண்புமிகு மாற்றுத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். தமிழகம் நீர்ப் பற்றாக்குறை உள்ள மாநிலமாகும். பாசன வசதிக்கு முற்றிலும் பருவ மழையை விவசாயப் பெருமக்கள் நம்பி வாழ்ந்து வருகிறார்கள். இதனைக் கருத்தில் கொண்டுதான் தங்கத் தலைவி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் அரசு, பாரம்பரிய நீர் ஆதாரங்களைப் பாதுகாக்க ரூபாய் 200 கோடி ஒதுக்கப்பட்டு, தமிழக விவசாயப் பெருமக்கள் வாழ்வில் பால் வார்த்து உள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது சட்டமன்றத் தொகுதியிலுள்ள மதுராந்தகம் ஏரி மிகவும் பழமையான ஏரி. இந்த ஏரி பல ஆண்டுகளாகத் தூர் வாரப்படாமல் உள்ளதால், முற்றிலும் விவசாயப் பணிகள் பாதிக்கப்பட்ட நிலையில்

உள்ளது. எங்கள் தங்கத் தலைவி, புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் கருணையுடன் பரிசீலித்து, நடப்பு நிதியாண்டிலே மதுராந்தகம் ஏரியைத் தூர்வார உத்தரவு வழங்க வேண்டுமென மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், எனது தொகுதியிலுள்ள அச்சரப்பாக்கம் ஒன்றியத்தில் பாக்கத்திலிருந்து புலிக்கொரடு வரைதான் தார்ச் சாலை வசதியுள்ளது. இதனால் சுற்றுப்புறத்தில் உள்ள 15,000 கிராம விவசாயப் பெருமக்கள், 15 கிலோ மீட்டர் தூரம் சுற்றிவந்து தங்களது பகுதிக்கு வருகிறார்கள். இதனை கருணை மனம் கொண்ட தங்கத் தலைவி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தாதங்குப்பம் வரை சுமார் 2½ கிலோ மீட்டர் தூரத்திற்கு இணைப்புச் சாலை அமைத்துக் கொடுத்தால், ஏழை விவசாயிகள், ஆதி திராவிடப் பெருமக்கள் பெருமளவில் பயனடைவார்கள். இந்த இணைப்புச் சாலையை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று அம்மா அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், எனது தொகுதியில், கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தில், மதுராந்தகம் நகரில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் ஒன்று கட்ட அரசுக்குக் கருத்துரு அனுப்பப்பட்டு, இடம் தேர்வு செய்யப்பட்டு, ரூபாய் 7.3 கோடியில் திட்ட மதிப்பீடுகள் முடிக்கப்பட்டு, கட்டடம் கட்டாமல் கடந்தகால ஆட்சியாளர்கள் நிலுவையில் போட்டுவிட்டார்கள்.

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்"

என்ற வள்ளுவரின் குறள் வழிக்கேற்ப மாண்புமிகு அம்மா ஒருவரால் இந்தப் பணி நிறைவடையும் என்பதற்கு இணங்க, மாண்புமிகு அம்மா அவர்கள் கருணை உள்ளத்தோடு இதனை பரிசீலனை செய்து, மதுராந்தகம் பகுதியில் நீதிமன்ற வளாகக் கட்டடம் கட்டித் தர, இந்த நிதியாண்டிலேயே உத்தரவு வழங்க வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், மதுராந்தகம் தொகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கைகளில் ஒன்று, மதுராந்தகத்திலிருந்து வில்வராயநல்லூர், வசந்தவாடி, புலிக்கொரடு, நாசங்குப்பம், ஆமையப்பட்டு, புரையூர், சோத்துப்பாக்கம், மேல்மருவத்தூர் வழியாக அச்சரப்பாக்கத்திற்குப் புதிய பேருந்து வசதி செய்து தரப்பட வேண்டுமென்பதுதான் அந்தப் பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையாகும் அம்மா.



இதையும் அம்மா அவர்கள் செய்து தர வேண்டும் என்று அம்மாவிடத்தில் பணிவோடு கேட்டு, புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் இதைக் கருணையுடன் பரிசீலித்து, அந்தப் பகுதிக்குப் பேருந்து வசதி செய்து தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-50

தமிழகத்திலுள்ள வைணவ திருக்கோயில்களில் பழமையானது மட்டுமல்ல, பல மாநிலத்தவரும் வந்து வணங்கும் சிறப்புக்குரியது மதுராந்தகம் ஏரி காத்த ராமர் கோயில். ஏரியில் வெள்ளம் பெருகி ஊர் அழிந்துவிடாமல் பாதுகாத்த ராமரின் திருக்கோயில் அது. இப்போது பாதுகாக்கப்பட வேண்டிய நிலையில் உள்ளது. பழுதடைந்த கட்டடங்களைப் பழுது பார்த்து சீர் செய்ய வேண்டும் என்பது இப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கை. ஸ்ரீரங்கநாதரின் அருளைப் பூரணமாய்ப் பெற்ற இதய தெய்வம் அம்மா அவர்களின் கருணை விழிப் பார்வை எங்கள் தொகுதி ராமர் கோயில்மீதும் பட வேண்டும் என்பது எனது பணிவான வேண்டுகோள்.

மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதியைச் சார்ந்த பல கிராமங்கள் தேசிய நெடுஞ்சாலையை ஒட்டியுள்ளன. மேலும் தேசிய நெடுஞ்சாலையில் செங்கல்பட்டு. . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சு. குணசேகரன்):** மாண்புமிகு உறுப்பினர், தொகுதி கோரிக்கைகளை எழுதிக் கொடுத்துவிடுங்கள். அவைக் குறிப்பில் அவை பதிவு செய்துகொள்ளப்படும்.

**திருமதி எஸ். கணிதா சம்பத்:** இல்லை, அம்மாவுக்கு நன்றி சொல்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சு. குணசேகரன்):** சரி, நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**திருமதி எஸ். கணிதா சம்பத்:** தேசிய நெடுஞ்சாலையில் செங்கல்பட்டுக்கும், மதுராந்தகத்திற்கும் இடையில் அடிக்கடி விபத்துகள் ஏற்படுவதால், விபத்துகளால் பாதிக்கப்பட்டவர்களைக் காக்கும் பயன் கருதியும், தொகுதி மக்கள் நலன் கருதியும், மாமண்டூர் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்றை அமைத்துத் தர வேண்டுமென்று அம்மாவைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சு. குணசேகரன்):** தொகுதிக் கோரிக்கைகளை எழுதிக் கொடுத்துவிடுங்கள்.

**திருமதி எஸ். கணிதா சம்பத்:** அதேபோல், என் தொகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையான நெல் கொள்முதல் நிலையம் ஒன்றை மாமண்டூர் பகுதியில் நிறுவிட வேண்டுமென்று, அம்மாவை செய்து கொடுக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

ஏழைகளின் வாழ்வில் இன்ப ஒளி ஏற்ற கறவை மாடுகளையும், ஆடுகளையும் அன்புப் பரிசாக வழங்கும் கருணை தெய்வம் அம்மா அவர்கள், கால்நடைகளின் நலனைக் கருதி, அனந்தமங்கலம் பகுதி கிராமத்தில் கால்நடை மருத்துவமனை ஒன்றை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் உள்ள படாளம் சர்க்கரை ஆலை பல ஆண்டுக் காலமாக மூடி இருந்தது. மைனாரிட்டி தி.மு.க. அரசின் முன்னாள் துணை முதல்வர் மு.க. ஸ்டாலின் திறந்து வைத்து, பல பத்திரிகைகளுக்குச் செய்தி தந்து, எங்கள் அரசின் சாதனை என பேட்டி கொடுத்து, இனி சர்க்கரை ஆலை இயங்கும் என்று சொல்லி, அங்கு வேலை செய்யும் தொழிலாளர்கள் மட்டுமல்லாமல், ஏழை மக்களையும் நம்ப வைத்து, நாடகம் ஆடினார்கள். அனால் திறந்து வைக்கப்பட்டதாகச் சொன்ன சர்க்கரை ஆலை அன்று முதல் இன்று வரை இயங்கவில்லை. அதனால் கரும்பு விவசாயப் பெருமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இதை அம்மா அவர்கள் கருணையுடன் பரிசீலித்து, இந்த சர்க்கரை ஆலையைத் திறந்து, கரும்பு விவசாயிகளின் வாழ்வில் ஒளியேற்றும்படி பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் முதல்வராக இருந்த கருணாநிதி, மக்களை ஏமாற்றி, வாக்குகளைப் பெறுவதற்கு பொதுத் தேர்தல் காலத்தில், ஆட்சி முடியும் தருவாயில், இலவச கான்கிரீட் கலைஞர் வீடுகள் கட்டும் திட்டம் என்ற பெயரில் ஒரு திட்டத்தை அறிவித்து, 2010 ஆம் ஆண்டு, 2012, 2013 ஆம் ஆண்டுக்கு அப்பாலும், ஆண்டுதோறும் வீடு கட்டித் தருவதாக சான்று அட்டைகள் வழங்கி, அதுவும் 2010–லிருந்து 2016 வரைக்கும் அவர் முதல்வராக இருப்பார் என்று அப்பகுதி மக்களை ஏமாற்றி, 21 இலட்சம் சான்று அட்டைகளை வழங்கி, அரசு எந்திரத்தினைத் தவறாகப்



பயன்படுத்திய, அதிகார துஷ்பிரயோகம் செய்த, மோசடி செய்துள்ள கருணாநிதி அவர்கள்மீது தகுந்த சட்டப் பிரிவின்கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சு. குணசேகரன்):** நன்றி சொல்லுங்கள், நன்றி சொல்லுங்கள்.

**திருமதி எஸ். கணிதா சம்பத்:** அதை அம்மா அவர்களிடத்திலே சமர்ப்பிக்கிறேன்.

ஐந்து ஆண்டு கால சாதனைகளை 100 நாட்களுக்கு முன்பாகவே சாதித்துக் காட்டி புதிய வரலாறு படைத்த மாண்புமிகு அம்மா அவர்களே, நாங்கள் கேட்காமலேயே தேவையறிந்து எங்களுக்கு உதவும் உயர்ந்த உள்ளம் உங்களுக்கு உண்டு. என் தொகுதி மக்களின் நலன் கருதி, சில கோரிக்கைகளை உங்கள்முன் பணிவோடு சமர்ப்பித்துள்ளேன்.

கலைஞர் வீடு கட்டும் கார்டு என்று ஒரு கார்டு கொடுத்துள்ளார்கள். அதை மாற்றுத் தலைவரிடத்திலே சமர்ப்பிக்கிறேன் என்று சொல்லி, 2010-லிருந்து 2016 வரைக்கும் அவர் முதலமைச்சராம், இதை எப்படி அவர் பண்ணலாம். இந்த கார்டிலே அப்படி இருக்கிறது. நீங்கள் அதைப் பரிசீலனை செய்து, அதற்கு அம்மா அவர்கள், அவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்தத் தருணத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சு. குணசேகரன்):** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், முன்னாள் முதலமைச்சர் அவர்கள் கொடுத்த அத்தாட்சி, எதிர்காலத்திலே எனக்கே வாக்களியுங்கள் என்று ஓர் அத்தாட்சிப் பத்திரத்தைக் கொடுப்பதுபோல. ஏழை மக்களை ஏமாற்றுவதற்காக அந்த ரசீதைக் கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் நன்றாக சிந்திக்கக்கூடியவர்கள். அதுவும், பொதுவாக தமிழக மக்களைப் பற்றிச் சொல்லவே தேவையில்லை. தமிழக மக்கள் இந்த நாட்டை

ஆள்வதற்கு நல்ல தலைவர் இன்று தமிழகத்தில் புரட்சித் தலைவி அம்மா மட்டும்தான் என வாக்களித்து, அம்மா அவர்களை முதலமைச்சராக ஆக்கி இருக்கிறார்கள். எனவே, வாய்தா போனவர்களைப் பற்றி, மீண்டும் கருத்து சொல்லத் தேவையில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-55*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சு. குணசேகரன்):** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். கணிதா சம்பத் அவர்கள்.

**திருமதி எஸ். கணிதா சம்பத்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, என்னுடைய மதுராந்தகம் தொகுதி மிகவும் பின் தங்கிய, ஏழைகள் நிறைந்த தொகுதி. என் தொகுதி மக்களுக்கு இதிலுள்ள கோரிக்கைகள் அத்தனையையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிறைவேற்றித் தந்திட வேண்டும் என்று கேட்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை மீண்டும் ஒரு முறை வணங்கி, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து இந்த அளவில் எனது உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

தொகுதிப் பிரச்சினைகள்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மதுராந்தகம் தொகுதி, அச்சரப்பாக்கம் ஒன்றியத்தின் தீயணைப்பு நிலையம் 17 ஆண்டுக் காலமாக வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. இதற்குச் சொந்தமாக கட்டட வசதி ஏற்படுத்தித் தருமாறு மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிவுடன் வேண்டுகிறேன்.

எனது மதுராந்தகம் தொகுதியில் உள்ள அச்சரப்பாக்கம் ஒன்றியம், ராமபுரம் ஊராட்சி உள்ளடங்கிய பகுதியில், புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சிக்காலத்தில்—2001 மற்றும் 2006–இல் அறிவித்த துணை மின் நிலையத்தை இதற்குப் பின்னால் வந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் கிடப்பில் போட்டு விட்டார்கள். அதனால் மாண்புமிகு அம்மாவினுடைய பொற்கால ஆட்சியில் அப்பகுதியில் ஒரு துணை மின் நிலையம் அமைத்துத் தரும்படி மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.



**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சு. குணசேகரன்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார் அவர்கள்.

**திரு. கோவி. சம்பத்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாயே! தமிழே! வணக்கம். தாய்ப்பிள்ளை உறவம்மா உங்களுக்கும், எனக்கும். அமிழ்தே, தமிழே! நீங்கள் இல்லையென்றால் எங்கள் வாழ்வே கசக்கும், புளிக்கும். பிறந்து சிறந்த மனிதர்களுக்கிடையே சிறந்தே பிறந்த தாயே! நீங்கள் அன்பின் திருவுருவம், ஆற்றலின் பிறப்பிடம், வீரத்தின் விளைநிலம், வேங்கையின் இருப்பிடம், வெற்றியின் விலாசம் தாயே! அலைகடலென ஆர்ப்பரித்து எழுகிற தமிழர் நெஞ்சத்தின் இதயத்திலெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கும் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களே! (மேசையைத் தட்டும் ஒலி) வரையிலா திட்டங்களை வாரிக் கொடுக்கும் தாயே! எளியோரையும் வலியோராய் மாற்றிட்ட அன்னையே! இமயம் முதல் குமரி வரை வாழும் மாந்தர் நெஞ்சத்தும் பாரளாவி வாழும் மனிதர் இதயத்தும் நீக்கமற நிறைந்திருக்கும் இதய தெய்வம் புரட்சித் தலைவி, தமிழகத்தின் நிரந்தர முதல்வர், மாற்றம் தந்த மக்களுக்கு உயர் ஏற்றம் தரும் தங்கத் தாரகை, உலகமே வியக்கும் செயலாக்கச் செம்மல், ஏழைகளின் ஒட்டிய வயிறுகளில், இதயங்களில் பால் சேர்த்த பசுமைத் தாயே! வேலூர் மாவட்டம், வாணியம்பாடி தொகுதியில் எங்கோ ஒரு மூலையில் ஏழைகளின் ஊட்டி என்று அழைக்கப்படும் ஏலகிரி மலையடிவாரத்தில் வள்ளிப்பட்டு என்கிற சிற்றூராட்சியில் பிறந்த என்னை புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மல், மக்கள் திலகம் வாழ்ந்த காலம் தொடங்கி 1977 ஆண்டு முதல் கிளைக் கழக மேலவை பிரதிநிதியாகவும், 1980 முதல் 1995 வரை கிளைக் கழகச் செயலாளராகவும், 1995 முதல் 2000 வரை ஒன்றிய புரட்சித் தலைவி அம்மா பேரவை இணைச் செயலாளராகவும், 2001 முதல் இன்று வரை ஒன்றிய கழகச் செயலாளராகவும் பணியாற்றிய என்னை, நடந்து முடிந்த 14–வது சட்டமன்றத் தேர்தலில் வாணியம்பாடி தொகுதி சட்டமன்ற வேட்பாளராகக் கண்டெடுத்து களமிறக்கி என் வெற்றியிலும், உங்கள் உயிர்சேர்த்து என்னை வெற்றிபெறச் செய்த தமிழர்களின் தனிப்பெரும் தலைவி, புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களே! உங்கள் மலர்ப் பாதங்களில் நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி, பணிவுடன் வணங்கி மகிழ்கிறேன் அம்மா.

சத்துணவு, சமூக நலம், மாற்றுத் திறனாளிகள் நலம் ஆகிய மானியக் கோரிக்கைகள்மீது உரை நிகழ்த்த வாய்ப்பளித்த உலகப் பெருந் தலைவர்களில் ஒப்பற்ற தலைவியே, திராவிட இயக்கத்தின் வீர வரலாறே! தமிழர்களின் தனிப்பெரும் தலைவியே! புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களே! உங்கள் மலர்ப் பாதங்களில் நன்றி மலர்களை மீண்டும் சமர்ப்பிக்கிறேன் தாயே!

வயலையும், வரப்பையும் வாழ வைத்துவிட்டு, தான் மட்டும் பதராய்ப்போன விவசாயப் பெருமக்களின் களவுபோன மின்சாரம், கடந்த கால மைனாரிட்டி கருணாநிதியின் இயலாத ஆட்சியால் மின் பற்றாக்குறை எனும் நாடகம், தங்களின் பொற்கால ஆட்சியில் ஒரே ஆணையால் உலகத்தின் உயிர் மூச்சாம் விவசாயம் வாழ, தமிழகம் ஒளிபெற்றிட தடையில்லா மின்சாரம் தந்த சரித்திரத் தலைவியே! (மேசையைத் தட்டும் ஒலி)

மதுரை போன்ற மாநகரங்களில், தெருவில் நடந்த தமிழச்சியின் தாலியும், பூட்டிய வீட்டின் பொருள்களும் களவுபோன காலம் மாறி, தமிழகம் இன்று அமைதிப் பூங்காவாய் காவல் துறையின் அதிரடி நடவடிக்கையால், தங்களின் மேலான ஆணையால் தலை நிமிர்ந்து நிற்கின்றது அம்மா!

சாய்வு நாற்காலியில் அமரவேண்டியோர் சக்கர நாற்காலியில் முன்வரிசையில் அமர்ந்து கொண்டு மானாட மயிலாட நிகழ்ச்சியில் நமிதா, குஷ்பு ஆட்டத்தை கண்ணாடியை உயர்த்தி, உயர்த்தி ஆட்டம் பார்க்கலாம். பேரவையில் மக்கள் வரிப்பணத்தில் சக்கர நாற்காலியில் அமர்ந்து கர கரத்த குரலில் உலகத்தின் ஞானியாய், மேதாவியாய்ப் பேச ஆசைப்படுவோரின் பேராசைக்கு இசையாத, அசையாத எங்கள் அன்புத் தாயே! மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களே, மைனாரிட்டி ஆட்சியில் தலை விரித்தாடிய ரவுடிகளின் பத்ரகாளி அட்டகாசம், அம்மா, நீங்கள் ஆட்சியேற்ற அன்றே ஓடி ஒளிந்த நிகழ்வு தமிழகத்து தெருக்களில் பேச்சாய், பேச்சாய் ஒலிக்கிறது அம்மா!

உலகத்தின் அதிசயம் ஏழு என்பார்கள். ஆனால், நீங்கள்தானே அம்மா உலகத்தின் அதிசயம். ஏழைகளின் சிரிப்பில் இறைவன் இருப்பான், இறைவனின் சிரிப்பில் நீங்கள்தானே அம்மா இருக்கின்றீர்கள்.

தாலிக்குத் தங்கம் கிடைக்காமல் செய்திட்டார், காலத்தில் தமிழச்சியின் தாலிக்குத் தங்கம் தந்து, வாழ்க்கைக்கு மாலைகள்



தந்து, வாழ்வின் வழியை, கல்விக்கேற்ப வழங்கி வாழ்க்கையை சோலையாக்கிய தென்பொதிகைத் தென்றலே!

நீங்கள் கலங்கரை விளக்காய் இருப்பது தெரிந்தே சில பழைய கப்பல்கள் அவ்வப்போது உங்கள்மீது மோதி மோதி உடைந்து போகின்றன தாயே! நீங்கள் சக்தி என்னும் ஊற்று என்று தெரியாமல் சில முண்டங்கள் மூக்கை நுழைத்து சூர்ப்பநகையாய் மூக்கறுத்துப் போகின்றனர் அம்மா!

நண்பகல் 12-00

நீங்கள் ஆட்சிப் பொறுப்பேற்கும்போதெல்லாம் தென்பொதிகைச் சாரல் தங்க இழை நெய்து, நெய்து, மழைச்சோலை பூமியெங்கும் பசுஞ்சோலையாய் பாய்விரித்து பயிர் வளர்ப்பதால் தமிழர் நெஞ்சத்திலும், சொற்களிலும் வானமே வியக்கும்வண்ணம் மழை வந்து சேருமென சொல்லிக்கேட்டவன் தாயே!

சிறுபான்மை இனத்தாரையும் பெரும்பான்மையாய் பாவித்து அவர்தம் இனம் காக்கும் காவல் தெய்வமே, கலங்கரை விளக்கமே, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களே! இலங்கைத் தமிழர் வாழ்விலும், உயிரிலும் கொலை வெறியாட்டம் நிகழ்த்திய அதிபர் அரசின்மீது பொருளாதாரத் தடைவிதிக்க தீர்மானம் நிறைவேற்றி தமிழரின் நாடித்துடிப்பை உலகிற்கு உணர்த்திட்ட தாயே! நாளைய தமிழர் இலங்கையில் வாழ இன்றைய இலங்கைத் தமிழர் கரையில் ஒதுங்கியபோது, அவர்தம் உயிருக்கு உணவும், உடலுக்கு உடையும், வாழ்விற்கு இடமும் தந்த அன்புத் தாயே, அறிவுத் தாயே!

தமிழரின் உயிர் உறிஞ்சும் மரணக் கயிற்றுக்கு மாற்று ஒன்று வேண்டுமென தீர்மானம் தந்து தமிழரின் வயிற்றினில் உயிர் சேர்த்த தாயே! கல்விச் சோலைக்கு கால்நடையாய் வந்த தம் மாணவர்கட்கு இலவசப் பேருந்து வசதி, மிதிவண்டி வசதி, மடிக்கணினி வசதி, இணையதள கல்வி வசதி, பருவமுறைத் தேர்வு வசதி, கல்வி உதவித் தொகை வசதி, கற்றோர்க்கு அரசுப் பணி வசதி, கற்றலில் எளிமை, இனிமை சேர்க்க திட்டங்கள் தந்த சரித்திரத் தாயே!

ஒரு கோடியே 83 இலட்சம் குடும்ப அட்டைகளுக்கு விலையில்லா அரிசி தந்து, வீழ்ந்தவர் வாழ்வை உயர்த்தி அகிலமே வியக்க வைத்த வள்ளலே, புரட்சித் தலைவரின் வாரிசே, எங்கள் தாயே, எங்கள் தமிழே! காற்றுக்கு கை அசைக்கும் ஏழைக்கு

மின்விசிறியும், உரலில் அரிசியிட்டு, கூட்டுக்குப் பொருள் சேர்த்து அரைக்கக் காத்திருக்கும் தமிழச்சியின் கைகளுக்கு மிக்ஸியும், கிரைண்டரும் பேரறிஞர் அண்ணா பிறந்த நாளில் வழங்க ஆணை தந்த புரட்சித் தலைவி அம்மா அவர்களே!

வறியோரின் ஓய்வூதியம் ஆயிரமாய் உயர்த்தியும், மாற்றுத் திறனாளிகளைக் கண்டறிந்து அவர்தம் வாழ்வாதாரத்திற்கு ரூபாய் ஆயிரம் உதவித் தொகை, 3 சதவிகித இட ஒதுக்கீடு வழங்க ஆணையிட்ட மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களே!

அரசினர் தோட்டத்தில் சென்னையைக் காணாத ஏழைக்கும், மருத்துவமனையும், மருத்துவக் கல்லூரியும் தொடங்க ஆணை தந்து, இந்திய மண்ணில் தமிழகத்தை தலைநிமிர்த்திய தர்மத் தாயே! சீரில்லா கல்விக்கு சமச்சீர் கல்வியென்று பெயரிட்டு தம் பெயரை தம்பட்டம் அடித்துக் கொண்டவர்களை நில அபகரிப்பு வழக்கிலே ஊழல் செய்தோரை ஊருக்கும் உலகுக்கும் அடையாளம் காட்டிட்ட உத்தமத் தாயே!

தாயே உங்கள் அரசியல் வாழ்வில் அம்பெறிவார்மீது நம் மக்கள் சக்தியெனும் அருமருந்து பட்டுள்ளது பார்த்தீனியச் செடியைப்போல் அவர்கள் அழிவது திண்ணம் தாயே! வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடிய வள்ளலாராய், தமிழர் வாழ்வில் வறுமையை வென்றெடுக்க வந்த தர்மத் தாயே!

அள்ள அள்ளக் குறையாத அமுதசுரபியாய் ஆயிரம் ஆயிரம் திட்டங்கள் தந்து தமிழகத்தை தரணியில் முதன்மைப் பூமியாய் மாற்ற வந்த தாயே! தமிழர்களின் சித்திரைத் திருநாளை சிதைத்துவிட்டு இலங்கைத் தமிழருக்கு கண்ணீர் துடைப்பதாய் கவிராத்திரி நடத்தியவர்கள், தை தை என்று குதித்தவர்கள் செவிகளில் சித்திரை நாளின் சிறப்பை, கணக்காய்ச் சொன்னவர் நீங்கள்தானே அம்மா!

பெண்ணென்று பிறந்துவிட்டால் சலித்துக்கொள்ளும் சமுதாயம், தாய்ப்பால் மறுத்து கள்ளிப்பால், எருக்கன்பால் என பால் கொடுக்கும் உயிர்வதை நிகழ்வைத் தடுக்க தொட்டில் குழந்தைத் திட்டத்தைத் தந்து பெண்ணின் வளர்ச்சியில் மைல்கற்களை நிறுவிய தாயே! *(மேசையைத் தட்டும் ஒலி)*



மைனாரிட்டி அரசு தந்த அரசு வீட்டால் வீடு பெற்றவர்கள் கடன் பெற்றவர்களாய் நடுத்தெருவில் கந்து வட்டிக்காரர்களிடம் கைகட்டி நிற்கிறார்கள் அம்மா! அம்மா, உங்களின் பசுமைவீடு திட்டத்தால் கடனில்லா வீடு, வீடில்லா ஏழைக்கும் கிடைப்பது நினைத்து நாடே நன்றியுடன் பார்க்கிறது தாயே!

திருநங்கையர் வாரியம் அமைத்து தொழில் முனைவோர்க்கு 25 சதவிகிதம் மானியம் கொடுத்து 15 இலட்சம் ரூபாய் வரை கடனுதவி வழங்க ஆணை தந்து அவர்தம் வாழ்வில் மன உளைச்சல் நீக்கிய அருமருந்தே!

மகளிர் கல்வியில் முன்னுரிமை தந்து மகளிருக்கென தோட்ட கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம் தொடங்கிட ஆணை தந்த தாயே! *(மேசையைத் தட்டும் ஒலி)* சாலை விபத்தினைத் தடுக்கும்பொருட்டு தகவல் கண்காணிப்புத் திட்டம், கணினிவழி நடைமுறைப்படுத்தும் திட்டத்திற்கு நல்லதோர் வரவேற்பு அம்மா!

சத்துணவு மற்றும் அங்கன்வாடிகளுக்குப் புதிய கட்டடங்கள், அரசு கேபிள் டி.வி. திட்டங்கள், வட்டியில்லா விவசாயக் கடன்கள், ஆடு, மாடு மேய்த்து வாழும் குடிகளுக்கு இலவச ஆடு, மாடு வழங்கும் திட்டம், சாலை மேம்பாட்டுத் திட்டம், புதிய வழித்தடத்தில் பேருந்துகள் இயக்கும் திட்டம், மின் உற்பத்தித் திட்டம், சுற்றுலா வளர்ச்சித் திட்டம், மீண்டும் திருக்கோயில்களில் அன்னதானத் திட்டம், கல்வி ஊக்குவிப்புத் திட்டத்தால் இடை நின்றோரை தவிர்த்திட 10, 11 ஆம் வகுப்பு பயில்வோர்க்கு ரூ.1,500 எனவும், 12 ஆம் வகுப்பு பயில்வோர்க்கு ரூ.2,000 எனவும் ஊக்கத் தொகை வழங்கும் திட்டம், அரசுக் கலைக் கல்லூரிகள் தொடங்கும் திட்டம் போன்ற எண்ணற்ற திட்டங்களை இந்த நாட்டு மக்களுக்கு அர்ப்பணிக்கின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்களே! சுகாதார விழிப்புணர்வுத் திட்டம், மருத்துவமனைகளை நவீனப்படுத்தும் திட்டம், சுத்தமான குடிநீர் எல்லோருக்கும் கிடைக்கும் திட்டம், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்களின் மேம்பாட்டுத் திட்டம், மாணவர்களின் வீட்டருகில் கல்வி கிடைத்திட பள்ளிகளின் தரம் உயர்த்தி ஆணையிட்ட திட்டம், காவலர்க்கு அரைக்கால் சட்டை நீக்கி முழுக்கால் சட்டை தந்த புரட்சித் தலைவரின் அரசியல் வாரிசாம் அம்மா உங்களின் ஆட்சியில் பள்ளி மாணவர்களுக்கு பள்ளிச் சீருடைத் திருத்தம் தந்த திட்டம்; திட்டங்கள் தந்த உங்கள் திருமுகத்தை தேசமே திரும்பி வியக்குதம்மா!

'என்று முடியும் இந்த இம்சை ஆட்சியின் அட்டகாசம்' என்று கண்ணீர் சிந்திய தமிழர் வாழ்வில் அவர்தம் நெஞ்சங்களில் நிரந்தர அரசாம், புரட்சித் தலைவரின் வாரிசாம் அம்மா உங்களின் ஆட்சி மலர்ந்தது கண்டு தமிழகமே, உலகமே வணங்குகிறது தாயே, புரட்சித் தலைவி அம்மா அவர்களே! காலம் கரையான் தின்றாலும், காட்டாற்று வெள்ளம் கரைவிஞ்சிப் பாய்ந்தாலும், சுனாமி சுழன்று பூமியைச் சிதைத்தாலும், சுற்றும் பூமி மறந்து போனாலும், சுழலும் காற்று நின்று போனாலும், உங்கள் தொண்டன் கோவி. சம்பத்குமாரின் மூச்சு உங்கள் பெயர் மட்டுமே சொல்லும் தாயே என்று கூறி, மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வாணியம்பாடி சட்டப் பேரவைத் தொகுதியில் இதுகாறும் அரசினர் தொழிற் கல்லூரி தொடங்கப்படாமல் உள்ளது. தொழிற் கல்லூரி தந்து தொகுதியை முதன்மைப்படுத்திட வேண்டுகிறேன் அம்மா. மலைவளம் சார்ந்த ஆலங்காயம் பகுதியில் மாணவர் உயர் கல்வி நலன் கருதி அரசு கலைக் கல்லூரி தந்து மலைவாழ் பகுதி மக்களின் கல்வி ஆதாரத்திற்கு உதவிட வேண்டுகிறேன் அம்மா.

பிற்பகல் 12-05

தமிழகத்திலேயே அரசு மேல்நிலைப் பள்ளி இல்லாத நகராட்சியாக வாணியம்பாடி நகராட்சி உள்ளது. எனவே, சுமார் 1.5 இலட்சம் மக்கள் தொகை கொண்ட வாணிமா நகர் பகுதியில் இதுகாறும் இல்லாத அரசினர் மேல்நிலைப் பள்ளி வழங்க ஆவன செய்ய வேண்டுகிறேன் அம்மா. மக்கள் நலனுக்கெதிராக மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் வாணியம்பாடி பேருந்து நிலையத்தைக் கிராமப் பகுதிக்கு மாற்றிட திட்டம் தீட்டினர். மக்கள் நலன் கருதி தற்போதுள்ள இடத்திலேயே பேருந்து நிலையம் இயங்கிட ஆவன செய்ய வேண்டுகிறேன் அம்மா. வாணியம்பாடி தொகுதியில் மிக பின்தங்கிய பகுதியாக இருந்து வரும் மலைக் கிராமமான நெக்கனாமலை பகுதிக்கு அடிப்படையான சாலை வசதி ஏற்படுத்தித் தர அம்மா அவர்களின் பாதம் பணிந்து வேண்டுகிறேன் அம்மா.

புரட்சித் தலைவரால் தொடங்கப்பட்ட நாட்ராம்பள்ளி ஒன்றியம், தெக்குப்பட்டில் இயங்கி வந்த சந்தன எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலை இயங்காமல் பணியாளர்கள் பணியிழந்து உள்ளனர். தொழிற்சாலையை இயக்கி அவர்தம் குடும்ப உயிர் வாழ்வாதாரத்திற்கு உதவிட வேண்டுகிறேன் அம்மா.



ஆண்டியப்பனூர் ஓடை நீர்த்தேக்க அணையில் சுமார் 100 ஏக்கர் அளவிலே மண் திட்டு உள்ளது, அந்த மண் திட்டினை அப்புறப்படுத்தி, ஆழப்படுத்தி, நீர்ப்பிடிப்பின் கொள்ளளவை அதிகப்படுத்தி, கால்வாய்களைச் சீரமைத்து, விவசாயப் பணிகளுக்கு நீராதாரம் ஏற்படுத்தித் தந்திட வேண்டுகிறேன் அம்மா. புரட்சித் தலைவர் பொன்மனச் செம்மல் மக்கள் திலகம் தந்த மதிய சத்துணவுத் திட்டம்போல் காலையில் உணவுகொள்ளாமல் பள்ளிக்கு ஓடிவரும் பச்சிளங் குழந்தைகளுக்கு காலைச் சிற்றுண்டித் திட்டம் ஒன்றை தாயே தமிழ்நாட்டிற்கு நீங்கள் தர வேண்டுமென்று பணிவோடு வேண்டுகிறேன் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

13 சட்டமன்றத் தொகுதியை உள்ளடக்கிய வேலூர் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள வாணியம்பாடி நகரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் ஒன்றை அமைத்துத் தர பணிவோடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன் அம்மா. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் வாணியம்பாடி தேவஸ்தானம் பாலாற்றின் குறுக்கே மேம்பாலம் அமைத்துத் தருவதாய் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வாக்குறுதி வழங்கியிருந்தீர்கள். அதனை நிறைவேற்றிட அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வேண்டுகிறேன் அம்மா. . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சு. குணசேகரன்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார் அவர்கள், உரையை முடியுங்கள். நன்றி சொல்லுங்கள்.

**திரு. கோவி. சம்பத்குமார்:** ஆவாரங்குப்பம்–திம்மாம்பேட்டை இடையே பாலாற்றின் குறுக்கே மக்கள் நலன் கருதி இரண்டு ஊராட்சிகளை இணைக்கும் வகையில் பாலம் ஒன்றை ஏற்படுத்தித் தந்திட பணிந்து வேண்டுகிறேன் தாயே. வாணியம்பாடி தாலுகா அலுவலகத்தை ஒட்டியுள்ள உதயேந்திரம் பேரூராட்சியைக் கடந்த மைனாரிட்டி தி.மு.க. அரசு மக்கள் நலனுக்கெதிராக 20 கிலோ மீட்டர் தூரம் உள்ள ஆம்பூர் தாலுகாவுடன் இணைத்தது. மக்கள் நலனைக் கருதி மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் அரை கிலோ மீட்டர் தூரமுள்ள வாணியம்பாடி தாலுகா அலுவலகத்துடன் இணைக்க வேண்டுமாய் மாண்புமிகு அம்மா அவர்களின் புனித பொற்பாதம் பணிந்து பணிவோடு வேண்டுகிறேன் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

வாணியம்பாடி நகரில் பல இடங்களில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் ஒருங்கிணைந்த நீதிமன்றத்தை ஒருங்கிணைத்து புதியதாக ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் கட்டித் தருமாறு அம்மா அவர்களின் பாதம் பணிந்து பணிவோடு வேண்டுகிறேன் அம்மா. வாணியம்பாடி நகரில் 1946 ஆம் ஆண்டு கடந்த 70 ஆண்டுகளுக்கு முன்பு கட்டிய கட்டடத்தில் இயங்கி வரும் தாலுகா காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தர ஆவன செய்யுமாறு பணிந்து கேட்டுக்கொள்கிறேன் அம்மா.

வாணியம்பாடி தொகுதிக்குட்பட்ட மல்லகுண்டா ஊராட்சியில் தகரகுப்பம், குருபவாணி குண்டா கிராமத்தில் உள்ள ஒதுக்கப்படாத காட்டுப் புறம்போக்கில் (U.R.F.) சுமார் 150 குடும்பங்கள் விவசாயம் செய்து வருகின்றனர். இவர்களில் 82 விவசாயிகளுக்குத் தமிழக அரசின் சார்பில் தமிழக அரசு சிறப்பு ஒதுக்கீட்டில், . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சு. குணசேகரன்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார் அவர்கள். தொகுதி சம்பந்தப்பட்ட கோரிக்கையை எழுதிக் கொடுங்கள். அவைக் குறிப்பில் பதிவு செய்யப்படும் என்று பலமுறை சொல்லியிருக்கிறோம். அதனால் எழுதிக் கொடுங்கள். நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**திரு. கோவி. சம்பத்குமார்:** இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. ஆனால், நிலப் பட்டா வழங்கப்படவில்லை. மேற்கண்ட நிலத்திற்கு பட்டா வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன் அம்மா. மல்லகுண்டா ஊராட்சியில், கோயான்கொல்லை கிராமத்தில் 1,000 ஏக்கர் மேய்ச்சல் தரை நிலத்தில் 300 குடும்பங்கள் சுமார் 50 ஆண்டுகளாக வாழ்ந்து விவசாயம் செய்து வருகின்றனர். இவர்களுக்கு நிலப் பட்டா வழங்கிட ஆவன செய்யுமாறு வேண்டுகிறேன் அம்மா.

சிறியோனை, எளியோனை, ஏழ்மையாளனை இந்த நாட்டுக்கு அறிமுகப்படுத்திய என் அன்னையே! நீங்கள் காட்டும் வழியில் உங்கள் பிள்ளை கோவி. சம்பத்குமார் ஆகிய நானும், எனது குடும்பமும், எனது சந்ததியும், வாணியம்பாடி தொகுதி மக்களும் என்றென்றும் நன்றியுடன் இருப்போம் என்று நாவடக்கத்தோடு சொல்லி, உடல் மண்ணுக்கு, உயிர் புரட்சித் தலைவி அம்மாவிற்கே என்று கூறி, உங்கள் மலர்ப் பாதங்களில் என் கோரிக்கைகளைப் பணிவுடன் சமர்ப்பிக்கின்றேன் அம்மா! நன்றி, வணக்கம்.



பிற்பகல் 12–10

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சு. குணசேகரன்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜாண் ஜேக்கப் அவர்கள்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மக்கள் நலன் காக்கும் சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை மானியக் கோரிக்கையில் கலந்துகொண்டு தொகுதி மக்களின் எண்ணங்களையும், ஏக்கங்களையும், உள்ள உணர்வுகளையும் இங்கே எடுத்துரைப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

சமூக நலன் என்கிறபொழுது உலகத்திலே உள்ள ஓர் உன்னத திட்டமான தொட்டில் குழந்தைகள் திட்டத்தை நான் நினைத்துப் பார்க்கிறேன். நான் இன்று சட்டமன்றத்தில் எதிரணியில் இருந்து பேசுவதாக இருந்தாலும் மனசாட்சிப்படி பேசுவதாக இருந்தால் இதை மனம் திறந்து பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்தோடு இணைந்த இன்னொரு கருத்தையும் அரசின் பார்வைக்குக் கொண்டு வருகிறேன்.

குறிப்பாக அளவோடு பெற்று, வளமோடு வாழுங்கள் என அரசு கூறுகிறது. ஆனால், வேதனையான விஷயம் என்னவென்றால் அளவே இல்லை. ஆம், ஏராளமான குடும்பங்களில் குழந்தைகளே இல்லை. இதற்காக கொலைகளும், தற்கொலைகளும், விவாகரத்துகளும் நடக்கின்றன. நான் பாலப்பள்ளம் பேரூராட்சித் தலைவராகப் பொறுப்பேற்ற நாள் முதல் பல குடும்பங்களில் நடைபெறும் விவாகரத்துப் பிரச்சினைகள் உட்பட பல பிரச்சினைகளில் சமரசமாகச் செல்ல, ஆலோசனைகள் கூறியிருக்கிறேன். கணவன், மனைவி பிரச்சினைகளில் பெரும்பாலான பிரச்சினைகளில் முதலிடத்தில் இருப்பது குழந்தையின்மை என்ற தாம்பத்திய பிரச்சினைதான்.

நான் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் கேட்டுக்கொள்வதெல்லாம், இந்தத் தொட்டில் குழந்தைகள் திட்டத்தில் கிடைக்கின்ற குழந்தைகளை, குழந்தைகள் இல்லாத தம்பதிகள் விரும்பினால், உரிய வாக்குறுதிகள், உத்தரவாதத்தைப் பெற்றுக்கொண்டு அவர்களிடம் வளர்க்கக் கொடுக்கலாம். இதில் தவறுகள் நடந்துவிடாமல் தடுக்கவும் உரிய விதிமுறைகளை உருவாக்கி குழந்தைகளை வளர்க்கக் கொடுக்கலம் என்று தெரிவிக்க விரும்புகிறேன். குறிப்பாக, பெற்றோரின் சொத்துக்கள் அனைத்தும் இக்குழந்தைகளுக்கே சொந்தம் என்ற விதியையும் உருவாக்கலாம்.

குழந்தைகள் வாரிசு இல்லாமல் வாடுகின்ற பல குடும்பங்களின் கண்ணீரும் தீரும், விவாகரத்துகளும் குறையும்.

சமூக நலத் துறையில் பணியாற்றும் சில பணியாளர்கள் சமூக அக்கறை இல்லாதவர்கள் என்ற குற்றச்சாட்டு மக்களிடம் உள்ளது. இது எப்படியென்றால், திருமண உதவித் திட்டம், கர்ப்பிணிப் பெண்கள் உதவித் திட்டம், விதவைகள், ஆதரவற்றோர் உதவித் திட்டம் அல்லது எந்தத் திட்டம் என்றாலும், இத்துறை ஊழியர்கள் பலர் லஞ்சம் பெறுவதைத் தங்களது உரிமையாகக் கொண்டுள்ளனர். மக்கள் அதுபற்றி இவர்களிடம் கேட்டால், நாங்கள் நினைத்தால்தான் உங்களுக்கு அரசின் உதவி கிடைக்கும் என்கிறார்கள். அவர்களிடம் முரண்டு செய்தால் அந்தச் சான்று, இந்தச் சான்று என்று கேட்டு அலைக்கழிக்கிறார்கள். அரசு உதவிகளும் கிடைக்குமோ, கிடைக்காதோ என மக்கள் பயப்படுகிறார்கள். தாங்கள் ஊதியம் பெறுவதை மறந்துவிட்டு லஞ்சம் பெறுவதை உரிமையாக்கி விடுகிறார்கள். வீடுகளைப் பார்க்க வருகிறவர்களும்கூட லஞ்சம் கொடுத்தால்தான் சிரித்துவிட்டு போகிறார்களாம். அரசு உதவிகளை இவர்களே சொந்தப் பணமாகக் கொடுப்பதுபோன்று பாவனை செய்கிறார்கள். அரசிடம் நான் கேட்டுக்கொள்வதெல்லாம் இதற்குரிய அலுவலகங்களில் இரகசியமாக புகார்கள் தெரிவிக்க வேண்டிய முகவரிகள் மற்றும் தொலைபேசி எண்களை அலுவலகங்களில் அனைவருக்கும் தெரியும் வகையில் எழுதி வைக்க வேண்டும். இத்துறையில் சேவை மனப்பான்மையோடு பணிபுரியும் ஏராளமான நல்லோர்களும் இருக்கிறார்கள். ஆனால் களைகள் வளர்ந்து பயிரை அழிப்பதுபோல் உள்ளது.

இது ஒருபுறமிருக்க, இன்னொருபுறம் போதிய அலுவலர்கள் இல்லாமையால் இத்துறை திணறிக்கொண்டிருக்கிறது. கடந்த. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சு. குணசேகரன்):** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டு கருத்துகளைச் சொன்னார்கள். ஒன்று மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டுவந்த சீரிய திட்டமான



'தொட்டில் குழந்தைகள் திட்டம்'. நிறைய தம்பதியர்களுக்குக் குழந்தையே இல்லை. அப்படிப்பட்டவர்கள் குழந்தைகள் கேட்கும்போது கொடுக்கப்பட வேண்டும் என்று சொன்னார்கள். இந்தத் திட்டம் கொண்டு வந்ததற்குக் காரணம், பெற்ற குழந்தையை, ரோட்டிலே விடப்பட்டு செல்லப்படுகின்ற அந்தக் குழந்தைகள், பெண் குழந்தைகள், அவர்கள் அவல நிலைக்குத் தள்ளப்படக்கூடாது என்பதற்காகத்தான் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள்.

அடுத்ததாக, சமூக நலத் துறையிலே பல்வேறு ஊழல் மலிந்து இருக்கிறது என்று சொன்னார்கள். அது கடந்த கால ஆட்சியில் இருந்தது. இந்த ஆட்சியில் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்தத் திட்டங்களுக்காக, முறையாக யார், யார் இதைப் பயன்படுத்திக்கொள்ளலாம், யார், யார் பெறலாம் என்பதை வரையறுத்து இருக்கிறார்கள். அந்த வரையறுப்பின் அடிப்படையிலே நிச்சயமாக அனைவருக்கும் இந்தத் திட்டம் சென்றடையும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சு. குணசேகரன்):** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தொட்டில் குழந்தைகள் திட்டத்தின்மூலம் தத்தெடுப்புத் திட்டமும் இருக்கிறது. தத்தெடுப்பவர்கள் முறையாக விண்ணப்பித்து, அவர்கள் தத்தெடுத்துக்கொள்வதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் வழிவகை செய்துள்ளார்கள். அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தங்கள் பகுதியிலுள்ள குழந்தைகள் இல்லாத தம்பதியர்களிடம் தத்தெடுத்துக்கொள்வதற்கு ஆலோசனை கூறுமாறு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சமூக நலத் துறையில் இதுவரை லஞ்சம், லாவண்யம் இல்லாத ஓர் அரசாகத்தான் கடந்த 100 நாட்களாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அப்படி ஏதாவது தவறு நடைபெற்று, அதனை அரசின் கவனத்திற்குக் கொண்டுவரும்பட்சத்தில், உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த அவையின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-15

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. சத்துணவுத் துறையில் பணியாற்றும் அனைவரையும் முழுநேரப் பணியாளர்களாக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சத்துணவு சமையலுக்குத் தேவையான எரிபொருள், காய்கறி செலவுகள் வேகமாக அதிகரித்து வருகின்றன. எனவே, இவற்றிற்கு அரசு வழங்கும் தொகையை அதிகரிக்க வேண்டும். சத்துணவுத் துறையில் பணியாற்றும் சமையலர் மிகக் குறைந்த ஊதியமே பெற்று வருகிறார்கள். சத்துணவு சமையல் அறைகளில் பயன்படுத்தும் விறகுகளைத் தவிர்த்துவிட்டு இலவச சமையல் கியாஸ் வழங்க வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

சத்துணவு சாப்பிட விரும்பும் மாணவர்கள், வறுமைக்கோட்டுக்குக்கீழ் வாழும் குடும்பத்திலுள்ள குழந்தைகளுக்கு அல்லது கட்டாயமாக விரும்பும் குழந்தைகளுக்கு மட்டுமே வழங்க வேண்டும். காரணம் சில பள்ளிக்கூடங்களில் குழந்தைகளுக்கு மதிய உணவை பெற்றோரே கொடுத்து அனுப்புகின்றனர். ** தமிழகத்தில் பல மாவட்டங்களில், சில இடங்களில் உள்ளன. இதனால் அரசின் நோக்கம் மறுக்கப்படுகிறது. சில கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்தினால் அரசின் சலுகைகள் தேவையானவர்களுக்கு மட்டும் கிடைக்கும். பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு அனைவருக்கும் சத்துணவு வேண்டும் என்று கேட்டாலும் அதைக் கொடுப்பதில் தவறில்லை. வீணாகப் போய்விடக்கூடாது என்பது மட்டுமே எனது கருத்து என்பதை இம்மாமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

**மாண்புமிகு திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு சாப்பிடும் பிள்ளைகளை பள்ளிக்கூடத்தில்தான் சத்துணவை சாப்பிடச் சொல்லியிருக்கிறார்கள். வீட்டிற்கு எடுத்துக்கொண்டு போகச் சொல்லவில்லை. வெளியில் எடுத்துச் செல்வது முறை கிடையாது. பள்ளிக்கூடத்தில்தான் சாப்பிடச் சொல்லியிருக்கிறார்கள். வீட்டிற்கு எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவதில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜாண் ஜேக்கப் அவர்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** எனது கிள்ளியூர் சட்டமன்றத் தொகுதியில் ஒரு அரசு குழந்தைகள் காப்பகம் தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், அரசுக் காப்பகங்களில் உள்ள வார்டன்கள் அவ்வப்போது வந்துசெல்லும் விருந்தினர்கள்போல செயல்படுகின்றனர். எனவே, அதிகாரிகள் இதில் தீவிர கவனம் செலுத்த வேண்டுமென்றும் தகுந்த காரணமின்றி ஒழுங்காகப் பணிக்கு வராதவர்கள்மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். மேலும், அரசுக் காப்பகங்களில் உள்ள குழந்தைகளைக்கொண்டே அங்குள்ள பல கடினமான பணிகளைச் செய்கின்றனர். குழந்தைகளின் உணவுக்காக வழங்கப்படும் பொருட்கள் கடைகளுக்குக் கொண்டுபோய் விற்கப்படுகின்றன. இந்நிலை மாறவும், அரசு வழங்குகின்ற உணவுப் பொருட்கள் ஒழுங்காகக் கிடைக்கிறதா என்பதை ஆய்வு செய்யவும், குழந்தைகளை அழைத்துக் கேட்டு குறைகளை நிவர்த்தி செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். அரசுக் காப்பகங்களில் பல குறைகள் மிஞ்சிக் கிடக்கின்றன.

பாரதத்தின் தென்கோடி என்றழைக்கப்படும் கன்னியாகுமரி தொகுதி, இன்று சர்வதேச சுற்றுலாத் தலமாக விளங்குகிறது. பல மாநிலங்களில் இருந்தும், பல நாடுகளில் இருந்தும் ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் தினமும் வந்துசெல்கின்றனர். குறிப்பாக, வடநாட்டில் இருந்து ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர். இங்குவரும் வட இந்தியப் பயணிகள் பலர் மன நோயாளிகளை காரிலோ, இரயிலிலோ அழைத்துவந்து இங்கேயே விட்டுவிட்டுச் சென்றுவிடுகின்றனர். இந்த மனநோயாளிகள் குமரி மாவட்டம் முழுவதும் ஆங்காங்கே சென்று உணவுக்காக கையேந்தும் நிலை ஏற்பட்டுள்ளது. இவர்களில் சிலருக்கு மனநோய் தெளிந்தாலும் தமிழ்மொழி தெரியாததால் உணவுக்காக இவர்கள் பஸ் நிலையங்களிலும் சாலை ஓரங்களிலும் படுத்துக் கிடக்கின்றனர். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனநலம் பாதிக்கப்பட்டவர்களை உரிய மருத்துவமனைகளில் சேர்க்கும் தொண்டு நிறுவனங்களுக்கு ஊக்கத் தொகையாக ரூபாய் 1,500 வழங்கப்படுகிறது. அவர்களின் உடல் முழுவதையும் சுத்தம் செய்து, அவர்களுக்கு முடித்திருத்தம் செய்து, மாஜிஸ்ட்ரேட்டிடம் ஒப்படைத்து, அதற்குப் பிறகு மனநலக் காப்பகத்தில் ஒப்படைக்கும் பணியைச் செய்யும் தொண்டு நிறுவனங்கள் எல்லாம் இருக்கின்றன. இதுகுறித்து மாண்புமிகு

உறுப்பினர் அவர்கள் வேறு ஏதாவது கூறினால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜாண் ஜேக்கப் அவர்கள்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. மனிதாபிமானமற்ற கொடுமையான இச்செயல்களில் ஈடுபடுவோரைத் தண்டிக்க நமது சட்டத்தில் இடம் உண்டா என்பது பற்றி நாம் சிந்திக்க வேண்டும். எனவே, குமரி மாவட்டத்தில் ஒரு மனநோயாளிகள் பாதுகாப்பு இல்லத்தையும் அரசே தொடங்க வேண்டும். நான் ஏன் இதுபற்றிக் கூறுகிறேன் என்றால் இவ்வாறு வரும் பெண் மன நோயாளிகளில் கர்ப்பிணி மனநோயாளிகள்கூட சில ஆண்டுகளுக்கு முன்னர் இருந்திருக்கின்றனர். இதிலிருந்து இதன் தாக்கத்தை அறிந்துகொள்ளலாம். இதன் சோகத்தை இதற்கு மேல் இங்கே விளக்க வேண்டாமென்று கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** இதுபோல் தன் உயிரைவிட அதிகமாக நேசித்து 10 மாதம் சுமந்து பாலூட்டி, சீராட்டி வளர்க்கின்ற பெற்றோர்களைக் குழந்தைகள் வயது முதிர்ந்த காலத்தில் கவனிக்காத சூழ்நிலை வேகமாக உருவாகி வருகிறது. எனவே, எல்லா மாவட்டங்களிலும் குறைந்தபட்சம் ஒரு முதியோர் இல்லத்தையாவது அரசு தொடங்க வேண்டும். இதிலும் திருமணமாகாத முதியோர்கள் அல்லது துணையை இழந்த முதியோர்கள் பலர் படுகின்ற வேதனைகள் கொஞ்ச நஞ்சமல்ல. ஏன், இன்னும் வசதிபடைத்த வீடுகளிலும் இன்று இதுதான் நடக்கிறது.

பிற்பகல் 12-20

**மாண்புமிகு திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல், இப்போது ஒவ்வொரு வட்டாரத்திற்கும் முதியோர் இல்லம் மட்டுமல்லாமல் ஆதரவற்ற குழந்தைகளையும் சேர்த்து, ஒவ்வொரு வட்டாரத்திற்கும் குழந்தைகள் காப்பகம் மற்றும் முதியோர் இல்லத்தையும், அத்துடன் பாதிக்கப்பட்ட மாற்றுத்



திறனாளிகளையும் சேர்த்து ஒரு காப்பகம் உருவாக்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்துள்ளார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. இன்னும் சில வயதினர்களிடையே கேட்டால் பல வசதிபடைத்த வீடுகளிலும் இதுதான் நடக்கிறது. சில வயதானவர்களிடம் கேட்டால் சொல்லுவார்கள், மகன் அமெரிக்காவில் இருக்கிறான், மகள் லண்டனில் இருக்கிறாள், நான் முதியோர் இல்லத்தில் இருக்கிறேன் என்று சொல்லுவார்கள். இத்தகைய வயதானவர்கள் தங்கள் சொத்துக்களை முதியோர் இல்லத்திற்கு வழங்கவும் தயாராக இருக்கிறார்கள் என்பதை மிகுந்த வேதனையோடு இங்கே சொல்ல விரும்புகிறேன்.

எனவே, அரசுக் குழந்தைகள் காப்பகத்தின் தேவையும், அரசு முதியோர் இல்லங்களின் தேவையும் இத்துறையின் இரு கண்களாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தீவிர கவனம் செலுத்தி தொகுதியில் இவற்றை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், பெண்கள் சமூக நலன் பற்றிய கருத்துகளையும் அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஒரு நாட்டில் பெண்கள் எப்படி நடத்தப்படுகிறார்கள் என்பதைக்கொண்டு அந்த நாட்டின் நிலைமையைக் கூறிவிட முடியும் என்பார் ஜவஹர்லால் நேரு. பெண்களின் முன்னேற்றமே நாட்டின் வளர்ச்சிக்கு அடிப்படை என்பதே இதன் சாராம்சம். இந்த அடிப்படையில் அண்மையில் வெளியான மக்கள்தொகைக் கணக்கெடுப்புப் புள்ளிவிவரங்களைப் பார்த்தால் நம் நாடு எதிர்பார்த்த அளவுக்கு முன்னேற்றம் அடையவில்லை என்றே தோன்றுகிறது. நள்ளிரவில் ஒரு பெண் தனியாக தெருவில் பாதுகாப்புடன் நடந்துசெல்லும் நாளே நமக்கு உண்மையான விடுதலை கிடைத்த நாளாகும் என்பதே காந்திஜியின் கூற்று.

இந்தியாவில் இன்னும் அந்த நிலைமை ஏற்படவில்லை. இந்த இலக்கை நோக்கி நாம் பயணிக்கிறோமா என்பதே தெரியவில்லை. இரவு வேண்டாம் பகலிலே . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் சொன்னது சென்ற ஆட்சியில் வேண்டுமானால் இருந்திருக்கலாம். மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு பெண்கள் நகையைப் போட்டுக்கொண்டு துணிச்சலாகப் போகலாம். அந்தளவுக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய சுண்டு விரலில் காவல் துறை இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குப் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. இரவு வேண்டாம், பகலிலேகூட நமது பெண்கள் தனியாக செல்வது சில நேரங்களில் இன்னமும் ஆபத்தாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள். . . (குறுக்கீடு) மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மனம்போன போக்கில் பேசிவிட்டார்கள். ஏன் என்று சொன்னால் வருவாய்த் துறைமூலம் முதியோர் உதவித் தொகை வாங்குகின்றபோது அது ஒரு லஞ்சத் துறையாகும், சமூக நலத் துறை ஒரு லஞ்சத் துறையாக இருக்கின்றது என்று சொல்லி இருக்கின்றார். பலமுறை இந்த அவையிலேயே தெளிவான விளக்கங்களை நாம் கொடுத்திருக்கின்றோம். எந்த இடத்திலேயாவது குறிப்பிட்டு அப்படி யாராவது இருப்பார்கள் என்றால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லியிருக்கின்றோம்.

அதுமட்டுமல்ல, முதியோர் உதவித் தொகை சரியாகக் கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான் கடந்த 2-9-2011 அன்று மாண்புமிகு அம்மா அவர்கள் ஸ்மார்ட் கார்டு திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள் என்பதும் உங்களுக்கு நன்றாகத் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) அடுத்ததாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜாண் ஜேக்கப்



அவர்கள் சத்துணவுத் திட்டத்தைப் பற்றி பேசுகின்றபோது பெற்றோர்கள் மாணவர்களுக்கு வீட்டிலிருந்து உணவைக் கொடுத்துவிடுகிறார்கள். ** என்று சொன்னார்கள். அந்த வார்த்தைகள் சரியான வார்த்தைகளல்ல. எனவே, அவற்றை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடு) நன்றி சொல்லி உரையை முடியுங்கள். (குறுக்கீடு) பிரச்சினை வேண்டாம். நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை மற்றும் மாற்றுத் திறனாளிகள் துறை மானியக் கோரிக்கைகள்மீது புதிய தமிழகம் கட்சியினுடைய கருத்துகளைப் பதிவு செய்வதற்கு வாய்ப்புக் கொடுத்த மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இதிலே இரண்டு, மூன்று முக்கியமான விஷயங்களைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். 20 ஆம் நூற்றாண்டில் சிறிய அளவில் பெருந்தலைவர் காமராசர் அவர்களுடைய காலத்தில் இருந்த மதிய உணவுத் திட்டத்தை அனைத்து பள்ளி மாணவர்களுக்கும் விரிவுபடுத்தி முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் புரட்சி செய்தார்கள். 1991 முதல் 1996 வரையிலும் இன்றைய முதல்வர் அன்றைக்கு முதல்வராக இருந்தபோது, வடமாநிலங்களில் வழக்கமாக இருந்த, தமிழகத்தின் பல மாவட்டங்களிலே அது ஒரு பெரிய வியாதியாக தருமபுரி, கிருஷ்ணகிரி மற்றும் தென்மாவட்டங்களிலிருந்த பெண் சிசுக்கொலை

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

என்ற அந்த ஒரு சமூக இழிநிலையை அறிந்து பெண் சிசுக்கொலையைத் தடுப்பதற்காக ஒரு கடுமையான நடவடிக்கை எடுத்து வரலாறு படைத்தார்கள்.

பிற்பகல் 12-25

அதேபோல, இன்றைய ஆட்சியில் முதியோர், ஊனமுற்றோர், கணவனால் கைவிடப்பட்டோர், விதவைகளுடைய நலன் கருதி, அவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த உதவித் தொகையை இப்பொழுது ரூபாய் 500-லிருந்து 1,000 ரூபாயாக உயர்த்தி இருக்கிறார்கள். ஆனால் இந்த உதவித் தொகையைப் பெறுவதிலே உள்ள சிரமங்களை நாங்கள் ஏற்கெனவே பல முறை இந்த அவையில் சுட்டிக்காட்டியதில், நம்முடைய அரசினுடைய சார்பாக மாண்புமிகு முதல்வர் அவர்களே இதற்குத் தமிழக அரசினுடைய சார்பாக வறுமைக்கோட்டிற்குக்கீழே உள்ளவர்கள் பட்டியல் என்று ஒன்றுமில்லை என்று அறிவித்திருக்கிறார்கள். இருந்தாலும்கூட, இங்கே கொடுத்திருக்கக்கூடிய கொள்கை விளக்கக் குறிப்புகளிலே இந்திரா காந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத் திட்டத்தின்கீழ் உதவித் தொகை பெறுவதற்கு வறுமைக்கோட்டிற்குக்கீழே உள்ளவர்களுக்குத்தான் என்று போடப்பட்டிருக்கிறது. எனவே, மீண்டும் அந்த வறுமைக்கோடு என்று சொல்லப்பட்டிருப்பது மிகவும் சிக்கலான பிரச்சினை. எனவே, இதுகுறித்து ஒரு தெளிவான அறிக்கையை நம்முடைய அமைச்சகத்தின் வாயிலாக அறிவிப்பது ஒன்றுதான் முதியோர்கள். . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கம் கொடுக்கிற இந்திரா காந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத் திட்டத்திலேதான் வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ள குடும்பத்தைச் சேர்ந்த 60 வயதுக்கு மேற்பட்ட வயதுடைய முதியவர்களாக இருத்தல் வேண்டும். 18 வயது நிரம்பிய ஆண் வாரிசு இருந்தாலும் ஓய்வூதியம் வழங்கப்படும் என்று இருக்கிறது. ஆனால் மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்திருக்கும் திட்டங்களுக்கு வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ள பட்டியல் என்பதே கிடையாது. அதைத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். தமிழகத்தைப் பொறுத்தவரை, வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ள பட்டியலே இல்லை என்றுதான் மாண்புமிகு அம்மா



அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். பயனாளிகளுடைய தகுதிக்கேற்ப, அவர்கள் எளிமையானவர்களாக, எளியோர்களாக இருந்தால் அவர்களுக்கு ஓய்வூதியத் தொகை வழங்கப்படும் என்றுதான் மாண்புமிகு அம்மா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ளவர்கள் என்று கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை. ஆனால் மத்திய அரசாங்கம் கொடுக்கிற உதவித் தொகையைப் பொறுத்தவரையில், இந்திரா காந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத் திட்டம், இந்திரா காந்தி மாற்றுத் திறனாளிகள் ஓய்வூதிய தேசியத் திட்டம், இந்திரா காந்தி விதவைகள் ஓய்வூதிய தேசியத் திட்டம் ஆகிய இந்த மூன்றின்கீழ் வழங்கப்படும் உதவித் தொகைதான் மத்திய அரசின் வறுமைக்கோட்டிற்குக்கீழே உள்ளவர்கள் பட்டியலை அடிப்படையாக வைத்து வழங்குகிறார்கள். ஆனால், மாநில அரசாங்கம் கொடுக்கிற ஓய்வூதியத் திட்டங்களைப் பொறுத்தவரை வறுமைக்கோட்டிற்குக்கீழுள்ள பட்டியலில் உள்ளவர்களுக்கு என்று எதுவும் இல்லை என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்படி என்று சொன்னால், கொள்கை விளக்கக் குறிப்பு புத்தகத்தில் இந்திரா காந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத் திட்டத்தின்கீழ் 30–6–2011 வரையில் பயன் பெற்றவர்களின் எண்ணிக்கை 10 இலட்சத்து ஓராயிரத்து 137 பேர் என்று போடப்பட்டுள்ளது. இது வேறு, தமிழ்நாடு அரசினுடைய முதியோர் உதவித் திட்டம் என்பது வேறா என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும் என்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ளவர்கள் பட்டியல் என்று இல்லை என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்ததற்குப் பிறகு நீங்கள் அதையே திருப்பி, திருப்பிச் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். இப்போது முதியோர் உதவித் தொகையாக இருந்தாலும் சரி,

விதவைகள் உதவித் தொகையாக இருந்தாலும் சரி, அரசு எடுக்கின்ற முடிவுகள், மாவட்ட ஆட்சித் தலைவர் எடுக்கின்ற முடிவுகள், அங்கே இருக்கின்ற கோட்டாட்சித் தலைவர் எடுக்கின்ற முடிவுகள் வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ளவர்கள் என்ற பட்டியலை வைத்து எடுக்கப்படுவதில்லை, அது இல்லாமலேயே ஏழைகளாக இருக்கின்றவர்கள், 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நீங்கள் அறிவீர்கள். எனவே, திருப்பித் திருப்பி அதையே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிக் கொண்டிருப்பதை மாற்றி வேறு கருத்துகளைச் சொல்ல வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போதே நான் தெளிவாகச் சொன்னேன். நீங்கள் கேட்கின்ற 10 இலட்சத்து ஓராயிரத்து 137 என்பது, மத்திய அரசு மாநில அரசுக்கு என்று ஒரு கணக்கை நிர்ணயித்திருக்கின்றார்கள். அதாவது 65 வயது நிரம்பியவர்கள் என்று 10 இலட்சத்து ஓராயிரம் என்று கணக்கிட்டு தமிழகத்திற்கு ஒதுக்கியிருக்கின்றார்கள். அந்தப் பட்டியல்படிதான் நீங்கள் கொடுக்க வேண்டும், அவர்கள் கொடுக்கின்ற அந்த 200 ரூபாய் அந்த 10 இலட்சத்து ஓராயிரத்து 137 பேருக்குத்தான் பொருந்தும். இப்போது 65 வயதிலிருந்து 60 வயதாகக் குறைத்ததற்குப் பின்னால் 5 இலட்சத்து 36 ஆயிரம் பேர் அதிகமாக்கப்பட்டிருக்கிறார்கள். அதுதான் மத்திய அரசு கொடுத்திருக்கக்கூடிய கணக்கேயொழிய, அதற்கு மேல் இருப்பவர்களுக்கு எல்லாம் மாண்புமிகு அம்மா அவர்கள், இதைப் போன்ற சங்கடத்திற்கு எல்லாம் இடம் கொடுக்காமல் உழவர் பாதுகாப்புத் திட்டத்திலே அனைவரும் பலன் பெற வேண்டும் என்பதற்காகத்தான் அதுமாதிரி ஒரு திட்டத்தைக் கொண்டு வந்திருக்கின்றார்கள். இந்தத் திட்டம் முழுக்க, முழுக்க மத்திய அரசினால் கொண்டு வரப்பட்ட திட்டம்.



அவர்கள் கொடுப்பது 200 ரூபாய் என்பதை நான் தெளிவாகச் சொல்லியிருக்கின்றேன். அதுதான் நீங்கள் கேட்பது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், கொஞ்சம் விரைவாகப் பேசி முடியுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** இந்தத் தெளிவைப் பெறுவதற்காகத்தான் கேட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், குறுக்கீடு இல்லாமல் சீக்கிரம் உரையை முடியுங்கள்.

பிற்பகல் 12-30

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** அடுத்தது, இந்த சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் தத்தெடுப்பது மிக முக்கியமானது. அதாவது சுனாமியால் பாதிக்கப்பட்டோர், கணவனால் கைவிடப்பட்டோர் மற்றும் பல்வேறு வழிகளிலே வரக்கூடிய குழந்தைகளைத் தத்தெடுக்கிறார்கள். ஆனால், அந்த தத்தெடுப்பிலே பலமுறைகேடுகள் நடக்கின்றன. தத்தெடுக்கப்படும் குழந்தைகள் முறையாகப் பராமரிக்கப்படாமல் ஒரு காலகட்டத்திலே அவர்கள் பிச்சைக்காரர்களாக ஆக்கப்படக்கூடிய ஒரு நிலை இருக்கிறது. எனவே, அந்தச் சட்டங்களை மிகக் கடுமையாக்கி தத்தெடுக்கிறபோதே அந்தக் குழந்தைகளுடைய எதிர்காலத்திற்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது என்பதை ஊர்ஜிதம் செய்யாமல் தொண்டு நிறுவனங்களுக்கு அந்த வாய்ப்பைக் கொடுத்துவிடக் கூடாது. வெளிநாட்டைச் சேர்ந்த தொண்டு நிறுவனங்களுக்குக்கூட தத்தெடுப்பதற்காக வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே, இங்கேயிருந்து அங்கே கொண்டு செல்லப்பட்ட அவர்கள் குழந்தைகளாக நடத்தப்படுகிறார்களா அல்லது வீட்டு வேலைக்குப் பயன்படுத்தப்படுகிறார்களா என்பதையெல்லாம் கண்காணிக்கவில்லை என்று சொன்னால், அது ஒரு சமூகக் கொடுமையாகிவிடும். எனவே, இதில் அரசு கவனமாக இருக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதோடு, இந்த சமூக நலத் துறை மற்றும் சத்துணவுத் திட்டத்தில், ஏறக்குறைய ஒன்றரை இலட்சம் முதல் இரண்டு இலட்சம் பேர் சத்துணவு ஊழியர்களாக, சமையல்காரர்களாக, உதவியாளர்களாக, அங்கன்வாடிப் பணியாளர்களாக ஏறக்குறைய 25 முதல் 30

ஆண்டுகளாகப் பணியாற்றுகிறார்கள். வழக்கமாக இரண்டு ஆண்டுகள் தொடர்ந்து ஒரு துறையிலே பணியாற்றினாலே, அவர்களை நிரந்தரமாக்க வேண்டும் என்பது விதி. எனவே, 20, 30 ஆண்டுகளாகப் பணியாற்றிய அவர்களை நிரந்தரமாக்காமல் இருக்கக் கூடாது. எனவே, அவர்களை அரசு ஊழியர்களாக ஆக்குவதற்குண்டான நடவடிக்கையை இன்றைய ஆட்சியிலே எடுக்க வேண்டுமென்பது என்னுடைய வேண்டுகோள்.

அடுத்து, மாற்றுத் திறனாளிகளுடைய விஷயத்தில், கேரளாவில் 40 சதவிகிதத்திற்கும் மேல் இருக்கக்கூடியவர்களுக்கே எல்லாவிதமான சலுகைகளையும் வழங்குகிறார்கள், ஓய்வூதியம் வழங்குகிறார்கள். ஆனால் தமிழ்நாட்டில், 80 சதவிகிதத்திற்கு மேலாக நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. எனவே, அந்த விதி தளர்த்தப்பட வேண்டுமென்பது என்னுடைய வேண்டுகோள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கம் சொல்வதுதான் 80 சதவிகிதம். வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள் list-ல் இருக்க வேண்டுமென்று இருக்கிறது. ஆனால், நம்முடைய அரசு 60 சதவிகிதம் என்று நிர்ணயித்திருக்கிறது. வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள பட்டியலில் பெயர் இருக்க வேண்டும் என்பது கிடையாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள். இன்னும் 5 பேர் பேசவேண்டியிருக்கிறது.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றிரண்டு முக்கியமான விஷயங்களைக் கூற விரும்புகிறேன். காலையிலே, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் தங்களுடைய விளக்கத்தை அளித்தார்கள். அப்போது கேள்வி எழுப்ப முடியவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மிக முக்கியமாக தாழ்த்தப்பட்ட மக்களுடைய உயர் கல்வியிலே மிகவும் ஆர்வம் செலுத்துகிறார்கள். இந்த அறிக்கையிலேகூட கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், தமிழகத்தில்



இருக்கக்கூடிய எண்ணற்ற சுயநிதிப் பொறியியல் கல்லூரிகளில், ஒவ்வொரு ஆண்டும் 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களுக்கான இடங்கள், நிரப்பப்படாமல் அப்படியே வீணாகப்போகின்றன. இந்த ஆண்டுகூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 180 கோடி ரூபாயை தாழ்த்தப்பட்ட மக்களுடைய உயர் கல்விக்கு பெருந்தன்மையோடு ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால், அரசினுடைய ஒரு உத்தரவு, அதாவது 30-3-2000-ல் அரசு ஆணை எண் 26-ல் தனியார் சுயநிதிக் கல்லூரிகள் அரசினுடைய இடங்கள் அதாவது free seats-மட்டும்தான் அரசு ஏற்றுக்கொள்ளும் என்று இருக்கிறது. அதன் காரணமாக அரசு நினைத்தாலும்கூட அவர்களுக்கு உதவ முடியாது. அதை ரத்து செய்துவிட்டு, வருங்காலங்களில் 25 சதவிகிதம் பேருக்கு உயர் கல்வி கொடுக்க வேண்டுமென்று சொன்னால், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அந்த நிதியை அரசே கொடுத்தால் மட்டும்தான் அதைப் பூர்த்தி செய்ய முடியும். எனவே, இதை தமிழ்நாடு முதலமைச்சரிடத்தில் . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள், வறுமைக் கோட்டிற்குக்கீழே உள்ளவர்கள், நலிந்தவர்கள் உயர் கல்வி பெற வேண்டுமென்ற நோக்கத்தோடுதான், இவர்களெல்லாம் பாதிக்கக்கூடாது என்பதற்காகத்தான் டில்லிக்குச் சென்று நம்முடைய பாரதப் பிரதமரிடம் ஒரு Memorandum கொடுத்தார்கள். ஆனால், அவர் கண்டுகொள்ளவில்லை. இருந்தாலும்கூட, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் உரிய நேரத்தில் நடவடிக்கை எடுத்து, என்றைக்கு அந்தப் பொறியியல் கல்லூரியினுடைய சேர்க்கை நாள் தொடங்குகிறதோ, அன்றைக்கே கோர்ட்டுக்குச் சென்று தடையாணை பெற்று, அந்தத் தாழ்த்தப்பட்ட மாணவனுடைய தகுதி மதிப்பெண்கள் அடிப்படையிலே அவர்கள் சேர்வதற்கு, உயர்க் கல்வி அடைய வேண்டுமென்ற நோக்கத்தோடுதான், தடையாணை பெற்று அந்த மாணவர்களைப் பாதுகாத்த, ஒப்பற்றத் தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொறியியல் கல்லூரிகளிலே காலியிடங்கள் இருக்கின்றன என்று சொன்னார்கள். இந்த ஆண்டு

பொறியியல் கல்லூரிகளில், ஒப்படைக்கப்பட்ட இடங்களைவிட விண்ணப்பித்தவர்களுடைய எண்ணிக்கை குறைவாக இருக்கின்ற காரணத்தினால் அது நிரப்பப்படாமல் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரிவாக விளக்கம் சொல்லிவிட்டார்கள். சீக்கிரம் நன்றி சொல்லி உரையை முடியுங்கள். நேரம் குறைவாக இருக்கிறது. சீக்கிரம் பேசி முடியுங்கள். நீங்கள்தான் அடிக்கடி பேசுகிறீர்கள் அல்லவா?

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** தனியார் சுயநிதிக் கல்லூரிகளிலும், அதாவது அரசிடம் இல்லாமல் இருக்கக்கூடிய அந்த இடங்களுக்கு தாழ்த்தப்பட்டவர்களுக்குண்டான கட்டணத்தை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

பிற்பகல் 12–35

அடுத்ததாக Hostels. மாண்புமிகு முதல்வர் அவர்கள் இப்பொழுது பதவியேற்ற பிறகு Hostel–களை நிறைய . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள். (குறுக்கீடு) சரி, நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு முதல்வர் அவர்கள் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்குப் புதிய ஹாஸ்டல்ஸ் கட்டுவதற்கு அனுமதி அளித்திருக்கின்றார்கள். ஆனால் அந்த ஹாஸ்டல் கட்டுவதற்கு centage fees என்று 12% எடுத்துக்கொள்கின்றார்கள். ஒரு ஹாஸ்டலுக்கு ரூ.10 இலட்சம் என்று சொன்னால் . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள், டாக்டர். நீங்கள் அடுத்த மானியத்தில்கூட பேசலாம். புது சப்ஜெக்டுக்குப் போய்விட்டீர்களே! நேரம் இல்லை. இன்னும் நான்கைந்து உறுப்பினர்கள் பேசியபிறகு, பதிலுரை இருக்கிறது. நீங்கள் பேசிக் கொண்டே போனீர்கள் என்றால் எப்படி?

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** ஒரு நிமிடம். centage fees அங்கே இருக்கக்கூடிய பொறியாளர், மற்ற ஊழியர்களுடைய சம்பளத்திற்கு



எடுத்துக்கொள்கின்ற காரணத்தால் 12% எஸ்டிமேட்டில் போய்விடுகிறது. மீதமுள்ள 88% கான்ட்ராக்டருக்கே போனால் எப்படி ஹாஸ்டல் கட்ட முடியும்? centage fees-ஐ அதிகரித்துக் கொடுத்தால் மட்டும்தான் நல்ல கட்டடங்களைக் கட்ட முடியும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசெல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நேற்று முக்கியமாக தாழ்த்தப்பட்டவர்களுக்கான மானியத்தில் பேசும்போது மாண்புமிகு உறுப்பினர் செல்வி பாலபாரதி அவர்கள் ஒரு தவறான கருத்தைச் சொன்னார்கள். தாழ்த்தப்பட்ட . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஒரு வேலையினுடைய திட்ட மதிப்பைத் தயார் செய்யும்பொழுது, திட்டங்களில் materials–கென்று தனியாக schedule of rates இருக்கிறது. அந்த rates–ன் பிரகாரம், square feet பிரகாரம் அந்தக் கட்டடத்திற்குரிய நிதியைக் குறைப்பதில்லை. அதோடு சேர்த்துதான் centage fees-ம் அடங்கும். ஆக, திட்ட மதிப்பீடு என்று வரும்பொழுது apart from that, construction estimates cost தனி, centage cost தனி. இரண்டையும் சேர்த்துதான் அந்தத் திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கீடுகள் இருக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் இதற்குமேல் பேச வேண்டாம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நன்கு விளக்கமாகச் சொல்லிவிட்டார்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசுங்கள்.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2011–2012 ஆம் ஆண்டிற்கான சமூக நலத் துறை மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான மானியக் கோரிக்கையிலே பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்ற தி.மு.க. ஆட்சியிலே சமூக நலத் துறை ஒரு சம்பிரதாயத்திற்கான துறையாகவே இருந்ததே தவிர, அதன் பல்வேறு நலத் திட்டங்கள் மக்களைச் சென்றடையவில்லை. நம்முடைய மதிப்புமிக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் முதல்வராகப் பதவியேற்ற பிறகு கையெழுத்திட்ட 7 நலத் திட்டங்களிலே 3 நல்ல திட்டங்களைக் கையெழுத்திட்டு இந்த சமூக நலத் துறைக்கு ஒரு மாபெரும் சமூக அந்தஸ்து கிடைத்தது என்பதை நான் பெருமகிழ்ச்சியோடு இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

குறிப்பாக, சமூக நலத் துறையின் சார்பாக ஏழைப் பெண்களுக்கு, 10 ஆம் வகுப்பு வரை படித்த பெண்களுக்குத் திருமண நிதி உதவியாக ரூ.25,000/-மும், 4 கிராம் தங்க நாணயம் வழங்குவதும், மகளிர் உயர் கல்வி கற்கவேண்டுமென்ற எண்ணத்தை ஊக்குவிப்பதற்காகப் பட்டப் படிப்பு முடித்த பெண்களின் திருமணத்திற்கு ரூ.50,000/-துடன் திருமாங்கல்யம் செய்வதற்காக 4 கிராம் தங்க நாணயம் வழங்கும் திட்டத்தினையும் மனித நேய மக்கள் கட்சியின் சார்பாக மனதார வரவேற்கின்றோம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

2011-2012 ஆம் ஆண்டில் பள்ளிக் குழந்தைகளுக்கு 2 செட் சீருடைகளும், 2012-2013-ல் 4 செட் சீருடைகளும் வழங்கப்படுவது மட்டுமல்லாமல், 6 ஆம் வகுப்புக்கு மேல் பயிலும் மாணவர்களுக்கு முழுக்கால் சட்டையும், மாணவியர்களுக்கு சல்வார் கமீசும் வழங்கும் திட்டத்தை மனதார வரவேற்கின்றோம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

சமூக நலத் துறையின் சார்பாக தொட்டில் குழந்தைகள் திட்டம், தமிழ்நாடு சமூக நல வாரியம்மூலமாக பெண்களுக்கு சமூக அரசியல் ரீதியிலான பாதுகாப்பு, முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம், அதாவது ஒரு குடும்பத்தில் ஒரு பெண் குழந்தை மட்டுமே இருப்பின் அந்தப் பெண் குழந்தை பயில ரூ.22,500/-லிருந்து ரூ.50,000/- ஆகவும், இரு பெண் குழந்தைகள் இருக்கும் குடும்பத்திற்கு ஒரு பெண் குழந்தைக்கு ரூ.15,200/-லிருந்து ரூ.25,000/- ஆக உயர்த்தி வழங்கியுள்ளதை மனதார வரவேற்கின்றோம்.

தமிழக அரசு பாரத ரத்னா எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்திற்காக மிகப் பெரிய தொகையை வழங்கியிருப்பதையும், அனைத்து அங்கன்வாடி மையங்களுக்கும் உரிய கட்டடங்கள் கட்டித்



தரப்படும் என்பதையும், சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் ஒய்வூதியம் பெறுபவர்களுக்கு ரூ.500/–லிருந்து ரூ.1,000/- ஆக உயர்த்தியிருப்பதையும், மாற்றுத் திறனாளிகளுக்கு மாதாந்திர ஊதியத்தை ரூ.500/–லிருந்து ரூ.1,000/– ஆக உயர்த்தியிருப்பதையும் மனித நேய மக்கள் கட்சி சார்பாக வரவேற்கின்றோம்.

பிற்பகல் 12-40

இந்தத் திட்டங்கள் மேலும் சிறப்பாக அமைவதற்கு சில கோரிக்கைகளை நான் இங்கே பதிவு செய்கின்றேன். முதியோர் உதவித் தொகை, விதவைகள் உதவித் தொகை பெறுபவர்கள் விண்ணப்பிக்கும்போது இருப்பிடச் சான்றிதழ்கள், வருவாய்ச் சான்றிதழ்கள் பெறுவதில் சில சிரமங்கள் உள்ளன. நடைமுறையிலே அவர்கள் ஒரு வாரம், 10 நாட்கள் என்று அலைய வேண்டியுள்ளது. அதை எளிமைப்படுத்த வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்கின்றேன்.

ஏழைப் பெண்களுக்கு வழங்கப்படும் திருமண உதவித் தொகை திருமணத்திற்கு முன்பு வழங்குவதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன். பாரத ரத்னா எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தில் பள்ளிகளில், பணியாற்றும் . . . *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருமண உதவித் திட்டத்தின்கீழ் 40 நாட்களுக்கு முன்பாக அவர்கள் அந்த விண்ணப்பத்தை மாவட்ட சமூக நல அலுவலரிடம் சமர்ப்பிக்க வேண்டும். திருமணத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்பாகவே இந்தத் திருமண உதவித் தொகையும் மற்றும் அரை பவுன்-4 கிராம் தங்கமும் கொடுக்கப்படும். அதுவும் மாவட்ட ஆட்சியர் முன்பு அல்லது மாவட்ட வருவாய்த் துறையைச் சேர்ந்தவர்கள் மற்றும் மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சர்கள் முன்னிலையில் வாரா வாரம் உடனடியாக வழங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)*

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிற திருமண உதவித் திட்டம் என்பது ஒரு சிறப்பானத் திட்டம். தமிழக மக்களே அதை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், பயனாளிகள் 24,000 ரூபாய் ஆண்டு வருமானம் உள்ளவர்களுக்குத்தான் அந்தத் திட்டத்திற்குத் தகுதி என்று அறிவித்திருப்பதை ஒரு இலட்சம் ரூபாய் ஆண்டு வருமானம் உள்ளவர்களுக்கு வழங்கப்படும் என்று மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற 2001-2006-ல் நம்முடைய முதல்வர் அவர்கள் இரண்டாவது முறையாக முதல்வராகப் பொறுப்பேற்ற பிறகு, பணி ஓய்வுபெறும் சத்துணவு அமைப்பாளர்களுக்கு பணிக் கொடையாக ரூபாய் 50,000-மும், சமையலர் மற்றும் உதவியாளர்களுக்கு ரூபாய் 20,000-மும் என்று அறிவிக்கப்பட்டு, சத்துணவுப் பணியாளர்கள் பயன்பெற்று வந்தனர். சென்ற தி.மு.க. ஆட்சியில் இவர்களுக்கு எந்தச் சலுகைகளும் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கருணை உள்ளத்தோடு பரிசீலித்து, சத்துணவு அமைப்பாளர்கள் பணி ஓய்வு பெறும்போது அமைப்பாளர்களுக்கு ரூபாய் 50,000-த்திலிருந்து ஒரு இலட்சம் ரூபாயாக உயர்த்தியும், உதவியாளர்களுக்கு 20,000 ரூபாயிலிருந்து ரூபாய் 50,000 ஆக உயர்த்தியும் வழங்க வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா, உரையை முடித்துவிடுங்கள். ஒரு நிமிடத்திலே உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** பணி ஓய்வுபெறும் சத்துணவு அமைப்பாளர்களுக்கு மாத ஓய்வூதியம் ரூபாய் 700-ம், சத்துணவு சமையலருக்கு ரூபாய் 600-ம், உதவியாளருக்கு ரூபாய் 500-ம் வழங்கப்பட்டு வருகிறது. ஏறத்தாழ, 28 ஆண்டுகள் பணிபுரிந்து



ஓய்வுபெறும் சத்துணவுப் பணியாளர்களுக்கு அவர்கள் பெறும் சம்பளத்திலிருந்து குறைந்தபட்சம் 50 சதவீத ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்கின்றேன். ஒருவேளை நிதிநிலை இடம் கொடுக்காவிட்டால், சத்துணவு அமைப்பாளர்களுக்கு ரூபாய் இரண்டாயிரமும், சமையலர்களுக்கு ரூபாய் 1,500-ம், உதவியாளர்களுக்கு ரூபாய் ஆயிரமும் ஓய்வூதியம் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

சமூக நலத் துறையில் பதிவுபெற்று, கல்வித் துறையால் அங்கீகரிக்கப்பட்டு, தனியார் நடத்தும் அனாதை இல்லங்களுக்குக் கல்வித் துறை ஒரு நபருக்கு ரூபாய் 36 ஒரு மாதத்திற்கு என்று வழங்குகிறது. ஆனால், அதேசமயம், சமூக நலத் துறையால் நடத்தப்படும் அனாதை இல்லங்களுக்கு, ரூபாய் 200 ஒரு நபருக்கு வழங்கப்படுகிறது. ஆகவே, தமிழக அரசு, தனியார் நடத்தும் அனாதை இல்லங்களுக்கும், ஒரு நபருக்கு ரூபாய் 200 என்ற அளவில் வழங்க ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்களே, உங்கள் கோரிக்கைகளை எல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே எழுதிக் கொடுத்துவிடுங்கள். மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள். (குறுக்கீடு) திரு. அ. அஸ்லம் பாஷா, நீங்கள் ஒரேயொரு நிமிடம் என்று சொல்லிவிட்டு, 3 நிமிடங்கள் பேசிவிட்டீர்களே! (குறுக்கீடு) சரி, கண்டிப்பாக ஒரு நிமிடம்தான்.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** மாற்றுத் திறனாளிகளைச் சமூகத்தில் ஒதுக்கப்பட்டவர்களாகவே பார்க்கின்றனர். அவர்களுக்குக் கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் மற்றும் தனியார் துறைகளிலும் இட ஒதுக்கீடு வழங்கி, அது அமல்படுத்தப்படுகின்றதா என அரசு கண்காணிக்க வேண்டும்.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகளில் உடல் ஊனமுற்றவர்களுக்கு ஒதுக்கீடு வழங்க வேண்டும்.

பேருந்துகளில் உடல் ஊனமுற்றோருக்கென தனி இருக்கைகள் இருந்தாலும் சில நேரங்களில் அவர்களுக்கு அந்த இடங்கள் ஒதுக்கப்பட முடிவதில்லை. அவர்களைப் பேருந்து நடத்துனர்கள் அமர வைப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்கின்றேன்.

விடுதலைப் போராட்ட வீரர்களின் வாரிசுகள் அனைவருக்கும் முறையாக உதவித் தொகை சென்றடைய அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-45

மாற்றுத் திறனாளிகள் பராமரிப்பு உதவித் தொகை பெறுவதில் ஊனத்தின் சதவிகிதம் 60 சதவிகிதத்திற்குமேல் இருக்க வேண்டுமென்ற நிலையை மாற்றி, 45 சதவிகிதம் என இருக்க வேண்டும். அவர்களுடைய சொத்து மதிப்பு 50,000 ரூபாய்க்குமேல் இருக்கக்கூடாது என்கின்ற விதிகளைத் தளர்த்த வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்கிறேன்.

ஊனமுற்றோர் உதவித் தொகை பெற்றால், கல்வி உதவித் தொகை இல்லை என்ற நிலையை மாற்றி அனைத்து உதவித் தொகைகளும் இவர்கள் பெறுவதற்கு ஆவன செய்ய வேண்டும். ஆந்திரா, கர்நாடகா, கேரளா ஆகிய மாநிலங்களில் இருப்பது போன்று 40 சதவிகித ஊனம் இருக்கின்ற அளவிற்கு அடையாள அட்டை வழங்கி அவர்களுக்கு அனைத்து சலுகைகளையும் வழங்க வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொண்டு வாய்ப்பளித்தமைக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Thank you. அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை ஆகிய துறைகள்மீது பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியையும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் மற்றும் அமைச்சர் பெருமக்களுக்கும், சபையின் உறுப்பினர்களுக்கும் எனது பணிவான வணக்கத்தையும் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

சமூக நலன் என்பது பெண்கள், ஆதரவற்ற பெண்கள், விதவைப் பெண்கள், குழந்தைகள் அதுபோன்று திருநங்கைகள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் இவர்களையெல்லாம் உள்ளடக்கிய ஒரு பெருந்துறையாக, சமூகத்தினுடைய அடித்தட்டில் இருக்கக்கூடிய, காலங்காலமாக, வரலாற்று ரீதியாக ஒதுக்கி வைக்கப்பட்ட இந்தப் பகுதியை, முதியவர்கள், முதிய பெண்கள் இவர்களையெல்லாம் கவனத்தில்கொண்டு இந்தச் சமூக நலத் துறை என்பது இயங்கி



வருகிறது. இந்தத் துறையில் தமிழகத்தினுடைய அரசு இன்றைக்கு பெண் கல்வியை ஊக்கப்படுத்தக்கூடிய வகையில் அவர்களுடைய திருமணத்திற்கு 25,000 ரூபாய் மற்றும் 50,000 ரூபாய் மற்றும் 4 கிராம் தங்க நாணயம் வழங்கியிருப்பது என்பது உள்ளபடியே பாராட்டுக்குரியது, வரவேற்புக்குரியது என்று மார்க்சிய கம்யூனிஸ்டு கட்சியின் நிலையிலிருந்து நாங்கள் பார்க்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) தங்கத்தின் விலை நாளுக்குநாள் உயர்ந்து கொண்டே இருக்கிறது. பிறக்கிற குழந்தைக்கு தங்கமே தங்கம் என்று பெயர் வைத்து ஏழைகளெல்லாம் தங்கத்தை கனவிலே கண்டு கொண்டிருக்கிறார்கள். நடுத்தர மக்களுக்கு இந்தத் தங்கம் என்பது பெருங்கனவாக மாறிக் கொண்டிருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையில் அரசே 4 கிராம் தங்க நாணயம் தருவது என்பதை மிகவும் பாராட்டுக்குரியதாக நாங்கள் பார்க்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

அவை தவிர, பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டம், முதியோர்களுக்கு 1,000 ரூபாய் உதவித் தொகைத் திட்டம், திருநங்கைகளுக்கான திட்டங்கள் போன்ற திட்டங்களை மார்க்சிய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக வரவேற்கிறோம். இதில் மிக முக்கியமாக கவனிக்க வேண்டியவர்கள் மாற்றுத் திறனாளிகள். மாற்றுத் திறனாளிகள் அனைவருக்கும் ஒரே மாதிரியான அடையாள அட்டை வழங்கப்பட வேண்டும். மற்ற மாநிலங்களில் அவ்வாறுதான் நடைமுறையில் இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் இந்தத் துறைக்கும் மார்க்சிய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக தெரிவித்துக்கொள்கிறோம். 60 சதவிகிதம் ஊனமுற்றவர்கள் என்ற நிபந்தனை மற்ற மாநிலங்களில் கைவிடப்பட்டு 40 சதவிகிதம் ஊனம் இருந்தாலே அவர்களுக்கு உதவித் தொகை, அரசினுடைய பல திட்டங்கள் என மற்ற மாநிலங்களில் அமல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதே நடைமுறையை தமிழக அரசும் பின்பற்றுவதற்குப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

அதேபோன்று, 1,000 ரூபாய் உதவித் தொகையை, அவர்கள் மாற்றுத் திறனாளிகள் என்பதால் அதை இன்றைக்கு 3,000 ரூபாயாக உயர்த்த வேண்டுமென்று மாற்றுத் திறனாளிகளினுடைய பல ஜனநாயக சங்க அமைப்புகள் வலியுறுத்தியிருக்கிறார்கள். அந்தக் கோரிக்கையையும் நமது துறை சார்பாகப் பரிசீலிக்க அன்போடு கேட்டுக்கொள்கிறோம். உதவித் தொகை பெறும் மாற்றுத் திறனாளிகளுக்கு இதர அரசு வேலைவாய்ப்பு இல்லை என்று

மறுக்கப்படுகிறது. அரசு வேலைவாய்ப்பு கிடைக்கிறபொழுது உதவித் தொகை நிறுத்தப்படுவதை நாம் ஏற்றுக்கொள்ள முடியும். ஆகவே, உதவித் தொகையைப் பெற்றாலே இதர உதவிகள் இல்லை என்ற நடைமுறை கைவிடப்பட வேண்டும். மூளை வளர்ச்சி இல்லாத குழந்தைகள் கற்பதற்கு தனி பள்ளிகள் எதுவும் இல்லை. மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளினுடைய செயலூக்கத்திற்கு Occupational Therapist படித்தவர்களை நியமிக்க வேண்டுகின்றோம். மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு பகல் நேரக் காப்பகம், நவீன செயற்கைக்கால், Modular Limbs இளைஞர்களுக்கு வழங்கப்படுவதற்கு அரசு பரிசீலிக்க வேண்டும். இப்போது இவை மாணவர்களுக்கு மட்டுமே வழங்கப்படுகின்றன. வேலை தேடக்கூடிய மற்ற இளைஞர்கள், இளம் பெண்கள் இவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும். 3 சக்கர மோட்டார் வாகனத்தை இன்றைக்கு மாணவர்கள் மட்டுமே பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதை இளைஞர்கள் உட்பட அனைவருக்கும் வழங்க வேண்டும். அனைத்துப் பொது இடங்களிலும் மாற்றுத் திறனாளிகளுக்கான கழிப்பறை வசதிகள் கட்டித் தரப்பட வேண்டும். மாற்றுத் திறனாளிகள் குறித்த கணக்கெடுப்பு மாவட்ட வாரியாக நடத்தப்பட வேண்டும். இத்துறையின் சார்பாக திண்டுக்கல்லிலே அது சிறப்பாக நடைபெற்றிருக்கிறது. ஆனால், அலுவலகங்களில் எந்த ஊழியரும் இல்லை. கணினி இயக்க ஆள் இல்லை, கணக்கர் இல்லை, வழிகாட்டும் அலுவலர் இல்லை, Placement அலுவலர் இல்லை. இவர்கள் எல்லாம் நியமிக்கப்பட்டால்தான் ஊனமுற்ற துறை அலுவலகம் ஊனம் அற்று இருக்கும் என்பதைக் கவனப்படுத்த விரும்புகிறோம்.

பிற்பகல் 12–50

மாவட்டம் தோறும் மாற்றுத் திறனாளிகளுக்கான விடுதிகள் கட்டப்பட வேண்டும். மாற்றுத் திறன் விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுக்கு தேசிய அளவிலான நிரந்தர வேலைவாய்ப்பு கிடைக்க வேண்டும். 3 சதவீத இட ஒதுக்கீடு வேலைவாய்ப்பில் எந்த அளவிற்கு அது நிறைவேறியிருக்கிறது என்பதைக் கவனிக்க வேண்டும்.

இடைநிலை ஆசிரியர் பயிற்சி முடித்த பார்வையற்ற ஆண், பெண் இருபாலரான ஏழு பேருக்கு பணி ஆணை இன்னமும் கிடைக்கவில்லை, அவர்களுக்கு அவை வழங்கப்பட வேண்டும்;



செய்கை மொழிபெயர்ப்பாளர்களை அரசு நிறுவனங்களில் பொதிகை போன்ற தொலைக்காட்சி நிறுவனங்களில் அமர்த்தி செய்திகள் வாசிக்கப்பட வேண்டும்; அரசு, டிஜிட்டல் காதொலிக் கருவிகள் வழங்கப்பட வேண்டும் என்பன போன்ற கோரிக்கைகளை மார்க்சிய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக வைக்கிறோம். மாற்றுத் திறனாளிகள் குறித்து நமது அரசு சிந்திக்க வேண்டும். எதிர்காலத்தில் அவர்கள் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறோம்.

அதேபோன்று, முதியோர் பெண்களுக்கும், விதவைப் பெண்களுக்கும் 1,000/- ரூபாய் pension என்பது அரசு அறிவித்திருப்பதை ஏற்கெனவே நாங்கள் வரவேற்று இருக்கிறோம். ஆனால், கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்பொழுது 500/– ரூபாய் வழங்கினார்கள். அப்பொழுது 250/- ரூபாய் மத்திய அரசும், 250/- ரூபாய் மாநில அரசுமாக இரண்டையும் சேர்த்துக் கொடுத்தார்கள். மத்திய அரசு 250/– ரூபாய்க்கு ஒரு நிபந்தனை வைத்திருந்தார்கள். 65 வயது இருக்க வேண்டும், ஆண் வாரிசு இருக்க வேண்டியதில்லை. ஆண் வாரிசு இருந்தாலும் கொடுக்கலாம். ஆனால், வறுமைக்கோட்டிற்குக்கீழ் இருக்க வேண்டும் என்றார்கள். மாநில அரசு கொடுக்கக்கூடிய 250/- ரூபாய்க்கு அவர் முதியோராக இருக்கலாம். ஆனால், அவருக்கு எந்த வாரிசுமே இருக்கக்கூடாது. அவருக்குச் சொத்து மதிப்பு 5,000/– ரூபாய் இருந்தால் போதும் என்று இவர்கள் நிபந்தனை வைத்தார்கள். ஏற்கெனவே நமது உறுப்பினர்கள், அமைச்சர்கள் எல்லாம் இருந்த அந்த சபையிலேதான் இதுபற்றி நாம் கேள்விகள் கேட்டோம். மத்திய அரசு வாரிசுகள் இருக்கலாம் என்கிறது. மாநில அரசு வாரிசே இருக்கக்கூடாது என்கிறது. இரண்டு 250/- ரூபாயையும் போட்டு 500/- ரூபாயாகக் கொடுக்கிறீர்கள். ஆகவே, அந்த முதியவர்களுக்கு எந்த விதியைப் பின்பற்றப் போகிறீர்கள் என்று கேட்டதற்கு கடைசிவரை பதிலே இல்லை. ஆகவேதான், இப்போதும் மார்க்சிய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக இதில் பெரும் குழப்பம் நீடிக்கிறது எனத் தெரிவித்துக்கொள்கிறோம். மத்திய அரசு 500/- ரூபாய் தருவதற்கு 60 வயது இருக்க வேண்டும், வறுமைக் கோட்டிற்குக்கீழ் இருக்க வேண்டும், வாரிசு இருக்கலாம் என்கிறது. மாநில அரசு இது சம்பந்தமாக நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள் என்பதை மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும். அதில் விவசாயக் கூலித் தொழிலாளிகளுக்கு 59 வயது இருக்கலாம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சற்று முன்பு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குக் கூறிய விளக்கம்தான் இவருக்கும் பொருந்தும். மத்திய அரசாங்கம் ஊக்கத் தொகையாக, மானியத் தொகையாக 200/- ரூபாய்தான் வழங்குகிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலேதான் இப்போது 1,000/- ரூபாய் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அது வறுமைக்கோட்டிற்குக்கீழே உள்ளவர்கள் பட்டியலில் பெயர் இல்லையென்றாலும், ஏழையெளிய மக்களாக இருந்தால், அவர்கள் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருந்தால் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு அம்மா அவர்கள் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். இதிலே எந்தவிதக் குழப்பமும் வேண்டாம். வாரிசுகள் இருந்தாலும் அவர்களுடைய தகுதியின் அடிப்படையில் அவர்களுக்குரிய முதியோர் உதவித் தொகை வழங்கப்படும் என்பதை மாமன்றத்தின் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால், புதிய அரசு ஆணை பிறப்பிக்கப்பட வேண்டும். அதைப் பிறப்பித்தால்தான் இது நடைமுறையில் இருக்கிறது என்று ஏற்றுக்கொள்ளப்படும். அதில் என்ன தாமதம் என்பது எனக்குத் தெரியவில்லை. நீங்கள் சொல்லியிருக்கக்கூடியவற்றை அரசு ஆணையாகப் பிறப்பித்தால் இந்தக் குழப்பம் உறுதியாக நீங்கும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. அதுபோன்று, 5,000/- ரூபாய் மதிப்புள்ள சொத்து மட்டுமே இருக்க வேண்டும் என்பது இந்தத் திட்டத்தின் நிபந்தனையாக இருக்கிறது. இதுவும் நடைமுறைக்குச் சாத்தியமில்லை. ஆகவே, 12,000/- ரூபாயாக சொத்து மதிப்பு இருக்கலாம் என்று திருத்தப்பட வேண்டும். கிராமப்புற விவசாயக் கூலித் தொழிலாளிக்கு 59 வயது இருக்கலாம் என்று கிராமப்புற முதியவருக்கு சலுகைகள் சொல்லியிருப்பதைப் போலவே, நகர்ப்புறக் கூலித் தொழிலாளியையும் அதோடு இணைத்தால் நகர்ப்புற முதியவருக்குக் கட்டாயமாக



அந்த முதியோர் pension கிடைக்கும். ஆகவே, கிராமப்புறத் தொழிலாளி மற்றும் நகர்ப்புறக் கூலித் தொழிலாளி என்று அந்த அரசாணையில் ஒரு திருத்தம் கொண்டு வந்தால் நகர்ப்புறங்களில் இருக்கக்கூடிய முதியவருக்கும் அந்த நிவாரணம் என்பது கிடைக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

இதில் பெண்கள் மற்றவர்கள் அலைக்கழிக்கப்படுகிறார்கள். அதிகாரிகளுடைய அணுகுமுறையும் அரசினுடைய கொள்கைக்கேற்ப அமையவில்லை. அவர்கள் பொதுமக்களை எரிச்சலோடு பார்க்கிறார்கள், விவரங்களைச் சொல்ல மறுக்கிறார்கள். ஆகவே, இவற்றை எல்லாம் முறைப்படுத்தி, இந்த 1,000 ரூபாய் pension-ஐ நீங்கள் வெற்றிகரமாகச் சேர்க்க வேண்டிய கடமை உங்களுக்கு இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

பிற்பகல் 12-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முதியோர் உதவித் தொகையைப்பற்றி ஒவ்வொரு முறையும் கேட்டுக்கொண்டிருக்கின்றார்கள். நாங்களும் விளக்கமாகச் சொல்லியிருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, மத்திய அரசு 500 ரூபாய் கொடுக்கிறது என்று சொன்னார்கள். 200 ரூபாய்தான் அவர்கள் கொடுக்கின்றார்கள். முதியோர் உதவித் தொகையை எளிமைப்படுத்த வேண்டுமென்பதற்காக, தகுதியான நபர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்பதற்காக, பட்டா மாறுதல் தினமாக இருக்கின்ற திங்கட்கிழமையன்று மனு வாங்குகின்றார்கள். அன்றையதினமே இந்த முதியோர் உதவித் தொகை வேண்டும் என்பவர்களும், குடும்ப அட்டை வேண்டும் என்பவர்களும் வி.ஏ.ஓ.–விடத்திலே கொடுத்துவிடலாம் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும் என்று நினைக்கின்றேன். ஆகையால், இனி வருகின்ற காலங்களில் இது கஷ்டமாக இருக்காது. எளிய முறையில் அவர்களுக்குக் கிடைக்கின்ற வகையிலே, தகுதியான நபர்களுக்கு நிச்சயமாக மாண்புமிகு அம்மாவின் அரசு கொடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர், உங்கள் உரையை விரைவாக முடித்தால் நன்றாக இருக்கும்.

**செல்வி கே. பாலபாரதி**: சத்துணவுத் திட்டம் என்பது மிகச் சிறந்த திட்டம். குழந்தைகளுக்கு வழங்கப்பட்டு வரக்கூடிய உணவீட்டுச் செலவினம் 70 மற்றும் 80 பைசா என்பதை விலைவாசி உயர்விற்கு ஏற்ப அதிகரிக்க வேண்டும். 1 இலட்சத்து 70 ஆயிரம் பெண் ஊழியர்களைக் கொண்ட இந்தத் திட்டத்தில் சத்துணவு ஊழியர்கள், அங்கன்வாடி ஊழியர்கள் அனைவரும் சமையலர்கள், உதவியாளர்கள் அனைவரும் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டு, அவர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்க முன்வர வேண்டும். ஆறாவது ஊதியக் கமிஷன் பரிந்துரைப்படி இவர்களுடைய ஓய்வூதியம் ரூபாய் 700–லிருந்து 3,000 ரூபாயாக உயர்த்தப்பட வேண்டும். சமையலர் உதவியாளர்களுக்கும் உயர்த்தப்பட வேண்டும்.

2010 ஆகஸ்டில் நடைபெற்ற வேலைநிறுத்தத்தில் சங்க நிருவாகிகள் பழி வாங்கப்பட்டார்கள். அவர்களுக்கு பணிநீக்கக் காலத்திற்கான ஊதியமும் வழங்கப்பட வேண்டும்.

குழந்தைகள் நல அமைப்பாளராகப் பணிபுரிந்து, ஊர் நல அலுவலராக, ஊட்டச்சத்து மேற்பார்வையாளராகப் பணியாற்றி, பதவி உயர்வு பெற்ற பெண் ஊழியர்களுக்கு பென்ஷன் வழங்கப்படுவதில்லை. அவர்களுடைய பணிக் காலத்தைக் கணக்கிட்டு, பதவி உயர்வுக் காலத்தைக் கணக்கிட்டு, அவர்களுக்கு பென்ஷன் கிடைக்க வழிவகைகள் செய்ய வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

மகளிர் சுய உதவிக் குழுக்கள் இந்தத் துறையிலும் இருக்கின்றன; உள்ளாட்சித் துறையிலும் இருக்கின்றன. ஆகவே, பெண்கள் என்பதினால் முழுமைப்படுத்தி, இந்தச் சமூக நலத் துறையின்கீழ் கொண்டுவருவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

முதியோர் இல்லங்கள் தாலுகா அளவில் துவக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம். (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். பெண்கள் ஆணையம் என்பது செயல்படுத்தப்பட



வேண்டும். பெண்களுக்கெதிரான வன்முறைகள் அனைத்தின்மீதும் உரிய நடவடிக்கை எடுப்பதோடு, தமிழகத்தில் இன்றைக்கு சாலையோர வியாபாரப் பெண்கள், கொத்தனார் வேலையில் ஈடுபடுபவர்கள், சிவகாசியில் பட்டாசுத் தொழில் செய்பவர்கள் தினக்கூலி 54 ரூபாய் மட்டுமே பெறுகிறார்கள். தீபாவளி சமயம் பட்டாசு ஆலைகள் வெடிக்கிறபொழுது பெண் உடல் வெடித்து, சாம்பலாகவும், சதைத் துணுக்குகளாகவும் மாறக்கூடிய அவலநிலை இருக்கிறது.

துப்புரவுத் தொழிலிலே பெண்கள் இருக்கிறார்கள். இதுபோன்று முறைசாரா தொழில்களில் உழைக்கக்கூடிய பெண்கள், மிக அற்பமான கூலியை மட்டுமே பெறுகிறார்கள். இந்தப் பெண்களினுடைய குறைந்தபட்சக் கூலியைத் தீர்மானிப்பதற்கு மகளிர் ஆணையம் ஓர் ஆய்வை நடத்தி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, பெண்களுடைய உழைப்புக்கான மதிப்பை நியாயமான முறையிலே குறைந்தபட்ச ஊதியமாக நிர்மாணிக்கக்கூடிய கடமையை, பணியை இந்தத் துறை செய்ய வேண்டும். மகளிர் ஆணையத்தினுடைய தலைவர், உறுப்பினர்கள் அரசியல் பாரபட்சம் இல்லாமல் சமூக அமைப்புகளையும் இணைத்துக்கொண்டு, அவர்களை அதிலே உறுப்பினர்களாக ஆக்குவதற்கு முன்வர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்வதோடு, தமிழகத்தினுடைய பல்வேறு துறைகளிலே சிறப்பாகப் பணியாற்றக்கூடிய பல பெண்களும் இன்றைக்கு இருந்துகொண்டிருக்கிறார்கள்.

இன்றைக்கு சிறுமிகள் மீதான வன்முறை, பாலியல் கொடுமை என்பது தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. வேலை ஸ்தலங்களில் பெண்களின்மீது பாலியல் ரீதியான துன்புறுத்தல்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, இவற்றையெல்லாம் தடுத்து நிறுத்துவதற்குப் புகார் குழுக்கள் அமைக்கப்பட்டு, நியாயமான முறையிலே, பாரபட்சம் இல்லாமல் அவர்கள்மீது விசாரணை நடத்தி, பெண்களுக்குச் சாதகமான நியாயத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கு இந்தத் துறை மகளிர் ஆணையம் முயற்சி செய்யவேண்டும் என்ற அடிப்படையிலே, சமூக நலனின்மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியினுடைய கருத்துகளைத் தெரிவித்து, நன்றி கூறி அமருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி செல்வி ராமஜெயம்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியபோது, நகர்ப்புறத் தொழிலாளர்கள், கிராமப்புற தொழிலாளர்கள் என்று சொன்னார்கள். அப்படி ஒன்றும் கிடையாது. அதில் வேறுபாடுகள் கிடையாது. 60 வயதிற்கு மேற்பட்ட ஆதரவற்ற முதியோருக்குக் கொடுக்க வேண்டுமென்றுதான் மாண்புமிகு அம்மா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நகர்ப்புறத் தொழிலாளர், கிராமப்புறத் தொழிலாளர் என்று கிடையாது. அதில் திருத்தம் செய்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-00

**செல்வி கே. பாலபாரதி:** அப்படி இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து அவர்கள்.

**திரு. கு. லிங்கமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். சமூக நலன் மற்றும் சத்துணவுத் துறை, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை ஆகியவற்றின்மீது இந்திய கம்யூனிஸ்டு கட்சி கருத்துகளைக் கூற வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறுகிறேன்.

முதியோர், நலிந்தோர், மகளிர், பெண்கள், பெண் குழந்தைகள், ஆதரவற்றோர், திருநங்கைகள் என்று சமுதாயத்தில் பலவீனமானவர்கள் அனைவருக்கும் தனித்தனியாக ஒவ்வொருவரின் நலனையும் கருத்தில் கொண்டு, மாண்புமிகு முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலின்படி செயல்படுத்தவிருக்கின்ற திட்டங்களை இந்திய கம்யூனிஸ்டு கட்சி முழுமையாக வரவேற்கின்றது.

குறிப்பாக, தொட்டில் குழந்தைகள் திட்டம், பெண் சிசுக் கொலையைத் தடுத்து வருகின்றது. பட்டம் பெற்ற, பட்டயம் பெற்ற பெண்களுக்குத் திருமண உதவித் தொகை ரூ.50,000/-, 4 கிராம் தங்கம் என்பவையெல்லாம் பெண் கல்வியை ஊக்கப்படுத்தும்.

முதியோர் உதவித் தொகை ரூ.500/–லிருந்து ரூ.1,000/- ஆக உயர்த்தியது முதியோர்களின் வாழ்க்கையில் ஒரு தைரியத்தையும்,



நம்பிக்கையையும் ஏற்படுத்தும். மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களை மற்ற எல்லோரையும்விட வாழவைக்கும் தாயாகவே நினைத்துக் கொண்டிருக்கின்றார்கள் அந்த முதியோர்கள்.

வயது முதிர்ந்த முதியோர்களுக்கு மாதம் 4 கிலோ அரிசி மட்டும் வழங்கப்படுகிறது. இது ஒரு நபருக்கு போதுமானது அல்ல. அவர்களுக்குக் கூடுதலாக அரிசி, சர்க்கரை, கோதுமை போன்றவற்றையும் சேர்த்து வழங்கினால் முதியோர்களின் முழுப் பசியைத் தீர்ப்பதாக இருக்கும். அந்த முதியவர்கள் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களை என்றும் நன்றியுடன் கைகூப்பி வணங்குவார்கள்.

ஏழையெளிய மக்கள் அதிகமாக வாக்களித்து, வெற்றிபெறச் செய்த இந்த அரசை நம்முடைய அரசு என்ற பற்றுறுதியுடன் உள்ளனர். எனவே, ஏழை, எளிய விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், ஏனைய உடல் உழைப்புத் தொழிலாளர்களுக்கு நிபந்தனையற்ற முறையில் ஓய்வூதியச் சட்டப்படி ஓய்வூதியம் வழங்கக் கோருகிறேன்.

சாதி மறுப்புத் திருமணங்களைச் செய்து கொள்பவர்களுக்கும், அவர்களின் வாரிசுகளுக்கும் கல்வி, வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கும் அரசின் கொள்கைத் திட்டத்தை வரவேற்கின்றோம். பல்வேறு தலைப்புகளில் வழங்கப்படுகின்ற திருமண உதவித் திட்டங்களும், மக்கள் நலத் திட்டங்களும் தொலைநோக்குப் பார்வையுடனும், முற்போக்குச் சிந்தனையுடனும் தயாரிக்கப்பட்டு செயல்படுத்தப்படும்போது மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள், தந்தைப் பெரியார், பேரறிஞர் அண்ணா, மக்கள் தலைவர் மனிதநேயர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் கொள்கைகளை இந்த ஆட்சி உறுதிப்படுத்துகின்ற ஆட்சியாக இருக்கின்றது.

பெண்கள் நலனில் அக்கறை கொண்ட இந்த அரசு பெரும்பாலும் பெண்களே அதிகமாகப் பணியாற்றும் சத்துணவுப் பணியாளர்கள், அங்கன்வாடிப் பணியாளர்களைப் பகுதிநேரப் பணியாளர்கள் என்பதிலிருந்து முழு நேரப் பணியாளர்களாக அறிவிக்க வேண்டும்.

கடந்த தி.மு.க. ஆட்சியில் சத்துணவுப் பணியாளர்கள், அங்கன்வாடிப் பணியாளர்கள் ஓய்வு பெறுகின்ற கடைசி ஓராண்டு அல்லது இரண்டு ஆண்டிலே பதவி உயர்வு என்று அளித்து,

அவர்கள் பணப்பயன் எதுவும் பெறாமல் பழிவாங்கப்பட்டனர். இதுகுறித்து பரிசீலித்து அவர்கள் பணப்பயன் அடைய ஆவன செய்ய வேண்டுகிறேன்.

சத்துணவுப் பணியாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள் ஓய்வு பெறும்போது ஒட்டுமொத்தமாக பெறுகின்ற தொகையான ரூ.50,000/–ஐ உயர்த்தி 3 இலட்சம் ரூபாயாக வழங்கக் கோருகிறோம். சத்துணவுப் பணியாளர்களுக்கும், அங்கன்வாடிப் பணியாளர்களுக்கும் சட்டப்படியான ஓய்வூதியம் வழங்கக் கோருகிறேன்.

மாநிலம் முழுவதும் உள்ள சத்துணவு மையங்களில் அடிப்படை கட்டமைப்பு வசதிக் குறைபாடுள்ள இடங்களில் அதைப் போக்கி நிவர்த்திக்க வேண்டுகிறேன்.

குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தில் பணிபுரியும் மேற்பார்வைப் பணியாளர்கள் நிலை-II, ஊராட்சி ஒன்றியத்தில் பணிபுரியும் கிராம சேவிகா அனைவரும் பெண்கள். இவர்கள் பணி ஓய்வு பெற்றபின் எந்தவித பணப்பாதுகாப்பும் இவர்களுக்கு இல்லை. இவர்களுக்கு அரசு உரிய முறையில் பணப்பாதுகாப்பு அளித்து, இருண்டு கிடக்கும் அவர்கள் வாழ்வில் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் ஒளியேற்றக் கேட்டுக்கொள்கிறேன்.

அங்கன்வாடி, சத்துணவு மையம் ஆகியவற்றில் பயிலும் குழந்தைகளுக்கு மருத்துவக் குழு நேரடியாகச் சென்று பரிசோதித்து மருத்துவ சிகிச்சை அளிக்க வேண்டும்.

பிற்பகல் 1-05

பள்ளி சத்துணவு மையங்களை ஆய்வு செய்து, சத்துணவு மேற்பார்வைப் பணியிடங்களை உருவாக்கி சத்துணவு அமைப்பாளர்களுக்குக் கல்வித் தகுதி, பணிமூப்பு அடிப்படையில் பதவி உயர்வு அளிக்க வேண்டும்.

மாற்றுத் திறனாளிகள் சான்றிதழ் பெற அலைய வேண்டியுள்ளது. அதில் இடைத்தரகர்கள் அதிகமாக ஈடுபடுகின்றனர். இதைப் போக்க வேலூர் மாவட்ட ஆட்சியர் ஒரே நாளில் மாவட்ட, வட்ட அதிகாரிகளை ஒரே இடத்தில் கூட்டி, பார்வையிட்டு, விசாரித்து உடனுக்குடன் சற்றேறக்குறைய 1,000 அடையாள அட்டைகளை வழங்கினார். இதனால் மாற்றுத் திறனாளிகளின் அலைச்சல் குறைக்கப்பட்டு, இடைத் தரகர்கள் அகற்றப்பட்டனர்.



இந்த முறையை மாநிலம் முழுவதும் பின்பற்றினால் மாற்றுத் திறனாளிகளின் அலைச்சல் குறைக்கப்பட்டு, இடைத் தரகர்களின் தலையீடு அகற்றப்படும்.

மாற்றுத் திறனாளிகளுக்கு மின் மோட்டார் பொருத்திய மூன்று சக்கர வாகனங்கள் வழங்கக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும். உரையை முடியுங்கள்.

**திரு. கு. லிங்கமுத்து:** கடந்த தி.மு.க. ஆட்சியில் சத்துணவு அங்கன்வாடி காலிப் பணி இடங்களுக்கு பல இடங்களில் ஒரு இலட்சம், ஒன்றரை இலட்சம் ரூபாய் அளவிற்குப் பணம் பெற்றுக்கொண்டு அவர்களுக்கு வேலைவாய்ப்பும் அளிக்கப்படவில்லை, அவர்களுடைய பணமும் திருப்பிக் அளிக்கப்படவில்லை. இதன்மீது உரிய நடவடிக்கை எடுத்து அவர்களுக்கு வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமாக வேலைவாய்ப்பு தரவும், பணம் அவர்களுக்குத் திருப்பிக் கிடைக்க நடவடிக்கை எடுக்கவும் கேட்டுக்கொள்கிறேன்.

வேலூர் மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்படும்போது, குடியாத்தம் தொகுதி வேலூர் மாவட்டத்துடனேயே தொடர ஆவன செய்ய வேண்டும். ரூபாய் 10 செலவில் தலைநகர் வேலூருக்கு போக்குவரத்து செய்த நிலையை மாற்றி, ரூ.60 அல்லது ரூ.70 செலவில் செல்கின்ற நிலையை மக்கள் விரும்பமாட்டார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டில் ஒன்று சொல்லுங்கள். நாளைக்கு உங்களுக்கு question hour வேண்டுமா அல்லது உரையை முடிக்கப் போகிறீர்களா?

**திரு. கு. லிங்கமுத்து:** எனது தொகுதிப் பிரச்சினைகள் சிலவற்றை அவையின்முன் வைக்க விரும்புகிறேன். முதியோர் உதவித் தொகை, மாற்றுத் திறனாளிகள் உதவித் தொகை பெற நிபந்தனைகளை வெளிப்படையாக வட்ட அலுவலர் அலுவலகத் தகவல் பலகையில் எழுதி வைக்க வேண்டுகிறேன். எனக்கு வழங்கப்பட்ட வாய்ப்பிற்கு நன்றி கூறி அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Very good திரு. கு. லிங்கமுத்து. மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் அவர்கள்.

**திரு. எல். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆணாதிக்க சமுதாயத்தில் அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட பெண் சமுதாயத்தை, ஆண் சமுதாயத்திற்கு நிகராக, சமுதாயத்திலும், பொருளாதாரத்திலும் மேம்படுத்த உதவுகின்ற வகையிலும், கணவனால் கைவிடப்பட்ட ஏழையெளிய பெண்கள், விதவைகள், ஆதரவற்ற குழந்தைகள், முதியோர்கள் உட்பட வறுமைக் கோட்டுக்குக்கீழே உள்ளவர்களைப் பாதுகாக்கின்ற பாதுகாப்பு வளையமாகக் திகழுகின்ற சமூக நலத் துறையின்மீதும், மாற்றுத் திறனாளிகள் துறையின்மீதும் பேசுவதற்கு வாய்ப்பளித்த, எனக்கு தந்தையாய், அண்ணனாய், குருவாய், ஏழைகளின் இதயங்களிலே நீங்கா இடம் பெற்றிருக்கின்ற தே.மு.தி.க–வின் நிரந்தரத் தலைவர் மாண்புமிகு கேப்டன் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒரு பெண் இப்பூவுலகில் பிறந்ததுமுதல் தனது கடைசி காலம்வரை ஒரு ஆணையே சார்ந்திருக்க வேண்டிய நிலை உள்ளது. காரணம் பிறந்து, வளர்ந்து, படித்து, பருவமடைந்து, திருமணமாகும் வரை தந்தையை நம்பி இருக்கின்றார். திருமணத்திற்குப் பிறகு கைபிடித்த கணவனை நம்பியுள்ளார். கணவனுக்குப் பிறகு பெற்ற பிள்ளையை நம்பியுள்ளார். ஆகவே, கடைசி காலம் வரையில் பெண்ணாகப் பிறந்தவர் ஆணைச் சார்ந்தே வாழவேண்டியிருந்தது. இப்போது ஆண் உதவியில்லாமல் சமுதாயத்தில் வாழலாம் என்ற நம்பிக்கையை அரசு சமூக நலத் துறையின் வாயிலாக ஏற்படுத்தியுள்ளது.

பிற்பகல் 1-10

2011–2012 ஆம் ஆண்டில் ஏழைப் பெண்கள், ஏழை விதவைப் பெண்கள், ஆதரவற்ற பெண்கள், விதவைகளின் மறுமணத்திற்கும் மற்றும் கலப்புத் திருமணத்திற்கும் உதவித் தொகைகள் வழங்கியதோடு, தாலிக்கு 22 காரட் உள்ள 4 கிராம் தங்க நாணயம் வழங்கப்படும் என்பதையும், இத்திட்டத்தின்கீழ் ஒரு இலட்சத்து 69 ஆயிரம் குடும்பங்கள் பயன்பெறும் என்பதும் இந்த அரசின் பாராட்டுக்குரிய திட்டமாகும். அதேநேரத்தில், தாலிக்குத் தங்க நாணயம் கொடுப்பதைத் திருமணத்திற்குக் குறைந்தபட்சம் ஒரு வாரத்திற்கு முன்பே அரசு கொடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டம், பெண்களின் கல்வித் தரத்தை உயர்த்த உதவுகின்ற வகையில்



10 10 ஆம் வகுப்பு வரை படித்து 18 வயது பூர்த்தியடைய வேண்டுமென்பதையும், ஏழ்மையில் உள்ள பெற்றோர்கள் தங்களின் மகள் திருமணத்தை நடத்த ரூபாய் 25 ஆயிரமும், தாலிக்கு நான்கு கிராம் தங்கம் வழங்குவதையும் வரவேற்பதோடு பட்டம், பட்டயப் படிப்பு முடித்தவர்களுக்குத் தங்கமும், ரூபாய் 50 ஆயிரமும் வழங்கும் இத்திட்டம் பாராட்டுக்குரியதாகும். அதேசமயத்தில், இத்திட்டத்தின்கீழ் பயனடைய ஆண்டு வருமானம் ரூபாய் 24 ஆயிரத்திற்குள் இருக்க வேண்டுமென்பதை இந்த அரசு முடிந்தவரை உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், இன்றைக்கு சித்தாள் வேலைக்குச் செல்கின்ற ஏழைத் தொழிலாளிகள்கூட குறைந்தபட்சம் 200 ரூபாய் ஈட்டுகின்றனர். இப்போதிருக்கின்ற விலைவாசி ஏற்றத்தில் அந்தப் பணம் அவர்களுக்குத் தினசரி வாழ்க்கையை நடத்தப் போதவில்லை. எனவே, வருமான வரம்பு வைத்துள்ள தமிழக அரசின் அனைத்துத் திருமண உதவித் திட்டங்களுக்கும் வருமான வரம்பை உயர்த்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

இளம் விதவைகளுக்கு மறுவாழ்வு அளித்து ஊக்குவிக்கக்கூடிய டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமணத் திட்டத்திற்கு 2011–2012 ஆம் ஆண்டில் ரூபாய் 51.09 இலட்சம் ஒதுக்கியுள்ளதையும், இத்திட்டத்திற்கு வருமான உச்சவரம்பு இல்லாததையும் வரவேற்கின்றேன்.

இதைப்போலவே, ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவையர் மகள் திருமண உதவித் திட்டத்திற்கு ரூபாய் 1,810.88 இலட்சம் நிதி ஒதுக்கியதையும், அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்களுக்கான திருமண உதவித் திட்டத்திற்கு இந்த ஆண்டு ரூபாய் 168.81 இலட்சம் ஒதுக்கியதையும், அதன்மூலம் ரூபாய் 25 ஆயிரமும், பட்டம், பட்டயப் படிப்பு முடித்த மகளிருக்கு ரூபாய் 50 ஆயிரமும், தாலிக்கு 4 கிராம் தங்கம் கொடுப்பதையும் வரவேற்கின்றேன். ஆனாலும், ஆண்டு வருமான வரம்பை ரூபாய் 24 ஆயிரத்திலிருந்து முடிந்தவரை உயர்த்தித் தருமாறு தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

பெண்களின் உரிமைக்காகவும் முன்னேற்றத்திற்காகவும், மருத்துவத் துறையிலும், பொது வாழ்க்கையிலும் சிறப்பாகப் பணியாற்றி பாடுபட்ட டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி நினைவு கலப்புத் திருமண உதவித் திட்டத்திற்காக ரூபாய் 734.38 இலட்சம் இந்த அரசு ஒதுக்கியது வரவேற்கத்தக்கது. வருமான வரம்பு

நிர்ணயிக்காததும் மகிழ்ச்சிக்குரியது. அதேநேரத்தில், இத்திட்டத்தின்கீழ் மணமாகும் தம்பதியரில் ஒருவர் முற்பட்ட வகுப்பினராகவும், மற்றொருவர் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினராகவும் இருந்தால் ரூபாய் 25 ஆயிரமும், பட்ட, பட்டயப் படிப்பு முடித்திருந்தால் 50 ஆயிரம் எனவும் நிர்ணயித்திருப்பதையே மற்றொரு கலப்புத் திருமணமான தாழ்த்தப்பட்ட அல்லது பழங்குடி இனத்தவர் ஒருவரும் இதர வகுப்பினர் ஒருவரும் செய்துகொள்ளும் திருமணத்திற்குக் கொடுப்பதை மறுபரிசீலனைச் செய்து கலப்புத் திருமணத்திற்கு உயர்த்தித் தருமாறு இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

விதவைகள், ஆதரவற்றப் பெண்கள் மற்றும் வளரிளம் பெண்கள் தினசரி எதிர்கொள்ளும் இடர்பாடுகளிலிருந்து பாதுகாக்க தமிழக அரசு தாம்பரம், கடலூர், சேலம், தஞ்சாவூர், திருநெல்வேலி, சிவகங்கை, மதுரை ஆகிய இடங்களில் சேவை இல்லங்களை நடத்தி கல்வி, உணவு, உறைவிடம் மற்றும் தொழிற்கல்வியை அளிப்பதுடன் குழந்தைகளுடன் அங்கேயே தங்கவும், குழந்தைகளுக்கும் கல்வி வசதியை அளிக்கும் தமிழக அரசை மனமாரப் பாராட்டுவதோடு, தமிழ்நாட்டில் மிகப் பெரிய மாவட்டமான விழுப்புரம் மாவட்டத்திலும் அரசின் சேவை இல்லத்தைக் கொண்டுவர வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், வேலைக்குச் செல்லும் பெண்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்துக்கொண்டு வருவதால் அவர்கள் தங்குவதற்குத் தற்போது உள்ள 8 மகளிர் விடுதிகளைப்போல் தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும், மகளிர் தங்கும் விடுதிகளை அரசு அமைக்க முன்வர வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கடேசன், உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. எல். வெங்கடேசன்:** ஆதரவற்ற குழந்தைகள் அனைவரும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு, ஒவ்வொரு வளர்ச்சி வட்டாரத்திலும் முதியோருக்கும் ஆதரவற்ற குழந்தைகளுக்குமான சிறப்பு விடுதிகள் அடங்கிய ஒருங்கிணைந்த வளாகம் அமைக்கப்படுவதை வரவேற்கிறேன். ஆனால், அந்தத் திட்டம் எப்போதிலிருந்து செயல்படும் என்பதை அரசின் கொள்கை விளக்கக் குறிப்பேட்டிலே குறிப்பிடப்படவில்லை என்பதையும் தெளிவுபடுத்த விரும்புகின்றேன்.



1992 இல் சேலம் மாவட்டத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்களால் தொடங்கப்பட்ட "தொட்டில் குழந்தைத் திட்டம்" சிறப்பானத் திட்டம். இதனால் பெண்களின் பிறப்பு விகிதம் கூட வாய்ப்புள்ளது. நல்ல உள்ளம் கொண்டவர்கள்தான் இதுபோன்ற திட்டத்தை உருவாக்குகின்றார்கள்.

பிற்பகல் 1-15

மாண்புமிகு புரட்சிக் கலைஞர் கேப்டன் அவர்கள்கூட, சென்ற ஆண்டு ஆகஸ்டு மாதம் 25 ஆம் தேதி தமது பிறந்த நாளை முன்னிட்டு, அன்றைய தினம் அரசு மருத்துவமனைகளிலே பிறந்த அனைத்து பெண் குழந்தைகளுக்கும் தன் சொந்த பணத்தில் தலா ரூ.10,000/- வீதம் 420 குழந்தைகளுக்கு வங்கியிலே deposit செய்தார்கள் என்பதைப் பெருமையோடு கூறிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம் பெண்களின் பிறப்பு விகிதம் குறைந்துள்ள விழுப்புரம், கடலூர், திருவண்ணாமலை, பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டங்களில் பெண்களின் பிறப்பு விகிதம் கூடும் என்பது வரவேற்கத்தக்கதாகும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 'பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் ஒரு பெண் குழந்தை பிறந்தால் ரூ.50,000/-மும், இரண்டு பெண் குழந்தைகள் பிறந்தால் தலா ரூ.25,000/-மும் கொடுக்கப்படுமென்று கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு வேளை ஒரே பிரசவத்தில் 2 அல்லது 3 பெண் குழந்தைகள் பிறந்தால் அரசு என்ன நிலைப்பாட்டை எடுக்கும் என்பதைத் தெளிவுப்படுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன், உரையை முடித்துக்கொள்ளுங்கள். மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

**மாண்புமிகு திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கு முதலில் என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

'மனித குலத்தின் மணி விளக்கு, மகளிர் நலன் காக்கும் ஒளி விளக்கு, ஒன்றரை கோடி செல்லப் பிள்ளைகளைத் தொண்டர்களாய் கொண்டிருக்கும் அன்புக் கடல். தமிழகம் இழந்த பெருமைகளையெல்லாம் மீட்டுத் தருகின்ற அறிவுச் சுடர். (மேசையைத் தட்டும் ஒலி) உலக தமிழினத்தின் ஒரே தலைவர்,

ஹிலாரி கிளிண்டன் முதல் மேலை நாட்டு தலைவர்களும் தேடி வந்து பாராட்டும் எங்களின் தெய்வத் தாய், பேரறிஞர் அவர்களின் வழி நடக்கும் பெண் அறிஞர். எங்களையெல்லாம் வழி நடத்தும் எங்கள் குடும்ப குல தெய்வம். சத்துணவு தந்த சரித்திர நாயகன், பொன்மனச் செம்மல், பாரத ரத்னா, புரட்சித் தலைவர் அவர்களுடைய ஒரே அரசியல் வாரிசு. *(மேசையைத் தட்டும் ஒலி)* பெண் இனமே பெருமைகொள்ளும் எங்களுடைய பெருந்தலைவி, தாயன்பால் தமிழ்நாட்டை ஆளுகின்ற தவப் புதல்வி, மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு முதற்கண் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

ஒரு சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை, கனிந்த தாயன்போடு காப்பாற்றி, நெஞ்சிலே உரமூட்டி, வாழ வழிகாட்டி, 1996 ஆம் ஆண்டு மாவட்ட மகளிர் அணி இணைச் செயலாளராகவும், 1997 ஆம் ஆண்டு மாவட்ட மகளிர் அணிச் செயலாளராகவும், கழகத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும், கழகத்தில் பொறுப்புகள் தந்து என்னை அரசியலில் அடையாளம் காட்டியவர். 1996 ஆம் ஆண்டு முதல் 2006 ஆம் ஆண்டு வரை இருமுறை பேரூராட்சி மன்றத் தலைவராகவும், இருமுறை சட்டமன்ற உறுப்பினராகவும் என்னை வெற்றி பெற வைத்தவர். நான் கனவிலும் நினைத்துப் பார்த்திராத வகையில் இம்முறை சமூக நலத் துறை அமைச்சராக்கி, பாரம்பரியமிக்க இந்த அவையிலே எனக்குப் பேச வாய்ப்பளித்த, மாண்புமிகு இதய தெய்வம், நான் நித்தம் நித்தம் வணங்குகின்ற எங்களின் குடும்ப குல தெய்வம், மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். நானும், என் குடும்பத்தாரும் என்றென்றும் நன்றி விசுவாசத்தோடு இருப்போம் அம்மா. *(மேசையைத் தட்டும் ஒலி)*

எனக்கு வாக்களித்து வெற்றிபெறச் செய்த புவனகிரி தொகுதி வாக்காள பெருமக்களுக்கும், எனது வெற்றிக்கு உழைத்திட்ட கழக முன்னோடிகளுக்கும், கூட்டணிக் கட்சித் தோழர்களுக்கும் என்னுடைய கோடானு கோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் கொள்கை விளக்க அறிக்கையினை சமர்ப்பித்திடவும், அதனைத் தொடர்ந்து மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் பங்கேற்ற விவாதங்களுக்கு உரிய விளக்கங்களை அளித்திடவும் வாய்ப்பளித்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்



தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் என்னுடைய கோடானு கோடி நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி என்னுடைய பதிலுரையைத் தொடங்குகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

நான் சார்ந்துள்ள சமூக நலத் துறை, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் செல்லப்பிள்ளையான துறை என்பதில் எனக்குக் கூடுதல் பெருமை. மகளிர் நலம் காப்பதில் மாணிக்கமாய் திகழும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், சமூகத்தில் நலிவுற்ற பிரிவினருக்கு குறிப்பாக, பெண்களுக்கு முன்னோடியான பல திட்டங்களை வழங்குவதில் இந்திய நாட்டுக்கே முன்னுதாரணமாக விளங்கி வருகிறார்கள்.

*பிற்பகல் 1-20*

பெண் குழந்தைகளைக் கருவிலேயே கண்டறிந்து கொன்று புதைக்கும் கொடிய வழக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைத்திட்ட தொட்டில் குழந்தைத் திட்டம்; ஆண் மகவை விரும்பும் மனப்போக்கை அகற்றி, பெண் குழந்தைகளைப் பேணிக் காத்திட்ட பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டம்; 'சிட்டிசன்' என்ற சொல்லை 'குடிமகன்' என்று இருபாலருக்கும் பொதுவாகப் பயன்படுத்தி வந்ததை நீக்கி, பெண்கள் 'குடிமகள்' என்று அழைக்கப்பட வைத்த ஆணை; பெற்றெடுத்த தாயினுடைய பெயரின் முதல் எழுத்தை குழந்தையின் தலைப்பெழுத்தாக, இனிஷியலாகச் சேர்க்கலாம் என்ற உத்தரவு; முறத்தால் புலியைத் துரத்திய வீரத் தமிழ்ப் பெண்களின் வழித்தோன்றலாய் திகழும் துணிவு மிக்கப் பெண்களுக்கு கல்பனா சாவ்லா விருது; பெண்கள் எந்தவிதத் தயக்கமோ, பயமோ இன்றி காவல் நிலையங்களை எளிதில் அணுகி தங்களது பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள முதல் முதலாக அனைத்து மகளிர் காவல் நிலையங்கள்; *(மேசையைத் தட்டும் ஒலி)* மகளிர் பிரச்சினைகளை விரைந்து தீர்த்து வைக்க மகளிர் நீதிமன்றங்கள்; நாட்டிலேயே முதல் முதலாக இராணுவத்திற்கு ஈடான பயிற்சிபெற்ற தமிழ்நாடு மகளிர் காவல் அணி என்று மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் அடுக்கடுக்கான திட்டங்கள் பெண்களுக்காக அணிவகுத்து வந்தன. *(மேசையைத் தட்டும் ஒலி)*

ஆனால், அந்தத் திட்டங்கள் தொடர முடியாதபடி இடையில் ஓர் இருண்ட காலம் வந்தது. "தருமத்தின் வாழ்வுதனை சூது கவ்வும், தருமம் மறுபடியும் வெல்லும்" என்பதற்கேற்ப, அந்த இருள்

நீங்கி, இன்று புதிய ஒளி பிறந்துள்ளது. தமிழகத்து மக்களின், குறிப்பாக தமிழகத்திலுள்ள அத்தனை பெண்களின் ஒட்டுமொத்த அன்பையும், ஆதரவையும் பெற்று மாண்புமிகு அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்களின் வாக்குறுதிகளை ஏற்று, மாற்றம் தந்த மக்களுக்கு ஏற்றம் தரும் வகையில், மகளிர் நலனுக்கான திட்டங்களும், சாதனைகளும் தினம் தினம் தொடர்ந்து வருவதைக் கண்டு மக்கள் பிரமித்து நிற்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் மேலான எண்ணத்தில் உதித்த பெண்களின் முன்னேற்றத்திற்கான பெருமைமிகு திட்டங்களைச் செயல்படுத்தும் துறை என்ற வகையில், மனிதநேயமிக்க அம்மா அவர்களின் இதயத்திற்கு மிக அருகில் நாங்கள் இருக்கிறோம் என்பதால், நான் மட்டுமல்ல என் துறையைச் சார்ந்த ஒவ்வொருவரும் பெருமையும், பேருவகையும் கொள்கிறோம்.

தங்கத்திற்கு மரியாதையே தனிதான். அந்தத் தங்கத்திற்கு ஈடு தங்கத் தாரகையான எங்கள் அம்மாதான். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் தங்கமே, தமிழ்நாட்டின் ஏழைப் பெண்களின் திருமணத்திற்கு திருமாங்கல்யம் செய்ய தங்கம் வழங்க உத்தரவிட்டதால் விளைந்ததுதான் திருமாங்கல்யத்திற்குத் தங்கம் வழங்கும் திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) வானுயர முட்டும் தங்கத்தின் விலையேற்றத்தால் தாலி செய்யக்கூட தங்கம் வாங்க முடியாமல் தவிக்கும் ஏழைப் பெண்களின் பெற்றோர்கள் மனம் குளிரும் வண்ணம் திருமண நிதியுதவியாக ரூ.25,000 மற்றும் அவர்கள் தங்களின் பண்பாடு மற்றும் பழக்கவழக்கத்திற்கேற்ப திருமாங்கல்யம் செய்துகொள்வதற்கு 4 கிராம் 22 கேரட் தங்க நாணயமும் இலவசமாக வழங்கப்படுகிறது. திருமாங்கல்யம் செய்ய வழங்கப்படும் தங்கம் இத்துறையின் அனைத்துத் திருமண உதவித் திட்டங்களுக்கும் வழங்கப்படுகிறது.

“பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்” என்ற பாரதியின் வாக்கிற்கேற்ப பெண்கள் உயர் கல்வி கற்பதை ஊக்குவிக்கும் விதமாக, பட்டம் மற்றும் பட்டயப் படிப்பு தேர்ச்சி பெற்ற ஏழைப் பெண்களுக்கு திருமணத்திற்காக திருமாங்கல்யம் செய்வதற்கு 4 கிராம் 22 கேரட் தங்க நாணயத்துடன் நிதியுதவித் தொகையாக 25,000 ரூபாய்க்குப் பதில்



50,000 ரூபாயாக வழங்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு உத்தரவிட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் புதுமையான திட்டம் ஏழைப் பெற்றோர் தம் பெண்களின் திருமணத்திற்கு எதிர்கொள்ளும் பொருளாதார ரீதியான சிரமங்களை முற்றிலுமாகக் குறைத்துள்ளது.

பெண்கள் சுய சார்புடன் பொருளாதார சுதந்திரம் பெற்றிட உரிய வாய்ப்புகளை உருவாக்கித் தர வேண்டும் என்பது மாண்புமிகு அம்மா அவர்களது உயரிய நோக்கமாகும். சமூக நலத் துறையின் கீழுள்ள 80 தையற் கூட்டுறவுச் சங்கங்களைச் சார்ந்த பெண் உறுப்பினர்கள் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ் பள்ளிகளில் சத்துணவு சாப்பிடும் குழந்தைகளுக்குச் சீருடை தைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். அவர்களுக்கு மிகக் குறைந்த அளவே தையற் கூலி வழங்கப்பட்டு வந்தது. தங்களுக்கு வழங்கப்பட்டு வந்த தையற் கூலியை உயர்த்தி வழங்க வேண்டுமென்று பலமுறை கோரிக்கை வைத்தும் கடந்த ஆட்சியாளர்களின் காதுகளில் அது விழவேயில்லை. அவர்களது இந்தக் கோரிக்கை செவிடன் காதில் ஊதிய சங்காயிற்று. ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதும், அந்தக் கூட்டுறவுச் சங்கங்களைச் சார்ந்த 41,598 பெண் உறுப்பினர்களும் தங்கள் வருவாயைப் பெருக்கிக்கொள்ளும் விதமாக சீருடை தைப்பதற்கு அவர்களுக்கு வழங்கப்பட்டுவரும் தையற் கூலியை தற்போதைய சந்தை விலைப்படி உயர்த்தி வழங்கக் கருணை உள்ளத்தோடு உத்தரவிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-25

இந்த ஆண்டு பள்ளிக் குழந்தைகளுக்கு இரண்டு இணைச் சீருடைகள் வழங்கவும், அடுத்த கல்வியாண்டில் நான்கு இணைச் சீருடைகள் வழங்கவும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த ஆணைகள் தையற் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களின் வருவாயைக் கணிசமாக உயர்த்தி, அவர்களது வருவாயைப் பெருக்குவதுடன், அவர்கள் சுயசார்புடன் வாழவும் வழிவகை செய்துள்ளது. மேலும், அடுத்த கல்வியாண்டு முதல் ஆறாம் வகுப்பு மற்றும் அதற்கு மேலும் உள்ள வகுப்புகளில் பயிலும் மாணவர்களுக்கு முழுக்கால் சட்டையும், மாணவிகளுக்கு சல்வார்

கமிசும் வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இது பள்ளிக் குழந்தைகளிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

பெண் குழந்தைகள் என்றாலே பேரழகு. வீட்டிலே கலகலப்பும், மகிழ்ச்சியும் இருக்க வேண்டுமென்று சொன்னால், கண்டிப்பாகப் பெண் குழந்தைகள் இருக்க வேண்டும். பெண் குழந்தைகள் வளர, வளர அவர்களோடு சேர்ந்து மகிழ்ச்சியும், வீட்டிலே விழாக் கொண்டாட்டங்களும் பெருகும்.

ஆனால், இப்படிப்பட்ட பெண் குழந்தைகளை அறியாமை காரணமாகவும், வறுமை காரணமாகவும் வேண்டாமென்று வெறுத்து ஒதுக்கி, அவர்களைக் கருவிலேயே அழிக்கும் கொடிய பழக்கம் தமிழ்நாட்டில் சில பகுதிகளில் கடைபிடிக்கப்பட்டு வந்தது. பெண் சிசுக் கொலை என்னும் இந்தக் கொடுமையை அறவே ஒழிக்க, கனிந்த தாயன்புடன் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களால் 1992 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட விடிவெள்ளித் திட்டம்தான் "தொட்டில் குழந்தைத் திட்டம்." (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியா மட்டுமல்லாது, உலக நாடுகளின் பாராட்டைப் பெற்ற இந்தப் புதுமைத் திட்டத்தால் சேலம், மதுரை, தேனி, திண்டுக்கல் மற்றும் தருமபுரி ஆகிய மாவட்டங்களில் குழந்தை பாலின விகிதம் அதிகமாகி சமூகத்தில் சாதகமான விளைவுகள் ஏற்பட்டுள்ளன.

தொட்டில் குழந்தைத் திட்டத்தால் இதுவரை 3,131 குழந்தைகள், இறப்பின் பிடியிலிருந்து காக்கப்பட்டுள்ளனர். தெய்வமாக வந்து அவர்களைக் காத்தது மாண்புமிகு அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்தின் வாயிலாக மீட்கப்பட்ட குழந்தைகள், தத்தெடுப்புத் திட்டம் மூலமாக புதிய குடும்பச் சூழலிலோ அல்லது குழந்தைகள் காப்பகங்களிலோ வளர்ந்து, நல்ல கல்வி பெற்று, வளமான வாழ்க்கை பெற வழி அமைத்துத் தரப்பட்டுள்ளது என்பதை மிகுந்த பெருமையுடன் இந்த அவையில் எடுத்துக்கூற விரும்புகிறேன்.

2011 ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, கடலூர், அரியலூர், பெரம்பலூர், விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில், குழந்தை பாலின விகிதத்தில் பெண் குழந்தை விகிதம் கவனிக்கத்தக்க வகையில் குறைந்துள்ளது. எனவே, இந்த மாவட்டங்களிலும் தொட்டில் குழந்தைத் திட்டத்தை விரிவுபடுத்தியும், தொட்டில் குழந்தை வரவேற்பு மையங்களை 47 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கவும் மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)



பெண் குழந்தைகளின் காவல் தெய்வமாம் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் சீரிய எண்ணத்தில் உதித்ததுதான் "முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம்." இத்திட்டத்தை 1992 ஆம் ஆண்டு தமிழகத்தில் நடைமுறைப்படுத்தி, சமூகத்தில் பெண் குழந்தைக்கென ஒரு தனி இடத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் பெற்றுத் தந்துள்ளார்கள். இத்திட்டத்தால் ஆண் மகவை விரும்பும் மனப்போக்கு தமிழகத்திலிருந்தே விடைபெற்றுக் கொண்டுவிட்டது. சிறு குடும்ப முறையும் சமூகத்தால் விரும்பி ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் இதுவரை ஒரு பெண் குழந்தை மட்டும் உள்ள குடும்பத்தில் அப்பெண் குழந்தைக்கு வழங்கப்பட்டு வந்த 22 ஆயிரத்து 200 ரூபாயை, 50 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இத்தொகை ஆண்டு ஊக்கத் தொகையுடன் சேர்த்து இருபதாம் ஆண்டின் முடிவில் தோராயமாக ரூபாய் 3 இலட்சத்து 34 ஆயிரம் முதிர்வுத் தொகையாக அப்பெண் குழந்தைக்கு வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டு பெண் குழந்தைகள் மட்டும் உள்ள குடும்பத்தில் ஒவ்வொரு பெண் குழந்தைக்கும் வழங்கப்பட்டு வந்த 15 ஆயிரத்து 200 ரூபாயை, 25 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இத்தொகை ஆண்டு ஊக்கத் தொகையுடன் சேர்த்து இருபதாம் ஆண்டின் முடிவில் ஒவ்வொரு குழந்தைக்கும் தோராயமாக ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயாகக் கிடைக்கும். பெண் குழந்தைகளின் நலம் பேண தொலைநோக்குப் பார்வையுடன் இத்திட்டத்தைத் தொடங்கி வைத்து செயற்படுத்தும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு பெண்ணினமே நன்றி சொல்லிக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-30

தான் முதலமைச்சராகப் பணியேற்ற காலகட்டங்களில் எல்லாம், பெண்கள் மற்றும் பெண் குழந்தைகளின் கல்வியில் மாண்புமிகு அம்மா அவர்கள் அதிக அக்கறை காட்டிவரும் காரணத்தால், தமிழகத்தில் 2001 ஆம் ஆண்டு 64.43 சதவிகிதமாக இருந்த பெண் கல்வி விகிதம், அபார வளர்ச்சி கண்டு, 2011 ஆம் ஆண்டில் 73.86 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இது மாண்புமிகு அம்மா அவர்களின் மகத்தான சாதனைகளில் ஒன்றாகும்.

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், திருநங்கைகள்மீது கனிவான பார்வையும், அன்பும் கொண்டு, தமிழ்நாடு திருநங்கையர் நல வாரியத்தின் மூலமாக வருவாய் ஈட்டும் தொழில்களில் ஈடுபட முன்வரும் திருநங்கையர் சுயஉதவிக் குழுக்களுக்குத் தொழில் தொடங்க, 25 விழுக்காடு மானியத்தில் 15 இலட்சம் ரூபாய் வரை கடனுதவி வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

1982 ஆம் ஆண்டு பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர், மறைந்தும் மறையாமல் மக்கள் மனதில் இன்றும் நீக்கமற நிறைந்திருக்கும் அமரர் எம்.ஜி.ஆர். அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டதுதான் சத்துணவுத் திட்டம் என்பதை நாம் அனைவரும் அறிவோம். அதற்குப் பின்னர் இத்திட்டம் இந்தியா முழுமைக்கும் அறிமுகப்படுத்தப்பட்டது. இவ்வாறு சத்துணவுத் திட்டத்தைச் செயல்படுத்திய வகையில், புரட்சித் தலைவர் அவர்கள் இந்தியாவிற்கே வழிகாட்டியாக இருந்துள்ளார்கள். அவர்களின் வழிவந்த மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களும், தான் ஆட்சிப் பொறுப்பேற்ற காலங்களில் எல்லாம், மிகச் சிறப்பாக இந்தச் சத்துணவுத் திட்டத்தை வழி நடத்தி வந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

2001 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதும், பள்ளிகளில் சத்துணவு சாப்பிடும் குழந்தைகளுக்குக் கூடுதல் கலோரி சத்தும், கூடுதல் புரதச் சத்தும் கிடைக்கும் வகையில், சத்துணவுடன் உருளைக்கிழங்கும், கொண்டைக் கடலை அல்லது பச்சைப் பயறால் செய்யப்பட்ட சுண்டலும் வழங்க உத்தரவிட்டார்கள். தற்போது சுமார் 66,19,171 குழந்தைகள், சமைத்த சூடான சத்தான உணவை (மேசையைத் தட்டும் ஒலி) உருளைக்கிழங்கு மற்றும் கொண்டைக் கடலை அல்லது பச்சைப்



பயறுடன் செய்யப்பட்ட சுண்டலுடன் பெற்று, வலுவான எதிர்காலச் சமுதாயமாக உருவாகிக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் அறிவுரையின்படியும், வழிகாட்டுதலின்படியும், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம் தமிழகத்தில் மிகச் சிறப்புடன் செயல்பட்டு வருகிறது. இத்திட்டம் தொடர்பாக புதுடெல்லியில் அண்மையில் நடைபெற்ற அனைத்து மாநிலங்களின் அமைச்சர்கள் பங்கேற்ற கூட்டத்தில் கலந்து கொள்ளும் வாய்ப்பினை மாண்புமிகு அம்மா அவர்கள் எனக்கு வழங்கினார்கள். இந்தக் கூட்டத்தில், 'இந்தியாவிலேயே இந்தத் திட்டத்தை மிகச் சிறப்புடன் செயல்படுத்தும் மாநிலம் தமிழ்நாடு' என்று அனைத்துத் தரப்பினரும் பாராட்டினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

கருவிலே வளரும் குழந்தைகளுக்கும் சத்தான உணவு அளித்து, வாழ்க்கையை எதிர்கொள்ள வளரிளம் பெண்களுக்குப் பயிற்சி கொடுத்து, தாய்–சேய் நலனை மையமாகக் கொண்டு, ஊட்டச் சத்து மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்தும் வகையில் இன்னும் பல திட்டங்களை, குழந்தைகள் மையங்களை நவீனமயமாக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் அனைத்து குழந்தைகள் மையங்களுக்கும் புதிய கட்டடங்கள் கட்டவும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

'வாராது வந்த மாமணியாய்' தமிழகத்திற்குக் கிடைத்த மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், தான் ஆட்சிப் பொறுப்பிலிருந்த காலகட்டங்களிலெல்லாம் பெண்கள் மற்றும் குழந்தைகளின் உரிமைகள் மற்றும் பாதுகாப்பினை உறுதிசெய்யும் பல்வேறு நலத் திட்டங்களை அமல்படுத்தி வருகிறார்கள். பொருளாதார அவல நிலை காரணமாக, நெறி தவறிச் செல்லும் சிறார்கள், சமூகத்தால் புறக்கணிக்கப்படுகின்ற, இடர்பாடுகளை எதிர்கொள்கின்ற சிறார்கள் மற்றும் பெண்கள், சமூகப் பாதுகாப்புத் துறையால் மறுவாழ்வு பெறுகின்றனர். 'இத்தோடு இனி இல்லையோ வாழ்க்கை' என்ற தவிப்பின்றி நல்ல சூழ்நிலையில் இத்துறையின் இல்லங்களில் இவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

'கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்; கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்' என்பதன் அடிப்படையில், இவர்களது எதிர்காலம்

ஏற்றமுறும் வகையில், கல்வியோடு வருவாய் ஈட்டக்கூடிய நவீன தொழிற் பிரிவுகளில் பயிற்சியும் பெறுகின்றனர். இது இவர்களின் வாழ்வில் நிரந்தரமாக ஒளியேற்றுவதுடன் சமூகத்தில் சம அந்தஸ்துடனும், சுயசார்புடனும் சிறந்த குடிமக்களாகத் தொடர்ந்து வாழ வழிவகை செய்கிறது.

இல்லங்களில் தங்கியுள்ள குழந்தைகள் மற்றும் பெண்களின் பாதுகாப்பினை உறுதி செய்ய, இல்லங்களில் பல்வேறு உள்கட்டமைப்பு வசதிகளையும், குழந்தைகளின் மன வளத்தை மேம்படுத்த இல்ல வளாகங்களில் சித்திரம் வரைதல், தோட்டங்கள் அமைத்தல் போன்ற குழந்தை நேயச் செயல்பாடுகளை மேற்கொள்ளவும், குழந்தைகளின் விளையாட்டுத் திறன் உள்ளிட்ட பல்வேறு திறன்களை வெளிக் கொணர்ந்து, அவர்களது சக்தியை ஆக்கபூர்வ வழிகளில் ஒருமுகப்படுத்தவும், பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

பிற்பகல் 1-35

தங்களது குடும்பங்களில் உணர்வுபூர்வமான அரவணைப்பை இழந்து தவிக்கும் மூத்த குடிமக்களுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகிறார்கள். குடும்பத்தின் அன்புக்காக ஏங்கி நிற்கும் மூத்த குடிமக்கள் ஒரு பக்கம். அதே அன்பை எதிர்பார்க்கும் ஆதரவற்ற குழந்தைகள் மற்றொரு பக்கம். "அம்மா என்றாலே அன்பு" என்று அன்றே நம் மாண்புமிகு அம்மா அவர்கள் சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தாய் உள்ளத்தோடு, ஆதரவு இழந்த மூத்த குடிமக்கள் மற்றும் ஆதரவற்ற குழந்தைகள் ஆகியோரின் எண்ண ஓட்டத்தை நன்கு உணர்ந்து இவர்கள் தங்குவதற்கென ஒவ்வொரு வளர்ச்சி வட்டாரத்திலும் சிறப்பு இல்லங்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளாகங்கள் ஏற்படுத்தித் தர மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த இல்லங்களில் ஆதரவற்ற மூத்த மாற்றுத் திறனாளிகளையும் தங்க வைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

அனைத்து உள்ளுறைவோர்களும் பாசப் பிணைப்புடன் இருக்கும் சூழ்நிலையில், உண்ண உணவும், உடுக்க உடையும் வழங்கப்படுவதுடன், பொழுதுபோக்கு அம்சங்களும் ஏற்படுத்தித்



தரப்படும். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் உத்தரவுப்படி, தன்னார்வ நிறுவனங்கள் மற்றும் பெரிய தொழில் நிறுவனங்களின் சமூகக் கடமையின் ஒரு பகுதியாக அவர்களது உதவியுடன் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

நலிந்த பிரிவினரான ஆதரவற்ற முதியோர், மாற்றுத் திறனாளிகள், விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட ஆதரவற்ற பெண்கள், ஆதரவற்ற வேளாண் தொழிலாளர்கள் மற்றும் 50 வயதினை எய்தியும் திருமணமாகாமலிருக்கும் உழைக்கும் திறனற்ற ஏழைப் பெண்கள் ஆகியோரின் நலனில், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் மிகுந்த அக்கறை கொண்டு, தாம் ஆட்சிப் பொறுப்பேற்ற அன்றே, அவர்கள் ஏற்கெனவே பெற்றுவந்த மாதாந்திர ஓய்வூதியத் தொகையை இரட்டிப்பாக்கி 500 ரூபாயிலிருந்து 1,000 ரூபாயாக உயர்த்தி வழங்க ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பயனாளிகள் அனைவரும் ஜூன் மாதம் முதல் 1,000/– ரூபாயை ஓய்வூதியமாகப் பெற்று, நன்றி கலந்த மகிழ்ச்சியுடன், மாண்புமிகு அம்மா அவர்களை மனம் நெகிழ்ந்து, உளமார வாழ்த்திய வண்ணம் உள்ளனர். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தியாவிலேயே ஓய்வூதியத் தொகையினை இந்த அளவுக்கு அதிகம் கொடுக்கும், அதிக மக்கள்தொகை கொண்ட பெரிய மாநிலம் வேறு எதுவுமே இல்லை. உதாரணத்துக்கு எடுத்துச்சொன்னால், இந்தியாவின் வட திசையில் காஷ்மீர் மாநிலத்தில் 325 ரூபாயும், கீழ் திசையில் மேற்கு வங்க மாநிலத்தில் 400 ரூபாயும், மேல் திசையில் மகாராஷ்டிரா மாநிலத்தில் 600 ரூபாயும், இன்னும் சொல்லப்போனால், நமது தமிழகத்திற்கு அருகே உள்ள கேரள மாநிலத்தில் 300 ரூபாயும், ஆந்திர மாநிலத்தில் வெறும் 200 ரூபாய் மட்டுமே முதியோருக்கு ஓய்வூதியமாக வழங்கப்பட்டு வருகிறது. ஆனால், தமிழகத்தில் மட்டும்தான், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் மனித நேயத்தின் சிகரமாக, கருணை உள்ளத்தோடு மாத ஓய்வூதியத்தை 1,000/- ரூபாயாக உயர்த்தி வழங்க ஆணையிட்டு வரலாற்றுச் சாதனையை நிகழ்த்தியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

தேசிய ஓய்வூதியத் திட்டங்களின்கீழ் பயன்பெறும் வயது வரம்பினை குறைத்ததன்மூலம் தமிழகத்தில் தற்போது மாத ஓய்வூதியம் பெற்றுவரும் சுமார் 24 இலட்சம் பயனாளிகளுடன் கூடுதலாக 5 இலட்சத்து 36 ஆயிரம் ஏழைகளும் மாதாந்திர ஓய்வூதியத் தொகையாக 1,000/- ரூபாய் பெறுவார்கள்.

[திருமதி செல்வி ராமஜெயம்] [2011 செப்டம்பர் 6

தமிழ்நாட்டில் ஏழை, எளிய மக்களின் வாழ்க்கையில் ஒளியேற்றும் வகையில், அனைத்து ஓய்வூதியத் திட்டங்களும் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவில், ஆண்டொன்றிற்கு சுமார் 3,700 கோடி ரூபாய் செலவிட மாண்புமிகு அம்மா அவர்கள் அனுமதி அளித்து சாதனை படைத்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு 10-6-2011 அன்று பதிலளிக்கும்போது, "முதியோர் உதவித் தொகை உட்பட அரசின் மாதாந்திர ஓய்வூதியத் திட்டங்களுக்கான விண்ணப்பங்கள் வட்டாட்சியர், மண்டல துணை வட்டாட்சியர், வருவாய் ஆய்வாளர் அடங்கிய குழுவினரால் சரிபார்க்கப்பட்டு, ஓய்வூதிய ஆணைகள் விரைந்து வழங்கப்பட நடவடிக்கை எடுக்கப்படும்" என அறிவித்துள்ளார்கள். இதன்படி ஓய்வூதியம் பெற விரும்புவோர் அந்தந்த கிராமங்களிலேயே, கிராம நிர்வாக அலுவலரிடம் திங்கட்கிழமைதோறும் மனு வாங்கவும், அம்மனுவினை அந்த வார வெள்ளிக்கிழமையே தனது அறிக்கையுடன், சமூகப் பாதுகாப்பு தனி வட்டாட்சியருக்கு அனுப்பவும், அவ்வாறு பெறப்படும் மனுக்களையும், அறிக்கைகளையும் மூவர் குழு ஆய்வு செய்து தகுதியுடைய பயனாளிகளுக்கு விரைந்து ஓய்வூதியம் வழங்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. அரசு நலத் திட்டங்கள் அனைத்தும் சிறப்பான முறையில் மக்களைச் சென்றடைய மின்னாளுமை முயற்சிகளுக்கும், நிர்வாகச் சீரமைப்பு முயற்சிகளுக்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

பிற்பகல் 1-40

இதன்படி சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் மாதந்தோறும் வழங்கப்படும் ஓய்வூதியத் தொகையைப் பயனாளிகள் எந்தவித இடர்பாடும் இன்றிப் பெற்றிட, பயனாளிகள் பெயரில் வங்கிக் கணக்கு துவக்கப்பட்டு, பயோ மெட்ரிக் ஸ்மார்ட் அட்டையின் பயன்பாட்டுடன் (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படும். இத்திட்டத்தின்படி ஒவ்வொரு வங்கியின் சேவையாளர்களும் பயனாளிகளின் கிராமங்களுக்கே சென்று ஓய்வூதியம் வழங்குவார்கள். இத்திட்டம் கடலூர் மாவட்டத்தில் காட்டுமன்னார்கோவில், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் மணப்பாறை, கன்னியாகுமரி மாவட்டத்தில் தோவாளை ஆகிய மூன்று வட்டங்களில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் தன்னுடைய திருக்கரங்களால் 2–9–2011 அன்று துவக்கி வைத்தார்கள் என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.



2011 செப்டம்பர் 6] [திருமதி செல்வி ராமஜெயம்]

சொந்த நாட்டில் வாழ்க்கையைத் தொலைத்து தஞ்சமென வந்து தமிழ் மண்ணிலே தங்கி இருக்கும் முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் கருணை உள்ளத்தோடு மாதம் ஆயிரம் ரூபாய் ஓய்வூதியத் தொகையாக வழங்க உத்தரவிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 5,544 முகாம்வாழ் இலங்கைத் தமிழர்கள் இந்த ஓய்வூதியத் தொகையை மாதாமாதம் பெறுவர்.

அதேபோல, சமூக நலத் துறை மூலமாக செயல்படுத்தப்பட்டு வரும் திருமாங்கல்யம் செய்ய தங்கத்துடன் திருமண நிதி உதவித் திட்டம், பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் மற்றும் தையல் இயந்திரம் வழங்கும் திட்டம் ஆகிய நலத் திட்டங்களின் பயன்பாடுகளையும் அவர்களுக்கு வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

தமிழினத்தின் தலைவர் என தம்பட்டம் அடித்துக் கொள்பவர்களின் சிந்தனையில்கூட இது உதிக்கவில்லை. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் இலங்கைவாழ் தமிழர்களுக்கு தேடித் தேடி அவர்களே வழங்கினார்கள். அவர்கள் எல்லாம் கேட்கவில்லை. கேட்காமல் வாரி, வாரி வழங்குபவர்தான் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டில் சமூகத்தில் நலிந்த பிரிவினருக்கு சமூக நலத் துறையால் அளிக்கப்படும் அனைத்து திட்ட உதவிகளையும் முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கும் விரிவுபடுத்தி மாண்புமிகு அம்மா அவர்களே "தமிழர்களின் காவல் தெய்வம்" என்பதை நிரூபித்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காக மாண்புமிகு அம்மா அவர்களை உலகெங்கும் வாழும் தமிழ்ச் சமுதாயம் நன்றியுணர்வுடன் என்றென்றும் பாராட்டிக்கொண்டிருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆட்சிக் காலம் என்றாலே, பெண்களுக்கு பொற்காலம்தான். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள் சுட்டிக்காட்டுகின்ற திசையிலே எட்டிப் பாய்கின்ற ஈட்டியாக சமூக நலத் துறை செயலாற்றும். மாண்புமிகு அம்மா அவர்கள் வகுத்துத் தருகின்ற அத்துணைத் திட்டங்களையும் (மேசையைத் தட்டும் ஒலி) வெற்றிகரமாக நிறைவேற்றுவோம் என்பதை மெத்தப் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

## மாற்றுத் திறனாளிகள் நலத் துறை

7 கோடி தமிழக மக்களின் நெஞ்சங்களிலெல்லாம் வீற்றிருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி, சமூக நீதி காத்த வீராங்கனை மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்பாதம் பணிந்து, மாற்றுத் திறனாளிகளின் நலத் துறையின் 2011–2012 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின்மீது எனது பதிலுரையை இந்த மாமன்றத்திற்குச் சமர்ப்பிக்கின்றேன்.

ஒரு காலத்தில் சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டவர்களாக மாற்றுத் திறனாளிகள் இருந்தனர். சமூகத்தில் அவர்களுக்கும் சம உரிமை இருக்கிறது என முழக்கமிட்டு, 1993 ஆம் ஆண்டிலேயே சமூக நல இயக்ககத்திலிருந்து பிரித்து, தனியாக ஊனமுற்றோருக்கான இயக்குநரை (மேசையைத் தட்டும் ஒலி) முதன்முதலாக தமிழகத்தில் நியமித்து, மாற்றுத் திறனாளிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காகப் பாடுபட்டவர் மாண்புமிகு அம்மா அவர்கள்தான். அதோடுமட்டுமில்லாமல், மாண்புமிகு அம்மா அவர்கள் 1994 ஆம் ஆண்டில் மாற்றுத் திறனாளிகளுக்காக முதன்முதலாக ஒரு மாநிலக் கொள்கையை வகுத்து வெளியிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் மாநிலக் கொள்கையை வகுத்த book இதுதான். அதை அனைத்து மாமன்ற உறுப்பினர்களுக்கும் காட்டுவதற்கு நான் மிகுந்த பெருமைப்படுகிறேன் என்பதைக் கூறிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) முதன்முதலாக ஒரு மாநிலக் கொள்கையை வகுத்து வெளியிட்டார். அதன் பின்னர்தான் இந்திய அளவில் மாற்றுத் திறனாளிகளுக்கென ஊனமுற்றோர், இணையான வாய்ப்புகள், உரிமைகள், பாதுகாப்பு மற்றும் முழு பங்கேற்பு சட்டம் 1995-ல் மத்திய அரசால் சட்டமாக இயற்றப்பட்டது.

இந்திய அளவில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் மாற்றுத் திறனாளிகளுக்காக தனியாக ஒரு மாநிலக் கொள்கையை முதன்முதலாகக் கொண்டுவந்தார்கள் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். அதன் பின்னர்தான் மத்திய அரசு ஒரு சட்டத்தை இயற்றியது. மாற்றுத் திறனாளிகள் நலனைப் பேணிக் காப்பதில் இந்தியாவிற்கே ஒரு வழிகாட்டியாக மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்தான் உள்ளார்கள் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அவையில் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.



மாண்புமிகு அம்மா அவர்களுடைய கொள்கையின் அடிப்படையில் மத்திய அரசு கொண்டுவந்த சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கோ அல்லது மாண்புமிகு அம்மா அவர்கள் 1994 ஆம் ஆண்டிலேயே மாற்றுத் திறனாளிகளுக்காகக் கொண்டு வந்த மாநிலக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கோ கடந்த ஆட்சியில் எந்தவிதமான அக்கறையும் காட்டவில்லை.

பிற்பகல் 1-45

மாண்புமிகு அம்மா அவர்கள், மாற்றுத் திறனாளிகளுக்கென கொண்டு வந்த கொள்கையை முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு சரிவர கடைபிடித்து வந்திருந்தால் மாற்றுத் திறனாளிகளின் வாழ்வு உயர்ந்து இந்தச் சமுதாயத்தில் அவர்களும் எல்லாவிதமான சலுகைகளையும் அடைந்து சம வாய்ப்பு பெற்று அவர்களும் வாழ்வில் முன்னேற வாய்ப்பு கிடைத்திருக்கும். ஆனால், கடந்த மைனாரிட்டி தி.மு.க. அரசு மாண்புமிகு அம்மா அவர்கள் மாற்றுத் திறனாளிகளுக்காக கொண்டு வந்த நல்ல கொள்கைகளைக் காற்றில் பறக்கவிட்டதன் காரணமாக இன்று மாற்றுத் திறனாளிகள் வேலைவாய்ப்பின்றியும், சரியான பயிற்சியின்றியும் அவர்களுடைய திறமைகளை வளர்த்துக்கொள்ள எந்தவிதமான வாய்ப்புமின்றி அவதியுறுகின்ற நிலைதான் இன்று தமிழகத்தில் நிலவி வருகிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

மாற்றுத் திறனாளிகளின் அவல நிலையை கண்ணுற்றுதான் மாண்புமிகு அம்மா அவர்கள் தன்னுடைய தேர்தல் அறிக்கையில் "மாற்றுத் திறனாளிகளுக்கென 3% இட ஒதுக்கீடு அரசுப் பணியில் ஒதுக்கப்படும் என்றும், அதை அரசு நிரப்ப உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், மேலும் அவர்களுக்கென சிறப்புப் பயிற்சி அளித்து, அவர்களுக்கு தனியார் நிறுவனங்களில் இட ஒதுக்கீடு செய்து வேலைவாய்ப்பிற்கு ஏற்பாடு செய்து தரப்படும் என்றும், அதற்குரிய சிறப்புச் சலுகைகள் பரிசீலிக்கப்பட்டு, அறிவிக்கப்படும்" என்றும் அறிவிப்பு செய்துள்ளார்கள். அதோடுமட்டுமில்லாமல், இதனை நிறைவேற்றுவதற்கு தலைமைச் செயலாளரின்கீழ், பல்துறை செயலாளர்களைக் கொண்ட ஒரு குழு அமைத்து, அனைத்து அரசுப் பணிகளிலும் மூன்று விழுக்காடு இட ஒதுக்கீடு நடைமுறைப்படுத்தப்படுவதைக் கண்காணிக்கும் என்ற அறிவிப்பையும் 2011–2012 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் தெரிவித்துள்ளார்கள். 3% இட ஒதுக்கீடு வழங்கப்படும் என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு. திருப்பூரில் உள்ள சிக்கன்னா அரசு

கலைக் கல்லூரியின் முதல்வராக பார்வைத் திறனற்ற திரு. பிரபு என்பவரை பணி நியமனம் செய்தது மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள்தான். இது பார்வையற்றோர்மீது மாண்புமிகு அம்மா அவர்கள் வைத்துள்ள அன்பைக் காட்டுகிறது. இதுவரை யாருமே செய்யாததை, மாற்றுத் திறனாளிக்கு உயர் பதவி வழங்கி இருக்கிறார்கள் என்று சொல்லும்போது, மாண்புமிகு அம்மா அவர்கள் மாற்றுத் திறனாளிகளை எவ்வளவு கருணையுடன் அணுகுகிறார்கள் என்பதற்கு இதுவே ஒரு சான்றாகும். எனவே, மாற்றுத் திறனாளிகளுக்கு அரசுப் பணியில் 3% வேலைவாய்ப்பு நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்குவார்கள் என்பதை இந்த மாமன்றத்தின் வாயிலாக நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள் மாற்றுத் திறனாளிகள் பல்வேறு பொதுக் கட்டடங்களுக்குச் செல்லும்போது அவர்களுக்கு ஏற்படுகின்ற சிரமங்களைக் களைய வேண்டும் என மிகவும் கூர்ந்து ஆய்வு செய்து, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு உட்பட்ட பகுதிகளில் கட்டப்பட்டு வரும் தனியார் மற்றும் அரசுக் கட்டடங்களில் மாற்றுத் திறனாளிகள் செல்வதற்குண்டான சாய்வு தளங்கள், மின்தூக்கி போன்றவை இருக்க வேண்டும் என ஒரு சட்டத்தை 2003 ஆம் ஆண்டு கொண்டு வந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும் அந்தச் சட்டத்தின்படி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிப் பகுதிக்கு உட்பட்ட கட்டடங்கள் அனைத்தும் சாய்வு தளம் மற்றும் கழிப்பறைகள் மாற்றுத் திறனாளிகள் பயன்படுத்துவதற்கு ஏற்றவாறு அமைத்தால்தான் கட்டட அனுமதி வழங்கப்படும் எனவும் ஆணை வெளியிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், அதற்குப் பின்வந்த மைனாரிட்டி தி.மு.க. அரசு இதுபோன்ற மாற்றுத் திறனாளிகள் பயன்படுத்துவதற்கு உரிய தடையற்ற சூழ்நிலையை உருவாக்குவதற்கும், தமிழகத்தின் மற்ற பகுதிகளில் இந்தச் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வரவும் எந்தவித முயற்சியும் செய்யவில்லை. நான் ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல், மாண்புமிகு அம்மா அவர்களால் உருவாக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான மாநிலக் கொள்கையை அம்மாவிற்குப் பிறகு வந்த மைனாரிட்டி தி.மு.க. அரசு நடைமுறைப்படுத்த முனையவில்லை. ஆனால், மூன்றாவது முறையாக தமிழகத்தில் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற மாண்புமிகு அம்மா அவர்கள் மாற்றுத் திறனாளிகள் (மேசையைத் தட்டும் ஒலி) பொது இடங்களுக்கும், பொதுக் கட்டடங்களுக்கும் எளிதாகச் செல்லும் வகையில் தடையற்ற சூழ்நிலையை உருவாக்குவற்காக



தனது தேர்தல் அறிக்கையில் "அரசு கட்டடங்கள் மற்றும் பொது இடங்கள், பேருந்து நிலையங்களில் உள்ள கழிப்பிடங்கள் மாற்றுத் திறனாளிகள் உபயோகிக்கும் வகையில் உடனடியாக மாற்றம் செய்யப்படும் என்றும் அனைத்து அரசு மற்றும் தனியார் கட்டமைப்புகளில் செயல்படுத்தும் வகையில் சிறப்பு அனுமதி பெற சட்டம் இயற்றப்பட்டு உத்தரவு வழங்கப்படும்" என்றும் அறிவித்தார்கள். அதன் அடிப்படையில் நகராட்சி கட்டட விதிகளையும் உள்ளாட்சித் துறை கட்டட விதிகளையும் வெகு விரைவில் மாற்றம் செய்து மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணை பெற்று, அரசாணை வெளியிடப்படும் என இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இதன்மூலம் தமிழகம் முழுவதும் தனியார் மற்றும் அரசுக் கட்டடங்களில் மாற்றுத் திறனாளிகள் எளிதாகச் சென்று வர எந்தவிதத் தடங்கலுமின்றி தடையற்ற சூழ்நிலை உருவாகும்.

பிற்பகல் 1-50

மாற்றுத் திறனாளிகளுக்காகப் பல்வேறுவகையான நலத் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டியது ஓர் அரசின் இன்றியமையாத கடமையாகும். இதற்காக கடந்த ஆட்சியில் மாற்றுத் திறனாளிகளின் நலனுக்காக வாரியம் ஒன்றினை 2007 ஆம் ஆண்டிலேயே அமைத்தார்கள். அவ்வாறு அமைக்கப்பட்ட வாரியம், பிறகு மூன்று ஆண்டுகள் கழித்து 2010 ஆம் ஆண்டு முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் தலைமையிலும் மற்றும் அவருடைய அருமை மகள் கனிமொழியை வாரியத்தின் ஆலோசகராகக் கொண்டு திருத்தி அமைக்கப்பட்டது. பார்த்தீர்களா! அவருடைய பதவி ஆசையால் மகளையும் ஆலோசகராகப் போட்டு வைத்திருக்கிறார். இதன்மூலம் இவர்களுடைய பதவி ஆசை மாற்றுத் திறனாளிகள் நல வாரியத்தையும் விட்டு வைக்கவில்லை என்பதை இம்மாமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், அவ்வாறு திருத்தியமைக்கப்பட்ட அவ்வாரியம் ஒரேயொருமுறைதான், அதுவும் சுயவிளம்பரத்திற்காகக் கூடியது; செயல் ஒன்றும் செய்யவில்லை. ஒரேயொருமுறை கூடிய வாரியக் கூட்டத்தில் செயலாக்கம் எதுவும் செய்யவில்லை. என்ன நோக்கத்திற்காக மாற்றுத் திறனாளிகளுக்காகத் தனி வாரியம் அமைக்கப்பட்டதோ அந்த நோக்கம் நிறைவேறவே இல்லை. மாற்றுத் திறனாளிகளின்மீது அக்கறை கொண்டவர்கள்போல் விளம்பரத்திற்காக ஒரு வாரியம் அமைக்கப்பட்டது. அதற்காக

ஒதுக்கப்பட்ட தொகைகூட சரிவர செலவிடப்படவில்லை. இயங்கா நிலையில் உள்ள அவ்வாரியத்தை மாற்றியமைக்க வேண்டியது அவசியமாகிறது.

கடந்த ஆட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக ரூ.5 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால், அந்த நிதி கடைசிவரை சரிவர செலவிடப்படவில்லை என்பதை இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாற்றுத் திறனாளிகள் அனைவருக்கும் தேசிய அடையாள அட்டையும், பாஸ் புத்தகமும் மற்றும் சான்றிதழ்களும் வழங்குவதை எளிமையாக்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் பதவியேற்றவுடனேயே 17-6-2011 அன்றே அரசாணையை வகுத்து, மருத்துவச் சான்றிதழ் வழங்கும் முறையை இலகுவாக்கி, அவர்கள் எளிதாக நலத் திட்டங்களைப் பெறுவதற்கு வழிவகுத்துள்ளார்கள் என்பதை இம்மாமன்றத்திற்குப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு கஜானாவை காலி செய்கின்ற அரசாகவே இருந்து வந்துள்ளது. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன், அரசின் கஜானா, ஆபுத்திரனின் அமுதசுரபியாக, மணிமேகலையின் கையில் இருந்த அட்சய பாத்திரமாக மாறி, (மேசையைத் தட்டும் ஒலி) எல்லாத் துறைகளும் கேட்கின்ற அளவுக்கு திட்டங்களுக்கான தொகையை வாரி வாரி வழங்கியுள்ளார்கள். எனவேதான் மாற்றுத் திறனாளிகள் கேட்காமலேயே, வாரி வழங்கிய வள்ளலாக அவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த பராமரிப்புத் தொகையை மாதமொன்றிற்கு ரூ.500/–லிருந்து ரூ.1,000/-ஆக உயர்த்தி அரசாணை வெளியிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோன்று மாற்றுத் திறனாளிகளுக்குத் திருமண உதவித் தொகை ரூ.25,000/- மற்றும் 4 கிராம் தங்கமும் கிடைக்கின்ற வகையில் அவர்களுடைய வாழ்விலே ஒளியேற்றி மாற்றுத் திறனாளிகளின் இதய தெய்வமாக விளங்கிக் கொண்டிருப்பவர்தான் நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டத்தின்கீழ் மாற்றுத் திறனாளிகள் கேட்காமலேயே திருமாங்கல்யத்துக்கு 4 கிராம் தங்கம் வழங்கியதோடு மாற்றுத் திறனாளிகளுக்கான திருமண நிதியுதவி வழங்கும் திட்டத்தின்கீழ் பட்டயம் மற்றும் பட்டப்



படிப்பு படித்த மாற்றுத் திறனாளிகளுக்குத் திருமண உதவித் தொகையாக ரூ.50,000/- வழங்க ஆணையிட்ட கொடை வள்ளல்தான் நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், மாற்றுத் திறனாளிகளுக்கான திருமணத் திட்டங்கள்மூலம் இதுவரை ஆண்டு ஒன்றிற்கு 490 பயனாளிகள் மட்டும் பயன்பெறும் வகையில் இருந்தது. பல வருடங்களாக நிலுவையிலிருந்த விண்ணப்பங்களுக்கு எந்தவிதமான திருமண உதவித் தொகையும் வழங்கப்படவில்லை என்பதைக் கேள்வியுற்ற மாண்புமிகு அம்மா அவர்கள் பயனாளிகளின் எண்ணிக்கை உச்சவரம்பினை நீக்கி உத்தரவு வழங்கியதுடன், இந்த ஆண்டு முதல் மாற்றுத் திறனாளிகளின் திருமண நிதி உதவிக்கு எவ்வளவு விண்ணப்பங்கள் வந்தாலும், அனைத்துத் தகுதியுள்ள விண்ணப்பங்களுக்கும் திருமண உதவித் தொகையும், 4 கிராம் தங்கமும் வழங்க உத்தரவிட்டுள்ளார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் நான் இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கேட்காமலேயே தருகின்ற கொடை வள்ளல்தான் மாண்புமிகு அம்மா அவர்கள் என்பதற்கு மற்றும் ஓர் எடுத்துக்காட்டு, சர்வதேச மாற்றுத் திறனாளிகள் நாள் குறித்த ஓர் அரசாணை ஆகும். சர்வதேச மாற்றுத் திறனாளிகள் நாள் டிசம்பர் திங்கள் 3 ஆம் நாளாக மாநில அரசால் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இந்த நாளில் அரசுப் பணியில் இருக்கும் மாற்றுத் திறனாளிகள் அனைவருக்கும் ஊதியத்துடன்கூடிய சிறப்பு தற்செயல் விடுப்பு வழங்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஆணையிட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், இச்சலுகை அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படுவதில்லை என்பதைக் கேள்வியுற்று, இந்த ஆண்டு முதல் அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் மாற்றுத் திறனாளி பணியாளர்களுக்கும் ஊதியத்துடன்கூடிய சிறப்புத் தற்செயல் விடுப்பு வழங்கி (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 1-55

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் இன்று 110-வது விதியின்கீழ் விளையாட்டு

வீரர்களுக்கான சில அறிவிப்புகளைச் செய்தார்கள். ஆனால், மாற்றுத் திறன் படைத்த சர்வதேச விளையாட்டு வீரர்களான திரு. எல். ஆல்பர்ட் இருதயராஜ், மற்றும் திரு. மு. ரெங்கசாமி ஆகிய இரு விளையாட்டு வீரர்களும் சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு பதக்கங்களைப் பெற்றுள்ளதாகவும், தற்போது நிலையான வேலையின்றி சிரமப்படுவதாகவும் தெரிவித்து, தங்களுக்கு அரசு வேலை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டனர். இவ்விரு மாற்றுத் திறன் படைத்த சர்வதேச விளையாட்டு வீரர்களின் கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்கள் தாயுள்ளத்துடன் பரிசீலித்து இவர்கள் இருவரையும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கட்டுப்பாட்டின்கீழ் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்ய (மேசையைத் தட்டும் ஒலி) 05-09-2011 அன்றே ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) மாற்றுத் திறனாளிகள் கோரிக்கை வைக்காமலேயே, மாண்புமிகு அம்மா அவர்கள் இது அவர்களுக்குத் தேவை, இதனைச் செய்து கொடுக்க வேண்டியது நமது கடமை என்று தாய் உள்ளத்தோடு செய்து வருகிறார்கள். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் முன் அனுமதியோடு பல்வேறு புதிய அறிவிப்புகளை இம்மாமன்றத்தில் சமர்ப்பிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

## அறிவிப்புகள்

*100 மாணவிகளுக்கு உயர் கல்வி பயில நிதி உதவி அளித்தல்.* சமூக நலத் துறையின் 7 சேவை இல்லங்கள் மற்றும் 27 அரசு குழந்தைகள் காப்பகங்களில் தங்கி 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவியரில் பெரும்பாலானோர் தமது வறிய நிலையின் காரணமாக கல்லூரிக் கல்வியைத் தொடர வழிவகையின்றி உள்ளனர். பெண் கல்வியில் முனைப்பு காட்டிவரும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு 100 மாணவிகளுக்கு தங்கள் இளங்கலைப் பட்டப் படிப்பு மற்றும் மருத்துவம், பொறியியல் போன்ற தொழில்முறைப் பட்டப் படிப்புகள் பயில உதவும் வகையில், உணவு, சீருடை மற்றும் கல்விச் செலவிற்காக, பட்டப் படிப்பு பயிலும் ஒரு மாணவிக்கு ஓர் ஆண்டிற்கு ரூ.30,000/–க்கு மிகாமலும் (மேசையைத் தட்டும் ஒலி) மருத்துவம், பொறியியல் போன்ற தொழில்முறைப் பட்டப் படிப்பு பயிலும் மாணவிக்கு ஆண்டொன்றுக்கு ரூ.50,000/-க்கு மிகாமலும் (மேசையைத் தட்டும் ஒலி) நிதியுதவி வழங்கும். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா



அவர்களின் ஆணைப்படி, இத்திட்டம் இந்த ஆண்டில் 34 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.

*100 மாணவிகளுக்கு ஆசிரியர் பயிற்சி மற்றும் செவிலியர் பயிற்சி பெற நிதி உதவி அளித்தல்.* சமூக நலத் துறையின் சேவை இல்லங்கள் மற்றும் குழந்தைகள் காப்பகங்களில் தங்கி, கல்வி பயின்று, 12 ஆம் வகுப்பு முடிக்கும் மாணவிகளில் ஆசிரியர் பயிற்சி மற்றும் மருத்துவம் சார்ந்த பணிகளில் பயிற்சி பெற விரும்பும் மாணவிகளின் பயிற்சிக்கான செலவை அரசே ஏற்கும். உணவு, சீருடை மற்றும் கல்விச் செலவிற்காக ஒரு மாணவிக்கு ஆண்டொன்றுக்கு ரூ.25,000/–க்கு மிகாமல் நிதியுதவி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களில் பயிற்சி பெறும் 100 மாணவிகள் இத்திட்டத்தால் பயன்பெறுவர். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைப்படி, இத்திட்டம் இந்நிதியாண்டில் 25 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

*தகவல், கல்வி மற்றும் தொடர்பு செயல்பாடு 2011–2012.* சமூக நலத் துறையால் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள் மற்றும் நிர்வகிக்கப்படும் பல்வேறு சட்டங்கள் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், தகவல், கல்வி மற்றும் தொடர்பு செயல்பாடுகள் சமூக நலத் துறைமூலம் மேற்கொள்ளப்படும். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைப்படி, இத்திட்டம் நடப்பு ஆண்டில், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தலா 2 இலட்சம் ரூபாய் வீதம் 32 மாவட்டங்களில் 64 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

*அரசு குழந்தைகள் காப்பகங்களில் உள்ள சமையற்கூடங்களை நவீனமயமாக்கல்.* சமூக நலத் துறையின் அரசு குழந்தைகள் காப்பகங்களில் உள்ளுறைவோர்களாகத் தங்கிக் கல்வி பயிலும் ஆதரவற்ற குழந்தைகளுக்கு சுகாதாரமான முறையிலும், சூடாகவும் தினமும் உணவு, பால் மற்றும் தேநீர் வழங்குவதற்கு ஏதுவாக எரிவாயு இணைப்புடன்கூடிய சமையல் கலன்கள் நிறுவப்படும். மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைப்படி, தருமபுரி மற்றும் திண்டுக்கல் ஆகிய இடங்களில் அமைந்துள்ள அரசு குழந்தைகள் காப்பகங்களில் தலா 6 இலட்சம் ரூபாய் வீதம் மொத்தம் 12 இலட்சம் ரூபாய் செலவில் இவ்வசதி ஏற்படுத்தித் தரப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திருமதி செல்வி ராமஜெயம்:** அனைத்து சேவை இல்ல மாணவிகளுக்கு கல்விச் சுற்றுலா ஏற்பாடு செய்தல். சமூக நலத் துறையின் அரசு சேவை இல்லங்களில், தங்கி கல்வி பெறும் ஆதரவற்ற பெண் குழந்தைகள், விதவைகள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு பள்ளிக் கல்வியுடன் பல்வேறு தொழிற்கல்வி பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன. இவர்கள் வெளிவட்டாரக் கல்வி தொடர்பான அனுபவங்களைப் பெறும் வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைப்படி, முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்குக் கல்விச் சுற்றுலா செல்ல இந்த ஆண்டு 3.26 இலட்சம் ரூபாய் செலவிடப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

சமூகப் பாதுகாப்புத் துறையின்கீழ் இயங்கும் அனைத்து நிறுவனங்களின் வசதிகளை மேம்படுத்துதல். சமூகப் பாதுகாப்புத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள 26 நிறுவனங்களில், உள்ளுறைவோரின் மன இறுக்கத்தைத் தளர்த்துவதற்காக, தியான வசதி கொண்ட செயல்பாடுகள் அறை அமைத்தல், பள்ளி வளாக மற்றும் இல்ல வளாகச் சுவர்களில் ஒழுக்கநெறியை வலியுறுத்தும் சித்திரங்கள் வரைதல் மற்றும் தோட்டங்கள் அமைத்தல் ஆகிய பணிகளை அனைத்து நிறுவனங்களிலும் தேவையின் அடிப்படையில் மேற்கொள்ள மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைப்படி 2.60 கோடி ரூபாய் செலவிடப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

நவீன தொழிற்பிரிவுகளில் பயிற்சி வழங்குதல். சமூகப் பாதுகாப்புத் துறையின்கீழ் இயங்கும் இல்லங்களை விட்டு வீடேகும் குழந்தைகள் மற்றும் மகளிரின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தவும், சமூகத்தில் சுயசார்புடன் தம் வாழ்க்கையைத் தொடரவும் அவர்களுக்கு கை அலைபேசி பழுதுபார்த்தல், கணினிப் பயிற்சி மற்றும் துரித உணவு தயாரித்தல் போன்ற வருவாய் ஈட்டித்தரக்கூடிய நவீன தொழிற்பிரிவுகளில், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைப்படி, ஆண்டுதோறும் 45 இலட்சம் ரூபாய் செலவில் பயிற்சி அளிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)



சமூகப் பாதுகாப்புத் துறை இல்லங்களுக்கு சுற்றுச்சுவர் கட்டுதல். இளைஞர் நீதிச் சட்டத்தின்படி, குழந்தைகளின் உச்சபட்ச நலன், ஒட்டுமொத்த வளர்ச்சி, சுதந்திரம் ஆகியவற்றை உறுதி செய்யவும், குழந்தைகளின் பாதுகாப்புக்கு ஊறு விளைவிக்கும் வகையில் வெளிநபர்கள் இல்லத்திற்குள் புகாவண்ணம் தடுக்கவும், செங்கல்பட்டு, இராணிப்பேட்டை, மல்லிப்புதூர், தட்டப்பாறை மற்றும் பஞ்சப்பள்ளி ஆகிய 5 குழந்தைகள் இல்லங்களில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைப்படி, 2.10 கோடி ரூபாய் செலவில் சுற்றுச்சுவர் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

சமூகப் பாதுகாப்புத் துறையின்கீழ் இயங்கும் அனைத்து அரசு நிறுவனங்களுக்கும் விளையாட்டுச் சாதனங்கள் வழங்குதல். சமூகப் பாதுகாப்புத் துறையின்கீழ் இயங்கும் இல்லங்களில் உள்ள இல்லவாசிகள் தங்கள் ஆற்றலை ஆக்கப்பூர்வமாக விளையாட்டு மற்றும் ஆளுமைத்திறன் பயிற்சிகளில் மேம்படுத்திக்கொள்ளும்பொருட்டு, விளையாட்டுச் சாதனங்கள் வாங்க, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைப்படி, ஒரு நிறுவனத்திற்கு 5 ஆயிரம் ரூபாய் வீதம் 26 நிறுவனங்களுக்கு ஆண்டொன்றுக்கு 1.30 இலட்சம் ரூபாய் செலவிடப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

சமூகப் பாதுகாப்புத் துறையின்கீழ் இயங்கும் குழந்தைகள் இல்லங்களுக்கு சலவை இயந்திரங்கள் வழங்குதல். குழந்தைகள் இல்லங்களில் தங்கியுள்ள குழந்தைகள் தங்களது உடைகள் மற்றும் படுக்கைகளைத் தாங்களாகவே துவைக்க மிகவும் சிரமப்படுகின்றனர். சலவை இயந்திரங்கள் வழங்குவதன்மூலம், இவர்கள் தம் பொன்னான நேரத்தை தொழிற்பயிற்சி மற்றும் விளையாட்டு போன்ற பயனுள்ள செயல்பாடுகளில் செலவிட இயலும். இதனைக் கருத்திற்கொண்டு, பஞ்சப்பள்ளி, மல்லிப்புதூர் மற்றும் இராணிப்பேட்டை ஆகிய இடங்களில் இயங்கும் குழந்தைகள் இல்லங்களுக்கு, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைப்படி, இல்லம் ஒன்றுக்கு 3.50 இலட்சம் ரூபாய் செலவில், மொத்தம் 10.50 இலட்சம் ரூபாய்க்கு சலவை இயந்திரங்கள் வாங்கி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தேவைப்படும் குழந்தைகளுக்காக ஒரு திறந்தவெளி தங்குமிடம் துவங்குதல். சாலையோர சிறார்கள் மற்றும் வீட்டை விட்டு வெளியேறும் சிறார்களுக்கு உணவு, உடை, உறைவிடம் மற்றும் பாதுகாப்பு வழங்குவதற்காக, ஒரு திறந்தவெளி

தங்குமிடம் வடசென்னை பகுதியில், தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் உதவியுடன் அமைக்கப்படும். இங்கு முறைசாராக் கல்வி மற்றும் தொழிற்பயிற்சி வழங்கப்படும். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைப்படி, இதற்கு 14.14 இலட்சம் ரூபாய் செலவழிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2-05

சமூகப் பாதுகாப்புத் துறையின்கீழ் வரவேற்பு மையங்களில் அனுமதிக்கப்படும் குழந்தைகளுக்கு 'வரவேற்பு பை' வழங்குதல். குழந்தை நலக் குழுக்களின் ஆணைப்படி, வரவேற்பு மையங்களுக்கு அனுப்பப்படும் குழந்தைகளை அம்மையங்களில் இனிதே வரவேற்கவும், அவர்களை இல்லச் சூழலுக்கு தயார்படுத்தவும், அவர்களுக்காக புத்தம்புதிய கைச்சட்டை, கால்சட்டை, சோப்பு, ஓய்வுநேர உடைகள் ஆகியன அடங்கிய 'வரவேற்பு பை' ஒன்று அளிக்கப்படும். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைப்படி, இதற்கு 2011–2012 ஆம் ஆண்டில் 9 இலட்சம் ரூபாய் செலவழிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாநில/மாவட்ட அளவில் சமூக நலத் துறை அலுவலர்களுக்கும், சமூகப் பாதுகாப்புத் துறையின் நன்னடத்தை அலுவலர்களுக்கும் புதிய வாகனங்கள் வழங்கும் திட்டம். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் மேலான எண்ணத்தில் உதித்ததுதான் பெண் குழந்தைகள், பெண்கள் மற்றும் நலிவடைந்தோரின் வாழ்வில் விளக்கேற்றிக்கொண்டிருக்கும் பல்வேறு சமூக நலத் திட்டங்களை மாநில அளவில் திறம்பட செயல்படுத்த ஏதுவாக, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைப்படி, சமூக நல இயக்குனரகத்திற்கு இரண்டு புதிய வாகனங்களும், புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட அரியலூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களின் மாவட்ட சமூக நல அலுவலர்களுக்கு இரண்டு புதிய வாகனங்களும் வழங்கப்படும். ஒரு வாகனத்திற்கு 7 இலட்சம் ரூபாய் வீதம் 28 இலட்சம் ரூபாய் செலவில் நான்கு புதிய வாகனங்கள் வாங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், சமூகப் பாதுகாப்புத் துறையின்கீழ் பணிபுரியும் நன்னடத்தை அலுவலர்கள், தங்களது சட்டப்பூர்வமான பணிகளையும், கள ஆய்வுப் பணிகளையும் உரிய காலத்தில் செவ்வனே நிறைவேற்றுவதற்காக, அவர்களது நீண்டநாள்



கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைப்படி, முதற்கட்டமாக, சென்னை மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களின் நன்னடத்தை அலுவலர்களுக்கு 17.27 இலட்சம் ரூபாய் செலவில் இரண்டு புதிய வாகனங்கள் இந்த ஆண்டு வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை. அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் பார்வையற்ற 220 மாணவ, மாணவிகளுக்கு அரசு வழங்கும் மடிக்கணினியுடன், பேசும் மென்பொருள் (ஜாஸ் மென்பொருள்) வழங்குதல். பார்வையற்ற +1, +2 பயிலும் மாணவ, மாணவிகளுக்கு அவர்களுடைய நீண்ட கால கோரிக்கையான பேசும் மென்பொருள் 44 இலட்சம் ரூபாய் செலவில் வாங்கி, அரசு வழங்கும் மடிக்கணினியுடன் சேர்த்து வழங்கப்படும். மேலும், +1, +2 வகுப்பு பயிலும் மாற்றுத் திறனாளி மாணவ, மாணவியர்கள் 560 நபர்களுக்கு இந்த ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு மடிக்கணினி வழங்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

செவித்திறன் பாதிக்கப்பட்ட மாணவ, மாணவியர்களுக்கு காதுக்குப் பின்னால் அணியும் காதொலிக் கருவிகள் வழங்குதல். தற்போது செவித்திறன் குறையுடையோருக்கு உடலில் அணியும் காதொலிக் கருவிகள் வழங்கப்பட்டு வருகிறது. இதை அணிவதற்கு பெரும்பாலான செவித்திறன் குன்றியோர், குறிப்பாக மாணவ, மாணவியர் தயங்குவதினாலும், வெளியிலிருந்து வரும் ஒலிளை பெற்றுத் தருவதில் உள்ள சிரமத்தினாலும், அதற்குப் பதிலாக காதுக்குப் பின்புறம் அணியும் காதொலிக் கருவியை வழங்குவது அவசியமாகிறது. மேலும், இக்கருவியினை காது இருக்கும் நிலையிலேயே/மட்டத்திலேயே அணிவதினால், ஒலிப்பெருக்க அளவு முழுமையாக இருப்பதனால், இதன்மூலம் கிடைக்கும் பலன் அதிகமாக உள்ளது. குறிப்பாக, கடுமையான அல்லது முழுமையான செவித்திறன் பாதிப்பு இருப்பவர்களுக்கு இக்கருவி மிகவும் பயனுடையதாக உள்ளது. எனவே, முதல் கட்டமாக பள்ளி, கல்லூரிகளில் பயின்றுவரும் செவித்திறன் குறையுடைய 1,000 மாணவ, மாணவிகளுக்கு ஒரு கோடி ரூபாய் செலவில் இவ்வகைக் காதொலிக் கருவிகள் வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பள்ளி இறுதித் தேர்வில் (10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு) மாநில மற்றும் மாவட்ட அளவில் முதல் மூன்று இடங்களைப் பெறும் காதுகேளாத மாணவ, மாணவியர்களுக்கு ரொக்கப் பரிசுத் தொகை வழங்குதல். இந்த ஆண்டு முதல், அரசு மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில், மாவட்ட மற்றும் மாநில அளவில் முதல் 3 இடங்களைப் பெறும், செவித்திறன் குறைபாடு உடைய மற்றும் வாய்பேசாத மாணவ, மாணவிகளுக்கு ரொக்கப் பரிசுத் தொகை மற்றும் பாராட்டுப் பத்திரம் வழங்கப்படும். மாநில அளவில் 12 ஆம் வகுப்பில் முதலிடம் பெறுபவருக்கு ரூபாய் 18,000/–மும், (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டாம் இடம் பெறுபவருக்கு ரூபாய் 12,000/-மும், மூன்றாம் இடம் பெறுபவருக்கு ரூபாய் 9,000/–மும் வழங்கப்படும். அதேபோன்று, மாநில அளவில், 10 ஆம் வகுப்பில் முதலிடம் பெறுபவருக்கு ரூபாய் 12,000/–மும், (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டாம் இடம் பெறுபவருக்கு ரூபாய் 9,000/–மும், மூன்றாம் இடம் பெறுபவருக்கு ரூபாய் 6,000/–மும், ரொக்கப் பரிசாக வழங்கப்படும்.

பிற்பகல் 2-10

12 ஆம் வகுப்பில் மாவட்ட அளவில் முதலிடம் பெறுபவருக்கு 12 ஆயிரமும், இரண்டாம் இடம் பெறுவோருக்கு ரூபாய் 7,500/-ம், மூன்றாம் இடம் பெறுவோருக்கு ரூ.4,500/-ம், 10 ஆம் வகுப்பில் மாவட்ட அளவில் முதலிடம் பெறுவோருக்கு ரூ.6,000/–மும், இரண்டாம் இடம் பெறுவோருக்கு ரூ.4,500/-ம், மூன்றாம் இடம் பெறுவோருக்கு ரூ.3,000/–மும் வழங்கப்படும். இதுதவிர, 10 ஆம் வகுப்பிற்கு மேல் உயர் கல்வியைத் தொடர ரூ.4,000/-மும், விடுதிக் கட்டணமாக ரூ.2,000/-மும் (பத்து மாதங்களுக்கு) 12 ஆம் வகுப்புக்கு மேல் உயர் கல்வி பெறுவோருக்கு ரூ.6,000/–மும், விடுதிக் கட்டணம் ரூ.3,000/-மும் (பத்து மாதங்களுக்கு) வழங்கப்படும். இத்திட்டத்தின்மூலம் ஆண்டு ஒன்றுக்கு ரூ.35.70 இலட்சம் செலவிட மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள் என்பதை மெத்த பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாற்றுத் திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கும் வகையில் தங்கும் வசதியுடன்கூடிய தொழிற்பயிற்சி நிலையம் 20 மாவட்டங்களில் ஒரு கோடி ரூபாய் செலவில் துவக்கப்படும்.



2011-2012 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மாற்றுத் திறனாளிகளுக்குச் சிறப்புப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு, தனியார் துறையில் பணியமர்த்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மாற்றுத் திறனாளிகள், தனியார் துறையில் பணி நியமனம் பெறும் வகையில், திருவண்ணாமலை, சேலம், நாமக்கல், கிருஷ்ணகிரி, நீலகிரி, திருப்பூர், கரூர், திண்டுக்கல், அரியலூர், பெரம்பலூர், தஞ்சாவூர், திருவாரூர், இராமநாதபுரம், நாகப்பட்டினம், தேனி, விருதுநகர், புதுக்கோட்டை, விழுப்புரம், கன்னியாகுமரி, கடலூர் ஆகிய 20 மாவட்டங்களில் ஒரு கோடி ரூபாய் செலவில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்மூலம் தங்கும் வசதியுடன் தொழிற்பயிற்சி நிலையங்கள் துவங்க மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பூந்தமல்லியில் உள்ள பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளியில் புதிதாக விடுதி அமைத்தல் மற்றும் அரசு தொழுநோய் மறுவாழ்வு இல்லங்களைச் சீரமைத்தல்.

பூந்தமல்லியில் உள்ள பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளி 1893–ல் கட்டப்பட்டதாகும். இந்தப் பள்ளியில் மாணவர்கள் தங்குவதற்காக பல்நோக்கு விடுதி ஒன்றும், நவீன சமையல் அறையும் புதியதாகக் கட்டப்படும். மேலும், அங்குள்ள பிரெய்லி அச்சு இயந்திரம் பழுது பார்க்கப்படும். மேற்கண்ட பணிகள் 2 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

தொழுநோயால் அவதியுறும் நோயாளிகளுக்கு மருத்துவ உதவி மற்றும் மறுவாழ்வு அளித்திட, 10 அரசு மறுவாழ்வு இல்லங்கள் மற்றும் அரசு ஏழைகள் பராமரிப்பு இல்லம் ஒன்றும் செயல்பட்டு வருகின்றன. பரனூர், மதுரை மற்றும் புதுக்கோட்டையில் உள்ள அரசு தொழுநோய் மறுவாழ்வு இல்லங்களில் முதல் கட்டமாக, இல்லவாசிகள் குடியிருப்புகள் மற்றும் சீரமைப்புப் பணிகள் தலா 2 கோடி ரூபாய் செலவில் மொத்தம் 6 கோடி ரூபாயில் செலவிட மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

மாற்றுத் திறனாளிகளுக்கு பெட்ரோலால் இயங்கும் ஸ்கூட்டர்கள் வழங்குதல். மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட மின்சார ஸ்கூட்டர்களுக்குப் பதிலாக நடப்பு நிதியாண்டு முதல் கல்வி பயிலும் மாற்றுத் திறனாளிகளுக்கு முன்னுரிமையிலும், பணிபுரியும், சுயதொழில் புரியும் மாற்றுத் திறனாளிகள் பயன்பெறும் வகையில் பெட்ரோலில் இயங்கும்,

இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட 400 ஸ்கூட்டர்கள் 2 கோடி ரூபாயில் வாங்க மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

திருமண நிதியுதவித் திட்டத்தில் பெறப்படும் அனைத்து மனுக்களுக்கும் திருமண உதவித் தொகை வழங்குதல். அனைத்துப் பிரிவு மாற்றுத் திறனாளிகளுக்கும் திருமண நிதியுதவி வழங்கும் திட்டத்தின்கீழ் நான்கு பிரிவுகளில் இதுவரை ஆண்டொன்றுக்கு 490 விண்ணப்பங்கள் மட்டும் நிதியொதுக்கீடு செய்யப்பட்டு, பயனாளிகளுக்கு நிதியுதவி வழங்கப்பட்டு வந்தது. இந்த ஆண்டு முதல், மாற்றுத் திறனாளிகள் திருமண உதவித் தொகை பெறுவதற்கான நிர்ணயிக்கப்பட்டிருந்த பயனாளிகளின் எண்ணிக்கை உச்சவரம்பு முற்றிலும் நீக்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம் தகுதியுள்ள அனைத்து மாற்றுத் திறனாளிகளும் திருமண நிதியுதவிப் பெற்று பயனடைய மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

பார்வைத்திறன் குறைபாடுடைய மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்காக 20 மாவட்டங்களில் ஆரம்ப நிலை பயிற்சி மையங்கள் துவக்குதல். பார்வைத்திறன் குறைபாடுடைய மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கும் ஆரம்பப் பயிற்சி மையங்களில் உரிய சிறப்பு நிபுணர்கள்மூலம் தீவிர ஆரம்பப் பயிற்சி வழங்குவதால், பெற்றோர்கள் அக்குழந்தைகளை வளர்க்கவும், அவர்களை கல்வித் திறனில் தேர்ச்சிபெறச் செய்யவும் உதவுகிறது. மேலும், இப்பயிற்சிமூலம், அக்குழந்தைகளின் தகவல் பரிமாற்றம் மற்றும் மொழி கற்றல், நுண்ணிய மற்றும் பரவலான இயக்க ஆற்றல், எண்ணங்களின் செயல்பாடுகள் புரிந்துகொள்ளுதல், சமூக ஆற்றல்கள், உணர்வு சார்ந்த வளர்ச்சி மற்றும் சுயஉதவி போன்ற ஆற்றல்கள் மேம்படுகின்றன. எனவே சென்னை, கோயம்புத்தூர், திண்டுக்கல், தேனி, திருச்சிராப்பள்ளி, ஈரோடு, கன்னியாகுமரி, நாமக்கல், இராமநாதபுரம், கடலூர், தருமபுரி, காஞ்சிபுரம், கரூர், நாகப்பட்டினம், பெரம்பலூர், சேலம், சிவகங்கை, விருதுநகர், தஞ்சாவூர் மற்றும் திருவாரூர் ஆகிய இருபது மாவட்டங்களில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்மூலம், பார்வையற்ற இளஞ்சிறார்களுக்கான ஆரம்ப நிலை பயிற்சி மையங்கள் ரூ.122.90 இலட்சம் செலவில் துவக்க மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)



பிற்பகல் 2-15

மனவளர்ச்சி குன்றிய 14 வயதிற்கு மேற்பட்ட ஆண்களுக்கு, 10 மாவட்டங்களில் தொழிற்பயிற்சியுடன்கூடிய 10 இல்லங்களும், 14 வயதிற்கு மேற்பட்ட பெண்களுக்கு, 10 மாவட்டங்களில் தொழிற்பயிற்சியுடன்கூடிய 10 இல்லங்களும் துவங்குதல். மனவளர்ச்சி குன்றியோருக்கான சிறப்புப் பள்ளிகளிலிருந்து வெளிவரும், 14 வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றியோரை பராமரிப்பதற்கும், பெற்றோர்/பாதுகாவலருக்கு முறையான வழிகாட்டுதல் வழங்குவதற்கும், தொழிற்பயிற்சி வசதிகளுடன் இல்லங்கள் அமைப்பது மிக அவசியமாகிறது. 14 வயதிற்கு மேற்பட்ட, மனவளர்ச்சி குன்றிய ஆண்களுக்கான தொழிற்பயிற்சியுடன்கூடிய இல்லங்கள் சென்னை, கடலூர், இராமநாதபுரம், சேலம், சிவகங்கை, தஞ்சாவூர், திருவள்ளூர், ஈரோடு, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி ஆகிய 10 மாவட்டங்களில் ஒரு கோடி ரூபாய் செலவில் துவங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த இல்லங்களில் உணவு, உடை, உறைவிடத்துடன் தோட்டக்கலை, மெழுகுவர்த்தி தயாரித்தல் ஆகியவற்றில் பயிற்சியும் வழங்கப்படும்.

மேலும் சிறப்புப் பள்ளிகளில் பயின்ற 14 வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றிய மகளிருக்குப் பாதுகாப்பும், பயிற்சியும் அளிக்கும் வகையில் சென்னை, திண்டுக்கல், கோயம்புத்தூர், கிருஷ்ணகிரி, திருச்சி, திருநெல்வேலி, தேனி, திருவண்ணாமலை, காஞ்சிபுரம் மற்றும் மதுரை ஆகிய 10 மாவட்டங்களில் 14 வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றிய மகளிருக்கான இல்லங்கள் ஒரு கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த இல்லங்களில் உணவு, உடை மற்றும் உறைவிடத்துடன், தோட்டக்கலை, மெழுகுப் பொருட்கள் தயாரித்தல் மற்றும் பேக்கரி பொருட்கள் தயாரித்தல் ஆகியவற்றில் பயிற்சியும் அளிக்க மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள் என்பதை மெத்தப் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை மற்றும் மாற்றுத் திறனாளிகள் நலத் துறை ஆகிய இரு மானியக் கோரிக்கைகளில் நான் கொடுத்த பதிலுரையில் மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்த திட்டங்களின் அடிப்படையிலும், உங்கள் முன் வைக்கப்பட்டுள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை ஏற்று, மாண்புமிகு சட்டமன்ற

[திருமதி செல்வி ராமஜெயம்] [2011 செப்டம்பர் 6

உறுப்பினர்கள் கொடுத்திருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை மற்றும் மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். என்னை இந்த மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு, மாண்புமிகு இதய தெய்வம் எங்களையெல்லாம் வாழ வைத்து அழகு பார்த்துக் கொண்டிருக்கும் எங்களின் குடும்பக் குலதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என்னுடைய பணிவான வணக்கத்தை உரித்தாக்கிக் கொண்டு விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

## (ஆ) கோரிக்கை எண் 45 - சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 45 - சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

“சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.2,928,97,07,000/-, மூலதனக் கணக்கில் ரூ.3,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.2,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்” என்னும் மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.



2011 செப்டம்பர் 6]

## (இ) கோரிக்கை எண் 52 - மாற்றுத் திறனாளிகள் நலத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 52—மாற்றுத் திறனாளிகள் நலத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

“மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.192,09,93,000/ – மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்” என்னும் மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

பிற்பகல் 2-20

# 5. அறிவிப்பு

## பேரவை அலுவலில் மாற்றம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 9-9-2011, வெள்ளிக்கிழமை அன்று, ஓணம் பண்டிகையை முன்னிட்டு, சென்னை உள்ளிட்ட சில மாவட்டங்களுக்கு உள்ளூர் விடுமுறை விடப்பட்டுள்ளதால், 9-9-2011 வெள்ளிக்கிழமையன்று எடுத்துக்கொள்ளப்படுவதாக இருந்த மானியக் கோரிக்கை எண் 6 - கால்நடை பராமரிப்பு, மானியக் கோரிக்கை எண் 7 - மீன் வளம் மற்றும் மானியக் கோரிக்கை எண் 8 - பால் வளம் ஆகியன 10-9-2011 (சனிக்கிழமை) அன்று பேரவையின் ஒப்புதலோடு எடுத்துக்கொள்ளப்பெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 07-09-2011 (புதன்கிழமை) அன்று காலை 10—00 மணிக்குக் கூடும். வணக்கம்.*

*பின்னர், பேரவை பிற்பகல் 2-21 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*—ஏதுமில்லை—*

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*97. மானியக் கோரிக்கை எண் 45 - சமுக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2011-2012. (தமிழ், ஆங்கிலம்)*

*98. சமுக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய மக்கள் சாசனம், 2011. (தமிழ், ஆங்கிலம்)*

*99. மானியக் கோரிக்கை எண் 52 - மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2011-2012. (தமிழ், ஆங்கிலம்)*

*100. மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய செயல்முறைத் திட்டம், 2011-2012. (தமிழ், ஆங்கிலம்)*

*101. மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய மக்கள் சாசனம், 2011-2012. (தமிழ், ஆங்கிலம்)*

# இணைப்பு I

*(263 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

## மானியக் கோரிக்கை எண் 45–

## சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

### கொள்கை விளக்கக் குறிப்பு, 2011 – 2012

## அத்தியாயம் - 1

**முன்னுரை**

முற்போக்கு சிந்தனையும், ஆளுமைத் திறனும் கொண்ட மாண்புமிகு முதலமைச்சரின் சீரிய தலைமையில் தமிழ்நாடு, நவீன நலம் பயக்கும் மாநிலம் என்ற உன்னத நிலையை அடைந்துள்ளது. தமிழக முதலமைச்சர் அவர்கள் முதியோர் மற்றும் நலிந்தோர்க்கும், மகளிர் மற்றும் குழந்தைகளுக்கும் குறிப்பாக பெண் குழந்தைகள் மற்றும் சமூகத்தில் வெகுவாக பாதிப்பிற்குள்ளாகும் திருநங்கையர் போன்றோர்க்கும் பல்வேறு நலத் திட்டங்களை அறிவித்துள்ளதன் மூலம் நலிந்தோர், சமூகத்தில் பாதுகாப்பான வாழ்க்கையினை மதிப்புடன் வாழவும், அவர்கள்தம் எதிர்காலத்தில் நல்ல முன்னேற்றத்தினை அடையவும் அனைத்து வாய்ப்பு வளங்களைப் பெறுவதற்கு ஏதுவாக சமூக அரசாட்சியில் புதிய வழிமுறைகளை ஏற்படுத்தியுள்ளார்.

**2.** 1992 ஆம் ஆண்டு துவங்கப்பட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் எண்ணக் கனவான 'தொட்டில் குழந்தைத் திட்டம்' பெண் சிசுக் கொலையினைக் களைவதற்காக உருவாக்கப்பட்ட திட்டமாகும். தொட்டில் குழந்தைகள் வரவேற்பு மையங்கள் செயல்படுகின்ற மாவட்டங்கள் மற்றும் மாநிலத்தின் குழந்தை பாலின விகிதாச்சாரத்தில் அதிகரித்துள்ள பெண் குழந்தை பிறப்பு விகிதமே இத்திட்டத்தின் வெற்றியைப் பறைசாற்றுகின்றது. பாலின விகிதாச்சாரத்தில் பெண் குழந்தை பிறப்பு விகிதம் குறைந்துள்ள மாவட்டங்களில் தனிக் கவனம் தேவைப்படுவதால் தொட்டில் குழந்தைத் திட்டத்தினை அம்மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்த அரசு முடிவு செய்துள்ளது.

[2011 செப்டம்பர் 6

**3.** 1992 ஆம் ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட மற்றொரு தன்னிகரில்லாத் திட்டமான "பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டம்", பெண் குழந்தைகளுக்கிடையே கல்வி கற்றலை ஊக்கப்படுத்துவதோடு பெண் சிசுக் கொலையைத் தடுத்து 'அளவான குடும்பம்' என்ற கோட்பாட்டினையும் வலியுறுத்துகிறது. முதலமைச்சரின் பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழான நிதியுதவியினை உயர்த்தி வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

**4.** வறிய குடும்பங்கள், தங்களின் பெண் குழந்தைகளின் திருமண வைபவத்திற்காக தாலி செய்ய தங்கம் வாங்க சந்திக்கும் சிரமத்திற்கு தனது மற்றுமொரு முன்னோடி முயற்சியால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிவாரணம் அளித்துள்ளார். திருமண உதவித் திட்டங்களின்கீழ் வழங்கப்படும் நிதியுதவியுடன் நான்கு கிராம் எடை கொண்ட 22 கேரட் தங்க நாணயமும் தற்போது வழங்கப்படுவதால் திருமணம் செய்து தரப்பட வேண்டிய பெண்களையுடைய இலட்சக்கணக்கான வறிய குடும்பங்களின் துயர் துடைக்கப்படும். தற்போது நடைமுறையில் உள்ள திருமண உதவித் திட்டங்களில், பட்டதாரி/பட்டயப்படிப்பு படித்தப் பெண்களுக்கு நிதி உதவித் தொகை உயர்த்தப்பட்டுள்ளது.

**5.** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள மற்றொரு புரட்சிகரமான திட்டம், முதியோர் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கான தங்கும் விடுதிகள் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளாகம் அமைப்பதாகும். இத்திட்டம், உணர்வு ரீதியான அரவணைப்பை இழந்த, கைவிடப்பட்ட முதியோர் மற்றும் ஆதரவற்ற குழந்தைகள் என்ற இரு வகையினரிடையே சமூக கலந்துறவாடலுக்கான புதிய வாய்ப்பினை ஏற்படுத்தியுள்ளது.

**6.** இந்த அரசின் மற்றொரு புதிய திட்டமான, திருநங்கைகளுக்கு வருவாய் ஈட்டும் தொழில்கள் தொடங்க நிதியுதவி வழங்கும் திட்டம் சமூகத்தின் மிக நலிந்த பிரிவைச் சார்ந்த இவர்களின் வாழ்க்கைத்தரத்தினை மாற்றியமைக்கக்கூடிய ஒன்றாகும்.

**7.** பொருளாதாரத்தில் தற்போது காணப்படும் பண வீக்கம், பணத்தின் உண்மையான மதிப்பைக் குறைத்ததால் சமூகத்தின் நலிந்த பிரிவினரை குறிப்பாக சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டப் பயனாளிகளை வெகுவாக பாதித்துள்ளது. பல்வேறு சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின்கீழான மாதாந்திர ஓய்வூதியத்



2011 செப்டம்பர் 6]

தொகையினை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்500/- லிருந்து ₹1000/- ஆக உயர்த்தி ஆணையிட்டுள்ளது, சமூகத்தில் நலிந்த பிரிவினருக்குப் பெருமளவில் நிவாரணம் வழங்கியுள்ளது.

**8.** சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையானது பெண்கள், குழந்தைகள் மற்றும் முதியோர் நலன்களுக்கான பல்வேறு திட்டங்களை சமூக நலம், சமூகப் பாதுகாப்பு மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் ஆகிய இயக்குனரகங்கள் வாயிலாகச் செயல்படுத்துகின்றது. மேலும், வருவாய்த் துறையினரால் செயல்படுத்தப்பட்டுவரும் பல்வேறு சமூகப் பாதுகாப்புத் திட்டங்களுக்கு இத்துறை ஒருங்கிணைப்பாளராகச் செயல்படுகிறது.

**9.** சமூக நல இயக்குனரகம், மகளிர் நலனுக்காக திருமண உதவித் திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்துகிறது. ஏழ்மை நிலையிலுள்ள ஆதரவற்ற மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் பாதுகாப்புடன் தங்குவதற்கும், கல்வி மற்றும் தொழில் பயிற்சிகளைத் தொடர்வதற்கு ஏதுவாகவும் பெண்களுக்கான சேவை இல்லங்களை இந்த இயக்குனரகம் நடத்துகிறது. மேலும், வேலைக்குச் செல்லும் பெண்களுக்குக் குறைந்த வாடகையில் தங்கும் விடுதிகளும் இச்சமூக நல இயக்குனரகத்தால் நடத்தப்படுகின்றன. பெண்களுக்கு இன்றைய முக்கிய தேவைகள் பயிற்சி மற்றும் சுய வேலைவாய்ப்பு ஆகியனவாகும். சமூக நல இயக்குனரகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள மகளிர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள், பெண்களை சுயசார்புடையவர்களாக்கும் வகையில் வருமானம் ஈட்டும் பல வேலைவாய்ப்புக்களை உருவாக்கித் தருகின்றன. சமூகத்தில் இடர்பாடுகளை எதிர்நோக்கும் திருநங்கையரின் நலன் மற்றும் அவர்களுக்கென வடிவமைக்கப்பட்ட நலத் திட்டங்களின் செயல்பாடும் சமூக நல இயக்குனரகத்தின் வரம்பிற்குட்பட்டதாகும்.

**10**. குழந்தைகளுக்கான ஊட்டச்சத்து பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் இரு தலைசிறந்த திட்டங்களை சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை செயல்படுத்துகின்றது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ் ஒன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை பயிலும் 54.80 இலட்சம் மாணவ, மாணவியருக்கு சமைத்த சூடான உணவு வழங்கப்படுகின்றது. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத் துறை, 0-6

[2011 செப்டம்பர் 6

வயதுள்ள குழந்தைகளுக்கு இணை உணவு, சூடான சமைத்த உணவு, சுகாதார பாதுகாப்பு மற்றும் முன்பருவக் கல்வி ஆகிய விரிவான சேவைகளை வழங்குகிறது. கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு சுகாதாரக் கல்வி மற்றும் விழிப்புணர்வு அளிப்பதோடு ஊட்டச்சத்து இணை உணவும் வழங்கப்படுகிறது. இத்திட்டம் தற்போது வளரிளம் பெண்களையும் உள்ளடக்கி அவர்களின் ஊட்டச்சத்து, சுகாதாரம் மற்றும் வாழ்வாதார தொழிற்பயிற்சி தேவைகளுக்கான செயல்திட்டங்களையும் அளிக்கிறது.

*11.* பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகள் மற்றும் சட்டத்திற்கு முரணாகச் செயல்பட்டதாகக் கருதப்படும் குழந்தைகளின் நலன்களுக்காக மட்டுமல்லாது, ஒழுக்க ரீதியான அபாயங்களுக்கு உட்பட நேரிடும் மகளிரின் நலன்களுக்காகவும் பல திட்டங்களை சமூகப் பாதுகாப்புத் துறை செயல்படுத்துகின்றது.

*12.* சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, குழந்தைகள், மகளிர் மற்றும் மூத்த குடிமக்களின் நலன், பராமரிப்பு மற்றும் பாதுகாப்பிற்காக பல்வேறு சமூக சட்டங்களை நடைமுறைப்படுத்துவதோடு கண்காணித்தும் வருகின்றது. இவற்றில், வரதட்சணை தடுப்புச் சட்டம், 1961, குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், 2005, ஒழுக்கநெறி பிறழ்தல் தடுப்புச் சட்டம், 1956, 2006 ஆம் ஆண்டில் திருத்தியமைக்கப்பட்ட, 2000 ஆம் ஆண்டின் இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம் மற்றும் பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச் சட்டம், 2007 ஆகியன முக்கிய சட்டங்களாகும்.

*13.* பெண்கள், குழந்தைகள், முதியோர் மற்றும் சமூகத்தில் வாய்ப்புகள் மறுக்கப்படும் திருநங்கையர் போன்ற பிரிவினரின் நலனுக்காக இந்த அரசால் அறிவிக்கப்பட்ட பல புதிய முன்னோடி முயற்சிகள் மற்றும் சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையால் செயல்படுத்தப்படும் நலத் திட்டங்கள், இந்திய நாட்டிலேயே 'மக்கள் நலன் நாடும் மாநிலம் தமிழ்நாடு' என்பதை உறுதிப்படுத்தும் சான்றுகளாகும்.



2011 செப்டம்பர் 6]

## அத்தியாய–2

### மகளிர் நலம்

*2.1.* ஒரு சமூக வளர்ச்சியின் முகவரி என்பது அச்சமூகத்தில் பெண்களின் நிலையைப் பொறுத்தே அமைகிறது. மேலும் மாநிலத்தின் முன்னேற்றம், அம்மாநிலத்தின் வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் கொள்கைகளில் மகளிரின் நலத்திற்கு அளிக்கப்படும் முன்னுரிமை மற்றும் அதிகாரப் பகிர்வு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டதாகும். தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்ல மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மகளிரின் நலன் காத்து அவர்களுக்கு அதிகாரப் பகிர்வு அளிக்க முன்னுரிமை அளித்து வருகிறார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தமது ஆட்சிக்காலங்களிலெல்லாம் மகளிரின் முன்னேற்றத்திற்காக பல புதிய முன்னோடி நலத் திட்டங்களை உருவாக்கியுள்ளார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மூன்றாம் முறையாக பதவியேற்ற உடன், அறிவித்த பல திட்டங்களில், தற்போது நடைமுறையில் உள்ள திருமண உதவித் திட்டங்களின்கீழ் வழங்கப்பட்டு வரும் நிதி உதவியுடன் கூடுதலாக திருமாங்கல்யம் செய்வதற்கு 4 கிராம் (1/2 சவரன்) 22 காரட் தங்க நாணயம் வழங்கும் திட்டமும் ஒன்றாகும். ஏழைப் பெற்றோர், திருமண வயதில் உள்ள தம் பெண்களுக்கு திருமணம் செய்து கொடுப்பதில் எதிர்கொள்ளும் சிரமங்களைக் களைவதே இதன் முக்கிய நோக்கமாகும். இத்திட்டம், தமிழ்நாட்டில் உள்ள ஆயிரக்கணக்கான பெற்றோர்களிடையே ஒரு புதிய நம்பிக்கை மற்றும் பாதுகாப்பு உணர்வை ஏற்படுத்தியுள்ளது. மேலும், பட்டம் / பட்டயப்படிப்பு முடித்துள்ள பெண்களுக்கான திருமண நிதியுதவி ரூ. 50,000/- ஆக தற்போது உயர்த்தப்பட்டுள்ளது.

ஆதரவற்ற பெண்கள் மற்றும் குழந்தைகளுக்காக நடத்தப்படும் சேவை இல்லங்கள், அவர்களுக்குப் பாதுகாப்பான உறைவிடங்களாக அமைவதோடு மட்டுமல்லாமல், சுய வேலைவாய்ப்பிற்கான பயிற்சியினையும் ஊக்குவிப்பையும் அளித்து அதன்மூலம் அவர்களின் பாதுகாப்பிற்கும் முன்னேற்றத்திற்கும் வழிவகை செய்வதாக உள்ளது. மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பெண்களின் வளர்ச்சிக்காக பலதரப்பட்ட கூட்டு வேலைவாய்ப்புகள்

[2011 செப்டம்பர் 6

உருவாக்கப்பட்டுள்ளன. பெண்களின் நலம் மற்றும் பாதுகாப்பிற்கான, குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், 2005 மற்றும் வரதட்சணை தடுப்புச் சட்டம், 1961 போன்ற முக்கிய சமூகச் சட்டங்கள் சமூக நலத் துறையின் மூலமாக நிர்வகிக்கப்படுகின்றன.

1993 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட மாநில மகளிர் ஆணையம், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்கு எண்ணத்தில் உருவான அமைப்பாகும். இவ்வாணையம், மகளிரின் நலனுக்காக மேற்கொள்ளப்பட வேண்டிய கொள்கைகளை உருவாக்க அரசுக்கு தகுந்த ஆலோசனைகளை வழங்கி வருகின்றது. திருநங்கைகளுக்கான சுய உதவிக் குழுக்களுக்கு நிதி உதவி அளிப்பதற்கான ஒரு சிறப்புத் திட்டத்தினையும் இவ்வரசு அறிவித்துள்ளது.

இவ்வரசால் நடைமுறைப்படுத்தப்படும் பல்வேறு புதிய திட்டங்கள் மற்றும் புதிய முயற்சிகள், மகளிர் சமுதாயத்தில் தங்களுக்குரிய இடத்தைப் பெற வழிவகை செய்வதுடன், தேசிய வளர்ச்சியில் சரிநிகர் சமமாக தம் பங்கினை ஆற்றவும் உறுதுணையாக உள்ளன.

## திருமண உதவித் திட்டங்கள்

**2.2.** நமது கலாச்சாரத்தில் திருமணம் என்னும் நிகழ்வு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை அனைவரும் அறிவோம். ஒரு பெண் குழந்தையின் வாழ்க்கையில் எதிர்நோக்கும் பல்வேறு நிலைகளில் திருமணம் என்பது மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். இத்திருமணங்களை நடத்தி வைப்பதில் ஒரு குடும்பத்தின் பொருளாதார நிலை முக்கிய பங்கு வகிப்பதோடு, பெண்களைப் பெற்ற ஏழைப் பெற்றோர்களுக்கு அவர்களைத் திருமணம் செய்து கொடுப்பது என்பது கூடுதல் நிதிச் சுமையை ஏற்படுத்துவதாகவும் உள்ளது. பொதுவாக, இத்தகைய ஏழைக் குடும்பங்கள் திருமணத்திற்குத் தேவையான அடிப்படை செலவுகளைக்கூட மேற்கொள்ள இயலாத நிலையில் உள்ளன. ஏழ்மை நிலையில் உள்ள பெற்றோர்களுக்கு உதவும் வகையில், அவர்களது மகளின் திருமணத்திற்கு நிதி உதவி அளிக்கும் நோக்கத்துடன் பல்வேறு திருமண உதவித் திட்டங்களை தமிழக அரசு செயல்படுத்தி வருகின்றது.



2011 செப்டம்பர் 6]

திருமாங்கல்யம் என்பது திருமணம் என்ற நிகழ்வில் மிகவும் புனிதமான ஓர் அடையாளமாகக் கருதப்படுகின்றது. தங்கத்தின் விலை தொடர்ந்து உயர்ந்து கொண்டே செல்வதால், ஏழை பெற்றோர்கள் இந்த அவசியத் தேவையினைப் பூர்த்தி செய்கையில் கடனாளியாகும் நிலைமைக்கும் தள்ளப்படுகின்றார்கள். பெரும்பாலான ஏழைப் பெற்றோர்கள் படும் இந்தச் சிரமத்தைக் கருத்திற்கொண்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே வழங்கப்பட்டு வரும் திருமண நிதி உதவி `25,000/- உடன், திருமாங்கல்யம் செய்வதற்காக 4 கிராம் (1/2 சவரன்) 22 காரட் தங்க நாணயம் வழங்க ஆணையிட்டுள்ளார்கள். மேலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மகளிரிடையே உயர்கல்வி கற்க வேண்டும் என்ற எண்ணத்தை ஊக்குவிப்பதற்காக, பட்டம் / பட்டயப்படிப்பு முடித்துள்ள பெண்களின் திருமணத்திற்கு `50,000/-த்துடன் திருமாங்கல்யம் செய்வதற்காக 4 கிராம் தங்க நாணயம் (22 காரட்) வழங்கும் புதிய திட்டத்தினைச் செயற்படுத்த ஆணை வழங்கியுள்ளார்கள்.

ஏழைப் பெற்றோர்களின் பெண்கள், ஏழை விதவைகளின் பெண்கள், ஆதரவற்ற பெண்கள், விதவைகள் (அவர்களது மறுமணத்திற்கு) மற்றும் கலப்புத் திருமணம் செய்து கொண்ட தம்பதிகள் ஆகியோர் இத்திருமண உதவித் திட்டங்களின்கீழ் பயனடைவர்.

***2011-2012 ஆம் ஆண்டில் சுமார் 1,69,000 குடும்பங்கள் பல்வேறு திருமண உதவித் திட்டங்களின்கீழ் பயன் பெறுவர்.***

## 2.2.1. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம்

வறிய நிலையில் உள்ள பெற்றோர்கள் தங்கள் பெண் குழந்தைகளின் திருமணத்தை நடத்த உதவுவதோடு, ஏழ்மை நிலையில் உள்ள பெண்களின் கல்வித் தரத்தை உயர்த்துவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். ஏழைக் குடும்பத்தைச் சார்ந்த பத்தாவது வகுப்பு வரை படித்த, 18 வயது பூர்த்தி அடைந்த பெண்கள் இத்திட்டத்தின் கீழ் பயன்பெறத் தகுதி உடையவராவர்.

இத்திருமண உதவித் திட்டத்தின்கீழ் ஏழ்மை நிலையில் உள்ள பெற்றோர்கள் தங்கள் மகள்களின் திருமணத்தை நடத்த ரூ. 25,000/- நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ்

[2011 செப்டம்பர் 6

வழங்கப்பட்டு வரும் நிதி உதவியுடன் அவரவர் பண்பாடு மற்றும் பழக்கவழக்கத்திற்கேற்ப திருமாங்கல்யம் செய்துகொள்வதற்காக 4 கிராம் (1/2 சவரன்) 22 காரட் தங்க நாணயம் கூடுதலாக வழங்கப்படுகிறது.

பட்டம் / பட்டயப்படிப்பு முடித்த பெண்களுக்கு திருமண நிதி உதவியாக ₹50,000/-மும், திருமாங்கல்யம் செய்வதற்காக 4 கிராம் 22 காரட் தங்க நாணயமும் வழங்கப்படுகின்றது. **இத்தகைய புதுமையான திட்டங்கள் 17-5-2011 முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன**. இத்திட்டத்தின்கீழ் பயனடைய குடும்பத்தின் ஆண்டு வருமானம் ₹24,000/- க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து முகாம்வாழ் இலங்கைத் தமிழ்ப் பெண்களும் பயனடையும் வகையில் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

2011-2012 ஆம் ஆண்டின் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹486.38 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 2.2.2. டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண உதவித் திட்டம்

விதவைகளின் மறுமணம் என்பது சமூகத்தால் ஏற்கப்படாத ஒன்றாக இருந்து வந்துள்ளது. இதனால் இளம் விதவைகள் சமூகத்தில் தங்கள் வாழ்வை எதிர்கொள்வதில் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வந்துள்ளனர். இவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் நோக்கத்துடனும், விதவை மறுமணத்தை ஊக்குவிக்கும் விதத்திலும் இத்திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் தொடக்கத்தில் ₹5,000/-க்கான தேசிய சேமிப்புப் பத்திரம் வழங்கப்பட்டது. இத்தொகை படிப்படியாக உயர்த்தப்பட்டு, தற்பொழுது ₹25,000/- நிதி உதவியாக வழங்கப்பட்டு வருகிறது. இந்த உதவித் தொகை ₹25,000/-த்தில், ₹15,000/- காசோலையாகவும், எஞ்சிய ₹10,000/- தேசிய சேமிப்புப் பத்திரமாகவும் வழங்கப்படுகின்றது.

இத்திட்டத்தின் பயனாளிகளுக்கும் 17-5-2011 முதல் ஏற்கனவே வழங்கப்படும் ₹25,000/- நிதி உதவியுடன், திருமாங்கல்யம் செய்வதற்காக 4 கிராம் (22 காரட்) தங்க நாணயம் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. பட்டம்/பட்டயப்படிப்பு முடித்த மகளிர், ₹50,000/- மற்றும்



2011 செப்டம்பர் 6]

திருமாங்கல்யம் செய்வதற்காக 4 கிராம் (22 காரட்) தங்க நாணயம் பெறுவார்கள். இந்நிதி உதவித் தொகை ₹50,000/-த்தில், ₹30,000/-காசோலையாகவும், ₹20,000/- தேசிய சேமிப்புப் பத்திரமாகவும் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் பயனடைய வருமான உச்ச வரம்பு ஏதுமில்லை.

2011-2012 ஆம் ஆண்டின் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹51.09 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 2.2.3. ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவையர் மகள் திருமண உதவித் திட்டம்

ஏழை விதவைத் தாய்மார்கள் தனித்து இருக்கும் காரணத்தால் தம் மகளின் திருமணத்தை நடத்துவதற்கு சிரமப்படுகிறார்கள். அவர்கள் தங்களது மகளின் திருமணத்தை நடத்த உதவும் நோக்குடன், 1981-1982 ஆம் ஆண்டு, ₹1,000/- நிதியுதவியுடன் இத்திட்டம் தொடங்கப்பட்டது. இந்நிதியுதவி படிப்படியாக உயர்த்தப்பட்டு தற்போது ₹25,000/- ஆக வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் பயனாளிகளுக்கும், 17-5-2011 முதல், நிதி உதவித் தொகையான ₹25,000/-த்துடன், திருமாங்கல்யம் செய்வதற்காக 4 கிராம் (22 காரட்) தங்கமும் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. அதேபோல், பட்டம்/பட்டயப்படிப்பு முடித்த மகளிர்₹50,000/- மற்றும் திருமாங்கல்யம் செய்வதற்காக 4 கிராம் (22 காரட்) தங்க நாணயம் பெறுவார்கள். இத்திட்டத்தின்கீழ் பயனடைய குடும்பத்தின் ஆண்டு வருமானம் ₹24,000/-க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

2011-2012 ஆம் ஆண்டின் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹1,810.88 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 2.2.4. அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்களுக்கான திருமண உதவித் திட்டம்

இத்திருமண உதவித் திட்டம், ஆதரவற்ற ஏழைப் பெண்களின் திருமணத்திற்கு உதவி செய்ய ஏற்படுத்தப்பட்ட திட்டமாகும். இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் நிதியுதவி ₹25,000/-த்துடன், திருமாங்கல்யம் செய்வதற்காக 4 கிராம் (22 காரட்) தங்க நாணயமும்

[2011 செப்டம்பர் 6

பயனாளிகளுக்கு வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. பட்டம் / பட்டயப்படிப்பு முடித்த மகளிருக்கு நிதியுதவியாக ₹50,000/-மும், திருமாங்கல்யம் செய்வதற்காக 4 கிராம் (22 காரட்) தங்க நாணயமும் வழங்கப்படும். இத்திட்டத்தின்கீழ் பயனடைய, பாதுகாவலரின் / ஆதரவற்ற பெண்ணின் ஆண்டு வருமானம் ₹24,000/-க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

2011-2012 ஆம் ஆண்டின் திருத்த வரவு—செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹168.81 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 2.2.5. டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு கலப்புத் திருமண உதவித் திட்டம்

சாதிய அடிப்படையிலான வேறுபாடுகளைக் களையும் நோக்குடன் கலப்புத் திருமண உதவித் திட்டமானது, தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

சிறந்த சட்டமன்ற உறுப்பினரும், பெண்களின் உரிமைக்காக அயராது போராடியவரும், மருத்துவத் துறையில் சிறந்து விளங்கியவரும், பெண்களின் முன்னேற்றத்திற்காக பாடுபட்ட சிறந்த சமூக சீர்திருத்தவாதியுமான டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையாரின் நினைவாக இத்திட்டம் 8-7-2011 முதல், “டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு கலப்புத் திருமண உதவித் திட்டம்” எனப் பெயரிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் பயன்பெற கீழ்க்காணும் இரண்டு வகையான கலப்புத் திருமணங்களைச் செய்பவர்கள் தகுதியுடையவர்கள் ஆவார்கள்:

**வகை—1.** புதுமணத் தம்பதியரில் ஒருவர் தாழ்த்தப்பட்ட வகுப்பினராகவோ அல்லது பழங்குடியினராகவோ இருந்து, மற்றொருவர் இதர வகுப்பினராக இருக்கும் கலப்புத் திருமண தம்பதிகளுக்கு திருமண நிதியுதவி வழங்கப்படுகிறது.

**வகை—2.** புதுமணத் தம்பதியரில் ஒருவர் முற்பட்ட வகுப்பினராகவும், மற்றொருவர் பிற்படுத்தப்பட்ட / மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினராகவும் இருக்கும் கலப்புத் திருமண தம்பதிகளுக்கு திருமண நிதியுதவி வழங்கப்படுகிறது.



2011 செப்டம்பர் 6]

இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் நிதியுதவி ₹25,000/-த்தில், திருமண செலவிற்காக ₹15,000/- காசோலையாகவும், ₹10,000/- தேசிய சேமிப்புப் பத்திரமாகவும் இரு வகையினருக்கும் வழங்கப்படுகின்றது. இத்திருமண உதவித் திட்டத்தின்கீழும் ஏற்கெனவே வழங்கப்படும், ₹25,000/- நிதியுதவியுடன், திருமாங்கல்யம் செய்வதற்காக 4 கிராம் (22 காரட்) தங்க நாணயமும் பயனாளிகளுக்கு வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

பட்டம் / பட்டயப்படிப்பு முடித்த மகளிருக்கு நிதியுதவியாக ₹50,000/-த்துடன், திருமாங்கல்யம் செய்வதற்காக 4 கிராம் (22 காரட்) தங்க நாணயமும் வழங்கப்படும். பட்டம் / பட்டயப் படிப்பு முடித்தவர்களுக்கு வழங்கப்படும் நிதி உதவி ₹50,000/-த்தில், ₹30,000/- காசோலையாகவும், ₹20,000/- தேசிய சேமிப்புப் பத்திரமாகவும் வழங்கப்படுகின்றது.

இத்திட்டத்தின்கீழ் பயனடைய ஆண்டு வருமான உச்சவரம்பு ஏதுமில்லை.

2011-2012 ஆம் ஆண்டின் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹734.38 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 2.3. சேவை இல்லங்கள்

விதவைகள், ஆதரவற்ற பெண்கள் மற்றும் வளரிளம் பெண்களை, அவர்கள் அன்றாட வாழ்வில் எதிர்கொள்ளும் இடர்பாடுகளிலிருந்து பாதுகாக்க இந்த அரசு முனைப்புடன் செயல்படுகிறது. இதனைக் கருத்திற்கொண்டு, தாம்பரம், கடலூர், சேலம், தஞ்சாவூர், திருநெல்வேலி, சிவகங்கை மற்றும் மதுரை ஆகிய ஏழு இடங்களில் சேவை இல்லங்களை அரசு நடத்தி வருகிறது. இச்சேவை இல்லங்களில் வசிப்பவர்களுக்கு உறைவிடம், உணவு, கல்வி மற்றும் தொழிற்கல்விப் பயிற்சி ஆகியவை இலவசமாக அளிக்கப்பட்டு வருகிறது. சேவை இல்லத்தில் பெண்கள் தங்களுடைய குழந்தைகளுடன் தங்க அனுமதிக்கப்படுவதுடன், அக்குழந்தைகளுக்கு கல்வி வசதியும் அளிக்கப்பட்டு வருகிறது.

2011-2012 ஆம் ஆண்டின் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹368.53 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2011 செப்டம்பர் 6

## 2.4. தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் செயல்படுத்தப்படும் சேவை இல்லங்கள்

சமூக மற்றும் பொருளாதார நிலையில் நலிவுற்ற, கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், விதவைகள் மற்றும் வளர் இளம் பெண்களுக்காக அரசு சாரா நிறுவனங்களால் நடத்தப்படும் சேவை இல்லங்களுக்கு நிதியுதவி அளிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இவ்வில்லங்களில் மகளிருக்கு உணவு, உறைவிடம் மற்றும் தொழிற்கல்விப் பயிற்சி ஆகியவை அளிக்கப்பட்டு, அவர்களின் புதிய வாழ்விற்கு வழிகாட்டப்படுகிறது. திண்டுக்கல் மாவட்டம், காந்தி கிராமத்தில் கஸ்தூரிபா சேவிகாஸ்ரமம் மற்றும் சென்னை, சாலிகிராமத்தில் உள்ள ஸ்திரி சேவா மந்திர் ஆகிய இரண்டு சேவை இல்லங்களும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் செயல்படுத்தப்படுகின்றன.

2011-2012 ஆம் ஆண்டின் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹31.63 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

## 2.5. இடைநிலை ஆசிரியர் பயிற்சி நிறுவனம்

சென்னை, தாம்பரம் அரசு சேவை இல்ல வளாகத்தில் இடைநிலை ஆசிரியர் பயிற்சி வழங்கப்படுகின்றது. இப்பயிற்சி, அரசு குழந்தைகள் காப்பகங்கள் மற்றும் அரசு சேவை இல்லங்களில் ஏற்கெனவே பயின்ற மாணவியருக்கு பிரத்யேகமாக வழங்கப்படுகின்றது. இந்த இடைநிலை ஆசிரியர் பயிற்சித் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு ஆண்டும் 40 மாணவிகள் பயனடைகின்றனர்.

2011—2012 ஆம் ஆண்டின் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக '9.23 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.6. பணிபுரியும் மகளிருக்கான விடுதிகள்

தங்கள் குடும்பங்களின் பொருளாதார நிலையினை மேம்படுத்த, வேலைக்குச் செல்லும் பெண்களின் எண்ணிக்கை தற்போது கணிசமாக அதிகரித்து வருகிறது. அவர்களுக்கு நியாயமான கட்டணங்களில் தங்குவதற்கு பாதுகாப்பான உறைவிடங்கள்



2011 செப்டம்பர் 6]

அதிகமாக தேவைப்படுகின்றன. பணிபுரியும் இம்மகளிரின் இடர்பாடுகளைக் கருத்திற்கொண்டு, பணிபுரியும் மகளிர் விடுதிகளை அரசு நடத்தி வருகின்றது. மொத்தம் உள்ள 8 பணிபுரியும் மகளிர் விடுதிகளில், சென்னையில் இரண்டும், கடலூர், மதுரை, புதுக்கோட்டை, தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி மற்றும் ஒசூர் ஆகிய இடங்களில் தலா ஒன்றும் செயல்பட்டு வருகின்றன. சென்னையில் இடைக்கால தங்கும் விடுதி ஒன்றும் செயல்பட்டு வருகின்றது.

பணிபுரியும் மகளிருக்கான அரசு விடுதிகளில் சேர்வதற்கு மாத வருமான உச்சவரம்பு சென்னையில் ₹25,000/-மும், பிறமாவட்டங்களில் ₹15,000/-மும் ஆகும். விடுதி உள்ளுறைவோர் மாத வாடகையாக சென்னையில் ₹300/-ம், பிற இடங்களில் ₹200/-ம் செலுத்த வேண்டும். விடுதிகளில் பணிபுரியும் ஊழியர்களுக்கான ஊதியச் செலவினத்தை அரசே ஏற்றுக் கொண்டுள்ளது.

சென்னை சாலிகிராமத்தில், பணிபுரியும் மகளிருக்கான விடுதி தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தால் கட்டப்பட்டுள்ளது. 60 பெண்கள் தங்குவதற்கு ஏதுவாக ஒரு பகுதி கட்டுவதற்கு தமிழக அரசு ₹2.00 கோடி அனுமதியளித்துள்ளது. மேலும், மீதமுள்ள 4 பகுதிகளைக் கட்டுவதற்கான கருத்துரு, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தால் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு அதற்கான நிதியை எதிர்நோக்கியுள்ளது.

அரசால் நடத்தப் பெறும் 8 பணி புரியும் மகளிர் விடுதிகளுக்கு, 2011-2012 ஆம் ஆண்டின் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் '58.26 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.7. மகளிர் முன்னேற்றத்திற்கான சமூகப் பொருளாதாரத் திட்டங்கள்

மகளிருக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் தமிழ்நாடு அரசு பல்வேறு சமூகப் பொருளாதாரத் திட்டங்களைக் கூட்டுறவுச் சங்கங்களின்மூலமாக முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது. இதன்மூலம் வளர்ச்சிப் பணிகளில் பெண்களின் பங்கேற்பு உறுதிப்படுத்தப்படுகிறது.

[2011 செப்டம்பர் 6

அரசின் மேற்கண்ட நோக்கத்தைச் செயல்படுத்தும் வகையில், குறிப்பாக சமூகத்தில் பொருளாதார ரீதியாக நலிவுற்ற பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்காக மகளிர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் அவர்களுக்கென்றே உருவாக்கப்பட்டுள்ளன. இத்தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழும் மகளிருக்கு வருமானம் ஈட்டும் வேலைவாய்ப்பை அளிக்கின்றன. இந்த வகையில் 98 தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் சமூக நல இயக்குனரின் கட்டுப்பாட்டிலும், 25 இணை உணவு தயாரிக்கும் மகளிர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட ஆணையரின் கட்டுப்பாட்டிலும் இயங்கி வருகின்றன. இத்தொழிற் கூட்டுறவு சங்கங்கள் சமூக நலத் துறைமூலம் செயல்படுத்தும் பலவித திட்டங்களுக்குத் தேவையான பொருட்களை உற்பத்தி செய்வதிலும் சேவைப் பணிகளை மேற்கொள்வதிலும் ஈடுபடுத்தப்படுகின்றன.

கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் பெண் உறுப்பினர்களின் விவரம்:

| வ. எண் | கூட்டுறவுச் சங்கத்தின் வகைப்பாடு | கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை | உறுப்பினர் – களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | தையல் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் | 80 | 41,598 |
| 2 | எழுதுபொருள் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் | 15 | 768 |
| 3 | இணை உணவு தயாரிக்கும் பெண்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் | 25 | 1,450 |
| 4 | இதர சங்கங்கள் | 3 | 1,015 |
| | மொத்தம் | 123 | 44,831 |

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ் பயன்பெறும் ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு இலவச சீருடைகளைத் தைக்கும் பணியில் 80 தையல் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் பெண் அங்கத்தினர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.



2011 செப்டம்பர் 6]

2011-2012 ஆம் ஆண்டில் பள்ளிக் குழந்தைகளுக்கு இரண்டு இணைச் சீருடைகள் வழங்க இவ்வரசு முடிவெடுத்துள்ளது. மேலும், 2012-2013 ஆம் ஆண்டு முதல் பள்ளிக் குழந்தைகளுக்கு நான்கு இணை சீருடைகள் வழங்கப்படும். 6 ஆம் வகுப்பு முதலான மற்றும் அதற்கு மேலும் பயிலும் மாணவர்களுக்கு அரைக்கால் சட்டைக்குப் பதிலாக முழுக்கால் சட்டையும், மாணவிகளுக்கு பாவாடை தாவணிக்குப் பதிலாக சல்வார் கமீசும் வழங்கப்படும்.

தையல் கூட்டுறவுச் சங்க பெண் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் தையல் கூலியை தற்போதைய சந்தை நிலவர கூலி விவரத்தைக் கருத்தில் கொண்டு உயர்த்தி வழங்க இவ்வரசு முடிவெடுத்துள்ளது. தைக்கும் சீருடைகளின் எண்ணிக்கை உயர்வும் தையல் கூலி உயர்வும் சீருடை தைக்கும் பணியில் ஈடுபட்டுள்ள தையல் கூட்டுறவுச் சங்கங்களின் பெண் உறுப்பினர்களின் வருவாயைக் கணிசமாக உயர்த்தும்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் பள்ளிகள், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையைச் சார்ந்த பள்ளிகள் ஆகியவற்றில் பயிலும் மாணவ, மாணவியருக்கு வழங்கப்படும் சீருடைகளைத் தைக்கும் பணியும் தையல் கூட்டுறவுச் சங்கங்களிடம் ஒப்படைக்கப்படுகின்றன.

மாநிலத்தில் மகளிருக்கு தையல் பயிற்சி வழங்குவதற்காக 23 தையல் பயிற்சி மையங்கள் உள்ளன. இவற்றில் சேலம், நாமக்கல் மற்றும் திருவண்ணாமலையில் அமைந்துள்ள தையல் பயிற்சி மையங்கள் பழங்குடியின மகளிருக்கு பிரத்யேகமாக பயிற்சி அளித்து வருகின்றன. ஆண்டுதோறும் 65 பழங்குடியின மகளிருக்கு இம்மையங்களின்மூலம் பயிற்சி அளிக்கப்படுகிறது.

15 எழுதுபொருள் கூட்டுறவுச் சங்கங்கள், அரசு துறைகள், அரசு நிறுவனங்கள் மற்றும் பிற நிறுவனங்களுக்குத் தேவைப்படும் பல்வேறு பதிவேடுகளை அச்சடித்து விநியோகம் செய்வதன் மூலம் தங்களது பெண் உறுப்பினர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்குகின்றன.

2011-2012 ஆம் ஆண்டின் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் அனைத்து மகளிர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகத்திற்காக ₹189.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2011 செப்டம்பர் 6

## 2.8. சத்தியவாணி முத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம்

விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், மாற்றுத்திறனுடைய ஆண்கள் / பெண்கள் மற்றும் சமூகத்தில் பாதிக்கப்பட்ட பிற பெண்கள், பொருளாதாரத்தில் நலிவுற்ற ஆதரவற்ற பெண்கள் ஆகியோருக்கு சுய வேலைவாய்ப்பு அளித்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும் நோக்கத்துடன், இத்திட்டத்தின்கீழ் தையல் இயந்திரங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

இத்திட்டம் தமிழகத்திலுள்ள முகாம்வாழ் இலங்கைத் தமிழ்ப் பெண்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம், 2011—2012 ஆம் ஆண்டில் ஏறக்குறைய 3778 முகாம்வாழ் இலங்கைத் தமிழ்ப் பெண்கள் பயனடைவர்.

2011-2012 ஆம் ஆண்டின் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹135.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

## 2.9. தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம்

தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் 1993 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. சட்டபூர்வமான இவ்வாணையம் தலைவர் மற்றும் ஒன்பது உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

**தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையத்தின் முக்கிய நோக்கங்கள்:–**

(1) மகளிர் நலனைப் பாதுகாத்தல்

(2) மகளிர் தொடர்புடைய பாலின பாகுபாடு விவகாரங்களை விசாரணை செய்தல்

(3) மகளிர் நலன் தொடர்புடைய பிரச்சினைகளில் எடுக்கப்படவேண்டிய முறையான நடவடிக்கைகள் குறித்து அரசுக்குப் பரிந்துரைத்தல்



2011 செப்டம்பர் 6]

**மகளிர் ஆணையத்தின் செயல்பாடுகள் பின்வருமாறு:–**

- அரசியலமைப்புச் சட்டம் மற்றும் பிற சட்டங்களில் பெண்களுக்கு அளிக்கப்பட்டுள்ள பாதுகாப்புத் தொடர்பான அனைத்து விவகாரங்களையும் விசாரித்து ஆய்வு செய்தல்.
- பெண்களின் பாதுகாப்பு உரிமைகளை நன்முறையில் பேணுவதற்குத் தேவையானபோதெல்லாம் உரிய பரிந்துரை மற்றும் அறிக்கைகளை மாநில அரசுக்கு அளித்தல்.
- அரசியல் அமைப்புச் சட்டம் மற்றும் மகளிரை பாதிக்கும் இதர சட்டங்களின் பிரிவுகளை அவ்வப்போது ஆய்வு செய்து அவற்றில் இருக்கும் குறைகளையும், விடுபட்ட இனங்களையும் சரிசெய்வதற்கு சட்டத் திருத்தங்களை அரசுக்கு பரிந்துரைத்தல்.
- பெண்கள் தொடர்பான உரிமைகளில் சட்ட மீறல்கள் இருந்தால் தக்க அதிகாரம் பெற்றவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லுதல்.
- மறுக்கப்படும் மகளிர் உரிமைகள் தொடர்பான புகார்களை விசாரித்தல்.
- மகளிருக்கான பாதுகாப்புச் சட்டங்களைச் சரிவர நடைமுறைப்படுத்தாமை தொடர்பான புகார்களை கவனித்தல்.
- மகளிரின் சம உரிமை மற்றும் மேம்பாடு தொடர்பான நோக்கங்களை அடைதல்.
- மகளிருக்கு எதிரான கொடுமைகள் மற்றும் பாலின வேறுபாடுகள் பற்றிய பிரச்சினைகள் போன்றவற்றை சிறப்பு ஆய்வு செய்து தீர்வுகளைப் பரிந்துரைத்தல்.
- அனைத்துத் துறைகளிலும் மகளிரின் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்வதற்கும், அவர்களது முன்னேற்றத்திற்குத் தடையாக உள்ள காரணங்களைக் கண்டறிவதற்கும் கல்வி ஆராய்ச்சிகள் மேற்கொள்ளல் மற்றும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்.

[2011 செப்டம்பர் 6

- பணிபுரியும் மகளிர் விடுதிகள், குறுகிய கால தங்கும் விடுதிகள், காப்பகங்கள் மற்றும் சிறைச்சாலைக் கூடங்கள் ஆகியவற்றை ஆய்வு செய்தல்.
- மகளிருக்கான சட்டங்கள் பற்றிய விழிப்புணர்வை பொதுமக்களிடையே ஏற்படுத்துதல்.

## 2.10. தமிழ்நாடு சமூக நல வாரியம்

தமிழ்நாடு சமூக நல வாரியம், மத்திய சமூக நல வாரியம் மற்றும் தமிழ்நாடு அரசின் உதவியுடன் செயல்பட்டு வருகிறது. இவ்வாரியம் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்மூலம் சேவைகளை வழங்குகின்றது.

**வாரியத்தின் நோக்கங்கள்:–**

(1) பெண்கள் மற்றும் குழந்தைகள் நலனுக்காகச் செயல்பட்டு வரும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு உதவுதல்.

(2) தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு தொழில்நுட்பம் மற்றும் நிதியுதவி அளித்து அவற்றின் சேவையின் தரத்தினை உயர்த்துதல்.

(3) மத்திய சமூக நல வாரியம்மூலம் உதவி பெறும் திட்டங்களை மதிப்பீடு செய்தல்.

தமிழ்நாடு சமூக நல வாரியம் ஒரு அலுவல்சாரா தலைவரையும், மத்திய சமூக நல வாரியத்தால் நியமிக்கப்படும் 15 அலுவல்சாரா உறுப்பினர்களையும் மற்றும் தமிழக அரசு நியமிக்கும் 15 அலுவல் சாரா உறுப்பினர்களையும் கொண்டுள்ளது. தமிழ்நாடு சமூக நல வாரியம், மத்திய சமூக நல வாரியத்திடமிருந்து நிதியுதவி பெற்று, பல்வகைத் திட்டங்களின்மூலம் பெண்கள் முன்னேற்றம் அடையும் வகையில் கல்வி, பயிற்சி, விழிப்புணர்வுக் கூட்டங்கள், வாழ்வாதாரத்திற்கு வருவாய் பெருக்கும் வழிகள் மற்றும் இதர சேவைகள் போன்றவற்றை வழங்கி வரும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு உதவுகிறது.



2011 செப்டம்பர் 6]

## 2.11. தமிழ்நாடு சமூக நல வாரியத்தின்மூலம் மானியம் வழங்குதல்

கிராமப்புறங்களில் உள்ள ஏழைக் குழந்தைகளுக்கு, குழந்தைகள் காப்பகம், குழந்தைகள் மையம் மற்றும் பொழுதுபோக்கு மையங்களை செயல்படுத்தும் 200 தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்த ₹10.00 இலட்சம் ஆண்டு தோறும் தமிழக அரசால் வழங்கப்படுகின்றது. ஒவ்வொரு நிறுவனத்திற்கும் ₹5000/- வீதத்தில் அரசு மானியமாக 50:50 விகிதாச்சாரத்தில் வழங்கப்படுகின்றது.

2011-2012 ஆம் ஆண்டின் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹10.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.12. குடும்ப ஆலோசனை மையம்

குடும்பங்களில் ஏற்படும் கருத்து வேறுபாடுகள் காரணமாக பிரிய நேரிடும் தம்பதிகளுக்கு ஆலோசனை வழங்கவும், தம்பதிகள் இருவரும் இணைந்து வாழ்வதற்கான வழிமுறைகளை எடுத்துரைக்கவும் குடும்ப ஆலோசனை மையம் என்ற திட்டம் உருவாக்கப்பட்டது. இம்மையம், வரதட்சணைக் கொடுமை, தம்பதிகளுக்குள் ஏற்படும் கருத்து வேறுபாடுகள் மற்றும் குடிப்பழக்கத்தால் ஏற்படும் குடும்பப் பிரச்சினைகளுக்கு நியமிக்கப்பட்ட தொழில்முறை ஆலோசகர்கள்மூலம் தகுந்த ஆலோசனைகளை வழங்கி வருகிறது. எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தகுந்த ஆலோசனைகளும், வழிகாட்டுதலும் வழங்கப்படுகின்றன. சென்னை, திருவள்ளூர், விழுப்புரம், திருவாரூர், தேனி மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் 6 தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் குடும்ப ஆலோசனை மையங்களை நடத்தி வருகின்றன. தமிழ்நாடு சமூக நல வாரியம் மூலமாக மேற்கூறப்பட்ட ஒவ்வொரு மையத்திற்கும் நிதியுதவி தலா ₹80,000/- வீதம் வழங்கப்படுகின்றது.

2011-2012 ஆம் ஆண்டின் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹7.14 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

*[2011 செப்டம்பர் 6*

## 2.13. தமிழ்நாடு திருநங்கைகள் நல வாரியம்

திருநங்கை என்ற சொல், ஆணாகவோ அல்லது பெண்ணாகவோ வகைப்படுத்த இயலாத பாலினத்தைக் குறிக்கும். பாலின மாறுபாடுகள் குறித்த சமூகத்தின் அறியாமை காரணமாக திருநங்கைகள் உடல் ரீதியாக மற்றும் பல்வேறு வகையான வன்முறைகளுக்கு ஆளாக்கப்படுகின்றனர். மேலும், திருநங்கைகள் அவர்களது குடும்பத்தினராலும் சமூகத்தினராலும் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. இவர்கள் வேலைவாய்ப்பு பெறுவதிலும், சில நேரங்களில் தங்கள் கல்வியைத் தொடர்வதிலும் கூட இடர்பாடுகளைச் சந்திக்கின்றனர்.

### திருநங்கைகளுக்கான வருமானம் ஈட்டும் தொழில்கள்

திருநங்கைகள் பொருளாதார சுதந்திரத்தோடு சுய சார்புடன் வாழ்வதற்காக, தமிழ்நாடு திருநங்கையர் நல வாரியத்தி மூலமாக வருவாய் ஈட்டும் தொழில்களில் ஈடுபட முன்வரும் திருநங்கைகள் சுய உதவிக் குழுக்களுக்கு தொழில் தொடங்க, 25 விழுக்காடு மானியத்தில் 15 இலட்சம் ரூபாய் வரை கடனுதவி இவ்வரசு வழங்கும். உணவு தயாரித்தல், சுகாதார அணை ஆடைகள் தயாரித்தல் (சானிட்டரி நாப்கின்), கால்நடை வளர்ப்பு, காகிதக் கோப்பைகள் தயாரித்தல் போன்ற சில வருமானம் ஈட்டும் தொழில்கள் தற்போது கடனுதவி வழங்குவதற்காக கண்டறியப்பட்டுள்ளன.

திருநங்கைகளின் நலனுக்கான, தமிழ்நாடு திருநங்கைகள் நல வாரியம், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களைத் தலைவராகவும், 11 அலுவல்சார் உறுப்பினர்களையும் மற்றும் 9 அலுவல்சாரா (திருநங்கையர்) உறுப்பினர்களையும் உள்ளடக்கியது.

### மாநில அளவிலான திருநங்கைகளைக் கண்டறியும் குழு

சமூக நல இயக்குனரைத் தலைவராகக் கொண்டு, திருநங்கைகளைக் கண்டறிய மாநில அளவிலான குழு ஒன்று உள்ளது.

### மாவட்ட அளவிலான திருநங்கைகளைக் கண்டறியும் குழுக்கள்

மாவட்ட அளவிலான திருநங்கைகளைக் கண்டறியும் குழு, மாவட்ட ஆட்சியரின் தலைமையின்கீழ் பின்வரும் உறுப்பினர்களுடன் செயல்படுகின்றது:—



*2011 செப்டம்பர் 6]*

| | | |
|---|---|---|
| 1 | மாவட்ட ஆட்சித் தலைவர் | தலைவர் |
| 2 | துணை இயக்குனர், மருத்துவம் மற்றும் ஊரக மருத்துவப் பணிகள் | உறுப்பினர் |
| 3 | மாவட்ட சமூக நல அலுவலர் | உறுப்பினர் |
| 4 | மருத்துவ உளவியலாளர் / மனநல மருத்துவர் | உறுப்பினர் |
| 5 | தலைவரால் தேர்ந்தெடுக்கப்படும் திருநங்கைகளின் பிரதிநிதி ஒருவர் | உறுப்பினர் |

இம்மாவட்டக் குழு, திருநங்கைகளை உடல் மற்றும் உளவியல் ரீதியாக பரிசோதனை செய்து, அதன் அடிப்படையில் அவர்களுக்கு திருநங்கைகள் என்ற சான்றினை வழங்கும்.

திருநங்கைகளில் அடையாள அட்டை உள்ளவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள், குடும்ப அட்டைகள், வாக்காளர் அடையாள அட்டைகள், இலவச வீடுகள், திறன் வளர்க்கும் பயிற்சிகள் மற்றும் அவர்களின் உயர் கல்விக்கான உதவிகள் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

2011-2012 ஆம் ஆண்டின் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் திருநங்கையர் நல வாரியத்தின்மூலம் பல்வேறு நலப் பணிகளைச் செயல்படுத்துவதற்காக ₹100.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.14. மகளிரின் நலன் தொடர்பான முக்கிய சட்டங்கள்:—

மகளிரின் பாதுகாப்பைப் பேணும் வகையில் மகளிர் நலன் மற்றும் மகளிரைப் பாதுகாக்கும் பின்வரும் சட்டங்களைச் செயல்படுத்தும் பொறுப்பு சமூக நல இயக்குனரகத்தைச் சார்ந்தது.

இச்சட்டங்களாவன:—

- குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், 2005.
- வரதட்சணை தடுப்புச் சட்டம், 1961.

[2011 செப்டம்பர் 6

## 2.14.1. குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், 2005

குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், 2005, வீடுகளில் வன்முறையற்ற, சுதந்திர வாழ்வை வாழ்வதற்கான பெண்களின் உரிமையை அங்கீகரிக்கின்றது. வீடுகளே சில நேரங்களில் வன்முறை நிகழ்விடமாக இருப்பதால் அங்கு பெண்களுக்கான மனித உரிமைகளை நிலைநாட்டிட, இந்த சட்டம் வழிவகை செய்கிறது. இச்சட்டம், வார்த்தை ரீதியான மற்றும் உணர்வு பூர்வமான, பொருளாதார ரீதியான மற்றும் பாலியல் ரீதியான குடும்ப வன்முறைகளைத் தெளிவாகக் குறிப்பிடுகின்றது. மேலும், குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின்படி உடனடித் தீர்வுகள் பெற முடியும் என்பதே இச்சட்டத்தின் சிறப்பு அம்சமாகும்.

வீட்டில் பெண்களுக்கான சம உரிமையைப் பெற்றுத் தருதலே இச்சட்டத்தின் முக்கிய நோக்கமாகும். பெண்களுக்கு வன்முறையற்ற அமைதியான மற்றும் பாதுகாப்பான வீட்டுச் சூழலை உருவாக்குவதன்மூலம் அவர்கள் உடல் மற்றும் மன அமைதியைப் பெற்று சுதந்திரமாகவும் சுயமாகவும் முடிவுகளை எடுக்க இச்சட்டம் வழிவகை செய்கிறது.

குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு அதிகபட்ச பாதுகாப்புகள் அளிப்பதற்காக உருவாக்கப்பட்டதாகும். பாதிக்கப்பட்ட ஒரு பெண் இச்சட்டத்தின்மூலம் எளிதான முறையில் நீதிமன்றத்தை அணுகி பல்வகையான தீர்ப்பாணைகளைப் பெற முடியும்.

### பாதுகாப்பு அலுவலர்கள்

மாவட்ட அளவில் செயல்படும் பாதுகாப்பு அலுவலர்கள், பாதிக்கப்பட்ட பெண்கள் நீதிமன்றத்தை சுலபமாக அணுகவும் தேவையான தீர்வுகள் மற்றும் உடனடி ஆணைகளைப் பெறவும் உதவி செய்து வருகின்றனர். மேலும், பாதிக்கப்பட்ட பெண்கள் ஆலோசனை பெறவும் தேவையான மருத்துவ உதவி, தற்காலிக வசிப்பிடத்தில் தங்கும் வசதி முதலான பிற உதவிகள் பெற்றிடவும் பாதுகாப்பு அலுவலர்கள் ஏற்பாடு செய்கின்றனர். நீதிமன்றத்தில் குடும்ப வன்முறை தொடர்பான வழக்குகளின் விசாரணையின் போது, தேவையான அனைத்து உதவிகளையும் அளிப்பதும் பாதுகாப்பு அலுவலர்களின் முக்கிய பொறுப்பாகும்.



2011 செப்டம்பர் 6]

### பாதுகாப்பு அலுவலர்களின் பணிகள்

பாதுகாப்பு அலுவலர்களின் பணிகள் கீழ்க்கண்ட இரு நிலைகளில் வகைப்படுத்தப்படுகின்றன:

1. பாதிக்கப்பட்ட பெண்ணின் சார்பாக நீதிமன்றத்தை அணுகுவதற்கு முன், தேவையான முதற்கட்ட நடவடிக்கைகளை எடுத்தல்.

2. நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்ட பின்பு ஆற்றப்பட வேண்டிய பணிகளை கவனித்தல்.

### சேவை அளிப்பவர்கள்

குறுகிய கால தங்கும் இல்லம் மற்றும் குடும்ப ஆலோசனை மையங்களை நடத்தும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், சேவை அளிப்பவர்களாக ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசால் நியமனம் செய்யப்படுகின்றனர். இவர்கள் குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டத்தின்கீழ் தேவையான உதவிகளை அளித்து வருகின்றனர். இச்சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட சேவை நிறுவனங்கள் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உதவி புரியும் விதமாக குடும்ப வன்முறை நிகழ்வு அறிக்கைகளை தயாரிக்கின்றன. மேலும், அவர்களுக்குப் புகலிடம், ஆலோசனை, சட்ட உதவி, மருத்துவ உதவி மற்றும் தொழிற் பயிற்சி ஆகியவற்றையும் அளித்து வருகின்றன. இந்நிறுவனங்கள் மகளிரின் நலனைக் கருத்தில் கொண்டு இச்சட்டத்தைச் செயல்படுத்தும் நடவடிக்கைகளில் நல்லெண்ணத்துடன் ஈடுபடும்போது அவர்களுக்கு சில பாதுகாப்பு வழிமுறைகளை இச்சட்டம் வகுத்துள்ளது.

குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், 2005—ன்படி மாநிலத்தில் 98 மையங்கள் பாதுகாப்பு இல்லங்களாக அறிவிக்கப்பட்டு இயங்கி வருகின்றன.

## 2.14.2. வரதட்சணை தடுப்புச் சட்டம், 1961

வரதட்சணை என்னும் சமூகக் கொடுமை, பெண்களின் நலனை சீரழிப்பதாக உள்ளது. வரதட்சணை அளிப்பதன்மூலம் பெண்களின் மதிப்பு சமுதாயத்தில் குறைகிறது. வரதட்சணைக் கொடுமைகளைக் களைவதற்காக வரதட்சணை தடுப்புச் சட்டம், 1961-ன்படி, தமிழ்நாடு வரதட்சணை தடுப்பு விதிகள், 2004 ஆம் ஆண்டு இயற்றப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் மாவட்ட

[2011 செப்டம்பர் 6

சமூக நல அலுவலர்கள், அந்தந்த மாவட்டங்களின் வரதட்சணை தடுப்பு அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அந்தந்த மாவட்டங்களில் பெறப்படும் வரதட்சணைப் புகார்களை விசாரித்து, நியாயமான புகார்கள் குறித்த அறிக்கைகளைக் காவல் துறைக்கு, வழக்கு பதிவு செய்வதற்காக அனுப்பி வைக்கின்றனர்.

வரதட்சணை தடுப்புச் சட்டத்தினை மாநிலம் முழுவதும் தீவிரமாக செயல்படுத்துவதற்காக சமூக நல இயக்குனரை மாநில அளவிலான ஒருங்கிணைப்பு அலுவலராக அரசு நியமித்துள்ளது. வரதட்சணை தடுப்பு அலுவலர்கள், மக்கள் நீதிமன்றம், மக்கள் தொடர்பு முகாம்கள் மற்றும் ஊடகங்கள் வாயிலாக வரதட்சணைக்கு எதிரான விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றனர். ஒவ்வொரு ஆண்டும், நவம்பர் 26 ஆம் நாள் வரதட்சணை எதிர்ப்பு நாளாகக் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. அந்நாளில் வரதட்சணை தடுப்பு அலுவலர்களால் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் மற்றும் அரசு ஊழியர்களிடையே "வரதட்சணையை வாங்கவோ, கொடுக்கவோ மாட்டோம்" எனும் உறுதிமொழி எடுக்கப்பட்டு வருகிறது. வரதட்சணை எனும் கொடுமையை அரசு ஊழியர்களிடையே களையும் விதத்தில் அரசு ஊழியர் நன்னடத்தை விதிகள், 1973-ல் உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



2011 செப்டம்பர் 6]

## அத்தியாயம்-3

### குழந்தைகள் நலம்

***3.1.*** எதிர்கால தலைமுறையினரை, வளமான மற்றும் ஆரோக்கியமான குடிமக்களாக உருவாக்க, குழந்தைகளின் நலன், பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி மிக இன்றியமையாததாகும். சமூக, பொருளாதார சூழ்நிலையில், எளிதில் பாதிக்கப்படக்கூடிய நிலையில் வளரும் பெண் குழந்தைகள் குறித்த பிரச்சினைகள்மீது சிறப்புக் கவனம் தேவைப்படுகின்றது. எனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெண் குழந்தைகளுக்கான திட்டங்களைத் தீட்டுவதில் எப்பொழுதும் முக்கியத்துவம் கொடுத்து வருகிறார்கள். தமிழ்நாட்டில் பெண் சிசுக்கொலையை முற்றிலும் ஒழித்திடுவதற்காக ஏற்படுத்தப்பட்ட தன்னிகரில்லாத் திட்டமான தொட்டில் குழந்தைத் திட்டம் என்றாலும், பெண் குழந்தைகளின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக உருவாக்கப்பட்ட பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் என்றாலும், இந்த அரசு, பெண் குழந்தைகளை அவர்கள் எத்தகைய சூழ்நிலையில் பிறந்திருந்தாலும், தங்களது தனித்திறமைகளை வளர்த்துக் கொண்டு, சமுதாயத்தில் நல்ல நிலையை அடைவதோடு, தான் வளர்ந்த சமூகத்திற்கு தன்னாலான பங்கினை செவ்வனே ஆற்றும் தகுதி படைத்தவர்களாக்க உறுதி பூண்டுள்ளது. சமூகத்தில் துரதிருஷ்டவசமாக நிராதரவாக்கப்பட்ட குழந்தைகளும் பாதுகாப்பான சூழல் மற்றும் சுயசார்பு பெற்று தன்னிறைவு அடையும் வகையில் வளர வேண்டும் என இவ்வரசு உறுதியாக நம்புகிறது. மாநிலத்தில், துரதிருஷ்ட வசமாக நிராதரவற்ற அல்லது ஆதரவற்ற நிலை அடைந்த குழந்தைகள் அனைவரும் கவனிப்பும், பாதுகாப்பும் பெறவேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு மாநிலத்தின் ஒவ்வொரு வளர்ச்சி வட்டாரத்திலும் முதியோருக்கும், ஆதரவற்ற குழந்தைகளுக்குமான தங்கும் சிறப்பு விடுதிகள் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளாகம் ஒன்றை உருவாக்க இவ்வரசால் அறிவிக்கப்பட்டுள்ளது.

குழந்தைகளின் பாதுகாப்பு, நலன் மற்றும் மேம்பாட்டிற்காக குழந்தைகள் காப்பகங்கள், குழந்தைகளுக்கான காப்பகங்கள் நடத்தும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு அரசு மானியம், அரசால் நடத்தப்படும் ஆதரவற்ற மற்றும் கைவிடப்பட்ட குழந்தைகளுக்கான காப்பகங்கள், ஏழை விதவையரின் குழந்தைகளுக்கு இலவச நோட்டுப் புத்தகங்கள் போன்ற பல்வேறு திட்டங்களை தமிழக அரசு சமூக

[2011 செப்டம்பர் 6

நல இயக்குனரகம்மூலமாக செயல்படுத்தி வருகிறது. மேலும் குழந்தைத் திருமண தடைச் சட்டம், 2006-ன் ஷரத்துக்கள் முனைப்புடன் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

### 3.2. தொட்டில் குழந்தைத் திட்டம்

பெண் குழந்தைகளின் நலனுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட பல்வேறு புதுமையான திட்டங்களில், 1992—ல் சேலம் மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட ''தொட்டில் குழந்தைத் திட்டமானது'' மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய எண்ணத்தில் உதித்த ஒரு மகத்தான திட்டமாகும். பெண் சிசுக்கொலை என்னும் கொடிய பழக்கத்தை அறவே ஒழிப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். பல்வேறு சமூக சூழ்நிலைகளின் காரணமாக பெற்றோர்களால் நிராகரிக்கப்படும் பெண் குழந்தைகளை மீட்க இத்திட்டத்தின்கீழ் மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், குழந்தைகள் இல்லங்கள் மற்றும் காப்பகங்கள் ஆகிய இடங்களில் தொட்டில்கள் வைக்கப்பட்டன.

பெண் சிசுக்கொலை என்னும் கொடிய பழக்கத்தால் பாதிக்கப்பட்டிருந்த மதுரை, தேனி, திண்டுக்கல் மற்றும் தருமபுரி ஆகிய மாவட்டங்களில் 2001 ஆம் ஆண்டு, தொட்டில் குழந்தைத் திட்டம் புத்துயிர் அளிக்கப்பட்டு, முழு அளவிலான குழந்தை வரவேற்பு மையங்கள் துவக்கப்பட்டன. இவ்வரவேற்பு மையங்களில் போதிய அளவு பணியாளர்கள், வெப்ப அளிப்பான் கருவிகள், உயிர் காக்கும் மருந்துகள், குளிர்சாதனப் பெட்டிகள், எரிவாயு அடுப்பு இணைப்பு, பாலூட்டும் புட்டிகள், அத்தியாவசியப் பாத்திரங்கள் மற்றும் தொலைபேசி இணைப்பு போன்ற வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின்மூலம் மீட்கப்பட்ட குழந்தைகள், "தத்துக் கொடுத்தல்'' திட்டம்மூலமாக மறுவாழ்வு பெறுகின்றனர். மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகள் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் சிறப்பு இல்லங்களில் ஒப்படைக்கப்பட்டு மறுவாழ்வு பெறுகின்றனர். இப்புதுமையான தொட்டில் குழந்தைத் திட்டம், இந்தியா மட்டுமல்லாது பிற நாடுகளிலும் மாபெரும் பாராட்டைப் பெற்றுள்ளது.



2011 செப்டம்பர் 6]

தொட்டில் குழந்தைத் திட்டம் நடைமுறையிலுள்ள 5 மாவட்டங்களில் குழந்தை பாலின விகிதத்தில் பெண் குழந்தைகளின் பிறப்பு விகிதம் அதிகமாகியுள்ளது கவனிக்கத்தக்கது.

| மாவட்டம் | 2001 ஆம் ஆண்டின் மக்கட்தொகை கணக்கெடுப்பின்படி குழந்தை பாலின விகிதம் (1000 ஆண் குழந்தைகளுக்கு) | 2011 ஆம் ஆண்டின் மக்கட்தொகை கணக்கெடுப்பின்படி குழந்தை பாலின விகிதம் (1000 ஆண் குழந்தைகளுக்கு) |
|---|---|---|
| சேலம் | 851 | 917 |
| மதுரை | 926 | 939 |
| தேனி | 891 | 937 |
| திண்டுக்கல் | 930 | 942 |
| தருமபுரி | 826 | 911 |

தமிழ்நாட்டில் 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பில், 1000 ஆண் குழந்தைகளுக்கு 942 பெண் குழந்தைகள் என்று இருந்த குழந்தை பாலின விகிதம், 2011 ஆம் ஆண்டில் 946 ஆக உயர்ந்துள்ளது.

2011 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டில் கடலூர், அரியலூர், பெரம்பலூர், விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் பல்வேறு சமூகப் பொருளாதார காரணங்களினால் குழந்தைப் பாலின விகிதம் குறைந்துள்ளது என தெரியவந்துள்ளதால் இதன்மீது சிறப்புக் கவனம் தேவைப்படுகிறது. எனவே, இம்மாவட்டங்களிலும் தொட்டில் குழந்தைத் திட்டத்தை விரிவுபடுத்த இவ்வரசு முடிவெடுத்துள்ளது. ₹47.45 இலட்சம் மதிப்பீட்டில் வரவேற்பு மையங்கள் இம்மாவட்டங்களில் ஆரம்பிக்கப்படும். இவ்வரவேற்பு மையங்களில், மேற்பார்வையாளர், துணை மருத்துவச் செவிலியர் மற்றும் உதவியாளர் போன்ற தேவையான பணியாளர்கள்

[2011 செப்டம்பர் 6

நியமிக்கப்படுவர். இம்மையங்களில் குழந்தைகளுக்குத் தேவையான பால் பவுடர், மருந்துகள் மற்றும் துணிகள் போதிய அளவில் இருப்பு வைக்கப்படும்.

2011-2012 ஆம் ஆண்டின் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹50.22 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 3.3. முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம்

பெண் கல்வியை மேம்படுத்தவும், பெண் சிசுக்கொலையை ஒழிக்கவும், ஆண் குழந்தைகளை மட்டுமே விரும்பும் மனப்போக்கை மட்டுப்படுத்தவும், சிறு குடும்ப முறையை ஊக்குவிக்கவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 1992 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட மற்றுமொரு புரட்சிகரமான திட்டம் "பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம்" ஆகும்.

பெண் குழந்தைகளுக்கு அதிக நிதிப் பயன் கிடைத்திடும் வகையில் 2001 ஆம் ஆண்டு இத்திட்டம் முற்றிலும் மாற்றியமைக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் குடும்பத்தில் ஒரே ஒரு பெண் குழந்தை மட்டும் இருந்து, ஆண் குழந்தை இல்லாது, பெற்றோரில் ஒருவர் 35 வயதுக்குள் கருத்தடை அறுவை சிகிச்சை மேற்கொண்டிருந்தால் அப்பெண் குழந்தையின் பெயரில் ஆரம்ப வைப்பீடாக ₹22,200/- முதலீடு செய்யப்பட்டு அத்தொகை 20 ஆண்டுகள் வரை வைப்பீடாக வைக்கப்படுகிறது (திட்டம்-I). இதே போன்று, குடும்பத்தில் இரண்டு பெண் குழந்தைகள் மட்டும் இருந்து, ஆண் குழந்தை ஏதும் இல்லாது, பெற்றோரில் ஒருவர் கருத்தடை அறுவை சிகிச்சை மேற்கொண்டிருந்தால், ஒவ்வொரு பெண் குழந்தையின் பெயரிலும் தலா ₹15,200/- முதலீடு செய்யப்பட்டு 20 ஆண்டுகள் வரை வைப்பீடாக வைக்கப்படுகிறது. (திட்டம்-II)

வைப்புத் தொகை முதலீடு செய்யப்பட்ட ஐந்தாமாண்டு முடிவிலிருந்து இருபதாம் ஆண்டு வரை, அப்பெண் குழந்தைகளின் கல்விக்காக ஆண்டுதோறும் ஊக்கத் தொகையாக '1800/- வழங்கப்பட்டு வருகிறது. அப்பெண் குழந்தை, பத்தாம் வகுப்பு வரை படித்து, பொதுத்தேர்வு எழுதியிருந்தால் மட்டுமே வைப்புத் தொகையின் முதிர்வுத் தொகை வழங்கப்படும். இத்திட்டத்தின்கீழ் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட திரளான வட்டி விகிதத்துடன்கூடிய நிலை வைப்புத் தொகை, 'தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில்' முதலீடு செய்யப்படுகிறது.



2011 செப்டம்பர் 6]

திட்டம்I-ன்கீழ், பெண் குழந்தைக்கு வைப்பீடு செய்யப்பட்ட ₹22,200/-, இருபது ஆண்டுகளுக்குப் பிறகு ஆண்டு ஊக்கத் தொகையுடன் சேர்த்து தோராயமாக ₹1,00,000/- முதிர்வுத் தொகையாக வழங்கப்படும். திட்டம்II-ன்கீழ், ஒவ்வொரு பெண் குழந்தைக்கும் வைப்பீடு செய்யப்பட்ட தலா ₹15,200/- இருபது ஆண்டுகளுக்குப் பிறகு, ஆண்டு ஊக்கத் தொகையுடன் சேர்த்து தோராயமாக தலா ₹60,000/- முதிர்வுத் தொகையாக வழங்கப்படும்.

31-3-2011 வரை 3.62 இலட்சம் பெண் குழந்தைகள் பயனடையும் வகையில் இத்திட்டத்திற்காக ₹550.00 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் 2001 ஆம் ஆண்டில் ₹64.43 சதவிகிதமாக இருந்த பெண் கல்வி விகிதாச்சாரம், 2011-ல் 73.86 சதவிகிதமாக உயர்ந்துள்ளது கவனிக்கத்தக்கது.

இந்த மகத்தான திட்டத்தை மேலும் மெருகேற்றும் விதமாக, ஒரு குடும்பத்தில் ஒரு பெண் குழந்தை மட்டுமே இருப்பின் அந்த பெண் குழந்தையின் பெயரில் தற்போது வழங்கப்பட்டு வரும் ₹22,200/—தொகையினை, ₹50,000/- ஆகவும் (திட்டம்-I), இரு பெண் குழந்தைகள் இருக்கும் குடும்பத்தில் ஒவ்வொரு பெண் குழந்தைக்கும், தற்போது வழங்கப்பட்டு வரும் ₹15,200/ - தொகையினை ₹25,000/- ஆகவும் (திட்டம்-II) இந்த அரசால் உயர்த்தி வழங்கப்படும். இந்த "முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின்" கீழ் சேர்ந்து வரும் நிதிப்பயன்கள் கணிசமான அளவிற்கு உயர்ந்து, பெண் குழந்தைகள் கல்வி பயில பெருமளவில் உதவிகரமாக இருக்கும்.

2011-2012 ஆம் ஆண்டின் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹75.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 3.4. குழந்தை தத்தெடுத்தல் திட்டம்

பெற்றோர்களிடமிருந்து நிரந்தரமாகப் பிரிய நேரிட்ட ஒரு குழந்தை, வளர்ப்புப் பெற்றோர் என்று அழைக்கப்படும் புதிய பெற்றோரின் உறவு முறையோடு இணைந்த அனைத்து தார்மீக உரிமைகள், கடமைகள் மற்றும் பொறுப்புகளோடு சட்டபூர்வமான குழந்தையாக மாறுவதே "தத்தெடுத்தல்'' என்பதாகும்.

[2011 செப்டம்பர் 6

நிராதரவான, கைவிடப்பட்ட, ஆதரவற்ற மற்றும் புறக்கணிக்கப்பட்ட குழந்தைகளுக்கு குடும்பச் சூழ்நிலையிலான கவனிப்பு மற்றும் பாதுகாப்பினை நல்கி, அவர்களது அறிவாற்றலையும், செயலாற்றலையும் வெளிக்கொணரும் வகையில் மகிழ்ச்சி, அன்பு மற்றும் புரிந்து கொள்ளும் சூழலை தத்தெடுத்தல் திட்டம் ஏற்படுத்தித் தருகிறது. அக்குழந்தைகளின் சரியான முன்னேற்றத்திற்கு தேவைப்படும் உணர்வு பூர்வமான, உடல் மற்றும் பொருள் ரீதியான பாதுகாப்பினை அளிக்கிறது. நிராதரவான, ஆதரவற்ற மற்றும் புறக்கணிக்கப்பட்ட குழந்தைகள் வன்கொடுமை, சுரண்டல் மற்றும் சமூக ஏற்றத்தாழ்வுகளால் பாதிக்கப்படும் சூழ்நிலைகளைத் தவிர்க்கும் நம்பத் தகுந்த வழிமுறையாகவும் இத்திட்டம் செயல்படுகிறது. மேலும், குழந்தையின்றி தவிக்கும் தம்பதியருக்கு தங்களுக்கே உரிமையான ஒரு குழந்தையை சொந்தமாக்கிக்கொள்ள ஒரு வாய்ப்பையும் மகிழ்ச்சியினையும் முழு திருப்தியினையும் உருவாக்கித் தருகிறது.

தமிழகத்தில் தற்போது உள்நாட்டில் தத்து வழங்கிட அரசு சாரா நிறுவனங்கள்மூலம் 22 தத்தெடுப்பு நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றுள், 9 நிறுவனங்களுக்கு வெளி நாடுகளுக்கு தத்துக் கொடுக்கும் அங்கீகாரமும், புதுடெல்லியில் உள்ள மத்திய தத்து வள ஆதார நிறுவனத்தால் (Central Adoption Resource Authority-CARA) வழங்கப்பட்டுள்ளது. இந்த 22 தத்து நிறுவனங்களும் முறையே சென்னை (4), கோயம்புத்தூர் (3), சேலம் (2), மதுரை (2), காஞ்சிபுரம் (2) மற்றும் திருவள்ளூர், கிருஷ்ணகிரி, திருச்சிராப்பள்ளி, தூத்துக்குடி, திண்டுக்கல், கடலூர், திருநெல்வேலி, நாகப்பட்டினம், வேலூர் ஆகிய மாவட்டங்களில் தலா ஒன்றுமாக இயங்கி வருகின்றன.

தொட்டில் குழந்தைத் திட்டத்தின்கீழ் பெறப்படும் குழந்தைகள் மட்டுமல்லாது குழந்தைகள் வழிமம் (சைல்ட் லைன்), காவல் துறை, பொது மக்கள், மருத்துவமனைகள் மற்றும் பெற்றோர்களால் நேரடியாக ஒப்படைப்பு ஆகிய பல்வேறு வழிகளிலும் குழந்தைகள், தத்து அளித்தல் திட்டத்திற்கு பெறப்படுகின்றனர். மேற்படி குழந்தைகள் CARA-வின் வழிகாட்டுதலின்படி, இந்து தத்தெடுத்தல் மற்றும் பராமரிப்புச் சட்டம் 1956 (HAMA), பாதுகாவலர் மற்றும் முதுகணாளர் சட்டம்-1890 (GAWA) மற்றும் 2006 ஆம் ஆண்டில்



2011 செப்டம்பர் 6]

திருத்தியமைக்கப்பட்ட, 2000 ஆம் ஆண்டின் இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம் Juvenile Justice (Care and Protection of Children) Act 2000, as amended in 2006)ன்படி தத்து கொடுக்கப்படுகின்றனர்.

தத்தெடுத்தல் குறித்த தேவையற்ற அச்சம் மற்றும் தவறான கருத்துகளை அகற்றிட, விழிப்புணர்வு முகாம்கள் மற்றும் கருத்துப்பட்டறைகளை தமிழக அரசு நடத்தி வருகிறது. இத்திட்டத்தின் 'ஒருங்கிணைப்பாளர்களாக' மாவட்ட சமூக நல அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

2011-2012 ஆம் ஆண்டின் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், இத்திட்டத்திற்காக ₹14.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 3.5. பணிபுரியும் பெண்கள் மற்றும் நோய்வாய்ப்பட்ட தாய்மார்களின் குழந்தைகளுக்கான காப்பகங்கள்

பணிபுரியும் பெண்கள் மற்றும் நோய்வாய்ப்பட்ட தாய்மார்களுக்கு உதவும் நடவடிக்கையாக தமிழக அரசு குழந்தைகள் காப்பகங்கள் மற்றும் பகல் நேர சேவைகளை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டம், குழந்தைகள் தங்களது இளம் பருவத்திலேயே தங்கள் உடன்பிறந்த சிறு குழந்தைகளைக் கவனிக்க வேண்டிய காரணத்திற்காகப் பள்ளியில் இருந்து இடை நிறுத்தம் செய்யாமல் இருப்பதையும், இளம் பிராயத்திலேயே வேலைக்குச் சென்று குடும்பப் பொறுப்பினை ஏற்கும் நிலையினை தவிர்த்து அவர்கள் பள்ளிக்குச் செல்வதையும் உறுதி செய்கிறது.

வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள பெற்றோர்களின் 0-5 வயதிலான குழந்தைகள் இக்காப்பகங்களில் அனுமதிக்கப்படுகிறார்கள். மாநில அரசின் மானிய உதவியுடன், தொண்டு நிறுவனங்கள்மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. குழந்தைகளுக்குக் கல்வியுடன் சத்தான இணை உணவும் வழங்கப்படுகிறது. 25 குழந்தைகளுடன் இயங்கும் ஒரு காப்பகத்திற்கு, அரசு மானியமாக ஆண்டொன்றிற்கு ₹25,410/- வழங்கப்படுகிறது.

2011-2012 ஆம் ஆண்டின் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹21.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

*[2011 செப்டம்பர் 6*

## 3.6 தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் பங்களிப்புடன் குழந்தைகள் நலன் காத்தல்

*5 முதல் 18 வயது வரையுள்ள, தாய் அல்லது தந்தை இல்லாத அல்லது பெற்றோர் இருவருமே இல்லாத குழந்தைகளுக்கு மறுவாழ்வு அளிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். கணவரால் கைவிடப்பட்டோரின் குழந்தைகள் அல்லது நீண்ட நாள் நோய்வாய்ப்பட்ட பெற்றோரின் குழந்தைகள் அல்லது நீண்ட நாள் சிறை இருப்போரின் குழந்தைகளும் இத்திட்டத்தின்கீழ் பயன்பெறும் தகுதியுடையவர்கள். தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் ஆதரவற்ற குழந்தைகள் இல்லங்களில் ஒரு அலகிற்கு 25 குழந்தைகள் என்ற முறையில் பராமரிக்கப்படுகிறார்கள். ஒவ்வொரு அலகிலும் குழந்தைகளுக்கு சிறப்பு கவனிப்பு அளிப்பதற்காக ஒரு இல்லத்தாய் அல்லது தந்தை மற்றும் ஒரு உதவியாளர் உள்ளனர். இத்திட்டத்தில் பயன்பெற பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ₹24,000/-க்கு மிகாமல் இருக்க வேண்டும். ஆதரவற்ற குழந்தைகள் இல்லங்கள் நடத்தும் தொண்டு நிறுவனங்களை ஊக்குவிப்பதற்காக மாநில அரசு குழந்தைகளைப் பராமரிப்பதற்கான மானியத்தை அளித்துவருகிறது.*

*2011-2012 ஆம் ஆண்டின் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹604.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

## 3.7. சத்யா அம்மையார் நினைவு அரசு குழந்தைகள் காப்பகங்கள்

*ஆதரவற்ற மற்றும் தாய் தந்தையற்ற குழந்தைகளை நல்ல குடிமக்களாக உருவாக்குவதற்காகவும் அவர்களுக்கும் ஏனைய குழந்தைகளைப் போலவே வாழும் சூழலை ஏற்படுத்தித் தரவும் தமிழ்நாடு அரசு, மாநிலம் முழுவதும் 27 குழந்தைகள் இல்லங்களை நடத்தி வருகிறது. இந்த இல்லங்களில் குழந்தைகளைப் பாதுகாப்புடன் பேணிக்காக்கின்ற சூழலில், குழந்தைகளின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக, அவர்களுக்குத் தேவையான உணவு, உடை, இருப்பிடம், கல்வி மற்றும் சுகாதார வசதி ஆகியவை இலவசமாக வழங்கப்படுகிறது. 1 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரையில் இல்லத்திலேயே அக்குழந்தைகளுக்கு கல்வி அளிக்கப்படுகிறது.*



*2011 செப்டம்பர் 6]*

*அதன் பின்னர் அருகில் அமைந்துள்ள அரசு மற்றும் அரசு உள்ளாட்சி அமைப்பு பள்ளிகளில் உயர்கல்வி தொடர அனுப்பப்படுகின்றனர். இல்லக் குழந்தைகள் சுயசார்புடன், தன்னிறைவு அடைவதற்காக வாழ்க்கைத் தொழிற்கல்வி பயிற்சியும் இவ்வில்லங்களில் அளிக்கப்படுகின்றன. இக்காப்பகங்களின் செயல்பாடுகளைக் கண்காணிக்கவும், குழந்தைகளுக்கான நலத் திட்டங்களை நல்ல முறையில் செயல்படுத்துவதற்கு வழிகாட்டுதலை வழங்கவும் மாவட்ட ஆட்சியர் தலைமையின்கீழ் மாவட்ட அளவிலான குழு ஒன்று செயல்படுகிறது. இக்குழுவில் கல்வி, சுகாதாரம், சமூக நலம் ஆகிய துறைகளின் பிரதிநிதிகள் மற்றும் சமூக நல ஆர்வலர்கள் உறுப்பினர்களாக உள்ளனர்.*

**அரசு குழந்தைகள் காப்பகங்களில் சேர்வதற்கான தகுதிகளாவன:—**

- *கவனித்துக்கொள்ள பெற்றோர்களோ, உறவினர்களோ யாருமில்லாத நிராதரவான மற்றும் கைவிடப்பட்ட குழந்தைகள்.*
- *தாயோ அல்லது தந்தையோ இறந்து விட்ட நிலையில், அவர்களில் ஒருவர் சிறைச்சாலையில் உள்ள நிலையில் அல்லது குடும்பத்தை நிராதரவாக விட்டுச் சென்ற நிலையில் தனித்து வாழும் பெற்றோரது குழந்தைகள்.*
- *தொழுநோய் அல்லது மனநலம் குன்றிய பெற்றோரால் பாதுகாக்க இயலாத குழந்தைகள்.*
- *பெற்றோர் உயிருடன் இருந்து தந்தை / தாய் கடுமையாக பாதிப்பிற்குள்ளான மாற்றுத் திறனுடையவராக இருந்து தாய் / தந்தையால் பராமரிக்கப்படும் குடும்பத்தின் குழந்தைகள்.*
- *குடும்ப ஆண்டு வருமானம் ₹24,000/-க்கும் குறைவாக இருத்தல் வேண்டும்.*

*2011-2012 ஆம் ஆண்டின் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹974.74 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

*[2011 செப்டம்பர் 6*

**3.8. ஏழை விதவைகளின் குழந்தைகளுக்கு இலவச நோட்டுப் புத்தகங்கள் வழங்குதல்**

இத்திட்டத்தின்மூலம் ஏழை விதவைகளின் பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு இலவச நோட்டுப் புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. மாநிலம் முழுவதும் பள்ளிகளின் பொறுப்பாளர்களால் அளிக்கும் தேவைப் பட்டியலின் அடிப்படையில் மாவட்ட சமூக நல அலுவலரால் இலவச நோட்டுப் புத்தகங்கள் அந்தந்தப் பள்ளிகளின் குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது.

2011-2012 ஆம் ஆண்டின் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹12.45 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**3.9. குழந்தைத் திருமண தடைச் சட்டம், 2006**

சமூகத்தில் கொடுமையான விளைவுகளை ஏற்படுத்தும் குழந்தைத் திருமணம் என்னும் பழக்கம் அறவே ஒழிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். சமூகப் பொருளாதாரக் காரணங்களால் சமுதாயத்தில் பெண்களுக்குத் தரப்படும் தாழ்நிலை, ஏழ்மை, கல்வியறிவின்மை, மேலும் தொன்றுதொட்டு மேலோங்கி வரும் ஆணாதிக்க உணர்வு ஆகிய காரணங்களால் குழந்தைத் திருமணம் சமூகத்தில் வேரூன்றி உள்ளது. இது, குழந்தைகளின் குறிப்பாக பெண் குழந்தைகளின் உரிமைகளை மீறும் செயல் மட்டுமல்லாது, சமுதாயத்தில் ஆரோக்கியமாக அவர்கள் வளர்ச்சி பெறும் வாய்ப்பை மறுப்பதுடன் கல்வி பெறுவதையும், சுதந்திரமாக மற்றும் கண்ணியமாக வாழ்வதையும் தடை செய்யும் பழக்கமாகும். உரிய பருவத்திற்கு முன்பே கருவுறுதல், ஊட்டச்சத்து குறைபாடு, மகப்பேறின் போது தாய் மரணம் மற்றும் பிறந்தபின் இறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகமாதல் ஆகிய அடுத்தடுத்த தீய விளைவுகளுக்கு குழந்தைத் திருமணங்கள் காரணமாகின்றன.

ஏற்கெனவே நடைமுறையில் இருந்த குழந்தைத் திருமண தடுப்புச் சட்டம், 1929, இந்திய அரசால் குழந்தைத் திருமண தடைச் சட்டம், 2006-ஆக மாற்றியமைக்கப்பட்டது. இச்சட்டம், சமுதாயத்தில் குழந்தைத் திருமணம் ஒழிக்கப்படுவதை உறுதி செய்கிறது. மேலும், பாதிக்கப்படும் குழந்தைகளுக்குப் பாதுகாப்பும், நிவாரணமும் வழங்க வழிவகை செய்வதுடன், குழந்தைத் திருமணத்தை மறைப்பவருக்கும், ஆதரிப்பவருக்கும், நடத்துபவருக்கும் அளிக்கப்படும் தண்டனைகளை இச்சட்டம் கடுமையாக்கியுள்ளது.



*2011 செப்டம்பர் 6]*

மாவட்ட சமூக நல அலுவலர்கள், குழந்தைத் திருமண தடைச் சட்டத்தை ஒவ்வொரு மாவட்டத்திலும் திறம்பட செயல்படுத்த தமிழக அரசால் இச்சட்டத்திற்கென உருவாக்கப்பட்டுள்ள விதிகளின்கீழ் ‘குழந்தைத் திருமணத் தடுப்பு அதிகாரிகளாக’ நியமிக்கப்பட்டுள்ளனர். குழந்தைத் திருமணம் நடைபெறுவதாக எவ்வகையில் தகவல் கிடைக்கப்பெற்றாலும் உடனே அதனை ஏற்று, குழந்தைத் திருமணத்தைத் தடுக்க நடவடிக்கை எடுக்கவும், குற்றத்தைப் பதிவு செய்யவும், மாவட்ட நீதிமன்றத்தில் விண்ணப்பம் செய்து, நடைபெற்ற குழந்தைத் திருமணத்தை செல்லாததாக்கவும், அந்தக் குழந்தைத் திருமணத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகளை காவல் பாதுகாப்பில் எடுத்து பராமரிக்கவும், இக்குழந்தைத் திருமணத் தடுப்பு அலுவலர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், ஊராட்சித் தலைவரின் தலைமையில், ஊராட்சி அளவிலான கண்காணிப்புக் குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டு, அதன்மூலம் கிராமப்புறங்களில் நிகழும் குழந்தைத் திருமணங்களைத் தடுத்து நிறுத்தவும், அறிக்கை சமர்ப்பிக்கவும் வழிவகை செய்துள்ளது.

[2011 செப்டம்பர் 6

# அத்தியாயம் – 4

## புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்

**4.1.** குழந்தைகள் எதிர்காலத்தில் ஆரோக்கியமாகவும், மன உறுதியுடனும் மற்றும் கற்றறிந்த குடிமக்களாக உருவாவதை உறுதி செய்யவும், அவர்களுக்கு ஊட்டச்சத்து பாதுகாப்பு அளிப்பது மிகவும் இன்றியமையாததாகும். பள்ளி செல்லும் குழந்தைகள் இடையில் நின்று விடுவதைக் குறைத்தல், அத்துடன் பொருளாதாரத்திலும், சமுதாயத்திலும் பின்தங்கிய நிலையில் உள்ள குடும்பங்களிலுள்ள குழந்தைகள், பள்ளிகளில் சூடான சமைத்த உணவு பெறுவதை உறுதி செய்தல் ஆகிய உயரிய குறிக்கோள்களுடன் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் தொடங்கப்பட்டது. இவ்வாறு மாணவர்களிடையே கல்வியறிவை உயர்த்துதல், அதே வேளையில் அவர்களுடைய ஊட்டச்சத்து குறைபாட்டை நீக்குதல் ஆகிய இரண்டு நோக்கங்களையும் இத்திட்டம் எய்தியுள்ளது.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம், 1-7-1982 அன்று தொடங்கப்பட்டது. திட்ட துவக்கக் காலத்தில், முதலில் ஊரகப் பகுதிகளில், குழந்தைகள் நல மையங்களில் 2 முதல் 5 வயது வரையிலான முன்பருவக்கல்வி பயிலும் குழந்தைகளுக்காகவும், 5 முதல் 9 வயது வரையிலான தொடக்கப்பள்ளி மாணவ/மாணவிகளுக்காகவும் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம், பின்னர் 1982 ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள் 15 ஆம் நாள் முதல் நகரப் பகுதிகளுக்கும், செப்டம்பர் 1984 முதல் 10 முதல் 15 வயது வரையிலான பள்ளி மாணவ, மாணவிகளும் பயனடையும் வகையில், மேலும் விரிவுபடுத்தப்பட்டது. 2 முதல் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகள் மற்றும் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு ஆண்டு முழுவதும் (365 நாட்களிலும்) மற்றும் 6 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகளுக்கு, பள்ளி வேலை நாட்களில் (220 நாட்கள்) சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் பயன்பெற விரும்பும் அனைத்து குழந்தைகளுக்கும் அவர்கள் பயிலும் பள்ளி வளாகத்திலேயே சத்துணவு சமைக்கப்பட்டு சூடாகப் பரிமாறப்படுகிறது.



2011 செப்டம்பர் 6]

### 4.2. நிர்வாகக் கட்டுப்பாடு

ஊரக மற்றும் நகர்ப்புற பள்ளி சத்துணவு மையங்கள், சமூக நல இயக்குனரின் நிர்வாகக் கட்டுப்பாட்டிலும், 2 முதல் 5 வயது வரையிலான குழந்தைகளுக்கான குழந்தைகள் மையங்கள், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்ட ஆணையரின் கட்டுப்பாட்டிலும் செயல்பட்டு வருகின்றன.

### 4.3. பயனாளிகளின் எண்ணிக்கையினை நிர்ணயித்தல்

ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும் ஒவ்வொரு மையத்திற்கான பயனாளிகளின் எண்ணிக்கை, பள்ளிகளில் மதிய உணவு உட்கொள்ளும் மாணவ, மாணவியரின் வருகையின்பேரில் வட்டார வளர்ச்சி அலுவலர்களிடமிருந்து பெறப்படும் அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவர்களால் நிர்ணயம் செய்யப்படுகிறது. சத்துணவுத் திட்டத்தின்கீழ் குழந்தைகள் மையங்கள் மற்றும் பள்ளி சத்துணவு மையங்களில் பயன்பெறும் பயனாளிகள் (குழந்தைகள்) மற்றும் முதியோர் ஓய்வூதியம் பெறும் சத்துணவுப் பயனாளிகள் ஆகியோரின் விவரங்கள் கீழ்க்கண்ட அட்டவணைகளில் கொடுக்கப்பட்டுள்ளன:

### 4.4. குழந்தைகள் மையப் பயனாளிகள்

| வ. எண் | பயனாளிகளின் வகைப்பாடு | மையங்களின் எண்ணிக்கை | பயனடைவோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | குழந்தைகள் மையங்களில் 2 முதல் 5 வயது வரையுள்ள குழந்தைகள் (25 முதல் 60 மாதங்கள் வரை) | 54,439 {49,499 குழந்தைகள் மையங்கள் (அங்கன்வாடி மையங்கள்) + 4,940 குறு மையங்கள்} | 11,38,831 |
| 2 | முதியோர் ஓய்வூதியம் பெறுவோர் (சத்துணவுப் பயனாளிகள்) | | 22,384 |
| | மொத்தம் | | 11,61,215 |

[2011 செப்டம்பர் 6

## 4.5. பள்ளி சத்துணவு மையப் பயனாளிகள்

| வ. எண் | திட்டம் | மையங்களின் எண்ணிக்கை | பயனடைவோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் (கிராமப்புறம்) | 40,105* | 49,08,167* |
| 2. | புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் (நகர்ப்புறம்) | 2,781* | 5,72,173* |
| | மொத்தம் | 42,886 | 54,80,340 |

* தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்ட மையங்கள் மற்றும் குழந்தைகள் உட்பட

## 4.6. வகுப்பு வாரியாக பயனடையும் மாணவ / மாணவிகள்

| வகுப்பு | கிராமப்புறம் | நகர்ப்புறம் | மொத்தம் |
|---|---|---|---|
| 1 முதல் 5 | 25,05,406 | 2,09,992 | 27,15,398 |
| 6 முதல் 8 | 14,82,250 | 2,22,236 | 17,04,486 |
| 9 மற்றும் 10 | 9,05,301 | 1,38,774 | 10,44,075 |
| தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம் | 15,210 | 1,171 | 16,381 |
| மொத்தம் | 49,08,167 | 5,72,173 | 54,80,340 |

## 4.7.மொத்தபயனாளிகள்

| | | |
|---|---|---|
| 1. | குழந்தைகள் மையங்கள் (2 முதல் 5 வயது வரை) | 11,38,831 |
| 2. | பள்ளி சத்துணவு மையங்கள் | 54,80,340 |
| 3. | சத்துணவுப் பெறும் முதியோர் ஓய்வூதியப் பயனாளிகள் | 22,384 |
| | மொத்தம் | 66,41,555 |



2011 செப்டம்பர் 6]

## 4.8. நாள் ஒன்றுக்கு ஒவ்வொரு பயனாளிக்கும் வழங்கப்படும் உணவுப் பொருட்களின் அளவு

*(ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் மற்றும் தொடக்கக் கல்வி பள்ளி மையங்கள்)*

| வ. எண் | உணவுப் பொருட்கள் | 2 முதல் 5 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு வழங்கப்படும் உணவுப் பொருட்களின் அளவு | 5 முதல் 9 வயது வரையுள்ள மாணவ / மாணவிகளுக்கு வழங்கப்படும் உணவுப் பொருட்களின் அளவு |
|---|---|---|---|
| 1. | அரிசி | 80 கிராம் | 100 கிராம் |
| 2. | பருப்பு | 10 கிராம் | 15 கிராம் |
| 3. | எண்ணெய் | 2 கிராம் | 3 கிராம் |
| 4. | உப்பு | 1. 9 கிராம் | 1. 9 கிராம் |
| 5. | காய்கறிகள், தாளிதம், மற்றும் எரிபொருள் | 56 பைசா | 70 பைசா |
| 6. | முட்டை* | 46 கிராம்/முட்டை (வாரத்தில் 3 நாட்கள்) | 46 கிராம்/முட்டை (வாரத்தில் 5 நாட்கள்) |
| 7. | பச்சைப்பயறு / கொண்டைக் கடலை | 20 கிராம் (செவ்வாய் கிழமை தோறும்) | 20 கிராம் (செவ்வாய் கிழமை தோறும்) |
| 8. | உருளைக் கிழங்கு | 20 கிராம் (வெள்ளிக் கிழமை தோறும்) | 20 கிராம் (வெள்ளிக் கிழமை தோறும்) |

*** முட்டை உண்ணாத குழந்தைகளுக்கு வாழைப்பழம் வழங்கப்படுகிறது.**

[2011 செப்டம்பர் 6

10 - 12 வயது (6, 7 மற்றும் 8ஆம் வகுப்பு) மற்றும்

13 - 15 வயது (9 மற்றும் 10 ஆம் வகுப்பு) மாணவ /மாணவியர்

| வ. எண் | உணவுப் பொருட்கள் | 10 முதல் 12 வயது வரையுள்ள மாணவ / மாணவிகளுக்கு வழங்கப்படும் உணவுப் பொருட்களின் அளவு | 13 முதல் 15 வயது வரையுள்ள மாணவ / மாணவிகளுக்கு வழங்கப்படும் உணவுப் பொருட்களின் அளவு |
|---|---|---|---|
| 1. | அரிசி | 150 கிராம் | 150 கிராம் |
| 2. | பருப்பு | 15 கிராம் | 15 கிராம் |
| 3. | எண்ணெய் | 3 கிராம் | 3 கிராம் |
| 4. | உப்பு | 1. 9 கிராம் | 1. 9 கிராம் |
| 5. | காய்கறிகள், தாளிதம், மற்றும் எரிபொருள் | 80 பைசா | 80 பைசா |
| 6. | முட்டை * | 46 கிராம்/ முட்டை (வாரத்தில் 5 நாட்கள்) | 46 கிராம்/ முட்டை (வாரத்தில் 5 நாட்கள்) |
| 7. | பச்சைப்பயறு / கொண்டைக் கடலை | 20 கிராம் (செவ்வாய்க் கிழமை தோறும்) | 20 கிராம் (செவ்வாய்க் கிழமை தோறும்) |
| 8. | உருளைக்கிழங்கு | 20 கிராம் (வெள்ளிக் கிழமை தோறும்) | 20 கிராம் (வெள்ளிக் கிழமை தோறும்) |

**** முட்டை உண்ணாத குழந்தைகளுக்கு வாழைப்பழம் வழங்கப்படுகிறது.***



2011 செப்டம்பர் 6]

### 4.9. சத்துணவு பெறும் முதியோர் ஓய்வூதியப் பயனாளிகள்

| வ. எண் | உணவுப் பொருட்கள் | சத்துணவு பெறும் முதியோர் ஓய்வூதிய பயனாளிகளுக்கு வழங்கப்படும் உணவுப் பொருளின் அளவு |
|---|---|---|
| 1. | அரிசி | 200 கிராம் |
| 2. | பருப்பு | 15 கிராம் |
| 3. | எண்ணெய் | 1 கிராம் |
| 4. | உப்பு | 1.9 கிராம் |
| 5. | காய்கறிகள், தாளிதம் மற்றும் எரிபொருள் | 44 பைசா |

### 4.10. இருமுறை செறிவூட்டப்பட்ட உப்பு (Double Fortified Salt)

திருச்சிராப்பள்ளி, சேலம், நாமக்கல், கோயம்புத்தூர், கரூர், பெரம்பலூர் மற்றும் நீலகிரி ஆகிய ஏழு மாவட்டங்களில் அதிகமாக காணப்பட்ட முன் கழுத்துக் கழலை நோயினைத் தடுக்கும் முகமாக, இம்மாவட்டங்களில், சத்துணவில் இருமுறை செறிவூட்டப்பட்ட உப்பின் (Double Fortified Salt) பயன்பாடு அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. பின்னர், அனைத்து மாவட்டங்களிலும் இருமுறை செறிவூட்டப்பட்ட உப்பு சத்துணவில் பயன்படுத்தும் திட்டம் விரிவுபடுத்தப்பட்டது.

### 4.11. உணவுப் பொருட்கள் விநியோகம்

சத்துணவு மையங்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களை வட்டார வளர்ச்சி அலுவலர்களின் தேவைப்பட்டியலின்படி, மையங்களுக்கு விநியோகம் செய்யும் பணி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பொதுவாக, ஒவ்வொரு மாதமும் 10 ஆம் நாளிலிருந்து 25 ஆம் நாளுக்குள், சத்துணவு மையங்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் தனது மண்டலக் கிடங்குகளிலிருந்து சத்துணவு மையங்களுக்கு நேரடியாக விநியோகம் செய்து வருகிறது. உணவுப் பொருட்களுக்கான தொகை மாவட்ட ஆட்சியரால் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு வழங்கப்படுகிறது. சத்துணவுத் தயாரிக்கத் தேவையான காய்கறிகள்,

தாளிதப் பொருட்கள் மற்றும் எரிபொருள் ஆகியவை சத்துணவு அமைப்பாளர்களுக்கு வழங்கப்படும் உணவூட்டுச் செலவினத்திலிருந்து, சத்துணவு அமைப்பாளர்களால் உள்ளூரில் வாங்கப்படுகின்றன.

### 4.12. சில்லரைச் செலவினம்

மையங்களைத் தூய்மையாகப் பராமரிக்கும்பொருட்டு சோப்பு, பினாயில், துடைப்பம் போன்ற பொருட்கள் வாங்க, சில்லரைச் செலவினமாக, 500 குழந்தைகளுக்குட்பட்ட பயனாளிகளை உடைய ஒரு மையத்திற்கு மாதம் ஒன்றிற்கு ₹20/-ம் மற்றும் 500 குழந்தைகளுக்கு மேற்பட்ட பயனாளிகளை உடைய ஒரு மையத்திற்கு மாதம் ஒன்றிற்கு ₹30/- வீதமும் வழங்கப்படுகிறது.

### 4.13. பள்ளிகளில் தேசிய மதிய உணவுத் திட்டம்

மத்திய அரசின் ஆதரவுடன் செயல்படுத்தப்படும் தேசிய மதிய உணவுத் திட்டமானது அரசுப் பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள், உள்ளாட்சித் துறை பள்ளிகள் மற்றும் கல்விக் காப்புறுதித் திட்டம் / மாற்று வழி புதுமைக் கல்வி போதனை மையங்கள் ஆகியவற்றில் பயிலும் தொடக்கக் கல்வி மற்றும் உயர் தொடக்கக் கல்வி மாணவ, மாணவியருக்கான திட்டமாகும். 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு உணவு வழங்க ஒரு குழந்தைக்கு ஒரு பள்ளி நாளுக்கு ₹2.17 வீதமும், 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு உணவு வழங்க ஒரு பயனாளிக்கு ஒரு பள்ளி நாளுக்கு ₹3.25 வீதமும் சமையல் செலவினமாக மத்திய அரசு வழங்கி வருகிறது. மேலும், கட்டட பரப்பு அளவுகோலின்படி வைப்பறையுடன்கூடிய சமையல் அறை கட்டுவதற்கும் மத்திய அரசு நிதியுதவி வழங்குகிறது.

மத்திய அரசு, மதிய உணவுத் திட்டத்திற்காக 2011-2012 ஆம் ஆண்டில் ₹434.29 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

### 4.14. சத்துணவுப் பணியாளர்கள்

ஒவ்வொரு சத்துணவு மையமும் ஒரு சத்துணவு அமைப்பாளர், சமையலர் மற்றும் சமையல் உதவியாளர் ஆகியோரால் நிர்வகிக்கப்படுகிறது. 500 குழந்தைகளுக்கு மேலாக உள்ள மையத்தில்





கூடுதலாக ஒரு சமையலரும், ஒரு சமையல் உதவியாளரும் பணியமர்த்தப்பட்டுள்ளனர். இத்திட்டம், ஊரக மற்றும் நகர்புற பெண்களுக்கு வேலைவாய்ப்பை அளிக்கிறது. சத்துணவு வேலைவாய்ப்பில் விதவைகளுக்கும், ஆதரவற்ற மகளிருக்கும் முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் பணியாற்றும் சத்துணவு அமைப்பாளர், சமையலர் மற்றும் சமையல் உதவியாளர்களுக்கு சிறப்பு காலமுறை ஊதியம் வழங்கப்படுகிறது. மேலும் அகவிலைப்படி, வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி மற்றும் மருத்துவப்படி போன்ற படிகளும் அத்துடன் 3 விழுக்காடு ஆண்டு ஊதிய உயர்வும் வழங்கப்படுகிறது.

1-4-2005 முதல் சத்துணவு அமைப்பாளர்களுக்கு ₹50,000/-மும், சமையலர் மற்றும் சமையல் உதவியாளர்களுக்கு ₹20,000/-மும் அவர்கள் ஓய்வு பெறும் போது ஒட்டுமொத்தத் தொகையாக வழங்கப்படுகிறது.

சத்துணவு அமைப்பாளர், சமையலர், சமையல் உதவியாளர்கள் ஓய்வுபெறும் போது மாதமொன்றிற்கு முறையே ₹700/-, ₹600/-, ₹500/- சிறப்பு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

தமிழக அரசு, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்திற்காக 2011-2012 ஆம் ஆண்டின் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ₹1,278.25 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

[2011 செப்டம்பர் 6

# அத்தியாயம் - 5

## ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம்

*5.1.* ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் என்பது 0—6 வயது வரையிலுள்ள குழந்தைகள், வளரிளம் பெண்கள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு பல சேவைகளைத் தொகுத்து வழங்கும் வகையில் உருவாக்கப்பட்டத் திட்டமாகும். 6 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் முழுமையான வளர்ச்சிக்கு சமுதாய அளவில் மேம்படுத்தப்பட்ட அடிப்படை பணிகளை மேற்கொண்டிடவும், அக்கறை காட்டுபவர்களது திறனை வலுவூட்டுவதற்காக உருவாக்கப்பட்டது ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் ஆகும்.

### 5.2. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் முக்கிய நோக்கங்கள்:

1 0-6 வயதுள்ள குழந்தைகளின் ஊட்டச்சத்து மற்றும் சுகாதார நிலையை மேம்படுத்தல்.

2 குழந்தைகளின் மனம், உடல் மற்றும் சமூக ரீதியான முறையான வளர்ச்சிக்கு அடிகோலுதல்.

3 சிசு இறப்பு, நோயுறும் தன்மையின் விகிதம், ஊட்டச்சத்து குறைவு ஆகியவற்றை குறைத்தல்.

4 ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரக் கல்வி வாயிலாக குழந்தைகளின் சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து தொடர்பான தேவைகளைக் கவனித்து செயல்படத் தக்கவகையில் தாய்மார்களின் திறனை மேம்படுத்துதல்

5 தமிழ்நாட்டை, ''ஊட்டச்சத்துக் குறைபாடற்ற மாநிலம்'' ஆக உருவாக்கவும், வாழ்நாள் முழுமைக்கான ஊட்டச்சத்து பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையில் கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள், பச்சிளம் குழந்தைகள், மழலையர் மற்றும் வளரிளம் பெண்களுக்கு ஊட்டச் சத்துணவு வழங்குவதில் தனிக் கவனம் செலுத்துதல்.



2011 செப்டம்பர் 6]

### 5.3. திட்டத்தின் பயனாளிகள்

- ❖ பிறந்த குழந்தை முதல் 72 மாதங்கள் நிறைவடைந்த குழந்தைகள்
- ❖ வளரிளம் பெண்கள்
- ❖ கருவுற்ற மகளிர் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள்

### 5.4. தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் சேவைகள்

(1) இணை உணவு வழங்குதல்

(2) 2 வயது முதல் 6 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்குச் சத்துணவு அளித்தல் மற்றும் முதியோர் உதவித் தொகை பெறுபவர்களுக்கு வருடத்தில் 365 நாட்களுக்கும் மதிய உணவு அளித்தல்

(3) சுகாதாரப் பணிகள்

(4) உயர் மருத்துவச் சிகிச்சைக்காகப் பரிந்துரைத்தல்

(5) பள்ளிசாரா முன்பருவக் கல்வி

(6) ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரக் கல்வி

(7) வளரிளம் பெண்களுக்கு ஊட்டச்சத்து மற்றும் வாழ்க்கைக் கல்வி வழங்குதல்

### 5.5. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின்கீழ் இயங்கும் மையங்கள்

தமிழகத்தில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் மூலமாக 49,499 குழந்தைகள் மையங்களும் (அங்கன்வாடி மையங்கள்), 4,940 குறு மையங்களுமாக, மொத்தம் 54,439 மையங்கள், 434 திட்டப் பகுதிகளில் செயல்பட்டு வருகின்றன. இதில் 385 திட்டப் பகுதிகள் ஊரகப் பகுதிகளிலும், 47 திட்டப் பகுதிகள் நகர்ப்புறங்களிலும், 2 திட்டப் பகுதிகள் மலைப் பகுதிகளிலும் செயல்படுகின்றன.

[2011 செப்டம்பர் 6

## 5.6. புதிய குழந்தைகள் மையம் திறப்பதற்கான அளவுகோல் மற்றும் நிதிச் செலவின பகிர்வு

மத்திய அரசால் திருத்தியமைக்கப்பட்ட வழிமுறைகளின்படி குழந்தைகள் மையம் அமைப்பதற்கான மக்கள்தொகை அளவுகோல் விவரங்கள்:

| திட்டப் பகுதியின் வகைப்பாடு | குழந்தைகள் மையம் | | குறு மையம் | |
|---|---|---|---|---|
| | குறைந்தபட்ச மக்கள் தொகை | அதிகபட்ச மக்கள் தொகை | குறைந்த பட்ச மக்கள் தொகை | அதிகபட்ச மக்கள் தொகை |
| ஊரகப் பகுதி | 400 | 800 | 150 | 400 |
| நகர்ப்புறம் | 400 | 800 | 150 | 400 |
| மலைப் பகுதி | 300 | 800 | 150 | 300 |

இத்திட்டத்தின் செலவினங்களில், இணை உணவிற்கு 50:50 என்ற விகிதாச்சாரத்திலும் மற்ற இனங்களுக்கு 90:10 என்ற விகிதாச்சாரத்திலும் மத்திய, மாநில அரசுகளுக்கிடையே நிதிப் பகிர்வு செய்யப்படுகின்றது.

## 5.7. இணை உணவு

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டப் பயனாளிகள் அதாவது , 6—72 மாதக் குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு இணை உணவு வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டில் இத்திட்டத்தின் பயனாளிகளுக்கு வருடத்தில் 300 நாட்களுக்கு செரிமானத் தன்மை (அமைலேஸ்) (Amylase) நிறைந்த இணை உணவு வழங்கப்படுகிறது.

தற்போது, பல்வேறு பயனாளிகளுக்கு வழங்கப்படும் இணை உணவின் அளவு மற்றும் ஊட்டச்சத்தின் அளவுகளும் கீழ்க்கண்டவாறு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன:



2011 செப்டம்பர் 6]

| பயனாளிகளின் வகைபாடு | | இணை உணவின் அளவு (நாள் ஒன்றுக்கு கிராமில்) | புரதம் (கிராமில்) | சக்தி (கலோரியில்) | வைட்டமின் மற்றும் தாது உப்புகள் {பரிந்துரைக் கப்பட்ட ஊட்டச்சத்து அளவு சதவிகிதத்தில் (%)} |
|---|---|---|---|---|---|
| 1) | 6 – 36 மாதக் குழந்தைகள் | 130 | 11 | 455 | 50 |
| 2) | 6 – 36 மாதக் குழந்தைகள் (கடுமையான ஊட்டச்சத்து பற்றாக்குறை) | 190 | 16 | 665 | 50 |
| 3) | கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் | 160 | 13.5 | 560 | 50 |

2010-2011 ஆம் ஆண்டில் பல்வேறு நிலையில் உள்ள பயனாளிகளுக்கு இணை உணவு வழங்க ₹270.01 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 6 மாதம் முதல் 3 வயதுடைய, இயல்பு நிலையிலுள்ள குழந்தைகளுக்கு, நாளொன்றுக்கு 130 கிராம் இணை உணவும், இதே வயதில் உள்ள கடுமையான ஊட்டச்சத்து பற்றாக்குறையுள்ள குழந்தைகளுக்கு நாளொன்றுக்கு 190 கிராம் இணை உணவும் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்திற்காக 2011-2012 ஆம் ஆண்டின் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ₹190.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 5.8. குழந்தைகள் மையத்தில் வழங்கப்படும் உணவின் விவரம்

குழந்தைகள் மையங்களில் குழந்தைகள், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் முதியோர்களுக்கு வழங்கப்படும் உணவின் விவரம்:

[2011 செப்டம்பர் 6

| வயது | வழங்கப்படும் உணவு |
|---|---|
| 6 மாதம் முதல் 1 வயது வரை | • இணை உணவு |
| 1 வயது முதல் 2 வயது வரை | • இணை உணவு<br>• வாரத்தில் ஒரு நாள் வேகவைத்த முட்டை |
| 2 வயது முதல் 3 வயது வரை<br>• | • இணை உணவு<br>• சூடான சமைத்த உணவு<br>வாரத்தில் மூன்று வேக வைத்த முட்டைகள் (திங்கள், புதன், வியாழக் கிழமைகளில்)<br>• முட்டை வழங்கப்படும் நாட்களில் முட்டை சாப்பிடாத குழந்தைகளுக்கு ஒரு வாழைப்பழம்<br>• வாரம் ஒரு முறை 20 கிராம் வேக வைத்த பச்சைப்பயறு அல்லது கொண்டைக்கடலை (செவ்வாய்க்கிழமைகளில்)<br>• வாரம் ஒரு முறை 20 கிராம் வேக வைத்த உருளைக்கிழங்கு (வெள்ளிக்கிழமைகளில்) |
| 3 வயது முதல் 5 வயது வரை | • சூடான சமைத்த உணவு<br>• வாரத்தில் மூன்று வேக வைத்த முட்டைகள் (திங்கள், புதன், வியாழக் கிழமைகளில்)<br>• முட்டை வழங்கப்படும் நாட்களில் முட்டை சாப்பிடாத குழந்தைகளுக்கு ஒரு வாழைப்பழம்<br>• வாரம் ஒரு முறை 20 கிராம் வேக வைத்த பச்சைப்பயறு அல்லது கொண்டைக்கடலை (செவ்வாய்க் கிழமைகளில்)<br>• வாரம் ஒரு முறை 20 கிராம் வேக வைத்த உருளைக்கிழங்கு (வெள்ளிக் கிழமைகளில்) |
| கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் | • இணை உணவு |
| சத்துணவு பெறும் முதியோர் ஓய்வூதியம் பெறுவோர் | • சூடான சமைத்த உணவு |



2011 செப்டம்பர் 6]

இந்தியாவிலேயே தமிழகத்தில் மட்டும்தான் முதியோர் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு சமைக்கப்பட்ட சூடான உணவு, குழந்தைகள் மையத்தில் வழங்கப்படுகிறது.

இணை உணவினை வீட்டிற்கு எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படும் சிறப்பு நேர்வுகள்

பச்சிளம் குழந்தைகள், கருவுற்ற ஏழாம் மாதத்திலுள்ள பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் (குழந்தை பெற்ற இரண்டு மாதங்கள் வரையிலும்) அவர்களின் உடல் நிலையின் காரணமாக மையத்திற்கு வர இயலா நிலையில் அவர்களது உடல்நிலையினைக் கருத்தில் கொண்டு, இணை உணவினை வீட்டிற்கு எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுகிறது.

31-3-2011 அன்று ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின்கீழ் உள்ள 434 திட்டப் பகுதிகளில் பயனடையும் பயனாளிகளின் விவரங்கள்

| பயனாளிகளின் விவரம் | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|
| 6–12 மாதக் குழந்தைகள் | 2,67,552 |
| 1–2 வயது குழந்தைகள் | 5,33,473 |
| 2–3 வயது குழந்தைகள் | 5,07,165 |
| 3–5 வயது குழந்தைகள் | 6,31,666 |
| ராஜீவ் காந்தி பதுமையர் தன்னுரிமை மேம்பாட்டுத் திட்டம் { (சப்ளா) 11–18 வயது } | 3,96,589 |
| கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் | 5,23,889 |
| சத்துணவு உண்ணும் முதியோர் ஓய்வூதியம் பெறுவோர் (OAP) | 22,384 |
| மொத்தம் | 28,82,718 |

### 5.9. சுகாதாரப் பணிகள்

இத்திட்டத்தின்கீழ் சுகாதாரத் துறையுடன் இணைந்து 6 வயதிற்கு உட்பட்ட குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோருக்கு தடுப்பூசி, சுகாதாரம் குறித்த விழிப்புணர்வு மற்றும் உயர்மருத்துவ சிகிச்சைக்காகப் பரிந்துரைத்தல் ஆகிய சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

- குழந்தைகளுக்கு பொதுவாக ஏற்படும் உடல்நலக் குறைவிற்கு சிகிச்சை அளிக்க ஏதுவாக ஒவ்வொரு குழந்தை மையத்திற்கும் மருந்துப் பெட்டி வழங்கப்படுகிறது. ஆண்டொன்றுக்கு ₹600/- மதிப்பிலான மருந்துகள் அடங்கிய பெட்டி மையத்திற்கு ஒன்று வீதம் 49,499 குழந்தைகள் மையங்களுக்கும், ₹300/-மதிப்பிலான மருந்துகள் அடங்கிய பெட்டி மையத்திற்கு ஒன்று வீதம் 4,940 குறு மையங்களுக்கும் வழங்கப்படுகிறது.

- மீள நிரப்பப்படும் மருந்துகள் ஒவ்வொரு வருடமும் மருந்து பெட்டியில் உள்ள சில மருந்துகள்/மாத்திரைகள் பயன்படுத்திய பின்னர், அத்தகைய மருந்துகளை மீள நிரப்ப ஏதுவாக ஒவ்வொரு நகர்ப்புற திட்டப் பகுதிக்கும் தலா ₹5,000/-வீதமும் மற்றும் ஒவ்வொரு கிராமப்புற திட்டப் பகுதிக்கும் ₹3,000/-வீதமும் வழங்கப்படுகிறது. 2010-2011 ஆம் ஆண்டில் மருந்து பெட்டி மற்றும் மருந்துகளை மீள நிரப்ப ஏதுவாக மொத்தம் ₹325.77 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2011-2012 ஆம் ஆண்டின் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ₹325.77 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 5.10. மழலையர் கல்விக்கான விளையாட்டுச் சாதனங்கள்

குழந்தைகள் மையங்களில் முறைசாரா மற்றும் விளையாட்டு மூலமாக மழலையர் கல்வி அளிக்கப்படுகிறது. இதற்காக ‘1,000 மதிப்புடைய இரண்டு வகையான விளையாட்டுச் சாதனங்கள் குழந்தை மையங்களுக்கு வழங்கப்படுகின்றன. இவை இரு வகையான சாதனங்கள் என்பதால் சுழற்சி முறையில் ஆண்டிற்கு ஒன்றாக வழங்கப்படுகிறது. 3 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு பெட்டி ‘அ’ வகை விளையாட்டுச் சாதனங்களும், 3 முதல் 6 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு ‘ஆ’ வகை சாதனங்களும் வழங்கப்படுகின்றன. குறு மையங்களுக்கு ₹250/-மதிப்புள்ள விளையாட்டுச் சாதனங்கள் வழங்கப்படுகின்றன. இது தவிர, ஒவ்வொரு புதிய குழந்தைகள் மையம் துவங்கப்படும் போதும் விளையாட்டுச் சாதனங்கள் வாங்க ஒரு முறை மட்டும் ₹1,000/- வழங்கப்படுகிறது.





இத்திட்டத்திற்காக 2011-2012 ஆம் ஆண்டின் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டின்கீழ் ₹507.34 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 5.11. புதிய அங்கன்வாடி மையங்கள் கட்டுதல்

தற்போது, 15,313 அங்கன்வாடி மையங்கள் வாடகை கட்டடங்களில் இயங்கி வருகின்றன. இவ்வரசு, பல்வேறு திட்டங்களில் உள்ள நிதியை ஒருங்கிணைத்து, குறித்த கால அளவிற்குள் படிப்படியாக அனைத்து அங்கன்வாடி மையங்களுக்கும் புதிய கட்டடங்கள் கட்டித்தர முடிவு செய்துள்ளது.

### 5.12. குழந்தைகள் மையங்களை நவீனமயமாக்குதல்

குழந்தைகள் மையங்களை, நவீனமயமாக்கும் திட்டத்தின்கீழ் சமைக்கும் நேரத்தைச் சேமிக்கவும், சமைத்து, சத்தான உணவு வழங்கவும், குழந்தைகளுக்கு மாசற்ற சுற்றுச்சூழல் உருவாக்குவதற்காகவும் ‘‘புகையில்லா சமையலறை’’ அமைக்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் சமையல் எரிவாயு இணைப்பு, அடுப்பு, அடுகலன் (குக்கர்) மற்றும் மின்சார வசதியும் செய்து தரப்படுகின்றன. இதுவரை இத்திட்டத்தில் 9,940 குழந்தைகள் மையங்கள் நவீனப்படுத்தப்பட்டுள்ளன. 2011-2012 ஆம் ஆண்டில் 3,232 குழந்தைகள் மையங்கள் நவீனப்படுத்தப்படும்.

இத்திட்டத்திற்காக 2011-2012 ஆம் ஆண்டின் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ₹211.80 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 5.13. சேமிப்புக் கலன்கள் வழங்குதல்

குழந்தைகள் மையங்களில் இணை உணவு, அரிசி, பருப்பு முதலிய உணவுப் பொருட்களை நல்ல நிலையில் பாதுகாக்கும் பொருட்டும், உணவுப் பொருட்கள் வீணாவதைத் தடுக்கும் பொருட்டும் சேமிப்புக் கலன்கள் வழங்கப்பட்டு வருகின்றன. ஒரு மையத்திற்கு இரு கலன்கள் வீதம் இதுவரை 17,000 மையங்களுக்கு ₹204.00 இலட்சம்

[2011 செப்டம்பர் 6

செலவில் எவர்சில்வர் சேமிப்புக் கலன்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் நடப்பு ஆண்டு 2011–2012-ல் 2200 குழந்தைகள் மையங்களுக்கு ₹26.40 இலட்சம் செலவில் சேமிப்புக் கலன்கள் வழங்கப்பட உள்ளன.

## 5.14. ராஜீவ் காந்தி பதுமையர் தன்னுரிமை மேம்பாட்டுத் திட்டம் (சப்ளா) (11 முதல் 18 வயது வரை)

வளரிளம் பெண்களின் முழுமையான மேம்பாட்டிற்காக ஏற்கெனவே செயல்பட்டு வந்த வளரிளம் பெண்கள் ஊட்டச்சத்து திட்டத்தையும், கிஷோரி சக்தி யோஜனா என்ற வளரிளம் பெண்களுக்கான பயிற்சித் திட்டத்தையும் இணைத்து, புதியதாக, ராஜீவ் காந்தி பதுமையர் தன்னுரிமை மேம்பாட்டுத் திட்டம் எனப் பெயரிடப்பட்டுள்ளது. இத்திட்டம் இந்தியாவில் முன்னோடித் திட்டமாக 200 மாவட்டங்களில் 19-11-2010 முதல் மத்திய அரசினால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழகத்தில் சென்னை, கோயம்புத்தூர், கடலூர், கன்னியாகுமரி, மதுரை, இராமநாதபுரம், சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் திருவண்ணாமலை ஆகிய 9 மாவட்டங்களில் இத்திட்டம் முன்னோடித் திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில், இந்த 9 மாவட்டங்களில் உள்ள 11 முதல் 18 வயதுள்ள வளரிளம் பெண்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பயன் பெற்று வருகின்றனர்.

இத்திட்டமானது ‘ஊட்டச்சத்து வழங்குதல்’ மற்றும் ‘ஊட்டச்சத்து அல்லாத இதர உதவிகள் வழங்குதல்’ என இரு கூறுகளை உள்ளடக்கியது. ஊட்டச்சத்து வழங்கும் முறையில், ஒவ்வொரு வளரிளம் பெண்ணிற்கும் நாள் ஒன்றுக்கு 130 கிராம் இணை உணவு, ₹5/- மதிப்பில் ஆண்டிற்கு 300 நாட்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. இந்த இணை உணவு வாரம் ஒரு முறை வீட்டிற்கு எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் தமிழகத்தில் 9 மாவட்டங்களில் 3.71 இலட்சம் வளரிளம் பெண்கள் பயன் பெறுகின்றனர்.

இத்திட்டத்தின் மற்றொரு கூறான ஊட்டச்சத்து அல்லாத பிற உதவிகள் வழங்கும் பகுதியில் வளரிளம் பெண்களுக்கு, தொழில் மற்றும் வாழ்வாதாரப் பயிற்சிகள், தகவல் தொடர்பு குறித்த செயல்பாடுகள் மற்றும் சுகாதார விழிப்புணர்வு ஆகிய சேவைகள் வழங்கப்படுகின்றன.



2011 செப்டம்பர் 6]

ஊட்டச்சத்திற்கான செலவினத்தை மத்திய அரசும், தமிழக அரசும் 50:50 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றன. ஊட்டச்சத்து அல்லாத பிற பணிகளுக்குண்டான 100 சதவிகித செலவினத்தையும் மத்திய அரசே ஏற்கிறது.

## 5.15. வளரிளம் பெண்கள் மேம்பாட்டுத் திட்டம் (கிஷோரி சக்தி யோஜனா)

வளரிளம் பெண்கள் மேம்பாட்டுத் திட்டம் என்பது, வளரிளம் பெண்களுக்கான சட்ட ரீதியான உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும், கல்வியறிவு, சுகாதாரம், தன்சுத்தம் மேம்படுத்துதல், தொழில் திறன் பெறுவதற்குரிய பயிற்சிகள் ஆகியவற்றை வழங்கி வளரிளம் பெண்களை தன்னம்பிக்கையுடன் கூடிய சிறந்த குடிமக்களாக உருவாக்கவும் செயல்படுத்தப்படும் திட்டமாகும்.

இத்திட்டம், 37 வட்டாரங்களில் முன்னோடித் திட்டமாக 2001-2002 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. பின்னர், இத்திட்டம் அனைத்து 434 திட்டப் பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் திட்டப்பகுதி ஒன்றுக்கு ‘₹1.10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2010-2011 ஆம் வருடத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய திட்டமான ராஜீவ் காந்தி பதுமையர் தன்னுரிமை மேம்பாட்டுத் திட்டம் (சப்ளா) மொத்தமுள்ள 434 திட்டப் பகுதிகளில் 139 திட்டப் பகுதிகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள 295 திட்டப் பகுதிகளில் கிஷோரி சக்தி யோஜனா திட்டம் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் பள்ளிக்குச் செல்லும் மற்றும் பள்ளிக் கல்வியினை இடையில் நிறுத்திவிட்ட வளரிளம் பெண்களுக்கு ஊட்டச்சத்து, சுகாதாரம், சட்ட உரிமைகள், வீட்டு நிர்வாகம் மற்றும் குழந்தை வளர்ப்பு பற்றிய பயிற்சிகளும், விழிப்புணர்வு ஏற்படுத்த முகாம்களும் நடத்தப்படுகின்றன. 16-18 வயது வளரிளம் பெண்களுக்கு கணினிப் பயிற்சி, தையல் கலை, ஆய்வகத் தொழில் நுட்பாளர், செவிலிய உதவியாளர், கைவினை பொம்மை செய்தல் மற்றும் நவீன ஆடை வடிவமைப்பு ஆகிய பயிற்சிகள் பெயர் பெற்ற சிறந்த நிறுவனங்களின் மூலமாக வழங்கப்படுகின்றன.

[2011 செப்டம்பர் 6

இத்திட்டத்திற்காக 2011-2012 ஆம் ஆண்டின் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ₹477.40 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 5.16. தகவல், கல்வி மற்றும் தொடர்பு

நிலையான வளர்ச்சிக்கான திட்டமிடுதலில், தகவல், கல்வி மற்றும் தொடர்புப் பணியானது மிக முக்கிய பங்கை வகிக்கிறது. மனித சமுதாயத்தின் முன்னேற்றம், தகவல் மற்றும் கருத்துகளை ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொள்ளும் திறனாலும், அத்தகைய தகவல்களை வளர்ச்சிக்காகப் பயன்படுத்திக்கொள்வதையும் சார்ந்தே உள்ளது. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம், திட்டப் பகுதிகளில், முழுமையான வளர்ச்சியைத் தொடர்ந்து ஏற்படுத்துவதையே முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது. இத்திட்டத்தின் வெற்றியானது, திட்டச் செயலாக்கத்தில், குறிப்பாக இத்திட்டப் பயனாளிகளின் பங்கேற்பைப் பொறுத்தே அமைகிறது. இத்திட்டத்தில் மக்களின் பங்கேற்பை உறுதி செய்ய திட்டத்தைப் பற்றிய விழிப்புணர்வும், போதுமான தெளிவும் மக்களுக்கு ஏற்படுத்துவது அவசியமாகும். எனவே, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத் துறையால் செயல்படுத்தப்படும் நலப் பணிகள் குறித்து முழுமையாக மக்கள் அறிந்து கொண்டு பயனடைய, தகவல், கல்வி மற்றும் தொடர்புப் பணிகள் முக்கியத்துவம் பெறுகின்றன.

ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டப் பணி செயலாக்கத்தினை குறித்து பெறப்படும் கருத்துகளின்படி, இத்திட்டத்தின் வெற்றியானது, மக்களிடையே இத்திட்டம் குறித்து பரிச்சயம்/விழிப்புணர்வு, திட்டச் செயலாக்கத்தில் வெளிப்படைத் தன்மை, இத்திட்ட வளர்ச்சியில் மக்களின் பங்கேற்பு மற்றும் பொறுப்பினை பொறுத்தே அமைகிறது என்பதை வெளிப்படுத்துகிறது.

அச்சு வழி ஊடகங்கள், மின்னணு ஊடகங்கள் மற்றும் கள விளம்பரங்கள் ஆகியவை தகவல், கல்வி மற்றும் தொடர்பு உத்திகளாகப் பயன்படுத்தப்படுகின்றன. தகவல், கல்வி மற்றும் தொடர்பு குறித்து விரிவான செயல் உத்திகள் மற்றும் குறிப்பிட்ட செயல் திட்டங்கள் ஆகியவை தயாரிக்கப்பட்டு, அதன் பின்னர் செயல்படுத்தப்படுகின்றன.



2011 செப்டம்பர் 6]

இதற்காகக் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன:—

- திட்டம் பற்றிய விழிப்புணர்வை உண்டாக்க இதழ்கள்/மடல்கள் வெளியிடுதல்
- சுவரொட்டிகள் மற்றும் விளம்பரத் தோரணங்கள்மூலம் தகவல்களை அளித்தல்
- வானொலி, தொலைக்காட்சிமூலம் வளரிளம் பெண்கள் திட்டத்தின் விழிப்புணர்வு பாடல்கள், செய்திகள்மூலம் ஒலி, ஒளி பரப்புதல்
- தொகுப்புப் புத்தகம், தொகுப்புத் தாள்கள்மூலம் பயிற்சி உபகரணங்கள் தயாரித்தல்
- ஊராட்சி அமைப்பு உறுப்பினர்களுக்கு திட்டம் பற்றிய விழிப்புணர்வு மற்றும் ஆலோசனை வழங்குதல்
- உள்ளூர் தேவைக்கேற்ப விழிப்புணர்வு முகாம் நடத்துதல்
- சமுதாய விழிப்புணர்வை உண்டாக்க, கண்காட்சிகள், விழாக்கள், தாய்ப்பால் வார விழா, தேசிய ஊட்டச்சத்து வார விழா போன்ற விழாக்கள் நடத்துதல்
- அயோடின் சத்து நாள் அனுசரித்தல்

## 5.17. பயிற்சி

குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தில் ஈடுபட்டுள்ள அனைத்துப் பணியாளர்களின் திறனை மேம்படுத்த செய்வதிலும், அவர்களுடைய செயல்திறன்பாட்டின் தரத்தினை உறுதி செய்வதிலும் பயிற்சி முக்கிய பங்காற்றுகிறது. சமுதாய வளர்ச்சியில் மக்களை ஒருங்கிணைத்து செல்லும் உத்திகளைத் திறமையாக கையாள தகுதி படைத்த பணியாளர்களால் மட்டும் இயலும் என்பதால் இத்தகைய திறனை வளர்ப்பது பயிற்சியின் உச்சகட்ட நோக்கமாகும். எனவே, தெளிவான அறிவும், செயல்திறனும் வளர்த்துக்கொள்ளத் தக்க வகையில், பயிற்சித் திட்டம் உருவாக்கப்படுகிறது. குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் களப்பணியாளர்கள் இத்திட்டப் பயன்களைச் சமுதாயத்தின் கடைநிலை வரை கொண்டு செல்வதில் முக்கியப் பங்காற்றுவதோடு, சமுதாயத்தினரிடையே நல்ல பழக்க வழக்கங்கள் மற்றும் மனமாற்றங்களை ஏற்படுத்தும் முகவர்களாக

கருதப்பட்டு, இவர்களுக்கு இத்திட்டம் குறித்த தெளிவான அறிவு, திறன்மேம்பாடு ஆகியவற்றை மேம்படுத்தக்கூடிய வகையில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மட்டுமே பரவலாக்கப்பட்ட பயிற்சி முறை அனைத்துக் களப் பணியாளர்களுக்கும் வழங்கப்படுகிறது. இப்பயிற்சி முறை பலதரப்பினராலும் பாராட்டப்படும் சிறப்பான முறையாகும். ஒவ்வொரு திட்டப் பகுதியிலும் களப் பணியாளர்களுக்குப் பணிப் பயிற்சி மற்றும் புத்தாக்கப் பயிற்சி அளிப்பதற்காக ஒரு பயிற்றுநர் பணிபுரிந்து வருகிறார்.

மாநில அளவில், இடைநிலை அளவில் மற்றும் திட்ட அளவில் பல்வகைப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் பயிற்சிகள் விவரம்:—

| வ. எண் | பயிற்சி நடைபெறும் இடம் | பயிற்சியின் பெயர் | பயிற்சிபெறுபவர்கள் |
|---|---|---|---|
| 1. | மாநில பயிற்சி மையம், சென்னை | பணிப் பயிற்சி மற்றும் புத்தாக்கப் பயிற்சி | குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர் |
| 2. | | பணி/புத்தறிவு மற்றும் புத்தாக்கப் பயிற்சி | வட்டார அளவில் உள்ள பயிற்றுநர்கள் |
| 3. | இடைநிலை பயிற்சி மையம், இந்திய குழந்தைகள் நலச்சங்கம், சென்னை | பணிப் பயிற்சி | மேற்பார்வையாளர்கள் |
| 4. | | புத்தாக்கப் பயிற்சி | மேற்பார்வையாளர்கள் |
| 5. | வட்டார அளவில் | பணிப் பயிற்சி | குழந்தை நலப் பணியாளர்கள் |
| 6. | | புத்தாக்கப் பயிற்சி | குழந்தை நலப் பணியாளர்கள் |
| 7. | | பணிப் பயிற்சி | குழந்தை நல உதவியாளர்கள் |
| 8. | | புத்தாக்கப் பயிற்சி | குழந்தை நல உதவியாளர்கள் |





**பிற பயிற்சிகள்**

2011-12 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட பிற பயிற்சிகளுக்கு ₹42.66 இலட்சத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது:—

1. குழந்தைகளின் ஊனங்களை ஆரம்ப நிலையிலேயே கண்டறிதலுக்காக திட்ட அலுவலருக்குப் பயிற்சி
2. குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் மற்றும் மேற்பார்வையாளர்களுக்கான கணினிப் பயிற்சி (MS Office)
3. மாவட்ட திட்ட அலுவலர் மற்றும் குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர்களுக்கு ஆளுமைத் திறன் மேம்பாடு, தனித்திறன் மேம்பாடு குறித்த பயிற்சி.

அலுவலர்களுடைய சுயமதிப்பு உருவாக்குதல், நேர்மறை எண்ணங்களை உருவாக்குதல், ஊக்குவித்தல், நடத்தை மேம்படுத்துதல் ஆகியவற்றை நோக்கங்களாகக் கொண்டு, இப்பயிற்சித் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

2011-12 ஆம் ஆண்டில் மாநில பயிற்சி திட்டச் செயல் திட்டத்திற்காக மத்திய அரசால் ₹580.54 இலட்சம் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

**5.18. நெறிப்படுத்தும் பிரிவு**

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின்கீழ் அனைத்து நலப் பணிகளும் குழந்தைகள் மையத்தினை அடிப்படையாகக் கொண்டே வழங்கப்படுகின்றன. திட்டச் செயலாக்கம் மற்றும் பயனாளிகள் குறித்த அனைத்துப் புள்ளி விவரங்களும் சேகரிக்கப்பட்டு தொகுக்கப்படுகின்றன.

ஊட்டச்சத்து நிலை கண்காணிப்பு மற்றும் வளர்ச்சி நிலையைக் கண்காணித்தல் ஆகியவை முறைப்படுத்தும் பிரிவின் முக்கிய பணிகளாகும். 3 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு மாதமொரு முறையும், 3 முதல் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு காலாண்டிற்கு ஒரு முறையும் எடையளவு எடுக்கப்படுகின்றது.

[2011 செப்டம்பர் 6

குழந்தைகள் மையங்களில், 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு வயதிற்கேற்ற எடை மற்றும் வளர்ச்சிப் பதிவேடுகள் பராமரிக்கப்படுகின்றன. இப்பதிவேடுகள், குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலை மற்றும் வளர்ச்சிக் குறைபாடுகளைக் கண்டறிய உதவுகிறது. மேலும், கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாடுகள் உடைய குழந்தைகளைக் கண்டறிந்து, தேவைக்கேற்ப அக்குழந்தைகள் ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கும், துணை சுகாதார நிலையங்களுக்கும் மருத்துவச் சிகிச்சைக்குப் பரிந்துரை செய்யப்படுகின்றனர்.

குழந்தைகள் எடை கண்காணிக்கும் பணியின் தரத்தினை மேம்படுத்த அனைத்து மாவட்டங்களிலும் புள்ளியியல் ஆய்வாளர்கள்மூலம் முறையாக இப்பணி குறுக்காய்வு செய்யப்படுகிறது.

குழந்தை மையங்கள் குறித்த அனைத்து விவரங்களும் குழந்தைகள் மையத்தில் பராமரிக்கப்படும் பதிவேடுகளில் பணியாளர்களால் பதிவு செய்யப்படுகின்றன. இவ்விவரங்கள் அறிக்கைகளாகத் தயாரிக்கப்பட்டு, அடுத்த உயர் நிலையில் உள்ளவர்களுக்கு அனுப்பப்படுகிறது. இதற்காக ஒரே மாதிரியான பதிவேடுகள் அச்சிடப்பட்டு, அனைத்துக் குழந்தைகள் மையங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. மேலும் உலக சுகாதார நிறுவனத்தின்மூலம் வரையறை செய்யப்பட்ட, வளர்ச்சி அட்டை உள்ளடக்கிய கண்காணிப்புப் பதிவேடுகளும் அச்சிடப்பட்டு வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்காக 2011-12 ஆம் ஆண்டின் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ₹8.02 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 5.19. அங்கன்வாடிப் பணியாளர்கள்

ஒவ்வொரு குழந்தைகள் மையமும் ஒரு அங்கன்வாடிப் பணியாளர் மற்றும் ஒரு உதவியாளராலும் நிர்வகிக்கப்படுகின்றது. ஒரு குறு மையமானது, ஒரு குறு அங்கன்வாடிப் பணியாளரால் நிர்வகிக்கப்படுகிறது. அவர்களுக்குச் சிறப்புச் சம்பள விகிதத்தில் சம்பளம் வழங்கப்படுகிறது. இது தவிர, அகவிலைப்படி, வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி, மருத்துவப்படி மற்றும் ஆண்டொன்றிற்கு 3 விழுக்காடு ஊதிய உயர்வும் வழங்கப்பட்டு வருகிறது.



2011 செப்டம்பர் 6]

அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு ₹50,000/-மும் மற்றும் அங்கன்வாடி உதவியாளர்களுக்கு ‘20,000/-மும் ஒட்டுமொத்தத் தொகையாக 1-4-2005 முதல் அவர்கள் ஓய்வு பெறும் போது வழங்கப்பட்டு வருகிறது.

குழந்தைகள் குறு மையப் பணியாளர்கள் உள்ளிட்ட மையப் பணியாளர்கள், குழந்தைகள் மைய உதவியாளர்கள்—நிலை 1 மற்றும் குழந்தைகள் மைய உதவியாளர்கள்—நிலை 2 ஆகியோர் பணியில் இருந்து ஓய்வு பெறும்போது, அவர்களுக்கு முறையே ₹700/-, ₹600/-மற்றும் ₹500/-சிறப்பு ஓய்வூதியம் மாதாமாதம் வழங்கப்படுகிறது.

### 5.20. குழந்தைகள் மைய ஊழியர்களுக்கு சீருடைகள் வழங்குதல்

அனைத்துக் குழந்தைகள் மைய ஊழியர்களுக்கும் ஆண்டொன்றுக்கு தலா ₹200/- மதிப்புடைய இரண்டு சேலைகள் சீருடையாக வழங்கப்படுகின்றன. மேலும், ஒவ்வொருவருக்கும் ₹25 மதிப்பில் பெயர் அடையாள அட்டை (பேட்ஜ்) வழங்கப்படுகிறது.

[2011 செப்டம்பர் 6

# அத்தியாயம்-6

## சமூகப் பாதுகாப்பு

**6.1.** இந்திய நாட்டினைப் போன்ற பெரிய ஜனநாயக நாட்டில், ஜனநாயக கட்டமைப்பின் அடித்தளம் நிலையாக இருக்க குழந்தைகளின் நலன் இன்றியமையாததாகும். ஆரோக்கியமான, பாதுகாப்பான, சுரண்டலுக்குட்படாத, கல்வி கற்று, கவலையற்ற மற்றும் இனிமையான சூழலில் குழந்தைகள் வளர்வது இன்றியமையாததாகும். எனவே, குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் நலன் பேணுவதில், சுதந்திரத்துடன் ஆரோக்கியமான சூழலில் வளர்வதற்குத் தேவையான வாய்ப்புகள் மற்றும் வசதிகள் அளிப்பதை உறுதி செய்ய, 'உரிமைகள் அடிப்படையிலான அணுகுமுறை' தேவையாக உள்ளது. இதுவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குப் பார்வையாக இருப்பதால், அவர்தம் ஆட்சிக் காலங்களில் குழந்தைகளின் நலனுக்காக பல்வேறு நலத் திட்டங்களை உருவாக்கியுள்ளார்.

குழந்தைகளுக்கு, குறிப்பாக சட்டத்திற்கு முரணாகச் செயல்படும் சிறார்களுக்கு நிறுவனம் சார்ந்த அமைப்புகள்மூலம் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பை வழங்குவதில் தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. இதற்கு இணையாக, அபாயகரமான சூழலிலுள்ள பெண்களின் பாதுகாப்பு மற்றும் நலனுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது.

சமூகப் பாதுகாப்புத் துறை, 2006 ஆம் ஆண்டில் திருத்தியமைக்கப்பட்ட, 2000 ஆம் ஆண்டின் இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம் மற்றும் 1956 ஆம் ஆண்டின் ஒழுக்கநெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டம் ஆகிய இரண்டு முக்கியமான சட்டங்களைத் திறம்பட நடைமுறைப்படுத்துவதன்மூலம், இச்சட்டங்களின் நோக்கங்களை நிறைவேற்றி வருகிறது. சமூகப் பாதுகாப்புத் துறை, இவ்விரு சட்டங்களின் பல்வேறு பிரிவுகளின்கீழ் குழந்தைகள் இல்லங்கள், கூர்நோக்கு இல்லங்கள், சிறப்பு இல்லங்கள், பிற்காப்பு நிறுவனங்கள் மற்றும் மகளிர் காப்பகங்கள் ஆகியவற்றை நடத்தி வருகிறது.



2011 செப்டம்பர் 6]

### 6.2. 2006 ஆம் ஆண்டில் திருத்தியமைக்கப்பட்ட, 2000 ஆம் ஆண்டின் இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம்

இளைஞர் நீதிச் சட்டத்தின் அடிப்படைக் கொள்கைகளாவன:—

| | |
|---|---|
| (1) | நிறுவனம் சாரா அணுகுமுறை |
| (2) | பெற்றோர் / குடும்பத்திற்கு முதன்மை பொறுப்புள்ளதை வலியுறுத்துதல் |
| (3) | குழந்தை உரிமைகள் பாதுகாப்பு மீது குறிப்பிடத்தகுந்த அக்கறை செலுத்துதல் |
| (4) | மறுவாழ்விற்கான பல்வேறு மாற்று வழிமுறைகளை அளித்தல் |
| (5) | குழந்தைகளின் உச்சபட்ச நலனின் அடிப்படையில் அவர்கள் மீதான வழக்குகளைத் தீர்வு செய்வதில் குழந்தைத் தோழமையுடன்கூடிய அணுகுமுறையை கையாளுதல். |

இக்கொள்கைகளின் அடிப்படையில், சட்டத்தின்கீழ் நிறுவப்பட்ட அனைத்து இல்லங்களிலும் உள்ள குழந்தைகளின் அடிப்படை வசதிகள், கல்வி, குழந்தை உரிமைப் பாதுகாப்பு, ஆரோக்கியம் மற்றும் சுகாதாரம் ஆகியன உள்ளிட்ட அனைத்துத் தேவைகளையும் வழங்கும் விதமாக இச்சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளன.

இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2000-த்தின்கீழ் விரிவான விதிகளை 14-2-2002 அன்று அறிவிக்கையாக முதலாவதாக தமிழ்நாடு அரசால் வெளியிடப்பட்டது.

### 6.3. பராமரிப்பு மற்றும் பாதுகாப்புத் தேவைப்படும் குழந்தைகள்

பராமரிப்பு மற்றும் பாதுகாப்புத் தேவைப்படும் குழந்தைகள் என்றால், வீடு, தங்கும் இடம் அல்லது உறைவிடம் மற்றும் வாழ்க்கைக்கான எந்தவித ஆதாரமுமில்லாத, பெற்றோர் மற்றும் கவனிப்பாரற்ற அல்லது பெற்றோரால் கைவிடப்பட்ட அல்லது தவறவிட்ட அல்லது வீட்டைவிட்டு வெளியேறிய, முறையான விசாரணைக்குப் பிறகும் பெற்றோர்களைக் கண்டறியமுடியாத பெற்றோர்களுடைய குழந்தைகள் எனப் பொருள்படும்.

[2011 செப்டம்பர் 6

### 6.3.1. குழந்தை நலக் குழுக்கள்

பராமரிப்பும், பாதுகாப்பும் தேவைப்படும் குழந்தைகள் மீதான வழக்குகளைத் தீர்வு செய்வதற்காக, 2006 ஆம் ஆண்டில் திருத்தியமைக்கப்பட்ட, 2000 ஆம் ஆண்டின் இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டப் பிரிவு 29 (1)-ன்படி, 18 குழந்தை நலக் குழுக்கள் அமைக்கப்பட்டு, கீழ்க்கண்ட இடங்களில் செயல்பட்டு வருகின்றன:—

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | சென்னை | 7 | சேலம் | 13 | தஞ்சாவூர் |
| 2 | செங்கல்பட்டு | 8 | கோயம்புத்தூர் | 14 | திருச்சிராப்பள்ளி |
| 3 | வேலூர் | 9 | விருதுநகர் | 15 | மதுரை |
| 4 | விழுப்புரம் | 10 | திண்டுக்கல் | 16 | திருநெல்வேலி |
| 5 | தருமபுரி | 11 | காரைக்குடி | 17 | மயிலாடுதுறை |
| 6 | ஈரோடு | 12 | தூத்துக்குடி | 18 | திருவள்ளூர் |

ஒவ்வொரு குழந்தை நலக் குழுவும், அலுவல் சார்பற்ற ஒரு தலைவர் மற்றும் ஒரு பெண் உறுப்பினர் உட்பட நான்கு உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. இக்குழந்தை நலக் குழுக்கள், குற்றவியல் நடைமுறைத் தொகுப்பின்படி, பெருநகர் நீதிமன்ற நடுவர் அல்லது முதல் வகுப்பு நீதிமன்ற நடுவருக்குரிய அதிகாரங்களைப் பெற்றுள்ளன. இக்குழுக்கள் வாரத்தில் செவ்வாய், வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமை ஆகிய மூன்று நாட்களில் அரசால் அங்கீகரிக்கப்பட்ட குழந்தைகள் இல்லங்களில் கூடுகின்றன.

தற்போது, குழந்தை நலக் குழுக்கள் இல்லாத ஏனைய மாவட்டங்களில் 14 குழந்தை நலக் குழுக்களை அமைக்க அரசு ஆணையிட்டுள்ளது.

2011-2012 ஆம் ஆண்டின் திருத்த வரவு—செலவுத் திட்ட மதிப்பீட்டில், இத்திட்டத்திற்காக ₹85.32 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



2011 செப்டம்பர் 6]

### 6.3.2. சிறுவர் மற்றும் சிறுமியருக்கான குழந்தைகள் இல்லங்கள்

2006 ஆம் ஆண்டில் திருத்தியமைக்கப்பட்ட, 2000 ஆம் ஆண்டின் இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டப் பிரிவுகளின்படி, 30 குழந்தைகள் இல்லங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்நிறுவனங்கள், குழந்தை நலக் குழுவால் அனுப்பப்பட்ட பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகளின் நீண்டகால மறுவாழ்வினைக் கருத்தில் கொண்டு செயல்பட்டு வருகின்றன. இம்மறுவாழ்வு முறையானது, அடிப்படை வசதிகள் ஏற்படுத்தித் தருதல், கல்வி மற்றும் தொழிற்பயிற்சி கற்பதற்கும் வழிவகை செய்தல், ஆற்றுப்படுத்துதல் மற்றும் அரவணைப்பாளர்களை ஏற்பாடு செய்தல் ஆகிய அனைத்து சேவைகளையும் உள்ளடக்கியதாகும்.

குழந்தைகளின் உணர்வு ரீதியான தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு, அவை தேவைப்படும் அனைத்துக் குழந்தைகளுக்கும் சமூகம் மற்றும் உளவியல் சேவைகள் அளிக்கப்படுகின்றன. இல்லத்தில் உள்ள குழந்தைகளை உரிய முறையில் கையாள்வதற்கு குழந்தைகளுடன் நேரடித் தொடர்புடைய பணியாளர்களுக்கு வாழ்க்கைத் திறன் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

குழந்தைகளின் சீரான மற்றும் ஒட்டுமொத்த வளர்ச்சியினை எய்தும் வகையில், குழந்தைகளுக்குத் தலைமைத்துவம், பிறர் உணர்வைப் புரிந்து கொள்ளல் / தங்களுக்குள் நேய உணர்வை பகிர்ந்து கொள்ளல், தன்னிலை சுகாதாரம் மற்றும் பிரச்சனைகளைத் தீர்வு செய்து கொள்ளும் திறன் வளர்த்தல் ஆகிய அம்சங்கள் அடங்கிய விரிவான பயிற்சித் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு குழந்தையிடம் உள்ள தனித்திறமையினை வெளிக் கொணர்ந்து, அக்குழந்தை தன்னை மேலும் வளர்த்துக் கொள்வதற்கு ஏதுவாக கலை, இசை மற்றும் நடிப்புத் துறைகளிலும் பயிற்சி வழங்கப்படுகின்றன.

இத்துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் மாநிலம் முழுவதும் உள்ள 30 குழந்தைகள் இல்லங்களில், 10 இல்லங்கள், அரசாலும், 20 இல்லங்கள் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களாலும் நடத்தப்பட்டு வருகின்றன.

[2011 செப்டம்பர் 6

அனைத்து அரசு குழந்தைகள் இல்லங்களுக்கும் அங்கு உள்ள குழந்தைகள் அவர்களது உடைமைகள் மற்றும் புத்தகங்களை வைத்துக் கொள்ள ஏதுவாக, அலமாரிகள் வழங்கப்பட்டுள்ளன. அதேபோல அனைத்து அரசு நிறுவனங்களுக்கும் கணினி, மரஅணிகள் மற்றும் நூலகப் புத்தகங்கள் குழந்தைகள் நலனுக்காக வழங்கப்பட்டுள்ளன.

மன வளர்ச்சி குன்றியவர்களுக்கான இரண்டு குழந்தைகள் இல்லங்கள், சென்னையில் பாலவிஹார் மற்றும் ஸ்ரீஅருணோதயம் ஆகிய தன்னார்வத் தொண்டு நிறுவனங்களாலும், மனவளர்ச்சி குன்றிய மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான இல்லம், மயிலாடுதுறையில் அறிவகம் என்ற தொண்டு நிறுவனத்தாலும் அரசு மானிய உதவியுடன் நடத்தப்பட்டு வருகின்றன.

2011-2012 ஆம் ஆண்டின் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், இத்திட்டத்திற்காக ₹1031.12 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 6.3.3. சிறப்புப் பராமரிப்பு மையம்

ஆதரவற்ற பெண் குழந்தைகளுக்கு, சென்னையில் மரியாலயா என்னும் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின்கீழ் ஒரு சிறப்புப் பராமரிப்பு மையம் செயல்படுகிறது. இங்கு ஆதரவற்ற பெண் குழந்தைகளுக்கு பெற்றோரது அன்பு மற்றும் ஆதரவினை ஒத்த பராமரிப்பு வழங்கப்படுகிறது. இம்மையத்தில் 30 சிறுமிகள் பயன்பெற்று வருகின்றனர்.

2011-2012 ஆம் ஆண்டின் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், இத்திட்டத்திற்காக ₹0.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 6.4. சட்டத்திற்கு முரணாகச் செயல்பட்டதாகக் கருதப்படும் சிறார்கள்

குற்றம் புரிந்ததாகக் கூறப்படும் நாளன்று, குற்றம் செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட பதினெட்டு வயது நிறைவடையாத சிறார்களே சட்டத்திற்கு முரணாகச் செயல்பட்டதாகக் கருதப்படும் சிறார்கள் ஆவார்கள்.



2011 செப்டம்பர் 6]

### 6.4.1. இளைஞர் நீதிக் குழுமங்கள்

2006 ஆம் ஆண்டில் திருத்தியமைக்கப்பட்ட, 2000 ஆம் ஆண்டின் இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டப் பிரிவு 4(1)-ன்படி, சட்டத்திற்கு முரணாகச் செயல்பட்ட சிறார்கள் குறித்த வழக்கினைத் தீர்வு செய்வதற்காக, இளைஞர் நீதிக் குழுமங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இளைஞர் நீதிக் குழுமங்கள் பெருநகர் நீதிமன்ற நடுவர் அல்லது முதல் வகுப்பு நீதிமன்ற நடுவர் மற்றும் இரண்டு சமூகப் பணியாளர்களில், குறைந்தபட்சம் ஒரு பெண் சமூகப் பணியாளருடன் நீதிமன்ற நடுவர் குழுமமாக செயல்படுகின்றன. இக்குழுமங்களுக்கு முதல் வகுப்பு நீதித் துறை நடுவருக்குண்டான அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. அந்தந்த கூர்நோக்கு இல்லங்களில் இக்குழுமம், வாரத்தில் மூன்று முறை அதாவது, திங்கள், புதன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் கூடுகின்றன.

சென்னை, கடலூர், கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகிய எட்டு மாவட்டங்களில், தற்போது இளைஞர் நீதிக் குழுமங்கள் செயல்பட்டு வருகின்றன. இளைஞர் நீதிக் குழுமங்கள் இல்லாத ஏனைய மாவட்டங்களில், 24 இளைஞர் நீதிக் குழுமங்களைத் தோற்றுவிக்க அரசு ஆணையிட்டுள்ளது.

2011-2012 ஆம் ஆண்டின் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹28.32 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 6.4.2. கூர்நோக்கு இல்லங்கள்

கூர்நோக்கு இல்லமானது, இளைஞர் நீதிக் குழுமத்தின் விசாரணை நிலுவையில் உள்ள சட்டத்திற்கு முரணாகச் செயல்பட்ட குழந்தைகளைத் தற்காலிகமாக தங்க வைக்கப்படும் நிறுவனமாகும்.

விசாரணையை எதிர்நோக்கி உள்ள சட்டத்திற்கு முரணாக செயல்பட்டதாகக் கருதப்படும் சிறார்கள் கூர்நோக்கு இல்லங்களுக்கு அனுப்பப்படுகிறார்கள். சென்னை, திருநெல்வேலி, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் கடலூர் ஆகிய இடங்களில், தலா ஒன்று வீதம் 6 அரசு கூர்நோக்கு இல்லங்களும், மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின்கீழ் இரண்டு கூர்நோக்கு இல்லங்களும்

[2011 செப்டம்பர் 6

செயல்பட்டு வருகின்றன. இந்த இல்லங்களில் தங்கும் குழந்தைகளுக்கு உணவு, உடை, உறைவிடம் வழங்கப்படுவதோடு, அவர்களுக்கான மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் கல்வி, தொழிற்பயிற்சி மற்றும் ஆற்றுப்படுத்துதல் சேவை ஆகியவையும் வழங்கப்படுகின்றன. இவ்வில்லங்களில் வசிக்கும் குழந்தைகளின் ஆர்வத்திற்கேற்ப, வடிவமைக்கப்பட்ட மறுவாழ்வுத் திட்டத்தின்கீழ் கல்வி மற்றும் தொழிற் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இக்குழந்தைகளின் சஞ்சலமான மனநிலையை ஒருமுகப்படுத்தவும், உணர்ச்சிமயமான நிலையினை கட்டுப்படுத்தி மனோதிடத்தினை ஏற்படுத்தவும், சமூக உளவியல் பயிற்சிகளான யோகா பயிற்சி, தியானப் பயிற்சி, தனிநபர் மற்றும் குழு ஆற்றுப்படுத்துதல் ஆகியவை வழங்கப்படுகின்றன. குழந்தைகளின் மறுவாழ்விற்கும், நீடித்த பலனைப் பெறுவதற்கு பெற்றோர்களுக்கும் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதல் அளிக்கப்படுகின்றது. அனைத்து கூர்நோக்கு இல்லங்களிலும், குழந்தைகளை அமைதிபடுத்தும் பயிற்சிகளாக கலை, இசை மற்றும் நடனம் போன்றவற்றுடன் உள்ளரங்க விளையாட்டுகள் உட்பட பல விளையாட்டுப் பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன.

2011-2012 ஆம் ஆண்டின் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், இத்திட்டத்திற்காக ₹272.94 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

### 6.4.3. சிறுவர் மற்றும் சிறுமியருக்கானச் சிறப்பு இல்லங்கள்

சிறப்பு இல்லங்களானது, இளைஞர் நீதிக் குழுமங்கள்மூலம் தவறிழைத்ததாகக் கருதப்படும் சிறார்கள், அக்குழுமங்கள் ஆணையிட்டுள்ள காலம் வரை தங்க வைப்பதற்காக தொடங்கப்பட்டன. சிறுவர்களுக்கான சிறப்பு இல்லம் செங்கல்பட்டிலும், சிறுமியர்களுக்கான சிறப்பு இல்லம் சென்னையிலும் இயங்கி வருகின்றன. சிறுவர்களின் வயது, அவர்தம் குற்றத்தின் தன்மை, உடல் மற்றும் மனநிலை ஆகியவற்றின் அடிப்படையில் சிறார்கள் பிரிக்கப்பட்டு, அவர்களுக்குக் கல்வி மற்றும் தொழிற்பயிற்சி ஆகியவை வழங்கப்படுகின்றன. மேலும் சிறார்களுக்கு நடனம், இசை மற்றும் நடிப்பு ஆகியவற்றிலும் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இக்குழந்தைகளின் ஆக்கசக்தியை அனுகூலமாக்குவதற்கு ஏதுவாக, மனமாற்றம் செய்யும் நோக்கோடும் மற்றும் அவர்களிடையே தன்னம்பிக்கையை வளர்க்கவும் ஆளுமைத்திறன் வளர்ச்சிப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.



2011 செப்டம்பர் 6]

சிறார்களின் மனநிலையை ஒருமுகப்படுத்துவதிலும், அமைதிப்படுத்துவதிலும் தோட்டக்கலைப் பயிற்சி சிறந்த ஒன்றாகும். எனவே அனைத்து இல்லங்களிலும் உள்ள சிறார்கள் தோட்ட பராமரிப்புப் பணிகளில் ஈடுபட ஊக்குவிக்கப்படுகின்றனர்.

2011-2012 ஆம் ஆண்டின் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், இத்திட்டத்திற்காக ₹153.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 6.5. குழந்தைகள் நலனுக்கான மறுவாழ்வுத் திட்ட நடவடிக்கைகள்

### 6.5.1. பிற்காப்பு நிறுவனங்கள்

குழந்தைகள் இல்லங்கள் மற்றும் சிறப்பு இல்லங்களில் இருத்தி வைக்கப்பட்ட காலத்திற்குப் பின் வெளியேறும் சிறுவர் மற்றும் சிறுமியர்களைப் பராமரிப்பதற்காக பிற்காப்பு நிறுவனங்கள் ஏற்படுத்தப்பட்டன. இப்பிற்காப்பு நிறுவனங்களில் குழந்தைகள் தங்களுடைய உயர் கல்வியைத் தொடரவும், வருவாய் ஈட்டத்தக்க தொழிற்பயிற்சிகள் பெறவும், அதன் மூலம் ஒரு நேர்மையான பயனுள்ள வாழ்க்கையை அவர்களது குடும்பம் அல்லது சமூகத்துடன் ஒருங்கிணைக்கப்படுவதற்கு முன்பும், பின்பும் நடத்திச் செல்லவும் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டில் 3 பிற்காப்பு நிறுவனங்கள் கீழ்க்கண்ட இடங்களில் செயல்படுகின்றன:—

1. அரசினர் மாணவர் பிற்காப்பு நிறுவனம், ஆத்தூர், காஞ்சிபுரம் மாவட்டம்.
2. அரசினர் மாணவர் பிற்காப்பு நிறுவனம், மதுரை.
3. அரசினர் மகளிர் பிற்காப்பு நிறுவனம், வேலூர்.

இம்மூன்று அரசு பிற்காப்பு நிறுவனங்கள் தவிர, மனவளர்ச்சி குன்றிய, வயது வந்த பெண்களுக்காக தொழில் பயிற்சியுடன்கூடிய புகலிடம் அரசு உதவியுடன் சென்னை பாலவிஹாரில் (தன்னார்வத் தொண்டு நிறுவனம்) செயல்பட்டு வருகிறது.

2011-2012 ஆம் ஆண்டின் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், இத்திட்டத்திற்காக ₹91.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

[2011 செப்டம்பர் 6

### 6.5.2. வள மையங்கள்

குழந்தைகளின் உள மற்றும் சமூகரீதியான தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு, ஏற்கெனவே இருந்த இளைஞர் வழிகாட்டி மையங்களை மாநிலம் முழுவதும் 31 வளமையங்களாக மாற்றியமைத்து அரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த வளமையங்கள் பெற்றோர்களுக்கும் ஆற்றுப்படுத்துதல் மற்றும் வழிகாட்டுதல் போன்ற சேவைகளை வழங்குகின்றன. இம்மையங்கள் அனைத்தும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்மூலம் அரசு மானிய உதவியுடன் நடத்தப்பட்டு வருகின்றன.

குழந்தை நலக் குழுக்கள் மற்றும் இளைஞர் நீதிக் குழுமங்கள் மூலம் அனுப்பப்படும் குழந்தைகளை உளவியல் ரீதியாக பரிசோதித்து அவர்களது மனவளமை தேவைக்கேற்ப உரிய மறுவாழ்வு திட்டங்கள் வகுக்கப்படுகின்றன. இம்மையங்கள் தனியர்/குழு மற்றும் பெற்றோர்களுக்கான ஆலோசனை மற்றும் வழிகாட்டுதல், குழந்தை நலத் திட்டங்கள் தயாரித்தல், குழந்தைகளின் அறிவுத் திறனறிதல், மொழி பெயர்ப்பாளர்களை ஏற்பாடு செய்தல் மற்றும் பெற்றோர்களை கண்டறிதல் போன்ற பணிகளில் சிறப்புக் கவனம் செலுத்தி பணியாற்றுகின்றன.

2011-2012 ஆம் ஆண்டின் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், இத்திட்டத்திற்காக ₹12.65 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 6.5.3. கல்வி வசதிகள்

இத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள 8 குழந்தைகள் இல்லங்களில் இல்ல வளாகத்தினுள் 8 ஆம் வகுப்பு வரை பயிற்றுவிக்க நடுநிலைப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. 9 ஆம் வகுப்பிலிருந்து தொடர்ந்து கல்வி பயில, குழந்தைகள் இல்லங்களின் அருகாமையில் உள்ள வெளிப் பள்ளிகளில் சேர்க்கப்படுகின்றனர். ஈரோடு மற்றும் காரைக்குடியில் உள்ள குழந்தைகள் இல்லங்களில், பள்ளிகள் இல்லாத காரணத்தினால், அருகாமையில் உள்ள வெளிப்பள்ளிகளுக்கு குழந்தைகள் அனுப்பப்படுகின்றனர். செங்கல்பட்டு மற்றும் சென்னையில் இயங்கிவரும் சிறுவர், சிறுமியருக்கான சிறப்பு இல்லங்களில் 10 ஆம் வகுப்பு வரை கல்வியுடன் குறுகியகால நவீன தொழிற்பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன.



2011 செப்டம்பர் 6]

தொழிற்பயிற்சி நிறுவனங்கள் மற்றும் கல்லூரிகளில் சேர்ப்பதன் மூலம் சிறார்கள் தமது உயர் கல்வியினைத் தொடர்வதற்கு உரிய வசதிகளை இத்துறை செய்து தருகிறது.

2011-2012 ஆம் ஆண்டின் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், இத்திட்டத்திற்காக ₹3.81 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 6.5.4. தொழிற் பயிற்சி

குழந்தைகளின் விருப்பம் மற்றும் திறனைப் பொறுத்து வேலைவாய்ப்புகள் அதிகம் உள்ள தொழில் பிரிவுகளான வாகனப் பராமரிப்பு, திரையச்சு, கணினி, தையல் மற்றும் மின்கம்பி பயிற்சி ஆகிய தொழில் பிரிவுகளில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. குழந்தைகள் மற்றும் சிறப்பு இல்ல சிறுவர் சிறுமியருக்கு நவீன தொழிற்பயிற்சிகளான அலைபேசி பழுதுபார்த்தல், புகைப்படம் எடுத்தல், உருபடக் காட்சி எடுத்தல், கணினிப் பயிற்சி, சமையல் பயிற்சி, நகை செய்யும் பயிற்சி மற்றும் அழகுகலைப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. தொழில் பிரிவுகளில் பயிலும் மாணவர்களை ஊக்குவிக்கும் முகமாக, ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது.

### 6.5.5. குடும்ப உதவித் திட்டம்

குழந்தைகள் தங்களது குடும்ப பராமரிப்பில் இருப்பதையும், அவர்களது கல்வியினைத் தொடர்ந்து பயில்வதனை ஊக்குவிக்கும் வகையிலும், குடும்ப உதவித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்தகைய குழந்தைகளின் குடும்பங்களுக்கு, குழந்தைகள் நலக் குழுவால் குழந்தைகள் வீடேக விடுவித்து ஆணையிட்ட நாள் முதல், மாதம் ஒன்றுக்கு ₹200/- வீதம் மீதமுள்ள இருத்தி வைத்தல் காலம் வரை வழங்கப்படுகிறது.

### 6.5.6. புறக்கணிக்கப்பட்ட மற்றும் துன்புறுத்தலுக்கு ஆளான சிறார்களின் இடர்பாடுகள் தலையீட்டு மையம்

குழந்தைகள் தவறாகப் பயன்படுத்துதலுக்கு ஆளாவதைத் தடுக்க, இடர்பாடுகள் தலையீட்டு மையம் ஒன்று சென்னையில் இந்திய குழந்தைகள் நலச் சங்கத்தின் மூலமாகச் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் குழந்தைகளைத் தவறாகப் பயன்படுத்தும் தகவல் பெற்றவுடன், தகவல் நேர்வுகளில் விசாரணை மேற்கொண்டு, விசாரணையில் குழந்தைகள் தவறாகப் பயன்படுத்தப்பட்டது

[2011 செப்டம்பர் 6

உறுதிபடுத்தப்படும் நிலையில் குழந்தைகளின் பெற்றோர்களிடம் அல்லது மறுவாழ்வு மையங்களில் வைத்து தற்காலிகப் பராமரிப்பும் பாதுகாப்பும் வழங்கப்படுகிறது. மேலும், குழந்தைகளுக்கும் அவர்களின் பெற்றோருக்கும் உரிய வழிகாட்டுதல் மற்றும் ஆற்றுப்படுத்துதல் சேவைகள் வழங்கப்படுகின்றன.

**6.5.7. நகர்ப்புறம் மற்றும் புறநகர்ப் பகுதிகளில் பராமரிப்புத் தேவைப்படும் சிறார்களுக்கான திறந்தவெளிப் புகலிடங்கள்**

சாலையோரச் சிறார்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் முகமாக, 9 நிறுவனங்கள் சென்னையிலும், மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, சேலம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்மூலம் மொத்தம் 14 புகலிடங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சாலையோரச் சிறார்களுக்கு இந்நிறுவனங்களில் உணவு, உறைவிடம், முறைசாராக் கல்வி மற்றும் தொழிற்பயிற்சி ஆகியவை அளிக்கப்படுகின்றன. தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு அரசால் பராமரிப்பு மானியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் சுமார் 350 சிறார்கள் பயனடைகின்றனர்.

2011-2012 ஆம் ஆண்டின் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், இத்திட்டத்திற்காக ₹90.54 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**6.5.8. குழந்தைகளுக்கான இலவசத் தொலைபேசி உதவித் திட்டம் (Childline)**

இந்திய குழந்தைகளின் இலவசத் தொலைபேசி அமைப்பு [Childline India Foundation (CIF)] 1996 ஆம் ஆண்டு, இந்தியா முழுவதும் குழந்தைகளுக்கான இலவச அவசரகால தொலைபேசி சேவையை வழங்குவதற்காக ஏற்படுத்தப்பட்டது. குழந்தைகளின் இலவசத் தொலைபேசி அமைப்பு, இடர்பாட்டிலுள்ள, பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தேவைப்படும் 0-18 வயதுள்ள குழந்தைகளுக்காக 24 மணி நேரமும் செயல்படுகிறது. நாடு முழுவதிலும் உள்ள குழந்தைகளுக்கான பொது இலவச தொலைபேசி எண் 1098, சமூகப் பாதுகாப்புத் துறை, சென்னையில் இத்திட்டச் செயலாக்கத்தின் பற்றாளராகச் செயல்படுகிறது. குழந்தைகளின் இலவசத் தொலைபேசி அமைப்பு மத்திய அரசு நிதியுதவியுடன், தனியார்



2011 செப்டம்பர் 6]

தொண்டு நிறுவனங்கள்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. துயருறும் சூழ்நிலையில் பாதிப்புக்குள்ளான, உதவி தேவைப்படும் குழந்தைகளைக் கண்டறிந்து, அவர்களை மீட்டு உறைவிடம், மருத்துவ வசதி, இல்லத்தில் சேர்த்தல், ஆதரவாளர்களை ஏற்படுத்தி தருதல், உளவியல் ரீதியாகத் தேவைப்படும் / மனவளமைக்கான உதவிகள் செய்தல் மற்றும் ஆலோசனை வழங்குதல் போன்ற சேவைகளையும் வழங்குகின்றன.

பி.எஸ்.என்.எல்., சென்னை தொலைபேசி, வோடோ போன், ஏர்டெல், ஏர்செல், ரிலையன்ஸ் மற்றும் டாட்டா இன்டிகாம் போன்ற நிறுவனங்கள் எண் 1098-க்கு சென்னையில் மட்டும் இலவச அழைப்புச் சேவை வழங்கியுள்ளன. தமிழகத்தில் சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், சேலம், திருநெல்வேலி, கன்னியாகுமரி, கடலூர், நாகப்பட்டினம் மற்றும் காஞ்சிபுரம் (மாமல்லபுரம்) ஆகிய 10 இடங்கள் உள்ளிட்ட நாடு முழுவதும் 83 நகரங்களில் செயல்பட்டு வருகிறது.

**6.6. ஒருங்கிணைந்த குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் (ICPS)**

இந்திய அரசின் ஒருங்கிணைந்த குழந்தைகள் பாதுகாப்புத் திட்டமானது ஒரு முறைமையை ஏற்படுத்தி, குழந்தைகளுக்கு எதிரான வன்கொடுமை, புறக்கணித்தல் மற்றும் சுரண்டல் ஆகியவற்றை ஏற்படுத்தக்கூடிய துன்பச்சூழல்களைத் திறம்பட குறைத்து, குழந்தைகளுக்குப் பாதுகாப்பு வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இத்திட்டம், குழந்தைகள் நலனை மேம்படுத்துவதில் குழந்தை பாதுகாப்புப் பணிகள் தொடர்பான தரமான சேவைகளைப் பெறுவதிலும், குழந்தைகள் உரிமைகள் குறித்து பொது விழிப்புணர்வை ஏற்படுத்துதல், குழந்தைகள் பாதுகாப்பு குறித்த பொறுப்புணர்வினை பொது அமைப்புகள் மற்றும் சேவை வழங்கும் அமைப்புகளை ஏற்கச் செய்தல் மற்றும் இத்தகைய சேவைகள் வழங்கும் அமைப்புகளை உருவாக்கி அவற்றின் செயல்பாடுகளைக் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு செய்வது போன்ற நேர்மறையான தலையீடுகளைக் கையாள்கிறது.

[2011 செப்டம்பர் 6

மேலும் இத்திட்டமானது, குழந்தைகள் நலனைப் பாதுகாக்க, ஏற்கெனவே செயல்படுத்தப்படுத்தப்பட்ட இளைஞர் நீதிக்கான திட்டம், ஒருங்கிணைந்த சாலையோரச் சிறார்களுக்கான திட்டம் மற்றும் பாலர் இல்லத்திற்கான (சிசு கிரஹ) உதவித் திட்டம் ஆகியவற்றை ஒரு நிர்வாக அமைப்பின்கீழ் கொணரவும் மற்றும் புதிய முயற்சிகளைத் தொடங்கவும் வழிவகை செய்கிறது.

இத்திட்டத்தைச் செயல்படுத்திட மாநில அரசு, மத்திய அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றைச் செய்துள்ளது. ஒருங்கிணைந்த குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின் அங்கங்களாக மாநில குழந்தைகள் பாதுகாப்புச் சங்கம் (State Child Protection Society), மாவட்ட குழந்தைகள் பாதுகாப்புச் சங்கம் (District Child Protection Society), மாநில குழந்தைகள் தத்தெடுப்பு வள மையம் (State Adoption Resource agency), இளைஞர்களுக்கான தனிக் காவல் பிரிவு (Special Juvenile Police Unit), குழந்தைத் தத்தெடுப்பு சிறப்பு முகமைகள் (Specialised Adoption agencies), மாநிலக் குழந்தைத் தத்தெடுப்பு ஒருங்கிணைப்பு முகமை (Adoption Co-ordinating Agency for the State) ஆகிய சேவை அமைப்புகள் அமைகின்றன.

மத்திய, மாநில மற்றும் மாவட்ட அளவில் இத்திட்டத்தின் நோக்கங்கள் சேவை அமைப்புகள்மூலம் செயல்படுத்தப்படும். மேலும், இத்திட்டம் சட்டப்பூர்வ அமைப்புகளான இளைஞர் நீதிக் குழுமங்கள் மற்றும் குழந்தை நலக் குழுக்கள் ஆகியவற்றை அனைத்து மாவட்டங்களிலும் அமைப்பதற்கு வழிவகை செய்கிறது.

இத்திட்டத்தில், புறக்கணிக்கப்படும் குழந்தைகளுக்கு முழுமையான அரவணைப்பு, உதவி மற்றும் அவர்களின் மறுவாழ்வுக்கு நிறுவனம் சார்ந்த சேவைகள் மற்றும் நிறுவனம் சாரா சேவைகளான தற்காலிக வளர்ப்பு, நன்கொடை, தத்தெடுத்தல் போன்ற புதிய அம்சங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் பொது மக்களிடையே குழந்தைகளுக்கான உரிமைகள் மற்றும் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்துதல், குழந்தைகள் தொடர்பான பயிற்சி மற்றும் திறனாக்கம், மாவட்ட, மாநில, மத்திய அளவில் கண்காணித்தல் மற்றும் திட்ட மதிப்பீடு செய்தல் இத்திட்டத்தின் செயலாக்கத்தில் அடங்கியுள்ளன.



2011 செப்டம்பர் 6]

இம்மத்திய திட்டத்தின்கீழ், செலவினங்களுக்கான மத்திய/ மாநில/தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கிடையே ஒப்புக் கொள்ளப்பட்ட நிதிப் பகிர்வு விகிதம்:—

| நிறுவனங்கள் /கூறுகள் | மத்திய : மாநில அரசு : தன்னார்வத் தொண்டுநிறுவனம் பங்கீடு விகிதம் |
|---|---|
| சட்டப்படி அமைந்த குழுக்கள் தவிர்த்த தன்னார்வுத் தொண்டு நிறுவனம் மற்றும் மாநிலக் குழந்தைகள் பாதுகாப்புச் சங்கம், மாவட்டக் குழந்தைகள் பாதுகாப்புச் சங்கம், மாநிலக் குழந்தைகள் தத்தெடுப்பு வள மையம், குழந்தைத் தத்தெடுப்பு சிறப்பு முகமை தவிர அனைத்து நிறுவனங்களின் பராமரிப்புக்கு (தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் நிறுவனங்களுக்கு மத்திய அரசு : மாநில அரசு : தன்னார்வத் தொண்டு நிறுவனம் – 75:15:10) | 75:25:00 |
| சட்டப்படி அமைந்த குழுக்கள் – குழந்தை நலக் குழு, இளைஞர் நீதிக் குழுமம், இளைஞருக்கானச் சிறப்பு காவல் பிரிவு | 35:65:00 |
| தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் நிறுவனங்கள் மற்றும் திட்டங்கள் | 90:00:10 |
| குழந்தைகள் தொலைபேசி உதவித் திட்டம், மாநிலத் திட்ட ஆதரவு பிரிவு | 100:00:00 |

மாநில அரசு, பல்வேறு தொடர்புடைய துறைகளான தொழிலாளர் நலன், கல்வி, இரயில்வே, தொழில் மற்றும் வர்த்தகம், சுகாதாரம் மற்றும் குடும்ப நலன் முதலான துறைகளிடையே சீரிய தொடர்புகளை ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. சேவை வழங்கும் அமைப்புகள் மற்றும் சட்டபூர்வமான அமைப்புகளான இளைஞர் நீதிக் குழுமங்கள் மற்றும் குழந்தை நலக் குழுக்கள் அனைத்து மாவட்டங்களிலும் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்மூலம் பல்வேறு துறைகள் மற்றும் நிறுவனங்களின் வளங்களை ஒருசேரக் கொணர்ந்து குவிப்பதன்மூலம் இத்திட்டத்தின் இலக்கினை முழுமையாக அடைய முடியும்.

[2011 செப்டம்பர் 6

## 6.7. 1956 ஆம் ஆண்டின் ஒழுக்கநெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டம்

*6.7.1.* 1956 ஆம் ஆண்டின் ஒழுக்கநெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டம், வணிக நோக்கில் பாலியல் வன்கொடுமைகளுக்கும் கடத்தலுக்கும் ஆளாக்கப்படும் பெண்கள் மற்றும் சிறுமியர்களின் நலன் காத்தலை முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது. இச்சட்டம், பாலியல் வன்கொடுமைகளைத் தடுத்தலையும், அதற்குள்ளாக்கப்பட்ட மகளிரை பாதுகாத்தலை மட்டுமே நோக்கங்களாகக் கொள்ளாமல், பாலியல் தொழிலில் மகளிரைப் ஈடுபடுத்தும் நபர்கள், கடத்தல் தொழிலில் ஈடுபடுபவர்கள் மற்றும் பாலியல் தொழில் சந்தையை ஏற்படுத்துபவர்களைச் சட்டத்தின் துணையோடு நீதிமன்றத்தின்மூலம் தண்டித்தலையும் குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

பாலியல் தொழிலிலிருந்து மீட்கப்பட்ட பெண்களின் மறுவாழ்விற்கான திட்டங்களை வகுத்து சமுதாய அமைப்புடன் ஒன்றிணைப்பதும் இச்சட்டத்தின் நோக்கமாகும்.

### 6.7.2. மகளிர் காப்பகங்கள் / பாதுகாப்பு இல்லங்கள்

1956 ஆம் ஆண்டின் ஒழுக்கநெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டத்தின் மேற்கூறிய நோக்கங்களை அடைய, அரசு 5 அரசினர் மகளிர் காப்பகங்களை ஏற்படுத்தியுள்ளது. இவை, இச்சட்டத்தின்கீழ் மீட்கப்பட்ட சிறுமியர் மற்றும் மகளிருக்கு, உணவு, இருப்பிடம், மருத்துவ உதவி, ஆற்றுப்படுத்துதல் சேவை மற்றும் தொழிற் பயிற்சிகள் வழங்கும் நோக்கத்தில் ஆரம்பிக்கப்பட்டவையாகும். பாலியல் கொடுமைகளுக்கு உள்ளான மற்றும் பாலியல் கொடுமைகளுக்கு உள்ளாக நேரிடும் சிறுமியரும், மகளிரும் நீதிமன்ற நடுவரின் ஆணைப்படி, இவ்வில்லங்களில் பாதுகாப்பிற்காகவும், மறுவாழ்விற்காகவும் தங்க வைக்கப்படுகின்றனர். இத்தகைய சூழ்நிலையிலுள்ள பெண்கள் தாமாகவே முன்வந்து இவ்வில்லங்களில் தங்கவும் அனுமதிக்கப்படுகின்றனர்.

ஐந்து மகளிர் காப்பகங்கள் / பாதுகாப்பு இல்லங்கள் முறையே சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம், கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன.



2011 செப்டம்பர் 6]

### 6.7.3. மணமாகாத தாய்மார்கள் இல்லம்

பாலியல் கொடுமையினால் தாய்மையடைந்த மகளிர் மற்றும் சிறுமியர், சென்னை அரசினர் மகளிர் காப்பக வளாகத்தில் இயங்கும் ஸ்திரிசதனாவில் அனுமதிக்கப்படுகின்றனர். தூத்துக்குடி மாவட்டம், அடைக்கலபுரத்தில் புனித பிரான்சிஸ் சேவியர் என்ற தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின்மூலமும் ஓர் இல்லம் நடத்தப்பட்டு வருகிறது. இந்நிறுவனங்களில் உணவு, உடை, உறைவிடம், மருத்துவ சேவை மற்றும் பாதுகாப்பு ஆகியவை பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் சிறுமியர்களுக்கு வழங்கப்படுகின்றன.

2011-2012 ஆம் ஆண்டின், திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், மகளிர் காப்பகங்கள் / பாதுகாப்பு இல்லங்கள், மற்றும் மணமாகாத தாய்மார்கள் இல்லம் ஆகிய இல்லங்களைப் பராமரிக்க ₹190.95 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 6.8. துன்பச்சூழலில் உள்ள மகளிருக்கான பிற திட்டங்கள்

### 6.8.1. சுவதார்

துன்பத்தில் உள்ள பெண்களுக்கு உறைவிடம், தொழிற்பயிற்சி மற்றும் ஆலோசனை வழங்கி, அவர்களைச் சுயமாகவும், தன்அதிகாரம் படைத்தவர்களாகவும் திகழச் செய்வதற்காக, மத்திய அரசால் செயல்படுத்தப்படும் திட்டம் 'சுவதார்' ஆகும். 14 சுவதார் இல்லங்கள் 14 மாவட்டங்களில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படுகின்றன. இத்திட்டத்திற்குச் சமூகப் பாதுகாப்புத் துறை பற்றாளராக உள்ளது.

### 6.8.2. உஜ்ஜவாலா

மகளிர் மற்றும் பெண் குழந்தைகள் கடத்துதலைத் தடுத்தல், பாதிக்கப்பட்டவர்களை மீட்டல், அவர்களது மறுவாழ்விற்காக உதவுதல் மற்றும் பாதிக்கப்பட்டவர்களைக் குடும்பத்துடன் சேர்க்கும் நடவடிக்கைகளுக்கு உதவுதல் ஆகியவற்றைச் செயல்படுத்துதலுக்காக உருவாக்கப்பட்டதே உஜ்ஜவாலா என்ற மத்திய அரசின் திட்டம்.

இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள்கள் ஆள்கடத்துதலைத் தடுத்தலும், மீட்பு மற்றும் மறுவாழ்விற்கு வழிகாட்டுதலுமாகும். பாதிக்கப்பட்டவர்கள் அவ்விடங்களிலிருந்து மீட்கப்பட்டு பாதுகாப்பிற்காகத் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களில் தங்க

[2011 செப்டம்பர் 6

வைக்கப்படுகின்றனர். அங்கு அவர்களுக்கு அடிப்படைத் தேவைகளான உறைவிடம், உணவு, உடை, மருத்துவச் சிகிச்சை, ஆற்றுப்படுத்துதல், சட்ட உதவி, வழிகாட்டுதல் மற்றும் தொழிற்பயிற்சி ஆகியவை வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தில் உள்ளூர் மக்களை ஈடுபடுத்தி சமூக எழுச்சியினை உருவாக்கவும். கருத்தரங்குகள் மற்றும் ஆய்வரங்கங்கள்மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், 9 தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மத்திய அரசின் நிதியுதவி பெறுகின்றன.

### 6.8.3. மறுவாழ்வுக்கான திட்டங்கள்

சமூகப் பாதுகாப்புத் துறையின்கீழ் இயங்கும் நிறுவனங்களிலிருந்து வெளியேறும் சிறார்கள்/ இல்லவாசிகளின் மறுவாழ்விற்கென சமூகப் பாதுகாப்புத் துறையின்மூலம் “தமிழ்நாடு சமூகப் பாதுகாப்பு நல நிதி” என்ற பெயரில் ஒரு நிதி உருவாக்கப்பட்டுள்ளது. இந்நிதியிலிருந்து நிறுவனங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தவும், ஆதரவற்ற குழந்தைகளுக்குக் கல்வி வசதி அளிக்கவும், மேலும் இவர்களுக்கு ஒட்டுமொத்த வளர்ச்சிக்கான வசதி வாய்ப்புகளுக்குப் பயன்படுத்தவும் உதவுகிறது. இந்நிதி ஒரு கல்வியாண்டிற்குத் தேவைப்படும் ஆசிரியர்களை நியமிக்கவும் பயன்படுத்தப்படுகிறது.

அரசினர் குழந்தைகள் மற்றும் சிறப்பு இல்லங்களில் தச்சு, நெசவு, புத்தகம் கட்டுதல், தோட்டம் மற்றும் வேளாண்மை, கட்டுமான வேலை, தையல், பூத்தையல், உலோக வேலை, பாய் நெசவு, வீட்டு மின் இணைப்பு மற்றும் குழாய்ப் பணிகள், மின் பற்றவைப்பு மற்றும் இரு சக்கர வாகனப் பராமரிப்பு மற்றும் பழுது பார்த்தல் ஆகிய தொழிற்பிரிவுகளில் பயிற்சி பெற்று வீடேகும் சிறார்கள், சுய தொழில் தொடங்க உதவும் வகையில் கருவிகள் மற்றும் உபகரணங்கள் வாங்க ஒட்டுமொத்த மானியம் வழங்கப்படுகிறது.

### 6.8.4. மகளிர் மற்றும் குழந்தைகள் கடத்தப்படுதலைத் தடை செய்ய மாநில அரசால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்

மகளிர் மற்றும் குழந்தைகள் கடத்தப்பட்டு, வணிக மற்றும் பாலியல் ரீதியான கொடுமைகளுக்கு உள்ளாக்கப்படுவதைத் தடுப்பதற்கு, மாநில அரசால் பல முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. இவ்வகையில், முதற்படியாக பாலியல் ரீதியிலான கொடுமை மற்றும் கடத்தலைத் தடுப்பதற்கு மூன்று அடுக்குக் கண்காணிப்பு அமைப்புகளை ஏற்படுத்தியுள்ளது. பெண்கள் மற்றும் குழந்தைகள் கடத்தப்படுதலைத் தடுப்பதற்கு உள்ளூர் மக்களின் ஈடுபாடும், சமூக எழுச்சியும் முக்கியமான தேவையாக அமைகிறது. எனவே, ஊராட்சித் தலைவரின் தலைமையில் கிராம அளவிலான கண்காணிப்புக் குழுவினை இப்பிரச்சினையை அணுகுவதற்கான முதல் அடுக்குக் கண்காணிப்பு அம்சமாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சியரின் தலைமையின்கீழ் மாவட்ட அளவிலான ஆலோசனைக் குழு, மாவட்டத்திலுள்ள பாலியல் கொடுமை, கடத்தல் ஆகிய நிகழ்வுகளைக் கண்காணிப்பதற்கும், தடுப்பதற்கும், மேலும் இந்நேர்வு தொடர்பான உள்ளூர் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் இரண்டாம் அடுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ளது. மாநில அளவில் தலைமைச் செயலாளரின் தலைமையின்கீழ் அமைக்கப்பட்டுள்ள ஒருங்கிணைப்புக் குழு, மகளிர் மற்றும் குழந்தைகள் கடத்தப்படுதல் மற்றும் அவர்கள் பாலியல் கொடுமைக்கு உட்படுத்தப்படுவதைத் தடுத்தல் தொடர்பான கொள்கை முடிவுகள் எடுக்கவும் மற்றும் விதிகளை ஏற்படுத்துவதற்குமான மூன்றாம் அடுக்காகும்.



2011 செப்டம்பர் 6]

மனிதக் கடத்தலைத் தடுப்பதற்காக மாவட்ட நிர்வாகம், காவல் துறை மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் ஒருங்கிணைந்து செயல்படும் முன்னோடித் திட்டத்தினைச் செயல்படுத்த காஞ்சிபுரம், திருவள்ளூர், திருவண்ணாமலை, சேலம், கோயம்புத்தூர், புதுக்கோட்டை மற்றும் கன்னியாகுமரி ஆகிய 7 மாவட்டங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

பாலியல் வன்கொடுமை மற்றும் மனித கடத்தலுக்குள்ளான மகளிர் மற்றும் குழந்தைகளின் நலன் காக்கும் பணியாளர்களுக்கு இப்பிரச்சினை குறித்தும் மற்றும் அணுகுமுறை குறித்த தெளிவும் இருப்பது மிகவும் அத்தியாவசியமானது. இதனை உணர்ந்து, மகளிர் காப்பகங்களின் பணியாளர்களுக்குச் சமூக உளவியல் ரீதியான பயிற்சி வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும் பாதிப்புக்குள்ளான மகளிருக்கிடையே உள்ள போதை மருந்து உண்ணும் பழக்கம், எச்.ஐ.வி. /எயிட்ஸ் நோயால் பாதிப்பு மற்றும் குடிப்பழக்கம் ஆகிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்மூலம் ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன.

[2011 செப்டம்பர் 6

### 6.9. போதைத் தடுப்புத் திட்டம்

மத்திய அரசின் போதைத் தடுப்புத் திட்டத்தினை தமிழ்நாட்டில் செயல்படுத்த இத்துறை பற்றாளராக உள்ளது. இத்திட்டத்தின்கீழ் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு ஒருங்கிணைந்த போதைத் தடுப்பு மையங்களை நடத்த நிதியுதவி அளிக்கப்படுகிறது. 2010-2011 ஆம் ஆண்டில், இத்திட்டத்தினைச் செயல்படுத்த 21 மாவட்டங்களில் 23 தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மத்திய அரசின் நிதியுதவி பெற்றுள்ளன. இத்திட்டமானது, ஒருங்கிணைந்த போதைத் தடுப்பு மையங்களில் போதைக்கு அடிமையானவர்களை அனுமதித்து, இப்பழக்கத்திலிருந்து மீள உரிய கவனிப்பு, சிகிச்சை மற்றும் ஆற்றுப்படுத்துதல் சேவை வழங்குவதை முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.



2011 செப்டம்பர் 6]

## அத்தியாயம் - 7

### முதியோர் மற்றும் மூத்த குடிமக்கள் நலன்

*7.1.* தமிழ்நாட்டில் வாழும் முதியோர்களின் பாதுகாப்பு மற்றும் பொருளாதார நிலையினை மேம்படுத்த வேண்டும் என்பது இந்த அரசின் நோக்கங்களில் முக்கியமான ஒன்றாகும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதவி ஏற்றவுடன் பல்வேறு சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களின்கீழ் வழங்கப்பட்டு வந்த மாதாந்திர ஓய்வூதியத்தினை ₹500-லிருந்து ₹1000 ஆக உயர்த்தி ஆணையிட்டுள்ளார்கள். முதியோருக்கு இந்த ஆணை மிகப் பெரிய வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. மேலும், ஒவ்வொரு வளர்ச்சி வட்டாரத்திலும் முதியோருக்கும், ஆதரவற்ற குழந்தைகளுக்கும் தங்கும் விடுதிகள் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளாகம் ஒன்றை உருவாக்க இந்த அரசு எடுத்துள்ள முடிவு, முதியோர் மற்றும் மூத்த குடிமக்கள்மீது இவ்வரசு காட்டும் அக்கறையை வெளிப்படுத்துவதாக அமைகிறது.

### 7.2. பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச் சட்டம், 2007

விரைவாக மாறிவரும் நகரமயமாதலின் விளைவாக, கூட்டுக் குடும்பங்கள் என்னும் அமைப்பு சிதைந்து, அக்குடும்பங்களால் ஒதுக்கப்பட்டு நிராதரவாக விடப்படும் மூத்த குடிமக்களின் எண்ணிக்கை பெருகி வருகிறது. அதிக அளவில் முதியோர்கள் மனரீதியாக ஒதுக்கப்படுவதுடன், அவர்களுக்கு உடல் மற்றும் பொருளாதார ரீதியான உதவிகள் மறுக்கப்படுகின்றன. மூத்த குடி மக்களைப் பாதுகாப்பதற்காக பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச் சட்டம், 2007 மற்றும் இச்சட்டத்தின்கீழ் வகுக்கப்பட்ட விதிகள் தமிழக அரசால் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மூத்த குடிமக்கள் மட்டுமல்லாது, தம் பிள்ளைகளால் புறக்கணிக்கப்பட்ட பெற்றோர்களின் நலனுக்காகவும் இச்சட்டத்தில் வழிவகைகள் செய்யப்பட்டு, பல்வேறு சிறப்பு ஷரத்துக்களை உள்ளடக்கி உள்ளது. மாவட்ட சமூக நல அலுவலர்கள் இச்சட்டத்தின்கீழ் "பராமரிப்பு அலுவலர்களாக" நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

இச்சட்டத்தின்கீழ் பெறப்படும் மனுக்களை விரைந்து தீர்வு செய்ய ஒவ்வொரு வருவாய்க் கோட்டத்திலும், வருவாய்க் கோட்டாட்சியரைத் தலைவராகக் கொண்ட தீர்ப்பாயம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. தீர்ப்பாயத்தின் ஆணைக்கெதிராக, மேல்முறையீட்டு மனுக்களை விசாரிக்க ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைவராகக் கொண்டு மேல்முறையீட்டு தீர்ப்பாயம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. ஒரு பெற்றோர் அல்லது மூத்த குடிமகன் தன்னுடைய வருமானத்திலிருந்தோ அல்லது தன்னுடைய சொத்துக்களிலிருந்து வரும் வருவாயிலிருந்தோ தன்னைப் பராமரித்துக்கொள்ள இயலாத நிலையில் இருந்தால், தன்னுடைய பிள்ளைகள் அல்லது சட்டபூர்வ வாரிசுகளிடமிருந்து பராமரிப்புத் தொகையைக் கேட்டுப்பெற இச்சட்டத்தின் பிரிவு 5-ன்கீழ் விண்ணப்பிக்கலாம். மூத்த குடிமக்களின் பிள்ளைகள் அல்லது உறவினர்கள் தீர்ப்பாயத்தின் ஆணையைச் செயல்படுத்த தவறினால், ஆணையை மீறும் ஒவ்வொரு செயலுக்கும் அபராதம் மற்றும் சிறைத் தண்டனை முழுவதுமாகவோ அல்லது ஒவ்வொரு மாத பராமரிப்புச் செலவுக்கு ஏற்றாற்போன்றோ வழங்க தீர்ப்பாயம் ஆணையிடலாம் அல்லது ஒரு மாதம் வரை சிறைத் தண்டனை அல்லது அத்தொகையைச் செலுத்தும் காலம் வரையோ சிறைத் தண்டனை அளிக்கப்படும். இச்சட்டத்தின்கீழ் பராமரிப்புத் தொகை கோரி பெறப்படும் மனு 90 நாட்களுக்குள் தீர்வு செய்யப்பட வேண்டும். பராமரிப்புத் தொகை ஒரு மாதத்திற்கு ₹10,000/-க்கு மிகாமல் இருக்க வேண்டும். விசாரணை நிலுவையில் இருக்கும் பட்சத்தில், மூத்த குடிமக்களைப் பராமரிப்பதற்காக, மாதாந்திர பராமரிப்புத் தொகையினை அளிக்கக் கோரி அவர்களின் பிள்ளைகள் அல்லது உறவினர்களுக்குத் தீர்ப்பாயம் இடைக்கால உத்தரவிடலாம். மூத்த குடிமகனின் பாதுகாப்பான பராமரிப்பிற்குப் பொறுப்பான நபர், அம்மூத்த குடிமகனை எங்காவது நிராதரவாக விட்டுச் சென்றால், 3 மாத சிறைத் தண்டனை அல்லது ₹5000/- வரை அபராதத் தொகை அல்லது இரண்டும் சேர்ந்த தண்டனையாக அளிக்கப்படும்.

### 7.3. முதியோர் இல்லங்கள்

தங்களைக் கவனித்துக்கொள்ள ஒருவரும் இல்லாத நிலையில், தினசரி வாழ்வில் உணவு, உடை, மருத்துவத் தேவைகள், உறைவிடம் முதலியவற்றிற்காக மிகவும் அல்லல்படும் ஆதரவற்ற மற்றும் கைவிடப்பட்ட முதியோர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள்





அதிகரித்து வருகின்றது. முதியோர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வண்ணம், முதியோர் இல்லங்கள் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்மூலம் நடத்தப்பட்டு வருகின்றன. இத்தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் சேவைகளைத் தொடர்ந்து ஊக்குவிக்க, மாநில அரசு 26 மாவட்டங்களில் உள்ள 28 முதியோர் இல்லங்களை நடத்தும் தொண்டு நிறுவனங்களுக்கு மானிய உதவி அளித்து வருகிறது. ஒரு முதியோர் இல்லத்திற்கு ஒரு வருடத்திற்கு ₹2.00 இலட்சம் மானியமாக அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு முதியோர் இல்லத்திலும் அதிகபட்சமாக 40 முதியோர்கள் பயன் பெறுகின்றனர். மேலும் மத்திய அரசு நிதி உதவியுடன், 51 முதியோர் இல்லங்கள் தொண்டு நிறுவனங்கள்மூலம் நடத்தப்படுகின்றன. இம்முதியோர் இல்லங்களில் உணவு, உறைவிடம், மருத்துவ கவனிப்பு மற்றும் பொழுது போக்கு வசதிகள் அளிக்கப்படுகின்றன.

2011-2012 ஆம் ஆண்டின் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹60.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 7.4. சர்வதேச முதியோர் தின விழா

உலகம் முழுவதும் ஒவ்வொரு வருடமும் அக்டோபர் 1 ஆம் தேதி சர்வதேச முதியோர் தினமாகக் கொண்டாடப்படுகிறது. தமிழக அரசு, மாநில மற்றும் மாவட்ட அளவில் இவ்விழாவினைச் சிறப்பான முறையில் கொண்டாடி வருகிறது. இவ்விழாவில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், மிகச் சிறந்த மூத்த குடிமக்கள், முதியோர்களின் நலனுக்காகச் சேவை புரியும் சங்கங்கள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவியர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர். முதியோர்களை மதித்து நடத்தல் குறித்த கருத்தரங்குகள், அவர்களுக்கு இலவச மருத்துவப் பரிசோதனைகள், மூத்த குடிமக்கள் மற்றும் பள்ளி மாணவ, மாணவியருக்கானப் போட்டிகள் போன்றவை இவ்விழாவின்போது நடத்தப்படுகின்றன. இவ்விழாவின் ஒரு பகுதியாக முதியோர்களின் நலனுக்காக சேவை புரியும் சிறந்த தன்னார்வத் தொண்டு நிறுவனம் மற்றும் சமூகப் பணியாளர் அல்லது சேவகர் விருதுகள் வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்திற்கென 2011-2012 ஆம் நிதியாண்டின் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், ₹5.30 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2011 செப்டம்பர் 6

**7.5. முதியோர் நலனுக்கான மாநில மற்றும் மாவட்டக் குழுக்கள்**

பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச் சட்டம் முறையாகச் செயல்படுத்தப்பட்டு, அதனால் முதியோர்களுக்கான பலன், அவர்களைச் சென்றடைவதை கண்காணிப்பதற்காக, மாநில அளவில், தலைமைச் செயலரை தலைவராகக் கொண்டு 16 அலுவல்சார் உறுப்பினர்கள் மற்றும் 7 அலுவல்சாரா உறுப்பினர்களையும் கொண்ட உயர் மட்ட ஆலோசனைக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதுபோன்று மாவட்ட அளவில் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்டு 3 அலுவல்சார் உறுப்பினர்கள் மற்றும் 4 அலுவல்சாரா உறுப்பினர்கள் (இரண்டு மூத்த குடிமக்கள் உட்பட) கொண்ட குழு உள்ளது.

**7.6. ஆதரவற்ற முதியோர் மற்றும் குழந்தைகள் தங்கும் சிறப்பு இல்லங்கள் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளாகங்களை ஏற்படுத்துதல்**

ஆதரவற்ற முதியோர்களும், குழந்தைகளும் தங்குவதற்காக ஒவ்வொரு வட்டாரத்திலும் சிறப்பு இல்லங்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளாகங்களை உருவாக்க இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. இச்சிறப்பு இல்லங்களில் முதியோர்களும், ஆதரவற்ற குழந்தைகளும், பாசப்பிணைப்புடன் தங்களுக்குள் அன்பு, மரியாதை போன்றவற்றைப் பகிர்ந்து கொள்ளும் வகையில் அருகருகே வசிப்பார்கள்.

தற்போது 93 முதியோர் இல்லங்கள் / பகல் நேர பராமரிப்பு மையங்களை 62 வட்டாரங்களில் தொண்டு நிறுவனங்கள்மூலம் சமூக நலத் துறை செயல்படுத்தி வருகிறது. அதைப் போன்றே, 90 வட்டாரங்களில், அரசு சார்பில் 27 குழந்தைப் பராமரிப்பு இல்லங்களும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் சார்பில் 173 குழந்தைப் பராமரிப்பு இல்லங்களும் நடத்தப்பட்டு வருகின்றன. சமூக நலத் துறைமூலம் முதியோருக்கும் ஆதரவற்ற குழந்தைகளுக்குமான சிறப்பு இல்லங்களை உள்ளடக்கிய, ஒருங்கிணைந்த வளாகம் மாநிலம் முழுவதும் ஒவ்வொரு வட்டாரத்திலும் அமைக்கப்படும். வயது முதிர்ந்த, மாற்றுத் திறனாளிகளும், இவ்வில்லங்களில் தங்க வைக்கப்படுவர்.

இத்தன்னிகரில்லாத் திட்டம், சிறந்த தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் பெருந் தொழில் நிறுவனங்களது தார்மீக சமூகக் கடமையின் பங்காக அவர்களது உதவியுடன் தொடர்ந்து நடத்தப்படும்.



2011 செப்டம்பர் 6]

# அத்தியாயம் - 8

## சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள்

8.1. பொருளாதாரத்தில் தற்போது காணப்படும் பணவீக்கத்தின் காரணமாக பணத்தின் மதிப்பு குறைந்துள்ளதால், சமுதாயத்தில் மிகவும் நலிவடைந்த பிரிவினர் குறிப்பாக, சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியம் பெறுபவர்கள் மிகவும் பாதிப்பிற்குள்ளாகியுள்ளனர். இத்தகைய நலிந்த பிரிவைச் சேர்ந்தவர்களின் துயர் துடைப்பதற்காக, சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின்கீழ் வழங்கப்படும் மாதாந்திர ஓய்வூதியத்தைப் பயனாளி ஒருவருக்கு ₹1000/-மாக உயர்த்தி வழங்கப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. அதன்படி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர், பொறுப்பேற்றவுடன் முதலில் பிறப்பித்த பல்வேறு ஆணைகளுள், ஓர் ஆணையாக சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களின்கீழ் வழங்கப்படும் மாதாந்திர ஓய்வூதியத் தொகையினை ₹500/-லிருந்து ₹1000/-ஆக உயர்த்தி ஆணையிட்டுள்ளார்கள்.

சமுதாயத்தில் மிகவும் நலிவடைந்த பிரிவினைச் சேர்ந்த வயது முதிர்ந்தோர், மாற்றுத்திறனுடையோர், விதவைகள், ஆதரவற்ற வேளாண் தொழிலாளர்கள், கணவனால் கைவிடப்பட்ட / ஆதரவற்ற பெண்கள் மற்றும் 50 வயது மற்றும் அதற்கு மேல் வயதுடைய திருமணமாகாத, உழைக்கும் திறனற்ற ஏழைப் பெண்கள் ஆகியோர்களுக்குச் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின்கீழ் மாதாந்திர ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

[2011 செப்டம்பர் 6

30-06-2011 வரை இந்தச் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின்கீழ், 23.95 இலட்சம் பயனாளிகள் பயனடைந்து வருகின்றனர். அதன் விவரம் பின்வருமாறு :—

| வ. எண் | திட்டத்தின் பெயர் | பயனாளிகளின் எண்ணிக்கை (30–06–2011 வரையில்) |
|---|---|---|
| 1. | இந்திரா காந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத் திட்டம் | 10,01,137 |
| 2. | இந்திரா காந்தி மாற்றுத்திறனுடையோர் ஓய்வூதிய தேசியத் திட்டம் | 34,640 |
| 3. | இந்திரா காந்தி விதவைகள் ஓய்வூதிய தேசியத் திட்டம் | 3,68,331 |
| 4. | ஆதரவற்ற மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதியத் திட்டம் | 1,01,869 |
| 5. | ஆதரவற்ற விதவைகள் ஓய்வூதியத் திட்டம் | 4,00,914 |
| 6. | ஆதரவற்ற வேளாண் தொழிலாளர்கள் ஓய்வூதியத் திட்டம் | 3,53,308 |
| 7. | கணவனால் கைவிடப்பட்ட/ ஆதரவற்ற பெண்கள் ஓய்வூதியத் திட்டம் | 1,19,477 |
| 8. | 50 வயது எய்தியும் வாய்ப்பு வசதியில்லாததால் திருமணமாகாமல் இருக்கும் உழைக்கும் திறனற்ற ஏழைப் பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம். | 15,117 |
| | மொத்தம் | 23,94,793 |

இத்திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக, 2011-2012 ஆம் ஆண்டின் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ₹2739.43 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



2011 செப்டம்பர் 6]

**8.2. தேசிய சமூக உதவித் திட்டத்தின்கீழ் உள்ள ஓய்வூதியத் திட்டங்கள்.**

மத்திய அரசின் தேசிய சமூக உதவித் திட்டத்தின்கீழ் மூன்று ஓய்வூதியத் திட்டங்கள் உள்ளன. அவை,

1. இந்திரா காந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத் திட்டம்.
2. இந்திரா காந்தி மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதிய தேசியத் திட்டம்.
3. இந்திரா காந்தி விதவைகள் ஓய்வூதிய தேசியத் திட்டம்.

இவ்வோய்வூதியத் திட்டங்களின்கீழ், மத்திய அரசு ஒரு பயனாளிக்கு ஒரு மாதத்திற்கு ₹200/- வழங்குகிறது. தமிழ்நாடு அரசு தனது பங்காக ஒரு பயனாளிக்கு மாதம் ஒன்றுக்கு கூடுதலாக ₹800/- அளித்து, ஆக மொத்தம் ஒரு பயனாளிக்கு மாதம் ₹1000/- ஓய்வூதியம் வழங்குகிறது. மத்திய அரசு தனது 30-6-2011 நாளிட்ட குறிப்பாணையின் வாயிலாக தற்போது நடைமுறையிலுள்ள இந்திரா காந்தி முதியோர் ஓய்வூதிய தேசிய திட்டத்தின்கீழ் பயன்பெறும் பயனாளிகளின் வயது வரம்பினை 65-லிருந்து 60 ஆகக் குறைத்துள்ளது. மேலும், இத்திட்டத்தின்கீழ் பயன்பெறும் 80 வயதிற்கு மேற்பட்ட பயனாளிகளுக்கு வழங்கி வந்த உதவித் தொகையான ₹200/-ஐ ₹500/-ஆகவும் உயர்த்தி உள்ளது. இந்திரா காந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத் திட்டத்தின்கீழ் பயனடைய குறைந்தபட்ச வயது வரம்பு குறைக்கப்பட்டதன் அடிப்படையில், இந்திரா காந்தி மாற்றுத்திறனுடையோர் ஓய்வூதிய தேசியத் திட்டம் மற்றும் இந்திரா காந்திவிதவைகள் ஓய்வூதிய தேசியத் திட்டம் ஆகிய திட்டங்களின்கீழ் பயனடைய தகுதியான அதிகபட்ச வயது வரம்பு 64-லிருந்து 59 என திருத்தியமைக்கப்பட்டுள்ளது. மேற்காணும் மத்திய அரசின் முடிவினை தமிழ்நாடு அரசும் செயல்படுத்த அரசாணை நிலை எண் 61, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 20-08-2011-ல் ஆணை பிறப்பித்துள்ளது. மத்திய அரசின் வயது வரம்பு குறைப்பு காரணமாக, இந்திரா காந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் கூடுதலாக 5.36 இலட்சம் பயனாளிகள் பயன்பெறுவர்.

[2011 செப்டம்பர் 6

மத்திய அரசின் தேசிய சமூக உதவி திட்டத்தின்கீழ் உள்ள மூன்று ஓய்வூதியத் திட்டங்களின்கீழ் உதவித் தொகை பெறுவதற்கான தகுதிகள் பின்வருமாறு:—

| வ. எண் | திட்டம் | தகுதிகள் | 2011–2012ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு (` கோடியில்) |
|---|---|---|---|
| 1. | இந்திரா காந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத் திட்டம் | வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய முதியோர்கள் | 1170.01 |
| 2. | இந்திரா காந்தி விதவைகள் ஓய்வூதிய தேசியத் திட்டம் | வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் 40 வயது முதல் 59 வயது வரையுள்ள விதவைகள் | 425.36 |
| 3. | இந்திரா காந்தி மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதிய தேசியத் திட்டம் | குறைந்தபட்சம் 80 விழுக்காடு கடுமையான அல்லது பலதரப்பட்ட ஊனமுடைய, வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள 18 வயது முதல் 59 வயது வரையிலான மாற்றுத் திறனுடையோர் | 39.34 |

தமிழ்நாடு அரசு முழுமையாக நிதி வழங்கிடும் சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களின்கீழ் பயன்பெறுவதற்கான முக்கியமான தகுதிகள் பின்வருமாறு:—



2011 செப்டம்பர் 6]

| வ. எண் | திட்டம் | முக்கியமான தகுதிகள் | 2011–2012ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு (`கோடியில்) |
|---|---|---|---|
| 1. | ஆதரவற்ற மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதியத் திட்டம் | • 60 விழுக்காட்டிற்கு மேல் ஊனமுள்ள, 45 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயது உடைய ஆதரவற்ற மாற்றுத் திறனுடையோர்கள்<br>• மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு, வயது வரம்பினைத் தளர்வு செய்யலாம் | 114.70 |
| 2. | ஆதரவற்ற விதவைகள் ஓய்வூதியத்திட்டம் | 18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய மறுமணமாகாத ஆதரவற்ற விதவைகள் | 449.39 |
| 3. | ஆதரவற்ற வேளாண் தொழிலாளர்கள் ஓய்வூதியத் திட்டம் | 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய ஆதரவற்ற வேளாண் தொழிலாளர்கள் | 387.99 |
| 4. | கணவனால் கைவிடப்பட்ட / ஆதரவற்ற பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம் | • 30 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடையகணவனால் கைவிடப்பட்ட / ஆதரவற்ற பெண்கள்.<br>• உரிய நீதிமன்றம் மூலம் விவாகரத்து சான்று பெற்றவர்கள் அல்லது ஐந்து ஆண்டுகளுக்கு மேல் கணவனைப் பிரிந்து வாழ்பவர்கள் | 135.53 |
| 5. | 50 வயது எய்தியும், வாய்ப்பு வசதி இல்லாததால், திருமணம் ஆகாமல் இருக்கும் உழைக்கும் திறனற்ற ஏழைப் பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம் | 50 வயது எய்தியும், திருமணமாகாத பிழைப்பூதியத்திற்கு வழியற்ற ஏழைப் பெண்கள் | 17.10 |

[2011 செப்டம்பர் 6

## 8.3. ஓய்வூதிய விண்ணப்பங்களை ஆய்வு செய்து விரைவாக ஓய்வூதியம் வழங்க வட்ட அளவில் குழு அமைத்தல்

சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களின்கீழ் மாதாந்திர ஓய்வூதியத்தைப் பயனாளிகளுக்கு விரைவாக ஒப்புதல் அளிக்கும் நோக்கத்தில், ஒவ்வொரு வட்டத்திலும் வட்டாட்சியர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்), மண்டலத் துணை வட்டாட்சியர் மற்றும் வருவாய் ஆய்வாளர் அடங்கிய குழு அமைக்கவும், அக்குழு ஓய்வூதிய விண்ணப்பங்களின்மீது விரைந்து ஆய்வு நடத்தி தொடர் நடவடிக்கை எடுக்கவும் அரசு ஆணையிட்டுள்ளது. ஓய்வூதியம் கோரும் விண்ணப்பங்கள், ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமை அன்று கிராம நிர்வாக அலுவலர்களால் கிராமங்களில் பெறப்படும். அதே வாரத்தில், அதாவது, வெள்ளிக்கிழமை கிராம நிர்வாக அலுவலர் அம்மனுக்களைத் தமது அறிக்கையுடன் அனுப்பி வைப்பார். ஓய்வூதிய விண்ணப்பங்கள் கிராம நிர்வாக அலுவலரின் அறிக்கையுடன் சேர்த்து, அலுவலர்களடங்கிய குழுவினால் ஆய்வு செய்யப்பட்டு, தகுதியுடைய பயனாளிகளுக்கு 30 தினங்களுக்குள் ஓய்வூதியம் வழங்கப்படும்.

## 8.4. முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களுக்கான சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்கள்

ஒரு முன்னோடி நடவடிக்கையாக, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களின் பயன்கள், தமிழகத்தில் உள்ள முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கும் விரிவுபடுத்தப்படும் என அறிவித்தார்கள். அதன்படி, முகாம்களில் வசித்து வரும் 2580 ஆதரவற்ற முதியோர்களுக்கும், 2518 ஆதரவற்ற விதவைகளுக்கும், கணவனால் கைவிடப்பட்ட/ஆதரவற்ற 182 பெண்களுக்கும், 264 ஆதரவற்ற மாற்றுத் திறனுடையோருக்கும் சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களின் பயன்களை நீட்டித்து அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. 5,544 முகாம்வாழ் இலங்கைத் தமிழர்கள், சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியமாக மாதம் ₹1000/- பெறுவர்.



2011 செப்டம்பர் 6]

## 8.5. பயோமெட்ரிக் ஸ்மார்ட் அட்டையை உபயோகப்படுத்தி வங்கிகள் மூலம் ஓய்வூதியம் வழங்குதல்

2011 ஆம் ஆண்டு மேதகு ஆளுநர் உரையில், அரசின் சேவைகள் அனைத்தும் சிறப்பான முறையில் மக்களைச் சென்றடைய, மின் ஆளுமை முயற்சிகளும், பணி சார்ந்த நிர்வாக மறு சீரமைப்பு (process re-engineering) முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்று அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது செயல்படுத்தப்பட்டு வரும் அனைத்து மக்கள் நலத் திட்டங்களும் அங்க அடையாளத்தை அடிப்படையாகக் கொண்ட அடையாள அட்டைத் திட்டத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டு, ஊழலுக்கு இடம் தராமல் திட்டத்தின் பயன் மக்களை முழுமையாகச் சென்றடைய வழிவகை செய்யப்படும். சமூகப் பாதுகாப்புத் திட்டங்களில் மாதந்தோறும் வழங்கப்படும் ஓய்வூதியத் தொகை பயனாளிகள் பெயரில் வங்கிக் கணக்கு தொடங்கப்பட்டு, வங்கிகள் மூலமாக பயனாளிகளுக்கு வழங்கப்படும். பயோமெட்ரிக் ஸ்மார்ட் அட்டையை உபயோகப்படுத்தி வங்கிச் சேவையாளரால் கிராமங்களில் ஓய்வூதியம் வழங்கப்படும்.

இதற்கிணங்க, முதற்கட்டமாக கடலூர் மாவட்டத்தில், காட்டுமன்னார்கோவில் வட்டம், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில், மணப்பாறை வட்டம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்தில், தோவாளை வட்டம் ஆகிய வட்டங்களில் முன்னோடித் திட்டமாக செயல்படுத்தப்படுகிறது. இந்த முன்னோடித் திட்டம் மேற்கண்ட வட்டங்களில் இருக்கக்கூடிய வங்கிகளின் கிளைகள்மூலம் பொதுத் துறை வங்கிகளின் கூட்டமைப்பால் செயல்படுத்தப்படும். ஒவ்வொரு வங்கியும் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள கிராமங்களில் சேவையைத் துவங்க வங்கிச் சேவையாளர் இணைவமைவு (network of Banking Correspondents) ஏற்படுத்தும். வசிப்பிடங்களுக்கு அருகில் சாதாரணமாக மக்கள் கூடும் எளிதில் அணுகக்கூடிய இடங்களில் வங்கிச் சேவையாளரால் ஓய்வூதியம் வழங்கப்படும். வங்கிச் சேவையாளர் அச்சுப்பொறி (Printer) கூடிய பயோ மெட்ரிக் மற்றும் பயனாளியின் கைவிரல் ரேகையை அடையாளம் காட்டக்கூடிய இயந்திரத்தை எடுத்துச் செல்வார். பயனாளியின் பயோ மெட்ரிக் தகவல்களின் நம்பகத் தன்மையை உறுதி செய்து ஓய்வூதியம் வழங்கப்படும். இத்திட்டமானது, மாநிலத்தில் உள்ள இதர வட்டங்களுக்கும் படிப்படியாக விரிவாக்கம் செய்யப்படும்.

[2011 செப்டம்பர் 6

## 8.6. பிற பயன்கள்

### (i) இலவச வேட்டி / சேலை வழங்குதல்

ஆண்டுக்கு இருமுறை, பொங்கல் மற்றும் தீபாவளி பண்டிகையின் போது சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களின்கீழ் உதவித் தொகை பெறும் பயனாளிகளில் ஆண் ஒருவருக்கு ஒரு வேட்டியும், பெண் ஒருவருக்கு ஒரு சேலையும் இலவசமாக வழங்கப்படுகிறது.

### (ii) இலவச சத்துணவு மற்றும் இலவச அரிசி வழங்குதல்

சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களின்கீழ் பயன் பெறும் அனைத்துப் பயனாளிகளும் கீழ்க்குறிப்பிட்ட அளவுகோலின்படி இலவசமாக அரிசி பெற்றுக்கொள்ள அரசினால் அனுமதிக்கப்பட்டுள்ளனர்:

(அ) குழந்தை மையங்களில் (அங்கன்வாடி மையங்கள்) உணவு உட்கொள்ளாதவர்களுக்கு மாதம் ஒருமுறை, ஒருவருக்கு 4 கிலோ வீதம் சன்னரக அரிசி

(ஆ) குழந்தை மையங்களில் (அங்கன்வாடி மையங்கள்) உணவு உட்கொள்பவர்களுக்கு மாதம் ஒரு முறை, ஒருவருக்கு 2 கிலோ வீதம் சன்னரக அரிசி.

## 8.7. தேசிய குடும்ப நலத் திட்டம்.

தேசிய சமூக உதவித் திட்டத்தின்கீழ், வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் குடும்பங்களின் வருவாய் ஈட்டும் நபர் இறந்துவிட்டால், அக்குடும்பத்திற்கு ₹10,000/- மத்திய அரசால் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் பயனாளிகள் விபத்து நிவாரணத் திட்டம், நலிந்தோர் நிவாரணத் திட்டம் ஆகிய திட்டங்களின்கீழ் பயன் பெறுகின்றனர்.



2011 செப்டம்பர் 6]

### (1) விபத்து நிவாரணத் திட்டம்

இத்திட்டத்தின்கீழ், வறுமைக் கோட்டிற்குகீழ் வாழும் கிராம கைவினைஞர்கள் உட்பட அறிவிக்கை செய்யப்பட்டுள்ள 44 வகை தொழிலாளர்கள் தொழிலில் ஈடுபட்டிருக்கும் போது விபத்துமூலம் இறப்பின், ரூபாய் ₹15,000/- நிவாரணத் தொகையாக வழங்கப்படுகிறது. மேலும், காயம் ஏற்படினும் மற்றும் அவயங்களை இழப்பினும், அதன் தன்மைக்கேற்ப ₹7,500/-லிருந்து ₹15,000/- வரை இழப்பீட்டுத் தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டமும், தேசிய சமூக உதவித் திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. வழங்கப்படும் நிவாரணத் தொகையில், மத்திய அரசின் பங்கு ₹10,000/-மும், மாநில அரசு தனது பங்காக ₹5,000/-மும் வழங்குகின்றன.

2011-2012 ஆம் ஆண்டின் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், இத்திட்டத்திற்காக ₹71.07 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (2) நலிந்தோர் நிவாரணத் திட்டம்

வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் குடும்பங்களில் பிரதான வருவாய் ஈட்டும் நபர் இயற்கையாக இறப்பின், அக்குடும்பத்திற்கு, மத்திய அரசால் ₹10,000/- நிவாரணத் தொகையாக வழங்கப்படுகிறது. இத்திட்டம் தேசிய சமூக உதவித் திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டு, மைய அரசால் வழங்கப்படும் கூடுதல் நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2011-2012 ஆம் ஆண்டின் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், இத்திட்டத்திற்காக ₹24.07 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2011 செப்டம்பர் 6

## சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

## 2011-2012 ஆம் ஆண்டிற்கான பகுதி-II திட்டங்கள்

(ரூபாய் இலட்சங்களில்)

| வரிசை எண் | திட்டத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| **தலைமைச் செயலகம்** | | |
| 1. | சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறைக்கு கணினி, உபகரணங்கள் மற்றும் மென்பொருட்கள் வாங்குதல் | 8.07 |
| **சமூக நல இயக்குநரகம்** | | |
| 2. | தையல் சங்கங்களுக்கு துணி வெட்டும் இயந்திரம் மற்றும் மேஜைகள் வழங்குதல் | 31.50 |
| 3. | சிவகங்கை, திருவண்ணாமலை மற்றும் தஞ்சாவூரில் உள்ள அரசு குழந்தைகள் காப்பகங்களில் சமையலறைகளை நவீனப்படுத்துதல் | 18.00 |
| 4. | 5 அரசு குழந்தைகள் காப்பகங்களுக்கு நீர் சுத்திகரிப்பான் வாங்கி வழங்குதல் | 5.00 |
| 5. | 3 அரசு சேவை இல்லங்கள் மற்றும் 2 அரசு குழந்தைகள் காப்பகங்களுக்கு பயன்படுத்தப்பட்ட அணை ஆடை அழித்தலுக்காக எரி உலை வழங்குதல் | 4.00 |
| 6. | 5 அரசு குழந்தைகள் காப்பகங்களுக்கு ஈரடுக்கு இரும்புக் கட்டில்கள் வழங்குதல் – நாகர்கோவில், திருச்சிராப்பள்ளி, தருமபுரி, சேலம், பெத்தநாயக்கன் பாளையம் (சேலம்) | 27.00 |
| 7. | அரசு சேவை இல்ல மேல்நிலைப் பள்ளிகளின் உள்ளுறைவோர்களுக்கு இலவச இணைக் காலணிகள் கொள்முதல் செய்து வழங்குதல் | 1.05 |



2011 செப்டம்பர் 6]

| | | |
|---|---|---|
| 8. | திருச்சிராப்பள்ளி, விருதுநகர் மாவட்ட சமூக நல அலுவலர்களுக்குப் புதிய ஈப்பு வாங்குதல் | 11.00 |
| 9. | தாம்பரம் அரசு சேவை இல்ல மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் இயங்கும் அரசு இடைநிலை ஆசிரியை பயிற்சிப் பள்ளியின் மாணவிகளை களப்பயணம் அழைத்துச் செல்லுதல் | 0.48 |
| **ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட ஆணையரகம்** | | |
| 10. | எரிவாயு இணைப்பு, எரிவாயு அடுப்பு, அடுகலன் (Pressure cooker) வழங்கியும், சமையல் மேடை அமைத்தும் 1000 அங்கன்வாடி மையங்களை நவீனப்படுத்துதல் | 60.00 |
| 11. | 2200 மையங்களுக்கு உணவுப் பொருட்களை சேமிக்க துருப்பிடிக்காத இரும்புக் கலன்கள் வழங்குதல் | 26.40 |
| 12. | 10 மாவட்டங்களுக்கு தலா ஒரு ஒளிநகலி மற்றும் ஸ்கேனர் இயந்திரம் வழங்குதல் | 8.80 |
| 13 | சென்னை, தரமணியில் உள்ள மாநில பயிற்சி மையத்தை நவீனமயமாக்குதல் | 1.12 |
| **சமூகப் பாதுகாப்பு இயக்குநரகம்** | | |
| 14. | சென்னை, அரசினர் கூர்நோக்கு இல்லத்திற்கு கடுங்கண்காணிப்பு மற்றும் பாதுகாப்புக் கருவிகள் வழங்குதல் | 17.59 |
| 15. | செங்கல்பட்டு அரசினர் சிறப்பு இல்லத்திற்கு கடுங்கண்காணிப்பு மற்றும் பாதுகாப்புக் கருவிகள் வழங்குதல் | 17.59 |

[2011 செப்டம்பர் 6

| | | |
|---|---|---|
| 16. | உயிர்காக்கும் மற்றும் முக்கிய மருந்துகள், எளிதில் கெடக்கூடிய உணவுப் பொருட்களான முட்டை, பால், அசைவ உணவுப் பொருள்கள் மற்றும் கீரை வகைகள் ஆகியவற்றைப் பாதுகாப்பாக வைக்க சமூகப் பாதுகாப்புத் துறையின்கீழ் இயங்கும் 26 நிறுவனங்களுக்கும் குளிர்சாதனப் பெட்டி வழங்குதல் | 6.50 |
| 17. | இராயபுரம் மற்றும் தஞ்சாவூர் அரசினர் குழந்தைகள் இல்லங்களுக்கு துணி துவைக்கும் இயந்திரம் (வணிக நோக்குடையது) வழங்குதல் | 7.00 |
| 18. | சென்னை, அரசினர் கூர்நோக்கு இல்லம் மற்றும் செங்கல்பட்டு அரசினர் சிறார்களுக்கான சிறப்பு இல்லங்களுக்கு மின்தடையின் போது தடையற்ற மின்சாரம் அளிக்க ஏதுவாக 100 KVA திறன் கொண்ட தானியங்கி டீசல் ஜெனரேட்டர் வழங்குதல் | 13.10 |
| 19. | இணைப்புப் பிரிண்டருடன்கூடிய 2 நகல் எடுக்கும் இயந்திரங்கள் வழங்குவதன்மூலம் சமூகப் பாதுகாப்பு இயக்குநரகத்தை வலுப்படுத்துதல் | 5.00 |
| 20. | செங்கல்பட்டு அரசினர் மாணவர் சிறப்பு இல்லத்தில் தங்கும் சிறார்களுக்கு விடுதி கட்டுதல் | 30.80 |
| | **மொத்தம்** | **300.00** |



2011 செப்டம்பர் 6]

# திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு-2011-2012

## மானியக் கோரிக்கை எண் 45

## சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

*2011-2012 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மொத்த ஒதுக்கீடு ₹292897.16 இலட்சம், இதில் திட்டப் பணிகளுக்கு மட்டும் ₹280997.04 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.*

| 2011-2012 ஆம் ஆண்டிற்கான திருத்த நிதி ஒதுக்கீடு | | | | |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| கணக்குத் தலைப்பு | | திட்டத்தில் சேராதது | திட்டம் | மொத்தம் |
| **வருவாய் பகுதி** | | | | |
| 2059 | பொதுப் பணிகள் | 316.25 | | 316.25 |
| 2225 | சமூக நல இயக்ககம் | 18.99 | | 18.99 |
| 2235 | சமூகப் பாதுகாப்பு இயக்ககம் | 2062.40 | 392.84 | 2455.24 |
| 2235 | சமூக நல இயக்ககம் | 5228.24 | 60824.02 | 66052.26 |
| 2235 | ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட ஆணையரகம் | 1784.77 | | 1784.77 |

| | | | | |
|---|---|---|---|---|
| 2236 | தலைமைச் செயலகம் | 11.36 | | 11.36 |
| 2236 | சமூக நல இயக்ககம் | 2136.67 | 122444.67 | 124581.34 |
| 2236 | ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட ஆணையரகம் | | 97335.47 | 97335.47 |
| 2251 | தலைமைச் செயலகம் | 341.42 | | 341.42 |
| 2551 | சமூக நல இயக்ககம் | | 0.01 | 0.01 |
| **வருவாய் பகுதி மொத்தம்** | | **11900.10** | **280997.01** | **292897.11** |
| **மூலதனப் பகுதி** | | | | |
| 4235 | சமூகப் பாதுகாப்பு இயக்ககம் | | 0.01 | 0.01 |
| 4236 | சமூக நல இயக்ககம் | | 0.02 | 0.02 |
| **மூலதனப் பகுதி மொத்தம்** | | | **0.03** | **0.03** |
| அரசுப் பணியாளர் முதலியோருக்குக் கடன்கள் | | | | |
| 7610 | தலைமைச் செயலகம் | 0.02 | | 0.02 |
| **கடன் பகுதி மொத்தம்** | | **0.02** | | **0.02** |
| **பெரு மொத்தம்** | | **11900.12** | **280997.04** | **292897.16** |





| | | |
|---|---|---|
| **பெரு மொத்தம்** | : | |
| வருவாய் பகுதி | :: | ₹ 292897.11 இலட்சம் |
| மூலதனப் பகுதி | : | ₹ 0.03 இலட்சம் |
| கடன் பகுதி | : | ₹ 0.02 இலட்சம் |
| மொத்தம் | : | ₹292897.16 இலட்சம் (அ) ₹2928.97 கோடி |

*2011-2012 ஆம் ஆண்டுக்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் வருவாய்த் துறை மானியக் கோரிக்கை எண் 41-ன்கீழ் ₹2822.48 கோடி சமூகப் பாதுகாப்புத் திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

## இணைப்பு II

*(263 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

## மானியக் கோரிக்கை எண் 52 – மாற்றுத் திறனாளிகள் நலத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2011 – 2012

**முன்னுரை:**

சமுதாயத்தில் பின்தங்கிய மக்களுக்கு நலத் திட்டங்களை அளிப்பதில் தமிழகம் எப்போதும் முன்னிலை வகித்து வருகிறது.

மாற்றுத் திறனாளிகளுக்கான நலத் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்த 1993 ஆம் ஆண்டில் ஊனமுற்றோருக்கான தனி இயக்ககம் சமூக நல இயக்ககத்திலிருந்து பிரித்து ஏற்படுத்தப்பட்டது. 1994 ஆம் ஆண்டு முதன் முறையாக மாற்றுத் திறனாளிகளுக்கான விரிவான மாநிலக் கொள்கையை இவ்வரசு வெளியிட்டது. இத்துறை, மாற்றுத் திறனாளிகள் (சமவாய்ப்புகள், உரிமைகள் பாதுகாப்பு மற்றும் முழு பங்கேற்பு) சட்டம், 1995-ன்படி ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர் அலுவலகமாக 1999 ஆம் ஆண்டு நிலை உயர்த்தப்பட்டு, இந்திய ஆட்சிப் பணி நிலையிலுள்ள உயர் அலுவலர் ஊனமுற்றோருக்கான மாநில ஆணையராக நியமிக்கப்பட்டார்.

மாற்றுத் திறனாளிகளுக்குள்ள தனிப்பட்ட திறமைகளைக் கருத்தில் கொண்டு, அவர்களை உடல் ஊனமுற்றோர், குருடர், செவிடர் என்று அழைப்பதைத் தவிர்த்து அவர்கள்மீது சமுதாயம் கொண்டுள்ள கண்ணோட்டத்தை மாற்றுவதற்கென இனி அவர்களை **மாற்றுத் திறனாளிகள்** என அழைக்க வேண்டும் என அரசு அறிவித்துள்ளது. தமிழக அரசால் மாற்றுத் திறனாளிகள் நலனுக்கென சமீபத்தில் தலைமைச் செயலகத்தில் **மாற்றுத் திறனாளிகள் நலத் துறை** எனத் தனியாக ஒரு நிர்வாகத் துறை துவக்கப்பட்டது.

மாற்றுத் திறனாளிகளை சமுதாயத்தில் ஒரு அங்கமாக அனைவரும் ஏற்கவும், சமுதாய வளர்ச்சியில் மாற்றுத் திறனாளிகளும் பங்கேற்பதற்கு சம வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவதற்கும், அவர்களின் முழுபங்கேற்பை உறுதி செய்வதற்கும் உரிய விழிப்புணர்வை இவ்வரசு ஏற்படுத்தி வருகிறது.





சமுதாயத்தில் ஒவ்வொரு நடவடிக்கையிலும் சமமாக ஈடுபடுவதற்கு மாற்றுத் திறனாளிகளுக்கு முழுவதுமாக உதவும் வகையில் தமிழக அரசு அவர்களுக்கென பல கொள்கைகளை வகுத்தும், திட்டங்களைத் தீட்டியும், அமல்படுத்தி வருகிறது. ஏனைய மக்களுக்கு இணையாக மாற்றுத் திறனாளிகள் வாழவேண்டும் என்பதை உறுதி செய்வதற்கு அரசால் பல திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

**அரசின் முன்னுரிமைத் திட்டங்கள் பின்வருமாறு:**

* அவயங்கள் மற்றும் அதன் செயல்பாட்டுக் குறைபாடுகள் ஏற்படுவதைத் தடுத்தல்
* ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து சிகிச்சை அளித்தல்
* மறுவாழ்வுப் பணிகளை மேற்கொள்ளுதல்
* சிறப்புக் கல்வி அளித்தல்
* மறுவாழ்வுப் பணிகளுக்கென நிபுணர்களை ஆயத்தம் செய்தல் / தயார்படுத்துதல்
* உதவி உபகரணங்களை வழங்குதல்
* கல்வி மற்றும் சுயவேலை வாய்ப்பு உள்ளிட்ட பொருளாதார மேம்பாடு அடையச் செய்தல்
* தடையற்ற சூழ்நிலையை ஏற்படுத்துதல்
* சமூகப் பாதுகாப்பு

**மாற்றுத் திறனாளிகளின் எண்ணிக்கை**

2001 ஆம் ஆண்டு மத்திய அரசால் மேற்கொள்ளப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, இந்தியாவில் 2,19,06,769 மாற்றுத் திறனாளிகள் உள்ளனர். அதில் தமிழகத்தில் மட்டும் 16,42,497 மாற்றுத் திறனாளிகள் உள்ளதாகக் கண்டறியப்பட்டது.

2011-ல் எடுக்கப்பட்ட மக்கள்தொகை கணக்கெடுப்பிலிருந்து தமிழகத்திலுள்ள மாற்றுத் திறனாளிகள் பற்றிய சரியான புள்ளிவிவரம் விரைவில் எதிர்பார்க்கப்படுகிறது.

*[2011 செப்டம்பர் 6*

## 2. மாற்றுத் திறனாளிகள் (சம வாய்ப்பு, உரிமைகள் பாதுகாப்பு மற்றும் முழு பங்கேற்பு) சட்டம், 1995-ன் அமலாக்கம்

தேசிய அளவில் மாற்றுத் திறனாளிகள் (சம வாய்ப்பு, உரிமைகள் பாதுகாப்பு மற்றும் முழு பங்கேற்பு) சட்டம், 1995-ஐ அமல்படுத்துவதில் தமிழ்நாடு இதர மாநிலங்களை விட முன்னிலை வகித்து வருகிறது. தேசிய அளவில் பாராட்டுகளைப் பெற்றுள்ளது.

மாற்றுத் திறனாளிகளுக்கு சம வாய்ப்பு அளிக்கவும், அவர்களை சமுதாயத்தில் ஒருங்கிணைத்து அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும், சமுதாய வாழ்க்கை நிலையில் அவர்கள் முழு பங்கேற்பதை உறுதி செய்வதற்கு மாற்றுத் திறனாளிகள் (சம வாய்ப்பு, உரிமைகள் பாதுகாப்பு மற்றும் முழு பங்கேற்பு) சட்டம், 1995 இயற்றப்பட்டது. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் நியமனம் செய்யப்பட்டு, அவர் மாற்றுத் திறனாளிகள் (சம வாய்ப்புகள், உரிமைகள் பாதுகாப்பு மற்றும் முழுபங்கேற்பு) சட்டம், 1995-ஐ அமல்படுத்தப்படுவதைக் கண்காணிப்பதுடன், மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் தலைவராகவும் செயல்பட்டு வருகிறார்.

## 3. மாற்றுத் திறனாளிகள் நலனுக்கென பணியாற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் பதிவு

மாற்றுத் திறனாளிகள் நலனுக்கென பல்வகையான சேவை புரிந்து வரும் அரசு சாரா நிறுவனங்கள் அனைத்தும் மாற்றுத் திறனாளிகள் (சமவாய்ப்புகள், உரிமைகள் பாதுகாப்பு மற்றும் முழு பங்கேற்பு ) சட்டம், 1995-ன்கீழ் பதிவு செய்துகொள்ளுதல் மிகவும் அவசியமாகும். மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், இச்சட்டத்தின் பிரிவு 52-ன்கீழ் அரசு சாரா நிறுவனங்களைப் பதிவு செய்ய அதிகாரம் படைத்தவராவார்.

## 4. மனநோயினால் பாதிக்கப்பட்டவருக்கான மறுவாழ்வு மையங்கள் பதிவு

மனநோயினால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கான மறுவாழ்வு மையங்களை நடத்துவதற்கென, தமிழ்நாடு மனநோய் மறுவாழ்வு மையங்களுக்கான பதிவு விதிகள், 2002-ல் வெளியிடப்பட்டுள்ளன. இவ்விதிகளின்படி மனநோயினால் பாதிக்கப்பட்டோருக்கான மறுவாழ்வு மையங்கள் அவசியம் பதிவு செய்தல் வேண்டும். இதுவரை 17 நிறுவனங்கள் பதிவு செய்துள்ளன. இவ்விதியை தவறாமல் கடைபிடிப்பதன் மூலம் மனநோயினால் பாதிக்கப்பட்டோருக்கான தகுதியற்ற மறுவாழ்வு மையங்கள் ஆரம்பிப்பதைத் தடுப்பதுடன்,



*2011 செப்டம்பர் 6]*

அரசு அங்கீகாரம் பொதுமக்கள் மத்தியில் நிறுவனங்கள் பற்றிச் சரியாக கணிக்க உதவுகிறது.

## 5. மாற்றுத் திறனாளிகள் உரிமைக்கான ஐக்கிய நாடுகள் இணக்க ஒப்பந்தம்

மாற்றுத் திறனாளிகளின் உரிமைக்கான ஐக்கிய நாடுகளின் இணக்க ஒப்பந்தத்தில் இந்தியா 30-3-2007 அன்று கையொப்பம் இட்டு அது 3-5-2008 முதல் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இதில் சாராம்சமாக மாற்றுத் திறனாளிகள் மற்றவர்களுக்குள்ள மனித உரிமைகளை அனுபவிக்கவும், முழுமையான குடிமகனாக வாழ வழிவகை செய்ய இயலும் எனவும், அவர்களுக்கு அதே வாய்ப்புகளை வழங்குவதால் சமுதாயத்திற்கு நல்ல பங்காற்ற முடியும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த இணக்க ஒப்பந்தத்தில் சம வாய்ப்பு, பாகுபாடு இன்மை மற்றும் சட்டத்தின் முன் சமமான அங்கீகாரம், சுதந்திரம் மற்றும் தனி மனித பாதுகாப்பு, தனி நபர் சுதந்திரம், சுதந்திரமான வாழ்வு, சுகாதாரம், வேலைவாய்ப்பு மற்றும் கல்விக்கான உரிமை, அரசியல் மற்றும் கலாச்சார நடவடிக்கைகளில் பங்கேற்பதில் உறுதி செய்தல் போன்றவை உள்ளடங்கியுள்ளன. ஐக்கிய நாடுகள் இணக்க ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட பல கருத்துகளை இந்தியா ஏற்றுக்கொண்டு, மாற்றுத் திறனாளிகளுக்கு வாய்ப்புகளை ஏற்படுத்தி அதன்மூலம் அவர்கள் சுயமரியாதையுடன் வாழ வழிவகை செய்கிறது. ஐக்கிய நாடுகள் இணக்க ஒப்பந்தத்தில் உள்ள பல உயரிய நோக்கங்களை நடைமுறைப்படுத்திட அரசு தொடர்ந்து பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

## 6. தேசிய அறக்கட்டளை

புறஉலக சிந்தனையற்றவர்கள் (ஆட்டிசம்), மூளைமுடக்குவாதம், மனவளர்ச்சி குன்றிய தன்மை மற்றும் பல்வகை பாதிப்பு நபர்களுக்கான தேசிய அறக்கட்டளைச் சட்டம், 1999-ல் அறிமுகப்படுத்தப்பட்டு அதன்மூலம் அவர்கள் சுயமாகவும், சார்ந்துள்ள சமுதாயத்துடன் ஒருங்கிணைந்து வாழவும் வழிவகை செய்வதை உறுதி செய்வதைக் கொள்கையாகக் கொண்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர்களைத் தலைவராகக் கொண்டு **உள்ளூர் அளவிலான குழுக்கள்’** அமைக்கப்பட்டு தேசிய அறக்கட்டளையின் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. விழிப்புணர்வு ஏற்படுத்துதல், பாதுகாவலர்களை நியமித்தல், தொண்டு நிறுவனங்களுக்கு தேசிய அறக்கட்டளை பற்றி

[2011 செப்டம்பர் 6

எடுத்துரைத்தல் மற்றும் தேசிய அறக்கட்டளையின் முக்கிய நோக்கங்களைப் பரப்புதல் ஆகிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவதற்கு ஒவ்வொரு ஆண்டும் ரூ.10,000/- ஒவ்வொரு உள்ளூர் அளவிலான குழுவிற்கும் வழங்கப்படுகிறது.

**7. மாற்றுத் திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை, பாஸ் புத்தகம் மற்றும் சான்றிதழ்கள்**

(1) இம்மாநிலத்திலுள்ள, தகுதி வாய்ந்த அனைத்து மாற்றுத் திறனாளிகளுக்கும், தேசிய அடையாள அட்டைகளை வழங்கும் பணிக்கு இவ்வரசு முக்கியத்துவம் அளித்துள்ளது.

தமிழக அரசு Tamil Nadu Persons with Disabilities (Equal Opportunities, protection of Rights and full participation) Rules, 2002-ல் சில திருத்தங்களை 17-6-2011-ல் வெளியிட்டுள்ளது. இரண்டாவது அத்தியாயத்தில் செய்துள்ள திருத்தத்தின்படி, தகுதியுள்ள மாற்றுத்திறனாளிகள் அனைவருக்கும் ஊனத்தின் சான்றிதழ் கிடைக்க நடைமுறை எளிமைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த அரசாணையின்படி கீழ்க்கண்ட மருத்துவ அதிகாரிகள் ஊனத்தின் சான்றிதழ் வழங்க தகுதியுடையவர்களாவார்கள்:

| வ. எண் | ஊனத்தின் வகைகள் | ஊனத்தின் சான்றிதழ் வழங்கு மருத்துவ அலுவலகம் | ஊனத்தின் சான்றிதழ் வழங்கும் அதிகாரி |
|---|---|---|---|
| 1. | உடல் இயக்க குறைபாடு அல்லது முற்றிலும் கை, கால் இயக்கமின்மை | மருத்துவமனைகள்/ அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள்/ அரசு நிறுவனங்கள் / உள்ளூர் மருத்துவமனைகள் | மருத்துவமனைகள்/ அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் / அரசு நிறுவனங்கள் / உள்ளூர் மருத்துவமனைகள் ஆகியவற்றில் பணியாற்றும் மருத்துவர்கள் |
| 2. | பல்வகை ஊனம் | மாவட்ட மருத்துவமனை/ மற்ற மருத்துவமனைகள்/ அரசு மருத்துவமனைகள் உள்ளூர் மருத்துவமனைகள்/ மருத்துவ நிபுணர் மற்றும் பரிசோதனை செய்ய வசதியுள்ள மருத்துவமனைகள் | மூன்று பேர் அடங்கிய மருத்துவ குழு, அதில் ஒருவர் அந்தந்தத் துறையில் சிறப்பு மருத்துவராக இருத்தல் வேண்டும் |



2011 செப்டம்பர் 6]

| | | | |
|---|---|---|---|
| 3. | வ. எண் 1 மற்றும் 2–ல் குறிப்பிடாத ஊனம் | மருத்துவமனைகள்/ அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள்/ அரசு நிறுவனங்கள் / உள்ளூர் மருத்துவமனைகள் | அந்தத் துறையில் சிறப்பு மருத்துவராக இருத்தல் வேண்டும் |

மேலே குறிப்பிட்ட வ. எண் 1 மற்றும் 2-ல் குறிப்பிடப்படாத ஊனங்களுக்கு, ஊனத்தின் சான்றிதழ் வழங்க கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சிறப்பு மருத்துவர்கள் சான்றிதழ் வழங்குவார்கள்:

| வ.எண் | ஊனத்தின் வகைகள் | சிறப்பு மருத்துவர்கள் |
|---|---|---|
| 1. | மூளை முடக்குவாதம் | உடலியல் மற்றும் மறுவாழ்வு மருத்துவர் அல்லது முடநீக்கு மருத்துவர் அல்லது நரம்பியல் மருத்துவர் அல்லது மனநல மருத்துவர், குழந்தை நல மருத்துவர் |
| 2. | காது கேளாமை | காது, மூக்கு, தொண்டை மருத்துவர் |
| 3. | தொழுநோய் குணமடைந்தவர் | உடலியல் மற்றும் மறுவாழ்வு மருத்துவர் அல்லது முடநீக்கு மருத்துவர் அல்லது தோல் நோய் மருத்துவர் |
| 4. | உடல் இயக்க குறைபாடு அல்லது முற்றிலும் கை, கால் இயக்கமின்மை | உடலியல் மற்றும் மறுவாழ்வு மருத்துவர் அல்லது முடநீக்கு மருத்துவர் |
| 5. | மனநலமின்மை | மனநோய் மருத்துவர் |
| 6. | மனநலம் குன்றியோர் | **12 வயதுக்குட்பட்ட மனநலம் குன்றியோர்** – குழந்தை நல மருத்துவர், குழந்தை நல நரம்பியல் மருத்துவர், மனநல மருத்துவர் 12 வயதுக்கு மேற்பட்ட மனநலம் குன்றியோர் –மனநல மருத்துவர் |
| 7. | குறை பார்வை / பார்வையின்மை | கண் மருத்துவர் |
| 8. | புற உலக சிந்தனையற்றவர் | மனநல மருத்துவர் அல்லது குழந்தை நல மருத்துவர் அல்லது நரம்பியல் மருத்துவர் |

[2011 செப்டம்பர் 6

**(2) தேசிய அடையாள அட்டை மற்றும் உதவிகள் பதிவு புத்தகம் வழங்கும் நடைமுறை**

40% மற்றும் அதற்கு மேல் ஊனம் உள்ள மாற்றுத் திறனாளிகள் ஊனத்தின் சான்றிதழ் பெற்றவுடன், அவர்கள் வசிக்கும் மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகத்தில் புதிவு செய்ய வேண்டும். மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர் அந்த சான்றிதழை பதிவு செய்து, குடும்ப அட்டையில் முத்திரையை பதித்து விட்டு, தேசிய அடையாள அட்டை மற்றும் உதவிகள் பதிவு புத்தகம் வழங்குவார். இதுவரை, தமிழ்நாட்டில் மாற்றுத் திறனாளிகளுக்கு 7,75,042 மருத்துவ சான்றிதழ் மற்றும் தேசிய அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

**8. மாற்றுத் திறனாளிகளுக்கான தடையற்ற சூழ்நிலை**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் முந்தைய ஆட்சிக் காலத்தில், சென்னைப் பெருநகர்ப் பகுதி வளர்ச்சிக் கட்டுப்பாடு விதிகளில் உரிய மாறுதல்களைச் செய்து மாற்றுத் திறனாளிகள் எல்லா இடங்களுக்கும் சிரமமின்றிச் சென்றுவர கட்டட விதிமுறைகளில் மாற்றம் செய்யப்பட்டது.

தேவையான சட்டத் திருத்தங்களின்மூலம் தமிழகத்தின் மாநகராட்சிகள், நகராட்சிகள், ஊராட்சிகளில் பகுதிகளிலும் கட்டட விதிமுறைகளில் இதுபோன்ற மாற்றம் கொண்டுவர இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

**9. மாற்றுத் திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பினை அதிகப்படுத்துதல்**

இந்த அரசு, வேலைவாய்ப்பில் மாற்றுத் திறனாளிகளுக்கு மூன்று விழுக்காடு இட ஒதுக்கீட்டை உறுதி செய்யும். இதற்கென தலைமைச் செயலாளரின்கீழ், பல்துறை செயலாளர்களைக் கொண்ட ஒரு குழு அமைத்து அனைத்து அரசுப் பணிகளிலும் மூன்று விழுக்காடு இட ஒதுக்கீடு நடைமுறைப்படுத்தப்படுவதைக் கண்காணிக்கும்.

மாற்றுத் திறனாளிகளுக்கு சிறப்புப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு, தனியார் துறையில் பணியமர்த்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.



2011 செப்டம்பர் 6]

**மாற்றுத் திறனாளிகளுக்கான ஆரம்ப நிலை பயிற்சி மையங்கள்**

**10. செவித்திறன் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறன் படைத்த குழந்தைகள் மற்றும் இளஞ்சிறார்களுக்கான ஆரம்ப நிலை பயிற்சி மையங்கள்**

31 மாவட்டங்களில் செவித்திறன் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறன் படைத்த குழந்தைகள், இளஞ்சிறார்களுக்கென ஆரம்ப நிலை பயிற்சி மையங்கள் தொண்டு நிறுவனங்கள்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. செவித்திறன் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறன் படைத்த குழந்தைகளை இளம் வயதிலேயே கண்டறிந்து, பெற்றோர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினரின் ஒத்துழைப்புடன் ஆரம்ப நிலை குறைபாட்டின் கடுமையைக் குறைத்து அதன்மூலம் அக்குழந்தைகளின் முழுத் திறனையும் வெளிக் கொணருவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். செவித்திறன் பாதிக்கப்பட்ட 2½ வயதுக்குட்பட்ட குழந்தைகள் மட்டும் இம்மையங்களில் சேர்க்கப்பட்டு, அதிகபட்சம் 5 வயது அடையும்போது அவர்களின் பேச்சு மற்றும் மொழித் திறனை வளர்த்து, பின்னர் சாதாரண பள்ளிகளில் 1 ஆம் வகுப்பில் சேர்த்து பிற மாணவர்களுடன் ஒருங்கிணைக்கப்பட்டு வருகின்றனர்.

செவித்திறன் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான ஆரம்ப நிலை பயிற்சி மையங்களில் பயிற்சி பெறும் குழந்தைகள் மற்றும் பெற்றோர்களுக்கு கற்றல் மற்றும் கற்பித்தல் கருவிகள் மற்றும் விளையாட்டுச் சாமான்கள் வழங்கப்பட்டுள்ளன.

இம்மையங்களில் பயிற்சி பெற்று வரும் குழந்தைகளுக்கு இரு காதுகளுக்கும் தேவையான காதொலிக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. 517 செவித்திறன் குறையுடைய 0-3 வயதுடைய இளஞ்சிறார்கள் இத்திட்டத்தில் பயனடைந்துள்ளனர்.

2011-2012 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.93.98 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**11. மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான ஆரம்பநிலை பயிற்சி மையங்கள்**

மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான ஆரம்பநிலை பயிற்சி மையங்கள் 30 மாவட்டங்களில் தொடங்கப்பட்டு, ஒவ்வொரு மாவட்டத்திலும் தலா 50 மனவளர்ச்சி குன்றிய 0-6 வயதுக்குட்பட்ட குழந்தைகளைக் கண்டறிந்து, அவர்கள் பயன்பெறும் வகையில்

[2011 செப்டம்பர் 6

தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்மூலம் செயல்பட்டு வருகின்றன. தற்போது பெரம்பலூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் 1-5-2011 முதல் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்மூலம் மன வளர்ச்சி குன்றிய ஆரம்பப் பயிற்சி மையங்கள் துவக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. மனவளர்ச்சி குறைபாட்டினை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து, உரிய பயிற்சிகள் அளிப்பதன்மூலம் அவர்களின் செயல்திறனை அதிகரித்து, அவர்களை மறுவாழ்வு அடையச் செய்வதில் அவர்களின் பெற்றோர் / குடும்பத்தினரை பயிற்றுவித்து, அதன்மூலம் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளின் இயக்கம், தொடர்பு, சுய வளர்ச்சி, சமூகமயமாக்குதல் மற்றும் புரிந்து கொள்ளுதல் ஆகிய திறன்களை வளர்ப்பதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான ஆரம்ப நிலை பயிற்சி மையங்களில் பயிற்சி பெறும் குழந்தைகள் மற்றும் பெற்றோர்களுக்கு கற்றல் மற்றும் கற்பித்தல் கருவிகள் மற்றும் விளையாட்டுச் சாமான்கள் வழங்கப்பட்டுள்ளன.

மன வளர்ச்சி குன்றியோருக்கான ஆரம்ப நிலை பயிற்சி மையங்களில் பணியாற்றி வரும் சிறப்பு ஆசிரியர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

2011-2012 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.178.20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**12. பார்வை குறைபாடுடைய ஆறு வயதிற்குட்பட்ட மாற்றுத் திறனாளி சிறார்களுக்கான ஆரம்ப நிலை பயிற்சி மையங்கள்**

பார்வை குறைபாடு உடைய ஆறு வயதிற்குட்பட்ட மாற்றுத் திறனாளி சிறார்களுக்காக ஆரம்ப நிலை பயிற்சி மையங்கள் (Early Intervention Centres for Visually Impaired) அரசு சாரா தொண்டு நிறுவனங்கள்மூலம் திருநெல்வேலி, மதுரை, வேலூர், கிருஷ்ணகிரி மற்றும் திருவண்ணாமலை ஆகிய 5 மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ளன. பார்வையற்ற சிறார்கள் மற்ற குழந்தைகள் போல சாதாரண பள்ளிகளில் சேர்ந்து கல்வி பயில தேவையான திறன்களை வளர்ப்பதும், மாற்றுத் திறனாளிகளின் பெற்றோருக்கும் குடும்பத்தினருக்கும் தக்க ஆலோசனைகள் வழங்குவதும் இந்த மையங்களின் நோக்கம் ஆகும்.



2011 செப்டம்பர் 6]

2011-2012 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.16.90 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**13. செவித்திறன் பாதிக்கப்பட்ட குழந்தைகளை ஆரம்ப நிலையில் கண்டறியும் பரிசோதனை மையம்**

தூத்துக்குடியில் தென் மாவட்டங்களில் உள்ளோர் பயனடையும் வகையில் ரூ.18.10 இலட்சம் செலவில் செவித்திறன் பாதிக்கப்பட்ட குழந்தைகளைக் கண்டறியும் ஆரம்ப நிலை பரிசோதனை மையம் நிறுவப்பட்டு 18-2-2011 முதல் செயல்பட்டு வருகிறது. தற்போது இத்திட்டத்தில் 525 செவித்திறன் குறையுடைய இளஞ்சிறார்கள் பரிசோதனை செய்யப்பட்டுள்ளனர்.

## மாற்றுத் திறனாளிகளுக்கான கல்வி உதவிகள்

**14. சிறப்புக் கல்வி**

கடுமையான கற்றல் குறைபாடு, உடல் குறைபாடு அல்லது நடமாடும் குறைபாடு உள்ள குழந்தைகளுக்கு தனிப்பட்ட முறையில் சிறப்புக் கல்வி அளிக்கவென சிறப்புப் பள்ளிகளின்மூலம் மாற்றுத் திறன் படைத்த குழந்தைகளுக்கு சிறப்புக் கல்வி அளிக்கப்படுகிறது. அரசு, மொத்தம் 23 சிறப்புப் பள்ளிகளை நடத்துகிறது. இதில் 10 பள்ளிகள் பார்வைத் திறன் பாதிக்கப்பட்டோருக்கும், 11 பள்ளிகள் செவித்திறன் பாதிக்கப்பட்டோருக்கும், ஒரு பள்ளி கடுமையாக கை, கால் பாதிக்கப்பட்டோருக்கும், ஒரு பள்ளி மனவளர்ச்சி குன்றியோருக்கும் நடத்தப்பட்டு வருகிறது.

அரசு சிறப்புப் பள்ளிகளில் கல்வி பயிலும் மாற்றுத் திறன் படைத்த மாணவ, மாணவிகளுக்கு சிறப்புக் கல்வி, உணவு, உறைவிடம் மற்றும் இரண்டு இணை சீருடைகள் ஆகியவை அளிக்கப்பட்டு வருகின்றன

அரசு சிறப்புப் பள்ளிகள் அனைத்திற்கும் கல்வி பயிற்றுவிக்கும் பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள், பாத்திரங்கள் மற்றும் அறைகலன்கள் வழங்கப்பட்டுள்ளன.

அரசு நிதியுதவி பெறும் 54 சிறப்புப் பள்ளிகள் மூலமும் மாற்றுத் திறன் படைத்த குழந்தைகளுக்கு சிறப்புக் கல்வி அளிக்கப்படுகிறது. ஆசிரியர் ஊதியம், உணவூட்டுச் செலவினம் மற்றும் இலவச

*[2011 செப்டம்பர் 6*

*புத்தகங்கள் அனைத்தும் அரசால் சிறப்புக் கல்விக்கென மாநிலம் முழுவதும் வழங்கப்படுகின்றன. அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு மாதாந்திர உணவூட்டுச் செலவினமாக ரூ.450/- வழங்கப்படுகிறது.*

*2011-2012 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.3184.17 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

**15. வாசிப்பாளர் உதவித் தொகை**

*9 ஆம் வகுப்பு முதல் பட்ட மேற்படிப்பு வரை பயிலும் பார்வையற்ற மாணவ, மாணவியர்களுக்கான வாசிப்பாளர்களுக்கான உதவித் தொகை வழங்கப்படுகிறது.*

| வ.எண் | வகுப்பு | வாசிப்பாளர் உதவித் தொகை (ஒரு வருடத்திற்கு) |
|---|---|---|
| 1. | 9 ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை | ரூ.1,500/– |
| 2. | பட்டப்படிப்பு | ரூ.2,500/– |
| 3. | தொழிற்கல்வி / பட்ட மேற்படிப்பு | ரூ.3,000/– |

*2011-2012 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.19.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

**16. கல்வி உதவித் தொகை**

*பட்ட மேற்படிப்பு வரை கல்வி பயிலும் மாற்றுத் திறனாளி மாணவ, மாணவிகள் படிப்பிற்கான பொருட்கள் வாங்குவதற்கு மாநில அரசு கல்வி உதவித் தொகை வழங்கி வருகிறது. கல்வி உதவித் தொகை கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டு வருகிறது:*



*2011 செப்டம்பர் 6]*

| வ.எண் | வகுப்பு | கல்வி உதவித் தொகை (ஒரு வருடத்திற்கு) |
|---|---|---|
| 1. | 1 ஆம் வகுப்பு முதல் 5ஆம் வகுப்பு வரை | ரூ.500/– |
| 2. | 6 ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு வரை | ரூ.1,500/– |
| 3. | 9ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை | ரூ.2,000/ |
| 4. | இளங்கலை பட்டப்படிப்பு | ரூ.3,000/– |
| 5. | தொழிற்கல்வி / பட்ட மேற்படிப்பு | ரூ.3,500/– |

*2011-2012 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.261.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

**17. பொதுத் தேர்வுகளில் முதல் மூன்று நிலைகளைப் பெறும் பார்வையற்ற மாணவ, மாணவியருக்கு ரொக்கப் பரிசு**

*தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு 10 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் மாவட்ட / மாநில அளவில் முதல் மூன்று நிலைகளில் மதிப்பெண் பெறும் பார்வையற்ற மாணவ, மாணவியருக்கு ரொக்கப் பரிசு, உயர் கல்விபெற உதவித் தொகை ஆகியன கீழ்க்குறிப்பிட்டவாறு வழங்கப்படுகின்றன:*

**மாநில அளவில்**

| நிலை | ரொக்கப் பரிசு | |
|---|---|---|
| | 10 ஆம் வகுப்பிற்கு | 12 ஆம் வகுப்பிற்கு |
| முதல் இடம் | ரூ. 12,000/– | ரூ.18,000/– |
| இரண்டாம் இடம் | ரூ. 9,000/– | ரூ.12,000/– |
| மூன்றாம் இடம் | ரூ. 6,000/– | ரூ. 9,000/- |

*[2011 செப்டம்பர் 6*

**மாவட்ட அளவில்**

| நிலை | ரொக்கப் பரிசு | |
|---|---|---|
| | 10ஆம் வகுப்பிற்கு | 12ஆம் வகுப்பிற்கு |
| முதல் இடம் | ரூ.6,000/– | ரூ.12,000/– |
| இரண்டாம் இடம் | ரூ.4,500/– | ரூ. 7,500/– |
| மூன்றாம் இடம் | ரூ.3,000/– | ரூ. 4,500/– |

**உயர்கல்விக்கு நிதியுதவி**

| உதவித் தொகையின் தன்மை | 10ஆம் வகுப்பிற்கு | 12ஆம் வகுப்பிற்கு |
|---|---|---|
| உயர்கல்வி பயில | ரூ.4,000/– | ரூ. 6,000– |
| பிரெய்லி புத்தகங்கள் வாங்க | ரூ.3,000/– | ரூ. 4,000/– |
| விடுதிக் கட்டணம் (10 மாதங்களுக்கு) | ரூ.2,000/– | ரூ. 3,000/– |

*2011-2012 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.40.04 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

**18. பார்வையற்ற மாணவ, மாணவிகள் தேர்வு எழுத உதவுபவர்களுக்கு உதவித் தொகை**

*பார்வையற்றோருக்கான சிறப்புப் பள்ளிகளில் 9 ஆம் வகுப்பிலிருந்து 12 ஆம் வகுப்பு வரை கல்வி பயிலும் பார்வையற்ற மாணவ, மாணவிகள், பள்ளித் தேர்வுகள் எழுத உதவியாளர் ஒருவரை அமர்த்திக்கொள்ள அனுமதிக்கப்படுகிறார்கள். இதற்கு ஒரு உதவியாளருக்கு ஒரு தேர்வுத் தாளுக்கு ரூ.50/-வீதம் உதவித் தொகை வழங்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் இத்திட்டத்தில் கீழ்க்குறிப்பிட்ட பள்ளிகளில் பயிலும் சுமார் 500 பார்வையற்ற, மாணவ, மாணவியர் பயனடைந்து வருகிறார்கள்:*



*2011 செப்டம்பர் 6]*

| | |
|---|---|
| (அ) | பார்வையற்றோருக்கான அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, பூவிருந்தவல்லி, சென்னை; |
| (ஆ) | பார்வையற்ற மகளிருக்கான அரசு மேல்நிலைப் பள்ளி, திருச்சிராப்பள்ளி; |
| (இ) | பார்வையற்றோருக்கான அரசு உயர்நிலைப்பள்ளி, தஞ்சாவூர்; |
| (ஈ) | பார்வையற்றோருக்கான சிறுமலர் கான்வென்ட் மேல்நிலைப் பள்ளி, சென்னை; |
| (உ) | புனித லூயிஸ் காதுகேளாதோர் மற்றும் பார்வையற்றோருக்கான நிறுவனம், சென்னை; |
| (ஊ) | பார்வையற்றோருக்கான இந்திய சங்கத்தின் மேல்நிலைப் பள்ளி, மதுரை. |

*2011-2012 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.5.54 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

**19. பார்வைத் திறன் பாதிக்கப்பட்ட மாணவ, மாணவியர்களுக்கு பாடங்கள் ஒலிப்பதிவு செய்யப்பட்ட குறுந்தகடுகள் மற்றும் குறுந்தகடு இயக்கும் கருவிகள்**

*பூவிருந்தவல்லி, திருச்சிராப்பள்ளி மற்றும் தஞ்சாவூரில் உள்ள பார்வையற்றோருக்கான அரசு சிறப்புப் பள்ளிகளில் 10 ஆம் மற்றும் 12 ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவ, மாணவிகள் பயன்பெறும் வகையில், பாடங்கள் ஒலிப்பதிவு செய்யப்பட்ட குறுந்தகடுகளும், குறுந்தகடு இயக்கும் கருவிகளும், தலை ஒலி வாங்கியுடன் (Head Phone) சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின்மூலம் 140 பார்வைத் திறன் பாதிக்கப்பட்ட மாணவ / மாணவியர் பயனடைகின்றனர்.*

*2011-2012 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.4.35 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

[2011 செப்டம்பர் 6

## 20. ஆசிரியர்களுக்கான சிறப்புப் பட்டயப் பயிற்சி

வெவ்வேறு வகை உடல் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு பாடம் கற்பிக்க சிறப்புப் பள்ளி ஆசிரியர்களுக்கு சிறப்புப் பயிற்சி தேவைப்படுகிறது. மாணவ, மாணவிகளின் ஊனங்களின் தன்மை மற்றும் வீரியத்தின் அடிப்படையில் கற்றுத் தருவதற்கு தனித் திறமைகளை அளிக்க வேண்டியுள்ளது. எனவே, சிறப்புப் பள்ளி ஆசிரியர்களுக்குத் தேவையான திறமைகளை வளர்க்க பிரத்தியேக பயிற்சி அளிக்கப்படுகிறது. பத்து மாதங்களுக்கு அளிக்கப்படும் இந்த பயிற்சிகளின் விவரங்கள் கீழ்வருமாறு:

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | அளிக்கப்படும் பயிற்சி | பயிற்சி ஆசிரியர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளி, பூவிருந்தவல்லி, சென்னை. | பார்வையற்றோருக்கு போதிக்கும் இளநிலை பட்டயம் | 20 |
| 2. | பாலவிகார் பயிற்சிப் பள்ளி, கீழ்ப்பாக்கம், சென்னை. | மனவளர்ச்சி குன்றியோருக்கு போதிக்கும் இளநிலை / முதுநிலை பட்டயம் | 20 |
| 3. | சிறுமலர் காதுகேளாதோருக்கு மேல்நிலைப் பள்ளி, சென்னை. | காதுகேளாதோருக்கு போதிக்கும் இளநிலை/முதுநிலை பட்டயம் | 50 |

பயிற்சியாளர்களுக்கு ரூ.400/- மாத உதவித் தொகையாக வழங்கப்படுகிறது..

2011-2012 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.14.70 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அரசு நடத்தும் மேற்கண்ட பயிற்சிகள் தவிர, இந்திய மறுவாழ்வுக் குழுமத்தால் அங்கீகரிக்கப்பட்ட அரசு சாரா அமைப்புகளும் சிறப்பாசிரியர்களுக்கு பட்டயப் பயிற்சிகளை அளிக்கின்றன. பயிற்சியாளர்களுக்கு மாதம் ரூ.400/- வீதம் உதவித் தொகை வழங்கப்படுகிறது.



2011 செப்டம்பர் 6]

## 21. சட்டப் படிப்பு முடித்த மாற்றுத் திறனாளிகளுக்கு உதவி

ஆண்டொன்றுக்கு சட்டப் படிப்பு முடித்த, 25 மாற்றுத் திறனாளிகள் வழக்கறிஞர் மன்றத்தில் பதிவு செய்து கொள்ளவும், சட்டப் புத்தகங்கள் வாங்கவும் ஒவ்வொரு பட்டதாரிக்கும் தலா ரூ.3,000/- வீதம் உதவித் தொகை வழங்கப்படுகிறது.

2011-2012 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.0.75 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 22. மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகங்கள்மூலம் மாற்றுத் திறனாளிகளுக்கான பயிற்சி

மாற்றுத் திறனாளிகளுக்கு வேலை வாய்ப்பினை உருவாக்கும் நோக்கத்துடன் கீழ்க்கண்ட பயிற்சிகள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன:

**மாற்றுத் திறனாளிகளுக்கான பயிற்சித் திட்டங்கள்**

| வ. எண் (1) | பயிற்சி (2) | காலம் (3) | மாற்றுத் திறன் வகை (4) | பயிற்சி யாளர்களின் எண்ணிக்கை (5) | பயிற்சி அளிக்கும் இடம் (6) |
|---|---|---|---|---|---|
| 1. | மருத்துவ ஆய்வுக்கூட தொழில் நுட்ப பட்டயப் பயிற்சி | 2 ஆண்டுகள் | கை, கால் பாதிக்கப்பட்டோர் மற்றும் செவித்திறன் குறையுடையோர் | 48 | 12 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகள் |
| 2. | செல் போன் பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்பு | 3 மாதங்கள் | கை, கால் பாதிக்கப்பட்டோர் | 446 | அரசு / தனியார் பாலி டெக்னிக் |
| 3. | கணினி பயிற்சி | 6 மாதங்கள் | பார்வைத் திறன் பாதிக்கப்பட்டோர் | 10 | பார்வையற் றோருக்கான தேசிய நிலையத்தின் மண்டல மையம் |

[2011 செப்டம்பர் 6

பயிற்சியாளர்களுக்கு மாதம் ரூ.300/- வீதம் உதவித் தொகை வழங்கப்படுகிறது.

2011-2012 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.26.33 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**23. பார்வைத்திறன் பாதிக்கப்பட்டோருக்கான தொழிற்பயிற்சி**

பூவிருந்தவல்லி, பார்வைத்திறன் பாதிக்கப்பட்டோருக்கான அரசு தொழிற்பயிற்சி மையத்தில் பார்வைத் திறன் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு புத்தகம் கட்டுநர் பிரிவில் ஓராண்டு பயிற்சி வழங்கப்படுகிறது.

பார்வைத்திறன் பாதிக்கப்பட்ட 22 மாற்றுத் திறனாளிகளுக்கு உணவு மற்றும் விடுதி வசதியுடன் இலவசமாக பயிற்சி அளிக்கப்படுகிறது.

2011-2012 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.21.51 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**24. செவித்திறன் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு பொருத்துநர் பயிற்சி**

கிண்டியிலுள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் செவித்திறன் பாதிக்கப்பட்ட மற்றும் வாய் பேச இயலாத 19 மாற்றுத் திறனாளிகளுக்கு பயிற்சியளிப்பதற்காக சிறப்புப் பயிற்சிப் பிரிவு ஒன்று ஆரம்பிக்கப்பட்டு, பொருத்துநர் பிரிவில் இரண்டு ஆண்டுகள் பயிற்சி வழங்கப்படுகிறது மேலும், பயிற்சிக் காலத்தில் மாதம் ரூ.300/- வீதம் உதவித் தொகை வழங்கப்படுகிறது.

2011-2012 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.2.58 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**25. உணவு மற்றும் தங்கும் வசதியுடன்கூடிய தொழிற்பயிற்சி**

மாற்றுத் திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பினை அதிகப்படுத்தும் பொருட்டு குறிப்பிட்ட தொழிற்பிரிவுகளில் தொண்டு நிறுவனங்கள் மூலம் கீழ்க்கண்ட 12 மாவட்டங்களில் தொழிற் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது:



2011 செப்டம்பர் 6]

சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், தருமபுரி, ஈரோடு, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் சிவகங்கை.

2011-2012 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.38.38 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**26. கை, கால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு இடை நிலை ஆசிரியர் பயிற்சி (ஆசிரியர் கல்வி பட்டயம்)**

கை, கால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளின் வேலை வாய்ப்பினை அதிகப்படுத்தும் நோக்கத்துடன் பூவிருந்தவல்லி, பார்வைத்திறன் பாதிக்கப்பட்டோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் இரண்டு ஆண்டு கால இடைநிலை ஆசிரியர் பயிற்சி 50 நபர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

2011-2012 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.6.71 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**27. பார்வையற்ற மாற்றுத் திறனாளி மகளிருக்கான அரசு மறுவாழ்வு இல்லம் மற்றும் தங்குமிடத்துடன்கூடிய பணிக்கூடம், பூவிருந்தவல்லி**

18 வயதிலிருந்து 40 வயதிற்குள் (தாழ்த்தப்பட்ட / பழங்குடியினருக்கு 45 வயது வரை) உள்ள ஆதரவற்ற, பார்வையற்ற பெண் இல்லவாசிகளுக்கு நெசவு, சாக்பீஸ் தயாரித்தல் போன்ற தொழில்களில் பயிற்சி அளித்து, பயிற்சிக்குப் பின்னர் இதே இல்லத்தில் உணவு மற்றும் தங்குமிடம் இலவசமாக வழங்கி வேலை வாய்ப்பு அளித்து, அவர்கள் செய்யும் உற்பத்திக்கேற்ப ஊதியம் வழங்கப்படுகிறது. இதில் 40 பெண்கள் ஆண்டுதோறும் பயன்பெற்று வருகின்றனர்.

2011-2012 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.18.53 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

*[2011 செப்டம்பர் 6*

## 28. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில வள மற்றும் பயிற்சி மையம்

மாற்றுத் திறனாளிகளுக்காக மாநில வள மற்றும் பயிற்சி மையம் சென்னையில் 31-8-2005 அன்று நிறுவப்பட்டது. அனைத்து வகை மாற்றுத் திறனாளிகளுக்கும் மறுவாழ்வு சேவைகள், தகவல்கள் மற்றும் பயிற்சிகளை தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்மூலம் இலவசமாக வழங்குவது இம்மையத்தின் நோக்கமாகும்.

இம்மையத்தில் மருத்துவச் சான்றிதழ் இலவசமாக பின்வரும் நாட்களில் வழங்கப்படுகிறது:

| | | |
|---|---|---|
| திங்கட்கிழமை மற்றும் | — | செவித்திறன் குறையுடையோர் கண்பார்வை குறையுடையோர். |
| செவ்வாய்க்கிழமை உடையோர், | — | கை, கால் இயக்க குறைபாடு மூளை முடக்குவாதத்தினால் பாதிக்கப்பட்டோர் மற்றும் தொழுநோய் குணமடைந்தோர். |
| வெள்ளிக்கிழமை | — | மனவளர்ச்சிக் குன்றியோர், பல்வகை ஊனத்தினால் பாதிக்கப்பட்டோர், மனநலம் பாதிக்கப்பட்டோர் மற்றும் புற உலகு சிந்தனையற்றோர். |

மாற்றுத் திறனாளிகளுக்கான அடையாள அட்டை, மற்றும் பிற சலுகைகளான ரயில் பயண சலுகைக்கான சான்றிதழ், வருமான வரி விலக்கு பெறுவதற்கான சான்றிதழ், 75 சதவிகித பேருந்து பயண சலுகை (உதவியாளருக்கானது) பெறுவதற்கான சான்றிதழ் போன்ற சான்றிதழ்களும் மாற்றுத் திறனாளிகளுக்கு இலவசமாக வழங்கப்படுகின்றன.

இம்மையத்தில் 0-5 வயதிற்குட்பட்ட மாற்றுத்திறன் படைத்த குழந்தைகள், செவித்திறன் பாதிக்கப்பட்டோர், மனவளர்ச்சி குன்றியோர், பார்வைத்திறன் பாதிக்கப்பட்டோர் மற்றும் மூளை முடக்குவாதத்தினால் பாதிக்கப்பட்டோர் என 4 வகையான மாற்றுத்திறன் படைத்த குழந்தைகளுக்கான ஆரம்பநிலை பயிற்சி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இம்மையத்தில் பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. செவித்திறன் குறையுடையோருக்கான ஆரம்ப நிலை பரிசோதனை மையம் நிறுவப்பட்டுள்ளது.



*2011 செப்டம்பர் 6]*

இம்மையத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான தொலைபேசி தகவல் மையம் இயங்கி வருகிறது. மாற்றுத் திறனாளிகள் தங்களுக்கு தேவையான தகவல் பெற 24744737 / 24745233 என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம். இத்தொலைபேசி தகவல் மையம், மும்பையிலுள்ள செவித்திறன் குறையுடையோருக்கான தேசிய நிறுவனத்தின்மூலம் நிறுவப்பட்டுள்ளது.

2011-2012 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.24.45 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 29. மாற்றுத் திறனாளிகளுக்கான இட ஒதுக்கீட்டுக் கொள்கை

மாற்றுத் திறனாளிகளுக்கான இட ஒதுக்கீட்டுக் கொள்கையினை திறம்பட செயல்படுத்துவதற்கு மாநில அரசு முனைப்பாக உள்ளது. அரசு / அரசு சார்பு நிறுவனங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களில் (அரசு, நிதியுதவி பெறும் மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களில்) எழும் பணியிடங்கள் / பயிற்சியிடங்களில் 3 சதவிகிதம் மாற்றுத் திறனாளிகளுக்கு என ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் 1 சதவிகிதம் பார்வைத் திறன் பாதிக்கப்பட்டோருக்கும், 1 சதவிகிதம் செவித்திறன் மற்றும் பேச்சுத் திறன் பாதிக்கப்பட்டோருக்கும், 1 சதவிகிதம் கை, கால் இயக்கம் பாதிக்கப்பட்டோருக்கும் வழங்கப்பட்டு வருகிறது.

கல்வித் துறையில், ஆசிரியர் பணியிடங்களில் 2 சதவிகிதம் பார்வைக் குறைபாடு உள்ளவர்களுக்கும், ஆசிரியர் அல்லாத பணியிடங்களில் 2 சதவிகிதம் செவித்திறன் குறைபாடு உள்ளவர்களுக்கும் வழங்கப்படுகிறது.

அரசுத் துறை மற்றும் அரசு சார்பு நிறுவனங்களில் மாற்றுத் திறனாளிகளுக்கான 3 சதவிகித பணியிடங்களை நிரப்பும்போது மத்திய அரசு கடைபிடிக்கும் இனசுழற்சி முறையினை இம்மாநிலம் பின்பற்றுகிறது. மேலும், மாற்றுத் திறனாளிகளுக்கென கண்டறியப்பட்ட பணியிடங்கள், தக்க மாற்றுத் திறனாளிகள் அந்த ஆண்டில் இல்லாதபட்சத்தில், அப்பணியிடங்களை 3 ஆண்டுகள் முன் கொணர வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மாற்றுத் திறனாளிகளுக்காக அரசுத் துறைகளில் 3 சதவீத இட ஒதுக்கீட்டினைக் கண்காணிக்கும்பொருட்டு தலைமைச் செயலாளர் தலைமையில் ஒரு உயர் மட்டக்குழு அமைக்கப்படும்.

[2011 செப்டம்பர் 6

**30. சிறப்பு நியமன நடவடிக்கை**

மாற்றுத் திறனாளிகளுக்கென கண்டறியப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட பணியிடங்களில் நியமனம் செய்வதைக் கண்காணிக்க சிறப்பு நியமன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கென கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செயல்பாட்டுத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது:

(1) மாற்றுத் திறனாளிகளுக்கு, 3 சதவிகித பணியிடங்களை தவறாமல் அளிக்குமாறு கோரி அனைத்து நிறுவனங்களுக்கும் பொதுத் துறை நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் / பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றிற்கு அறிவுரை வழங்குதல்;

(2) நிரப்பப்படாமல் காலியாகவுள்ள பணியிடங்கள் பற்றிய தகவல்களைத் தொகுத்தல்;

(3) காலிப் பணியிடங்கள் பற்றிய தகவல்களை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், ஆசிரியர் தேர்வு வாரியம் மற்றும் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆகியவற்றிற்கு தெரிவித்தல்;

(4) பணி நியமனம் செய்யும் நிறுவனங்களை, காலியிடங்கள் பற்றி விளம்பரம் செய்து மாற்றுத் திறனாளிகளிடமிருந்து விண்ணப்பங்களைப் பெற்று நடவடிக்கை எடுக்கக் கோருதல்;

(5) பணி நியமனம் செய்யும் நிறுவனங்கள் பட்டியலை இறுதி செய்து, பணிக்கான ஆட்களை தேர்ந்தெடுத்து சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பி வைத்தல்;

(6) சம்பந்தப்பட்ட துறைகள் பணி நியமன ஆணைகள் வழங்குதல்;

அனைத்து பணி நியமன நிறுவனங்களும் மேற்குறிப்பிட்ட செயல் திட்டத்தினைச் செயல்படுத்த வேண்டும். இதன் வழியே விரைவில் சிறப்பு நியமன நடவடிக்கைகள் முழுமை அடையும். இவற்றை உறுதி செய்து செயலாக்க சம்பந்தப்பட்ட அலுவலர்களைத் தொடர்புகொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் பற்றாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.



2011 செப்டம்பர் 6]

## பராமரிப்பு உதவித் தொகை

**31. கடுமையாக பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான பராமரிப்பு உதவித் தொகை**

கடுமையாக பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கென வழங்கப்பட்டு வந்த பராமரிப்பு உதவித் தொகை ரூ.500/-லிருந்து ரூ.1,000/- ஆக மே, 2011 முதல் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. பராமரிப்பு உதவித் தொகையானது பயனாளிகளின் இல்லங்களுக்கே பணவிடை அஞ்சல்மூலம் நேரடியாக அனுப்பப்படுகிறது. பராமரிப்பு உதவித் தொகை பெறும் பயனாளிகளின் எண்ணிக்கை 11,269 ஆகும்.

2011-2012 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.1361.07 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**32. தசைச் சிதைவு நோயினால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு பராமரிப்பு உதவித் தொகை**

கடுமையாக பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் மற்றும் மனவளர்ச்சி குன்றியோரைப் போலவே தசைச்சிதைவு நோயினால் பாதிக்கப்பட்டோருக்கும் மாத உதவித் தொகை ரூ.500/- லிருந்து ரூ.1,000/-ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. மொத்த பயனாளிகளின் எண்ணிக்கை 1000. பராமரிப்பு உதவித் தொகை தற்போது பயனாளிகளின் இல்லங்களுக்கு பணவிடை அஞ்சல் மூலம் அனுப்பப்படுகிறது.

2011-2012 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.120.78 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**33. மனவளர்ச்சி குன்றியோருக்கான பராமரிப்பு உதவித் தொகை**

60 சதவிகிதம் மற்றும் அதற்கு மேல் மனவளர்ச்சி குன்றிய அனைவருக்கும் எவ்வித வயது மற்றும் எண்ணிக்கை உச்சவரம்பின்றி வழங்கப்பட்டு வரும் பராமரிப்பு உதவித் தொகை மாதம் ரூ.500/-லிருந்து ரூ.1,000/- ஆக, மே-2011 முதல் உயர்த்தி வழங்கப்படுகிறது. பராமரிப்பு உதவித் தொகை பயனாளிகளின் இல்லங்களுக்கே பணவிடை அஞ்சல்மூலம் அனுப்பப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 64,138 நபர்கள் பயன்பெற்று வருகிறார்கள்.

[2011 செப்டம்பர் 6

2011-2012 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.7746.59 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 34. வேலைவாய்ப்பற்ற அனைத்து வகை மாற்றுத் திறனாளிகளுக்கும் வேலைவாய்ப்பற்றோர் நிவாரண உதவித் தொகை

அனைத்து வகை மாற்றுத் திறனாளிகளுக்கும் வேலைவாய்ப்பற்றோர் நிவாரணத் தொகை கீழ்க்குறிப்பிட்டவாறு வழங்கப்படுகிறது:—

| வ.எண் | கல்வித் தகுதி | வேலைவாய்ப்பற்றோர் நிவாரணத்தொகை (மாதம் ஒன்றுக்கு) |
|---|---|---|
| 1. | பட்டதாரிகள் / முதுநிலைப் பட்டதாரிகள் | ரூ. 450/– |
| 2. | +2 (12வது வகுப்பு) | ரூ. 375/– |
| 3. | பத்தாம் வகுப்பு மற்றும் அதற்கு குறைவாக | ரூ. 300/– |

**தகுதிகள் :**

(அ) வயது: 18 முதல் 40 வயதிற்குள் (பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினருக்கு 45 வயது வரை) இருக்க வேண்டும். அல்லது வேலை கிடைக்கும் வரை, இதில் எது முன்னரோ அது வரை வழங்கப்படும்.

(ஆ) வேலைவாய்ப்பகத்தில் பதிவு செய்து குறைந்தபட்சம் ஓராண்டுக்கு மேல் காத்திருப்பவராக இருக்க வேண்டும்.

2011-2012 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.1216.72 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



2011 செப்டம்பர் 6]

## 35. திருமண நிதி உதவித் திட்டம்

மாற்றுத் திறனாளிகளை திருமணம் செய்து கொள்பவர்களை ஊக்குவிக்கும்வண்ணம், அரசால் வழங்கப்பட்டு வந்த திருமண உதவித் தொகை 28-6-2011 முதல் ரூ.25,000/- உடன், கூடுதலாக மணப் பெண்ணிற்கு திருமாங்கல்யம் செய்ய 4 கிராம் தங்கம் 22 காரட்டில் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், மாற்றுத் திறனாளிகளுக்கான பல்வேறு திருமண நிதியுதவி வழங்கும் திட்டங்களின்கீழ் பட்டயம் மற்றும் பட்டப் படிப்பு படித்த மாற்றுத் திறனாளிகளுக்கு திருமண உதவித் தொகை ரூ.25,000/-லிருந்து ரூ.50,000/-ஆக உயர்த்தி வழங்கவும், இதனுடன் மணப் பெண்ணிற்கு திருமாங்கல்யம் செய்ய 4 கிராம் தங்கம் 22 காரட்டில் வழங்கவும் ஆணையிடப்பட்டுள்ளது.

| வ. எண் | திட்டத்தின் பெயர் | வழங்கப்பட்டுவரும் திருமண உதவித் தொகை | |
|---|---|---|---|
| | | பட்டப் படிப்பு / பட்டயப் படிப்பிற்குக்கீழ் | பட்டயம் /பட்டப் படிப்பு |
| 1. | பார்வையற்றோரை திருமணம் செய்து கொள்ளும் சாதாரண நபர்களுக்கு நிதியுதவி | (1) திருமணச் செலவிற்கு ரொக்கத்தொகை—ரூ.12,500/- (2) தேசிய சேமிப்புப் பத்திரம் ரூ.25,000/– (3) தங்க நாணயம் .. 4 கிராம் | (1) திருமணச் செலவிற்கு ரொக்கத்தொகை.. ரூ.25,000/– (2) தேசிய சேமிப்புப் பத்திரம்..ரூ.25,000/- (3) தங்க நாணயம்.. 4 கிராம் |
| 2. | ஒரு கை அல்லது கால் இல்லாதவரை திருமணம் செய்து கொள்ளும் சாதாரண நபர்களுக்கான நிதியுதவி | (1) திருமணச் செலவிற்கு ரொக்கத்தொகை—ரூ.12,500/– (2) தேசிய சேமிப்புப் பத்திரம் ரூ.12,500/– (3) தங்க நாணயம் .. 4 கிராம் | (1) திருமணச் செலவிற்கு ரொக்கத்தொகை ரூ.25,000/– (2) தேசிய சேமிப்புப் பத்திரம் ..ரூ.25,000/- (3) தங்க நாணயம்.. 4 கிராம் |
| 3 | காதுகேளாதோரை திருமணம் செய்து கொள்ளும் சாதாரண நபர்களுக்கான நிதியுதவி | (1) திருமணச் செலவிற்கு ரொக்கத்தொகை—ரூ.12,500/- (2) தேசிய சேமிப்புப் பத்திரம் ரூ.12,500/– (3) தங்க நாணயம் .. 4 கிராம் | (1) திருமணச் செலவிற்கு ரொக்கத்தொகை ரூ.25,000/– (2) தேசிய சேமிப்புப் பத்திரம் .. ரூ.25,000/- (3) தங்க நாணயம்.. 4 கிராம் |

[2011 செப்டம்பர் 6

| | | | |
|---|---|---|---|
| 4 | மாற்றுத் திறனாளியை திருமணம் செய்து கொள்ளும் மாற்றுத் திறனாளிக்கான நிதியுதவி | (1) திருமணச் செலவிற்கு ரொக்கத்தொகை–ரூ.12,500/-<br>(2) தேசிய சேமிப்புப் பத்திரம் ரூ.12,500/–<br>(3) **தங்க நாணயம் –4 கிராம்** | (1) திருமணச் செலவிற்கு ரொக்கத்தொகை ரூ.25,000/–<br>(2) தேசிய சேமிப்புப் பத்திரம் ரூ.25,000/-<br>(3) **தங்க நாணயம் 4 கிராம்** |

ஆண்டொன்றிற்கு மொத்தம் 490 பயனாளிகள் பயன்பெற்று வருகின்றனர். மாற்றுத் திறனாளிகள் திருமண நிதியுதவித் திட்டத்தில் இதர பிரிவினருக்கு 300 எனவும், பட்டயம்/ பட்டப் படிப்பு படித்த நபர்களுக்கு 190 எனவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

2011-2012 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் மாற்றுத் திறனாளிகளுக்கான திருமண உதவித் தொகையும் மற்ற திருமண உதவித் தொகைக்கு சமமாக வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது. மேலும், இத்திட்டத்தின்கீழ் ஏராளமான விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ளதால், பயனாளிகளின் அனுமதி எண்ணிக்கையில் தற்போதுள்ள உச்சவரம்பு குறித்தான இலக்கு முழுமையாக நீக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

2011-2012 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.195.30 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**36. மனவளர்ச்சி குன்றியோருக்கான இல்லங்கள்**

14 வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றியோரை பராமரிக்கவும், தொழிற்பயிற்சி வசதிகள் மற்றும் தங்கும் வசதிகளுடன்கூடிய 7 இல்லங்களை திருவள்ளூர், காஞ்சிபுரம், மதுரை, திண்டுக்கல், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்மூலம் அரசு நடத்தி வருகிறது. ஒவ்வொரு இல்லத்திலும் 50 பேர் என்ற எண்ணிக்கையில் மனவளர்ச்சி குன்றியோர் தங்கியிருந்து தொழில்கள் பயில இத்திட்டம் வழி வகுக்கின்றது.

2011-2012 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.67.80 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



2011 செப்டம்பர் 6]

**37. மனவளர்ச்சி குன்றிய வயது வந்த பெண்களுக்கான இல்லங்கள்**

சேலம், தூத்துக்குடி, சிவகங்கை, வேலூர் ஆகிய மாவட்டங்களில் மனவளர்ச்சி குன்றிய பெண்களுக்கான இல்லங்களை தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்மூலம் அரசு துவக்கியுள்ளது. ஒவ்வொரு இல்லத்திலும் மனவளர்ச்சி குன்றிய 30 பெண்களைப் பராமரிப்பதற்காக அரசு மானியம் அளிக்கப்படுகிறது.

2011-2012 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.19.98 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**38. அரசின் நிதியுதவியுடன் நடத்தப்படும் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான சிறப்புப் பள்ளி**

மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள் பயனடையும் வகையில் கடலூர் மாவட்டத்தில் காட்டுமன்னார்கோவிலிலும் மற்றும் தேனி மாவட்டத்திலும் சிறப்புப் பள்ளிகள் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்மூலம் அரசின் நிதியுதவியுடன் துவங்கப்பட்டு, செயல்பட்டு வருகின்றன. இதன்மூலம் 50 மன வளர்ச்சி குன்றிய குழந்தைகள் சிறப்புக் கல்வி பெற்று வருகிறார்கள்.

2011-2012 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.8.90 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**39.மனவளர்ச்சி குன்றியோருக்கான சிறப்புப் பள்ளிகளில் பணிபுரியும் சிறப்பு ஆசிரியர்கள்/ தசைப் பயிற்சியாளர்களுக்கு ஊதிய மானியத் தொகை**

தொண்டு நிறுவனங்கள் நடத்தும் சிறப்புப் பள்ளிகளில் மனவளர்ச்சி குன்றியோருக்கு கல்வியும், பயிற்சியும் அளித்து வரும் சிறப்பாசிரியர்கள் மற்றும் தசைப் பயிற்சியாளர்கள் உட்பட 600 நபர்களுக்கு தொண்டு நிறுவனங்களால் வழங்கப்படும் ஊதியம் போக, அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.5,000/- மதிப்பூதியம் அரசு சார்பில் வழங்கப்பட்டு வருகிறது.

2011-2012 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.360.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**40. மனவளர்ச்சி குன்றியோருக்கான இல்லங்களை நடத்தும் பதிவு பெற்ற அரசு சாரா தொண்டு நிறுவனங்களுக்கு நிதி உதவி**

மனவளர்ச்சி குன்றிய நபர்களுக்கு இருப்பிட வசதி அளிக்கும் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் சிறப்புப் பள்ளிகளுக்கு தேவைக்கேற்ப கட்டடம் கட்ட நிதி உதவி, அல்லது மாணவர்கள் தங்கும் இல்லத்திற்கு வாடகையும், மாணவர்களுக்கு உணவூட்டுச் செலவினமும் வழங்கப்படுகிறது. தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் சிறப்புப் பள்ளிகளில் பயிலும் 1449 மாற்றுத் திறனாளி மாணவ, மாணவியருக்கு உணவூட்டு மானியமும், 40 சிறப்புப் பள்ளிகளுக்கு வாடகை மானியமும், 17 பள்ளிகளுக்கு தலா ரூ.5.00 இலட்சம் வீதம் கட்டடம் கட்ட மானியமும் வழங்கப்படுகிறது.

2011-2012 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.179.96 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**41. மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான பகல் நேர பராமரிப்பு மையங்கள்**

தேனி மாவட்டத்தில் 90 மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள் பயனடையும் வகையில் 3 பகல் நேர பராமரிப்பு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. தமிழக அரசு வழங்கும் மானிய உதவியைக் கொண்டு, அரசு சாரா அமைப்புகள் இம்மையங்களை நடத்தி வருகின்றன.

2011-2012 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.9.40 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**42. மன நோயால் பாதிக்கப்பட்டோர்களை மீட்டு மன நல மருத்துவமனைகள் மற்றும் மறுவாழ்வு இல்லங்களில் சேர்க்கும் ''மீட்புத் திட்டம்''**

பொது இடங்களில் ஆதரவற்ற நிலையில் திரிந்து கொண்டிருக்கும் மன நோயாளிகளைக் கண்டறிந்து உரிய விதிமுறைகளைப் பின்பற்றி மன நல மருத்துவமனையிலோ அல்லது தொண்டு நிறுவனங்கள் மூலம் அரசால் நடத்தப்படும் பராமரிப்பு இல்லங்களிலோ சேர்ப்பதில் உள்ள பல்வேறு நடைமுறை சிக்கல்களையும், பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கு ஒரு “மீட்புத் திட்டம்” வகுத்து செயல்படுத்தப்படுகிறது. மன நோயால் பாதிக்கப்பட்டோரின் நலன் காக்க இந்த “மீட்புத் திட்டம்” அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு 2010-2011 ஆம் ஆண்டில் 634 மன நலம் பாதிக்கப்பட்டவர்கள் மீட்கப்பட்டு மன நல காப்பகம் / மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டனர்.





2011-2012 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.12.40 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**43. மனநலம் பாதிக்கப்பட்டோர் மறுவாழ்வு இல்லங்கள்**

மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு தங்கும் வசதி, மருத்துவ ஆலோசனை ஆகியவற்றை அளிக்கும்வகையில் மன நலம் பாதிக்கப்பட்டவர்களுக்காக மறுவாழ்வு இல்லங்கள் அமைத்து நடத்தும் தொண்டு நிறுவனங்களுக்கு நிதிஉதவி அளிக்கும் வகையில் 11 மறுவாழ்வு இல்லங்களுக்கு நிதி உதவி அளிக்கப்பட்டு வருகிறது. இவ்வில்லங்கள் திருவள்ளூர், வேலூர், கடலூர், திருவாரூர், தூத்துக்குடி, இராமநாதபுரம், கோயம்புத்தூர், ஈரோடு, திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களில் தன்னார்வத் தொண்டு நிறுவனம்மூலம் நடத்தப்படுகின்றன. இத்திட்டத்தின்மூலம் 525 மன நலம் பாதிக்கப்பட்டவர்கள் பயன்பெற வழி வகுக்கிறது.

2011-2012 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.100.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**44. தசைச்சிதைவு (Muscular Dystrophy) பாதிக்கப்பட்டவர்களுக்கு பகல் நேர பராமரிப்பு மையங்கள் அமைத்தல்**

மரபு வழி நோய்களில் ஒன்றான தசைச்சிதைவு நோய் (Muscular Dystrophy) தசைச் செயல்பாட்டை படிப்படியாக குறைத்து, அவர்களை முழுமையாக முடக்கிவிடுகிறது. இந்நோயின் தாக்கத்தை முறையான தசைப் பயிற்சியின் (Physiotheraphy) மூலமே கட்டுக்குள் வைக்க முடியும். எனவே இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முறையான தசைப் பயிற்சி அளிக்கவும், ஆலோசனை வழங்கவும், பகல் நேரப் பராமரிப்பு மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. முதல் கட்டமாக சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி மற்றும் வேலூர் மாவட்டங்களில் இந்த பகல் நேரப் பராமரிப்பு மையங்கள் அரசு நிதி உதவியுடன் தனியார் தொண்டு

[2011 செப்டம்பர் 6

நிறுவனங்கள்மூலம் நடத்தப்பட்டு வருகின்றன. 141 தசைச் சிதைவு நோயால் பாதிக்கப்பட்டவர்கள் பயன் பெற்று வருகின்றனர்.

2011-2012 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.33.66 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**45. உதவி உபகரணங்கள்**

பல்வேறு வகையில் உடல் பாதிக்கப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட, தேவையுள்ள மாற்றுத் திறனாளி நபர்களுக்கு மாற்றுத் திறனாளிகள் நலத் துறைமூலம் கீழ்க்கண்ட உதவி உபகரணங்கள், மாற்றுத் திறனின் ஊனத்தின் தன்மை, அவயங்களின் உபயோகத் தன்மை, திறன் மற்றும் தேவைக்கேற்ப மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகங்கள்மூலம் அளிக்கப்படுகின்றன:

| வ.எண் | உதவி உபகரணம் | பயனாளிகள் |
|---|---|---|
| 1. | மூன்று சக்கர சைக்கிள் | 931 |
| 2. | மடக்கு சக்கர நாற்காலி | 2147 |
| 3. | கருப்புக் கண்ணாடி | 1970 |
| 4. | மடக்கு ஊன்றுகோல் | 1970 |
| 5. | பிரெய்லி கைக் கடிகாரம் (ஆண் / பெண்) | 1675 |
| 6. | காதொலிக் கருவி | 1037 |
| 7. | சூரிய ஒளியினால் மறு செறிவூட்டக்கூடிய மின்கலன் | 947 |
| 8. | கால்தாங்கி | 446 |
| 9. | தோள்பட்டை தாங்கி | 1086 |
| 10. | செயற்கை அவயம் | 224 |
| 11. | நவீன செயற்கை அவயம் | 157 |
| 12. | மூளை முடக்குவாதத்தினால் பாதிக்கப்பட்டோருக்கான சிறப்புசக்கர நாற்காலி | 670 |
| | மொத்தம் | 13260 |



2011 செப்டம்பர் 6]

மாற்றுத் திறனாளிகள் தங்களது உடற்குறைபாட்டை எதிர்கொண்டு, தங்களது அன்றாடப் பணிகளை தன்னிச்சையாக மேற்கொள்ள ஏதுவாக மேற்கண்ட உதவி உபகரணங்கள் வழங்கப்படுகின்றன.

2011-2012 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.190.20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**46.மாற்றுத் திறனாளிகளுக்கு பெட்ரோல் மூலம் இயங்கும் ஸ்கூட்டர்கள் வழங்குதல்**

இருகால்களும் பாதிக்கப்பட்ட கல்வி பயிலும், மாற்றுத் திறனாளிகள், சுயவேலை புரிபவர்கள் மற்றும் பணிபுரிவர்களுக்கு பெட்ரோல்மூலம் இயங்கும் இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட ஸ்கூட்டர்கள் இலவசமாக வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டு செயல்பட்டு வந்தது.

பின்னர் மாற்றுத் திறனாளிகளுக்கு இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட மின்சார ஸ்கூட்டர்கள் வழங்கப்பட்டன.

தற்போது, பெட்ரோல்மூலம் இயங்கும் ஸ்கூட்டர்களை, மத்திய அரசின் வாகனப் பதிவு சட்டத்திற்கு ஏற்ப, மாற்றுத் திறனாளிகளுக்காக கூடுதல் இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்டு அந்த வாகனங்களை பதிவு செய்துகொள்ளும் வகையில் அரசாணை வெளியிடப்பட்டுள்ளதால் வாகனம் பதிவு செய்வதில் இருந்த நடைமுறை சிக்கல்கள் நீக்கப்பட்டுள்ளன. மேலும், பெட்ரோலால் இயங்கும் ஸ்கூட்டர்களின் வேகத்திறன், பழுது ஏற்பட்டால் உடனடியாக பழுதினை நீக்குவதற்கான வசதிகள் ஆகியவை உள்ளதால், 2011-2012 ஆம் நிதியாண்டு முதல் பெட்ரோல் மூலம் இயங்கும் இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட ஸ்கூட்டர்கள் மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும்.

2011-2012 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.80.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2011 செப்டம்பர் 6

**47. மாற்றுத் திறனாளிகளுக்கு அரசுப் பேருந்துகளில் இலவச பயணச் சலுகை**

மாற்றுத் திறனாளிகள் பயன் பெறும்வண்ணம் அனைத்து வகை மாற்றுத் திறனாளிகளுக்கும் அரசு போக்குவரத்து கழகப் பேருந்துகளில், பலவகையான இலவச பயணச் சலுகை மாநில அரசால் கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகிறது:—

(1) பார்வையற்றோர் அனைவரும் எவ்வித நிபந்தனையுமின்றி, தமது இருப்பிடத்திலிருந்து 100 கிலோ மீட்டர் தூரம் வரை, அரசுப் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர்.

(2) ஏனைய மாற்றுத் திறனாளிகளுக்கு சில நிபந்தனைகளுக்குட்பட்டு, அவர்கள், கல்விக் கூடம், மருத்துவமனை, தொழிற்பயிற்சி மையம் மற்றும் வேலை செய்யும் இடத்திற்குச் சென்று வர இச்சலுகை வழங்கப்படுகிறது.

(3) பார்வையற்றவரும், கை கால் பாதிக்கப்பட்டோரும், அரசு விரைவுப் பேருந்துகளில் மாநிலத்திற்குள் ஆண்டுக்கு ஒரு முறை இலவசமாக தமது சொந்த ஊருக்கு பயணம் சென்று வர அனுமதிக்கப்படுகின்றனர்.

(4) மனவளர்ச்சி குன்றியவர்கள், எவ்வித வருமான வரம்புமின்றி, துணையாளர் ஒருவருடன் இலவச பேருந்து பயணம் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர்.

(5) அனைத்து வகை மாற்றுத் திறனாளிகளும் மாநிலத்தின் அனைத்து இடங்களுக்கும், அனைத்து போக்குவரத்துக் கழகங்களின் குளிர்சாதன வசதியுள்ள பேருந்தினைத் தவிர்த்து பிற வகைப் பேருந்துகள் அனைத்திலும் எத்தனை முறை வேண்டுமானாலும் 75% பேருந்து கட்டணச் சலுகையுடன் சென்று வர அனுமதிக்கப்படுகின்றனர். மேலும், துணையாளரின் உதவியின்றி பயணம் செய்ய இயலாதவர்கள் 75 சதவிகித பேருந்துக் கட்டணச் சலுகையில் துணையாளருடன் செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.



2011 செப்டம்பர் 6]

பேருந்து பயணச் சலுகைத் திட்டத்தின்கீழ் 5,04,032 நபர்கள் பயன்பெற்று வருகிறார்கள்.

2011-2012 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.708.21 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## சுய வேலைவாய்ப்புத் திட்டங்கள்

**48. சுய வேலைவாய்ப்பு**

மாற்றுத் திறனாளிகள் பெட்டிக் கடை வைத்து நடத்துவது உட்பட சுய வேலைவாய்ப்பில் ஈடுபடுவதற்காக, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள்மூலம் கடன் பெற்றுக்கொள்ள இத்துறை சீரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. ரூ.3000/- அல்லது மொத்தக் கடன் தொகையில் மூன்றில் ஒரு பங்கு இதில் எது குறைவோ, அத்தொகை மானியமாக அரசால் வழங்கப்படுகிறது. பொது இடங்களில், பெட்டிக் கடை வைக்க விரும்பும் மாற்றுத் திறனாளிக்கு ரூ.5000/- அல்லது மொத்தக் கடன் தொகையில் மூன்றில் ஒரு பங்கு, இதில் எது குறைவோ அது பெட்டிக் கடை மானியமாக வழங்கப்படுகிறது. இத்திட்டங்களின்கீழ் ஒவ்வொரு ஆண்டும் 1050 மாற்றுத் திறனாளிகள் பயனடைந்து வருகின்றனர்.

2011-2012 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.60.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், மத்திய அரசின் தேசிய ஊனமுற்றோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தினால் செயல்படுத்தப்படும் சுயவேலை வாய்ப்புத் திட்டங்கள்மூலம், மாற்றுத் திறனாளிகள் அதிக அளவில் சுய வேலைவாய்ப்பு பெற மாநில அரசு, தகுந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இத்திட்டத்தினை தமிழகத்தில் செயல்படுத்த தமிழக அரசு ரூ.8.00 கோடிக்கான முழு உத்திரவாதத்தை அரசு வழங்கியுள்ளது.

**49. பாரதப் பிரதமரின் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மாற்றுத் திறனாளிகள் செலுத்த வேண்டிய விளிம்புத் தொகையை 100 சதவிகிதம் அரசே இலவசமாக செலுத்துதல்**

மாற்றுத் திறனாளிகள் சுய தொழில் புரிந்து தங்கள் பொருளாதார நிலையை உயர்த்திக் கொள்வதை ஊக்குவிக்கும்பொருட்டு, பாரதப்

[2011 செப்டம்பர் 6

பிரதமரின் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் கடனுதவி பெறும் மாற்றுத் திறனாளிகள் செலுத்த வேண்டிய 5 சதவிகிதம் விளிம்புத் தொகை முழுவதையும் தமிழக அரசே ஏற்று செலுத்துகிறது.

பாரதப் பிரதமரின் வேலை வாய்ப்பினை உருவாக்கும் திட்டம் கிராமம் மற்றும் நகர்ப்புறங்களில் (Self Employment Venture)/ புராஜக்ட்/ சிறு, குறு தொழில்கள் தொடங்க வாய்ப்பளிக்கிறது. இத்திட்டத்தின் கீழ் உற்பத்திப் பிரிவிற்கு ரூ.25.00 இலட்சமும், வணிகம் / சேவைப் பிரிவிற்கு ரூ.10.00 இலட்சமும் அதிகபட்ச கடன் தொகையாக அளிக்கப்படுகிறது. கடனுதவி பெறும் மாற்றுத் திறனாளி 5 சதவிகித கடன் தொகையினை விளிம்புத் தொகையாக செலுத்த வேண்டும். இந்த விளிம்புத் தொகை முழுவதும் மானியமாக அரசே செலுத்தி விடும்.

விளிம்புத் தொகை பெறும் பயனாளிகள் மாவட்ட ஆட்சியரின் தலைமையின்கீழான தேர்வுக் குழுவின்மூலம் தேர்ந்தெடுக்கப்படுவர். மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள், மாற்றுத் திறனாளிகளில் சுயதொழில் புரிய விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்களைப் பெற்று தேர்வுக் குழுவிற்கு பரிந்துரை செய்வர். தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகளுக்கு 5 சதவிகித விளிம்புத் தொகை முழுவதும் இலவச சலுகையாக வழங்கப்படும். இந்த 5 சதவிகித விளிம்புத் தொகை மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலரால் பெறப்பட்டு மாவட்ட தொழில் மையம் / கதர் மற்றும் கிராம தொழில் ஆணையம் மூலம் வழங்கப்படும்.

2011-2012 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.5.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**50. மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்கள்**

அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியை சாதகமாகப் பயன்படுத்தி மாற்றுத் திறனாளிகளுக்கான சுய வேலை வாய்ப்புகளை அதிகப்படுத்த கை, கால் பாதிக்கப்பட்ட மற்றும் செவித்திறன் பாதிக்கப்பட்ட 1395 மாற்றுத் திறனாளிகளுக்கு மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்கள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன.



2011 செப்டம்பர் 6]

2011-2012 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.73.85 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**51. மாற்றுத் திறனாளிகள் மறுவாழ்வுக்கான ''வழிகாட்டும் திட்டம்''**

மாற்றுத் திறனாளிகளுக்கு மறுவாழ்வு அளிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் 32 மாவட்டங்களிலும் அரசு சாரா தொண்டு நிறுவனங்கள்மூலம் நடைமுறைபடுத்தப்படுகிறது. ஒவ்வொரு கிராம பஞ்சாயத்திலும் ஒரு மாற்றுத் திறனாளிகள் நலப் பணியாளரும், மற்ற இடங்களில் 6000 மக்கள் தொகை கொண்ட இடங்களில் ஒரு மாற்றுத் திறனாளிகள் நலப் பணியாளரும், ஒரு லட்சம் மக்கள் தொகை கொண்ட இடங்களில் ஒரு மாற்றுத் திறனாளிகள் ஒருங்கிணைப்பாளரும் நியமிக்கப்படுகின்றனர். மாற்றுத் திறனாளிகளுக்கு அரசு திட்டங்களைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், மாற்றுத் திறனாளிகளைக் கண்டறிவதும் அவர்களுக்கு தேவையான சேவைகளை செய்வதும் மாற்றுத் திறனாளிகள் நலப் பணியாளருக்கும் மாற்றுத் திறனாளிகள் ஒருங்கிணைப்பாளருக்கும் வழங்கப்பட்ட பணிகளாகும்.

17053 மாற்றுத் திறனாளிகள் நலப் பணியாளர்கள் மற்றும் 629 மாற்றுத் திறனாளிகள் ஒருங்கிணைப்பாளர்கள் ஆகியோர் தொண்டு நிறுவனங்கள்மூலம் பணியமர்த்தப்பட்டனர்.

2011-2012 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.150.36 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**52. துயர் உறுவோர் நிவாரண நிதி**

கொலையுண்ட மாற்றுத் திறனாளியின் வாரிசுதாரர் மற்றும் கற்பழிப்பு, படுகாயம் ஆகியவற்றினால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் இத்திட்டத்தில் பயனடையலாம். இதற்காக "குற்றச் செயல்களால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான துயர் உறுவோர் நிவாரண நிதி" துவக்கப்பட்டு, அதற்காக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ரூ.1 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கொலையுண்ட மாற்றுத் திறனாளியின் வாரிசுதாரருக்கு ரூ.10,000/-மும், படுகாயம் அடைந்து பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு ரூ.5000/-மும், கற்பழிப்பு போன்ற குற்றங்களினால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு ரூ.5000/-மும் வழங்கப்படுகிறது.

*[2011 செப்டம்பர் 6*

*(அ) வழக்குகள் நடக்கும்போது மாற்றுத் திறனாளிக்கு நாள் ஒன்றுக்கு ரூ.200/-ம் ஒரு வழக்குக்கு அதிக பட்சமாக ரூ.2000/-ம் உதவித்தொகையாக வழங்கப்படும்.*

*(ஆ) மாற்றுத்திறனாளிக்காக இலவச சட்ட உதவி செய்யும் வழக்கறிஞருக்கு வழக்கிற்காக நீதிமன்றம் வரும் காலங்களில் நாளொன்றுக்கு பயணப்படியாக ரூ.500/-ம், வழக்கு கேட்புக் கட்டணமாக ரூ.300/-ம் வழங்கப்படுகிறது.*

*(இ) செவித்திறன் பாதிக்கப்பட்ட மற்றும் பேச இயலாத மாற்றுத்திறனாளிகளுக்கு நீதிமன்றம் / காவல் நிலையம் ஆகியவற்றில் விசாரணை செய்யப்படும்போது சிறப்புப் பள்ளி ஆசிரியர்கள் சைகை மொழிபெயர்ப்பாளர்களாக நியமனம் செய்யப்படுகின்றனர். சைகை மொழி பெயர்ப்பு செய்பவருக்கு மொழி பெயர்ப்பு படியாக நாளொன்றுக்கு ரூ.300/- (இதர படிகள் தவிர) வழங்கப்படுகிறது.*

*ஒவ்வொரு மாவட்டத்திலும் குற்றச் செயல்களால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான துயர் உறுவோர் நிவாரண நிதி துவக்கப்பட்டுள்ளது. இந்நிதியைக் கையாள்வதற்கு மாவட்ட ஆட்சியர் தலைவராகவும், மாவட்ட காவல் கண்காணிப்பாளர்/ மாநகர காவல் ஆணையர் மற்றும் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் ஆகியோர் உறுப்பினராகவும் செயல்படுவர்.*

*2011—2012 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.32.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

**53. தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் நல வாரியம்**

*தமிழக சட்டப் பேரவையின் ஒப்புதலுடன் 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் நல வாரியம் அமைக்கப்பட்டது.*

*மாற்றுத் திறனாளிகள் நல வாரியத்தின்மூலம் கீழ்க்குறிப்பிட்ட சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்ட உதவிகள் மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன:*



*2011 செப்டம்பர் 6]*

| | | | | |
|---|---|---|---|---|
| (1) | தனி நபர் விபத்து நிவாரணம் | | | |
| | இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் நிவாரணம் பின்வருமாறு: | | | |
| | (அ) | | இறப்பு | ரூ. 1,00,000/- |
| | (ஆ) | | கை அல்லது கால் இழப்பு அல்லது முழுமையான செயலிழப்பு | ரூ. 1,00,000/- |
| | (இ) | | ஒரு கை அல்லது ஒரு கால் அல்லது ஒரு கண் பார்வையில் இழப்பு அல்லது முழுமையான செயலிழப்பு | ரூ. 50,000/- |
| | (ஈ) | | நிரந்தரம், மொத்த ஊனம் (ஆ) அல்லது (இ) தவிர்த்து | ரூ. 25,000/- |
| (2) | மாற்றுத் திறனாளி நபருக்கான இறுதிச் சடங்கிற்கு | | | ரூ. 2,000/- |
| (3) | மாற்றுத் திறனாளி நபரின் இயற்கை மரணத்திற்கு | | | ரூ. 15,000/- |
| (4) | மாற்றுத் திறனாளியின் மகன் அல்லது மகள் கல்வி பயில உதவித் தொகை | | | |
| | (அ) | (i) | விண்ணப்பதாரரின் 10ஆம் வகுப்பு அல்லது அதற்கு சமமாகப் பயிலும் மகளுக்கு | ரூ. 1,000/- |
| | | (ii) | விண்ணப்பதாரரின் 10 ஆம் வகுப்பு அல்லது அதற்கு சமமாக பயின்று, தேறிய மகன் அல்லது மகளுக்கு | ரூ. 1,000/- |
| | (ஆ) | (i) | விண்ணப்பதாரரின் +1 வகுப்பு மற்றும் அதற்கு சமமாக பயிலும் மகளுக்கு | ரூ. 1,000/- |
| | (இ) | (i) | விண்ணப்பதாரரின் +2 அல்லது அதற்கு சமமாகப் பயிலும் மகளுக்கு | ரூ. 1,500/- |

[2011 செப்டம்பர் 6

| | | | | |
|---|---|---|---|---|
| | | (ii) | விண்ணப்பதாரரின் +2 தேர்வு அல்லது அதற்கு சமமாகப் பயின்று தேறிய மகன் அல்லது மகளுக்கு | ரூ. 1,500/- |
| | (ஈ) | (i) | விண்ணப்பதாரரின் முறையான பட்டப் படிப்பு பயின்று வரும் மகன் அல்லது மகளுக்கு ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும் | ரூ. 1,500/– |
| | | (ii) | விண்ணப்பதாரரின் மகன் அல்லது மகள் விடுதியில் தங்கிப் படித்தால் | ரூ. 1,750/– |
| | | (iii) | விண்ணப்பதாரரின் முறையான பட்ட மேற்படிப்பு பயின்று வரும் மகன் அல்லது மகளுக்கு ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும் | ரூ. 2,000/– |
| | | (vi) | விண்ணப்பதாரரின் மகன் அல்லது மகள் விடுதியில் தங்கிப் படித்தால் | ரூ.3,000/- |
| | (உ) | (i) | விண்ணப்பதாரரின் மகன் அல்லது மகள் சட்டம் அல்லது பொறியியல் அல்லது மருத்துவம் அல்லது கால்நடை அறிவியல் அல்லது தொடர்பான தொழிற்கல்விப் படிப்புகள் ஒவ்வொரு கல்வியாண்டிற்கும் | ரூ.2,000/- |
| | | (ii) | விண்ணப்பதாரரின் மகன் அல்லது மகள் விடுதியில் தங்கிப் படித்தால் | ரூ.4,000/- |
| | | (iii) | விண்ணப்பதாரரின் மகன் அல்லது மகள் தொழிற்கல்வி, பட்ட மேற்படிப்பு படிக்க ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும் | ரூ.4,000/- |
| | | (iv) | விண்ணப்பதாரரின் மகன் அல்லது மகள் விடுதியில் தங்கிப் படித்தால் | ரூ.6,000/- |
| | (ஊ) | (i) | விண்ணப்பதாரரின் மகன் அல்லது மகள் தொழிற்பயிற்சி நிலையம் அல்லது பாலிடெக்னிக்குகளில் படிக்க ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும் | ரூ.1,000/- |



2011 செப்டம்பர் 6]

| | | | |
|---|---|---|---|
| | (ii) | விண்ணப்பதாரரின் மகன் அல்லது மகள் விடுதியில் தங்கிப் படித்தால் | ரூ. 1,200/– |
| (5) | | திருமண உதவித் தொகை கணவன் அல்லது மனைவி இருவரும் விண்ணப்பித்தாலும் ஒருவருக்கு மட்டுமே இவ்வுதவி வழங்கப்படும் | ரூ. 2,000/– |
| (6) | வாரியத்தின் பெண் உறுப்பினர்களுக்கு பிரசவம் அல்லது கருச்சிதைவு அல்லது கருக்கலைப்புக்கு நிதியுதவி | | |
| | | 1. மகப்பேறு | ரூ. 6,000/– (ரூ.1000/–வீதம் 6 மாதங்களுக்கு) |
| | | 2. கருச்சிதைவு | ரூ. 3,000/– |
| | | 3. கருக்கலைப்பு | ரூ. 3,000/– |
| (7) | | மாற்றுத் திறனாளிகளுக்கு மூக்குக் கண்ணாடி வாங்க நிதியுதவி | ரூ. 500/– |

*2011-2012 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.100.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

**54. சர்வதேச மாற்றுத் திறனாளிகள் நாள்**

ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானத்தின்படி, ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் திங்கள் 3 ஆம் நாள் **"சர்வதேச மாற்றுத் திறனாளிகள் நாளாக"** மாநில அரசால் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. மாற்றுத் திறனாளிகளின் கலை மற்றும் விளையாட்டுத் திறமைகளை வெளிக்கொணர்ந்து ஊக்குவிப்பதே, இந்த நாளைக் கடைப்பிடிப்பதன் முக்கிய நோக்கமாகும். சர்வதேச மாற்றுத் திறனாளிகள் நாளை முன்னிட்டு, மாற்றுத் திறன் படைத்த குழந்தைகளுக்காக மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுகின்றன.

[2011 செப்டம்பர் 6

இப்போட்டிகளில் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் சுமார் 5000 மாற்றுத்திறன் படைத்த குழந்தைகள் கலந்து கொள்கின்றனர். பல்வேறு வகையான விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு, வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகளும் மற்றவர்களுக்கு பங்கேற்புச் சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன. டிசம்பர் 3 ஆம் நாளன்று மாற்றுத் திறன் படைத்த குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. இவ்விழாவில் மாற்றுத் திறனாளிகளுக்கு சிறந்த வேலைவாய்ப்பு அளித்தவர், சிறந்த சமூகப் பணியாளர், சிறந்த பணியாளர், சிறந்த ஆசிரியர் மற்றும் சிறந்த நிறுவனத்திற்கான மாநில விருதுகள் மாற்றுத் திறனாளிகளுக்கு சிறந்த சேவை புரிந்ததற்காக வழங்கப்படுகின்றன. இந்நிகழ்ச்சியில் மாற்றுத் திறனாளிகளுக்கு உதவி உபகரணங்களும் வழங்கப்படுகின்றன. அரசு / அரசு நிதி உதவி பெறும் நிறுவனங்களில் பணிபுரியும் மாற்றுத் திறனாளிகள் சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினத்தைக் கொண்டாடுவதற்காக சிறப்பு தற்செயல் விடுப்பு வழங்கி அரசு ஆணையிட்டுள்ளது. இவ்வாண்டு முதல் இச்சலுகை அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களில் பணி புரியும் மாற்றுத் திறனாளி பணியாளர்களுக்கும் நீட்டித்து வழங்கப்பட்டுள்ளது.

2011-2012 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.7.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## விருதுகள்

### 55. மாநில விருதுகள்

மாற்றுத் திறனாளிகளுக்கான சேவையில் ஈடுபட்டுள்ள நபர்களைப் பாராட்டி, ஊக்கப்படுத்தும் நோக்கத்துடன் மாநில அரசால் சுதந்திர தினத்தன்றும், சர்வதேச மாற்றுத் திறனாளிகள் நாளன்றும் கீழ்க்கண்ட மாநில விருதுகள் வழங்கப்படுகின்றன:—



2011 செப்டம்பர் 6]

சுதந்திரத் திருநாள் அன்று வழங்கப்படும் மாநில விருதுகள் விவரம்:

| வ. எண் | விருதின் வகை | விருது விவரம் |
|---|---|---|
| 1. | மாற்றுத் திறனாளிகளுக்கு மிக அதிக அளவில் வேலை வாய்ப்பு அளித்த தனியார் நிறுவனம் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 2. | மாற்றுத் திறனாளிகளுக்கு சேவை செய்யும் சிறந்த நிறுவனம் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம்,சான்றிதழ் மற்றும் ரூ.50,000/– ரொக்கப் பரிசு |
| 3. | மாற்றுத் திறனாளிகளுக்கு சேவைபுரிந்த சிறந்த சமூகப் பணியாளர் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 4. | மாற்றுத் திறனாளிகளுக்கு சேவைபுரிந்த சிறந்த மருத்துவர் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 5. | மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக அரும் பணியாற்றிய சிறந்த மாவட்ட ஆட்சித் தலைவர் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம், ரூ.25,000/– ரொக்கப் பரிசு மற்றும் சான்றிதழ் |
| 6. | சிறந்த மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 7. | சிறந்த மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |

*[2011 செப்டம்பர் 6*

*சர்வசேத மாற்றுத் திறனாளிகள் நாளன்று (டிசம்பர் மாதம் 3ம் தேதி) வழங்கப்படும் மாநில விருதுகள் விவரம்:*

| வ. எண் | விருதின் வகை | விருது விவரம் |
|---|---|---|
| 1. | மாற்றுத் திறனாளிகளுக்கு வேலை வாய்ப்பு அளித்த சிறந்த தொழிலதிபர் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 2. | மாற்றுத் திறனாளிகளில் மிகச் சிறந்த பணியாளர் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 3. | மாற்றுத் திறனாளிகளுக்கு கல்வி கற்பிப்பதில் மிகச் சிறந்த ஆசிரியர் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 4. | சிறந்த தொண்டு நிறுவனம் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |

## 56. தேசிய விருதுகள்

*ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் திங்கள் 3 ஆம் நாள் சர்வதேச மாற்றுத் திறனாளிகள் நாள் விழாவின் போது மத்திய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரம் அளிக்கும் துறை அமைச்சகம் மூலம், தேசிய விருதுகள் வழங்கப்படுகின்றன.*

*சிறந்த மாற்றுத் திறன் படைத்த பணியாளர், தொழிலதிபர், பணியமர்த்தும் அலுவலர், தொண்டு நிறுவனம், தனி நபர், தனித்திறன் பெற்ற மாற்றுத் திறனாளி, தனித்திறன் பெற்ற மாற்றுத் திறன் குழந்தைகள், முன்னோடி மாற்றுத் திறனாளி, மாற்றுத் திறனாளிகளுக்கு தடையற்ற சூழ்நிலையை ஏற்படுத்தும் நிறுவனம், சிறந்த பிரெய்லி அச்சகம், தேசிய மாற்றுத் திறனாளிகள் பொருளாதார மேம்பாட்டுக் கழகத் திட்டத்தினைப் பயன்படுத்தும் வகையிலான சிறந்த தொழில் நுட்பங்கள் ஆகிய பிரிவுகளில் தேசிய விருதுகள் வழங்கப்படுகின்றன. சமூக நீதி மற்றும் அதிகாரம் அளிக்கும் துறை அமைச்சகம், ஒவ்வொரு ஆண்டும், 13 பிரிவுகளில், 70 தேசிய விருதுகளை வழங்குகிறது.*



*2011 செப்டம்பர் 6]*

## 57. அரசு மறுவாழ்வு இல்லங்கள்

*தொழுநோயினால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு 10 அரசு மறுவாழ்வு இல்லங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. தொழுநோயால் அவதியுறும் நோயாளிகளுக்கு மருத்துவ உதவி மற்றும் மறுவாழ்வு உதவிகள் கீழ்க்காணும் அரசு மறுவாழ்வு இல்லங்கள்மூலம் வழங்கப்பட்டு வருகின்றன:—*

| வ. எண் | அரசு மறுவாழ்வு இல்லம் |
|---|---|
| 1. | பரனூர், காஞ்சிபுரம் மாவட்டம் |
| 2. | உளுந்தூர்பேட்டை, விழுப்புரம் மாவட்டம் |
| 3. | பர்கூர், கிருஷ்ணகிரி மாவட்டம் |
| 4. | புதுக்கோட்டை, புதுக்கோட்டை மாவட்டம் |
| 5. | மனையேறிப்பட்டி, தஞ்சாவூர் மாவட்டம் |
| 6. | யா. புதுப்பட்டி, மதுரை மாவட்டம் |
| 7. | மல்லவாடி, திருவண்ணாமலை மாவட்டம் |
| 8. | செல்லியம்பட்டி, தருமபுரி மாவட்டம் |
| 9. | தேவியாக்குறிச்சி, சேலம் மாவட்டம் |
| 10. | விண்ணப்பள்ளி, ஈரோடு மாவட்டம் |

*ஒவ்வொரு அரசு மறுவாழ்வு இல்லத்திலும் 400 பெரியவர்கள் மற்றும் 25 சிறார்கள் சேர்க்க அனுமதிக்கப்பட்டுள்ளனர். தொழுநோயால் பாதிக்கப்பட்டு, தானாக சேர முன் வரும் நோயாளிகள் அவர்களுடைய நோயின் தன்மையை மருத்துவர் உறுதிப்படுத்திய பின், இல்லங்களில் சேருவதற்கு அனுமதிக்கப்படுகின்றனர். உளுந்தூர்பேட்டை அரசு மறுவாழ்வு இல்லத்தில் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட, தொழுநோய் இரவலர்கள் தங்க அனுமதிக்கப்படுகின்றனர். நோயாளிகள் அவர்களுடைய குடும்ப உறுப்பினர்களுடன் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். இல்லங்களில் தங்குவோர் முழுமையாக குணப்படுத்தப்பட்ட நிலையிலோ அல்லது அவர்களின் நன்னடத்தை காரணமாகவோ இல்லத்திலிருந்து விடுவிக்கப்படுகின்றனர்.*

[2011 செப்டம்பர் 6

இல்லவாசிகளுக்கு தங்கும் வசதி, உணவு, உடை, மருத்துவ வசதி ஆகியவற்றுடன் பொழுதுபோக்கு வசதிகளான, விளையாட்டு, நூலகம், இசைக் கருவிகள் மற்றும் தொலைக்காட்சிப் பெட்டி ஆகிய வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. நல்ல நிலையில் உள்ள இல்லவாசிகளுக்கு பாய் முடைதல், துணி நெய்தல், தையல் மற்றும் காலணிகள் தயாரித்தலில் பயிற்சி அளிக்கப்படுகிறது. அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு ஏற்ப ஊதியம் வழங்கப்படுகிறது.

இல்லவாசிகளுக்கு தற்போது நாளொன்றுக்கு பெரியவர்களுக்கு ரூ.25/- செலவிலும், குழந்தைகளுக்கு ரூ.15/- செலவிலும் உணவு வழங்கப்படுகிறது. சிறப்பு விழா நாட்களான பொங்கல், தீபாவளி மற்றும் காந்தி ஜெயந்தி ஆகிய தினங்களில் நபர் ஒன்றுக்கு கூடுதலாக ரூ.5/- செலவில் சிறப்பு உணவு வழங்கப்படுகிறது. ஒவ்வொரு இல்லவாசிக்கும் ஆண்டுக்கு இரண்டு இணை உடைகளுடன், பொங்கல் அன்று வேட்டி/சேலைகளும் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் பாய்கள் மற்றும் நுண்ணிய துளை ரப்பர் காலணிகள் வழங்கப்படுகின்றன. தட்டுகள் மற்றும் குவளைகள் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறையும், போர்வைகள் 3 ஆண்டுகளுக்கு ஒருமுறையும் வழங்கப்படுகின்றன. 1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும், இல்லவாசிகளின் குழந்தைகளுக்குப் பாடப் புத்தகங்களும், நோட்டு புத்தகங்களும் வழங்கப்படுகின்றன.

இல்லவாசிகளுக்கு மருத்துவ அலுவலர்களின்மூலம் மருத்துவ வசதிகள் அளிக்கப்படுகின்றன. தேவைப்படும் மருந்துகள், தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகத்தின்மூலம் வாங்கப்படுகின்றன. ஒவ்வொரு இல்லத்திற்கும் கீழ் குறிப்பிட்டுள்ள இனங்களுக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது:—

| வ. எண் | விவரம் | செலவினம் ஆண்டு ஒன்றிற்கு |
|---|---|---|
| 1. | பிரத்யேகமான காலணிகள் மற்றும் செயற்கை கால் அவயவங்கள் (தேவை உள்ளவர்களுக்கு மட்டும்) | ரூ. 1000/– |
| 2. | மூக்குக் கண்ணாடி வாங்குவதற்கு | ரூ. 2000/– |
| 3. | பற்பொடி மற்றும் பல்துலக்கும் பிரஷ் வாங்குவதற்கு | ரூ. 2500/– |
| 4. | விளையாட்டுச் சாதனங்கள் | ரூ. 1200/– |
| 5. | இசைக்கருவிகள் | ரூ. 400/– |
| 6 | ஈமச் சடங்கு செலவினத்திற்கு | ரூ. 500/– |



2011 செப்டம்பர் 6]

பரனூர், அரசு மறுவாழ்வு இல்லத்தில் நவீன சமையற்கூடம் கட்டவென ரூ.12.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2011-2012 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.825.96 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**58. அரசு ஏழைகள் பராமரிப்பு இல்லம், மேல்பாக்கம்.**

தமிழ்நாட்டில், பிச்சை எடுப்பதைத் தடுக்கும் சட்டம் 1945 ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. மேல்பாக்கத்திலுள்ள அரசு ஏழைகள் பாரமரிப்பு இல்லம் 950 நபர்கள் தங்கும் வகையில் (ஆண்கள் 770 மற்றும் பெண்கள் 180) 1-3-1954 அன்று தொடங்கப்பட்டது. இச்சட்டத்தின்கீழ் நீதித் துறை நடுவர் மூலமாக தண்டிக்கப்பட்ட இரவலர்கள், இந்த இல்லத்தில் தங்க வைக்கப்படுகின்றனர். அவர்களுக்கு இவ்வில்லத்தில் உணவு, தங்குமிடம், உடை, மருத்துவ வசதி அளிக்கப்பட்டு நெசவு, தச்சு, மண்பாண்டத் தொழில் மற்றும் தையல் போன்ற பல்வேறு தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகின்றது.

மேலும், இல்லத்திலுள்ள ஆண்களுக்கு ஆண்டொன்றுக்கு இரண்டு துண்டுகள், இரண்டு சட்டைகள் மற்றும் இரண்டு கால் சட்டைகளும், பெண்களுக்கு ஆண்டொன்றுக்கு இரண்டு சேலைகள் மற்றும் இரண்டு ரவிக்கைகள் வழங்கப்படுகின்றன. இவற்றைத் தவிர, பொங்கல் நாளன்று வேட்டி/சேலைகளும் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு இல்லவாசிக்கும், பாய், படுக்கை விரிப்பு, தட்டு, குவளைகள், தேங்காய் எண்ணெய் ஆகியவை வழங்கப்படுகின்றன. இவர்கள் தண்டனைக் காலம் முடிந்தவுடன், சொந்த ஊருக்குத் திருப்பி அனுப்பப்படுகின்றனர்.

2011-2012 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.84.02 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2011 செப்டம்பர் 6

# இணைப்பு

## பகுதி–2 புதிய திட்டங்கள்

## 2011–2012

| வ. எண் | திட்டத்தின் பெயர் | ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் அரசுச் செயலாளர் அறைக்கு அறைகலன்கள் வாங்குதல் | 2.03 |
| II | மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரகம் | |
| 1. | மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரகத்திற்கு சென்னை, கே.கே. நகரில் அமைந்துள்ள மாநில வளம் மற்றும் பயிற்சி மைய வளாகத்தில் புதிய கட்டடம் கட்டுதல் | 80.00 |
| 2. | புதுக்கோட்டை அரசு காது கேளாதோர் பள்ளிக்கு புதிய விடுதி மற்றும் பள்ளிக் கட்டடம் கட்டுதல் | 80.00 |
| 3. | மேல்பாக்கம், அரசு ஏழைகள் பராமரிப்பு இல்லத்தில் தண்டிக்கப்பட்ட இரவலர்களின் பாதுகாப்பைக் கருதி சுற்றுச் சுவர் அமைத்தல் | 36.00 |
| 4. | விருதுநகர், காது கேளாதோருக்கான அரசுப் பள்ளியில் சுற்றுச் சுவர் அமைத்தல் | 25.00 |
| 5. | 10 அரசு மறுவாழ்வு இல்லங்கள் மற்றும் அரசு ஏழைகள் பராமரிப்பு இல்லம், மேல்பாக்கம் ஆகியவற்றிற்கு நிகரி வாங்குதல், 10 அரசு மறுவாழ்வு இல்லங்கள் மற்றும் அரசு ஏழைகள் பராமரிப்பு மையம், மேல்பாக்கம் ஆகியவற்றிற்கு அறைகலன்கள் வாங்குதல் | 15.75 |



2011 செப்டம்பர் 6]

| | | |
|---|---|---|
| 6. | தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு மர பெஞ்சுகள் மற்றும் டெஸ்குகள் வாங்குதல் | 13.50 |
| 7. | காது கேளாதோரை ஆரம்ப நிலையில் கண்டறியும் மையத்தினை தரம் உயர்த்துதல், புற உலக சிந்தனையற்றோரை ஆரம்ப நிலையில் கண்டறியும் மையத்தினை தரம் உயர்த்துதல், தொடு உணர்வு ஒருங்கிணைப்பு மையம் (Sensory Integration Unit) அமைத்தல் | 15.76 |
| 8. | சென்னை, தாம்பரம் சானடோரியத்தில் இயங்கி வரும் மன வளர்ச்சி குன்றியோருக்கான அரசு நிறுவனத்திற்கு ஏற்கெனவே வழங்கப்பட்ட வாகனம் பழுதடைந்த நிலையில் புதிய டெம்போ டிராவலர் வேன் வாங்குதல் | 7.50 |
| 9. | திருச்சிராப்பள்ளியில் மூளை முடக்குவாத நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான ஆரம்ப நிலை பயிற்சி மையம் துவக்குதல் | 5.52 |
| 10. | மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரகத்திற்குத் தேவையான அறைகலன்கள் வாங்குதல் | 3.98 |
| 11. | தாமதமாக வளர்ச்சியடையும் குழந்தைகளைக் கண்டறியவென திருவண்ணாமலை மாவட்டத்தில் முன் மாதிரி திட்டத்தினை அமலாக்குதல் | 3.50 |
| 12. | சென்னை, தாம்பரம் சானடோரியத்தில் இயங்கி வரும் மன வளர்ச்சி குன்றியோருக்கான அரசு நிறுவனத்தில் மன வளர்ச்சி குன்றியோருக்கான ஆரம்ப நிலை பயிற்சி மையத்தை நிறுவுதல் | 5.50 |
| 13. | சென்னை, தாம்பரம் சானடோரியத்தில் இயங்கி வரும் மன வளர்ச்சி குன்றியோருக்கான அரசு நிறுவனத்திற்கு கற்பித்தல் கருவிகள் மற்றும் உள் விளையாட்டு மற்றும் வெளி விளையாட்டு பொருட்கள் வழங்குதல். | 3.00 |

| | | |
|---|---|---|
| 14. | மன வளர்ச்சி குன்றியோருக்கான அரசு நிறுவனத்தின் இல்லவாசிகளுக்கு இரும்பு கட்டில்கள் வழங்குதல் | 2.00 |
| 15. | மன வளர்ச்சி குன்றியோருக்கான அரசு நிறுவனத்திற்கு தண்ணீரை சூரிய ஒளியின் மூலம் சூடேற்றும் கருவியும், செவித்திறன் குறையுடையோருக்கான அரசு உயர்நிலைப் பள்ளி, உதகமண்டலத்திற்கு சூடேற்றும் கருவியும் வழங்குதல் | 0.80 |
| | **மொத்தம்** | **299.84** |

********